310

A. M. D. G.

# வேதசாட்சியான முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சரித்திரம்.

இஃது

சேசுசபைக் குருக்களிலொருவராகிய

(St. Cyr.)

இஞ்ஞாசியார் சுவாமியாரவர்களால்

இயற்றப்பட்டது.

இரண்டாம் பதிப்பு.

TRICHINOPOLY:

ST. JOSEPH'S COLLEGE PRESS.

1906.

11-8-1906. 1000 copies.

வேதசாட்சியான

# முத். அருளானந்தர் சரித்திரம்.

A. M. D. G.

வேதசாட்சியான

முத்திப்பேறுபெற்ற

# அருளானந்தர்

# சரித்திரம்.

இஃது

சேசுசபைக் குருக்களிலொருவராகிய

(St. Cyr.)

செந்தாசியார் சுவாமியாரவர்களால்

இயற்றப்பட்டது.


இரண்டாம் பதிப்பு.

TRICHINOPOLY:

ST. JOSEPH'S COLLEGE PRESS.

1906.

Imprimatur

✠ JOANNES MARIA, S.J.,

*Ep. Trichinopolit.*

Cum Permissu Superiorum.

## சிந்துதேசத்துக்கு அப்போஸ்தலரான அர்ச். சவேரியாருக்குப் பாதகாணிக்கையாக இப்புத்தகத்தை ஒப்புக்கொடுக்குஞ் செபம்.

---

கருணைச்சமுத்திரமான சர்வஜீவ தயாபர சர்வேசுரனாலே சிந்து தேசத்தாருக்கு அப்போஸ்தலராக ஏற்படுத்தப்பட்டவருமாய், அவர்களைத் திருப்ப வட்டுக்கடந்த அற்புதங்களை நடத்திக்கொண்டு வந்தவருமாய், அவர்களுக்காக இடைவிடாத மேரையாய்த் தேவ சிம்மாசனத்தண்டையில் வேண்டிக்கொள்ளுகிறவருமாயிருக்கிற அர்ச். சவேரியாரே! வேதசாட்சியான முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் உம்மை மாதிரிகையாகவும் விசேஷ ஆதரவாகவும் தவறாத தஞ்சமாகவும் தெரிந்துகொண்டதன்றியே, நீர் அவரை அத்தியந்த பட்சத்துடன் அணைத்து, அவருக்குச் சிறு பிராயத்தில் ஆரோக்கியம் கட்டளையிட்டு, அவரைச் சிந்துதேசத்துக்கு விக்கினமின்றிச் சேரப்பண்ணி அவரை எப்போதும் விசேஷ கவனத்துடன் நடப்பித்துக்கொண்டு வந்தீரே. அவரும் உம்முடைய சிறந்த மாதிரிகைகளைக் கண்டுபாவித்து இந்தச் சிந்து தேசத்தில் அதிசயமான கிருத்தியங்களைச் செய்து, திரளான ஜனங்களைச் சத்திய வேதத்துக்குத் திருப்பி வேதசாட்சியாகத் தம்முடைய பிராணனைப் பொருந்திய மனதோடு கொடுத்தாரே. ஆகையால் உமக்கும்

பிரிய சிஷனெனவருமாய், உம்மைக் கண்டுபாவித்தவரு மான முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய இந்தச் சரித்திரத்தை உமக்குப் பாதகாணிக்கையாக வைத்துக் கொள்ளுகிறேன். இச்சிறு புத்தகத்திலே கடவுளான சர்வேசுரனுக்குத் தோத்திரப் புகழ்ச்சி உண்டாகவும், சத்தியவேத மகிமை இலக்ஷணங்கள் விளங்கவும், வேதசாட்சியான அருளானந்தருடைய பிரதாபமுள்ள புண்ணியங்கள் துலங்கவும், உமது மன்றாட்டினாலே கட்டளையிட வேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறேன். நீரும் அவரும் இந்த நிர்ப்பாக்கியமான தேசத்தின்பேரில் இரங்கி, இவ்விடங்களில் எங்கும் அஞ்ஞான அந்தகாரம் நீங்கிப்போகவும், பதிதருடைய பொய்மதங்கள் அழியவும், பிரிவினையின் மயக்கம் தெளியவும், சர்வ கிருபை உடைத்தான சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய சந்நிதானத்திலே மன்றாடவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். நீர் இந்தப் பாதகாணிக்கையைக் கிருபையாய் ஏற்றுக்கொண்டு இச்சிறு புத்தகத்தை ஆசீர்வதித்தருளவேண்டுமென்று சாஷ்டாங்கமாய்விழுந்து கெஞ்சிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஆமென் சேசு.




# முத். அருளானந்தர் சரித்திரம்.

## முதல் அதிகாரம்.

முத். அருளானந்தர் பிறந்து வளர்ந்து
சேசுசபையில் பிரவேசித்துச் சிந்துதேசத்துக்குப்
போகிற வர்த்தமானங்களாவன:

### முதல் பிரிவு.

முத். அருளானந்தர் பிறந்து வளர்ந்த
வர்த்தமானமாவது:

முத்திப்பேறுபெற்ற தெ பிரித்தோ என்னும் அருளானந்தர் கர்த்தர் பிறந்த 1647-ம் ஆண்டில் போர்த்துக்கல் இராச்சியத்துக்கு இராஜதானியான லிஸ்பன் என்னும் மாநகரில் உயர்ந்த கோத்திரத்தில்

பிறந்தார். இவருடைய தாய் தகப்பன் மேலான யோகங்களைச் செலுத்தி, மிக்குள்ள திரவியங்களைச் சம்பாதித்து, இவ்வுலக வாழ்வு மகிமையை நம்பாமல் பத்தி விசுவாசமுள்ளவர்களாய் இருந்தார்கள். இவருடைய தகப்பனார் இராஜாவின் தேசாதிபதியாய்ப் பிரசில் என்னும் இராச்சியத்தில் செங்கோன்மை செலுத்திவருகையில் மரணமானபடியால், இவர் தமது பத்தியுள்ள தாயாரின் விசாரணையில் வளர்ந்துவந்தார். எவ்வித கிர்த்த குணங்களையும் அவள் தன் குமாரன் இருதயத்துக்குச் சர்வேசுரன் தந்தருளினதாகக் கண்டு இவரை மகா பக்தியுடனே சவரக்ஷணை செய்து, அரவணைத்துச் சிறுபத்தில்தானே அர்ச்சியசிஷ்டவர்கள் காட்டின நன்னெறியில் நடப்பித்துக் கொண்டு வருவாள். இவரோவெனில் சிறுபிள்ளைகளின் விளையாட்டுகளை அகற்றி, உலக மாய்கைகளை வெறுத்து, நாளுக்குநாள் புண்ணியங்களில் மேற்படுவார். ஆற்றோரம் செழுந்தரையில் ஊன்றிக் கவனத்தோடு அழிவின்றிப் பராமரிக்கப்பட்ட மரமானது, தன் பக்குவ காலத்தில் பூ காய் கனிகளைத் திரளாய்ச் சொரியுமாப்போல, சிறுமையில் தானே தேவவரங்களால் பூரிப்பிக்கப்பட்டு, அறவழியை மகா ஞானத்துடன் படிப்பிக்கப்படும் இவர், அர்ச்சியசிஷ்டவராகிச் சாங்கோபாங்கம் அடைந்து தருமக் கிருத்தியங்களை நடத்தி வருவாரென்று எல்லோரும் சொல்லுவார்கள்.

இவருக்கு ஒன்பது வயதாகையில், இவருடன் கற்குணசாலிகளும் பிரபுக்களுமான சில துரைமக்கள் தெரிந்துகொள்ளப்பட்டு, இராஜகுமாரனுடன்

யேதுருக்கு நல்ல தோழராகவும், அவனுடன் படிப்பவராகவும், விளையாட்டுச் சிநேகிதராகவும் நியமிக்கப்பட்டார்கள். இத்தோழர்களில் விசேஷமாய் அருளானந்தர் இராஜ குமாரனுக்குப் பிரிய சிநேகிதனாய் இருந்தார். அப்போது இவர், கல்வி சாஸ்திரத்தில் தமது சாமர்த்தியத்தினாலும், நடக்கையில் தமது மரியாதையினாலும், ஒழுக்கத்தில் தமது கற்பினாலும், அந்த அரண்மனையிலுள்ள யாவருக்கும் அதிசயமும் சன்மானிப்பையும் விளைப்பார். இதினிமித்தம் அரண்மனையார் இவர் பேரில் மிகவும் பட்சமாய் இருந்தாலும், இவர் தம்மைப் பெருமையாய் எண்ணாமல் மகா மனத் தாழ்ச்சியாய் இருப்பார். இராஜ குமாரனின் மற்றத் தோழர்கள் இவனை அரண்மனையிலுள்ளவர்கள் நேசிக்கிறதையும், இவருடைய நல்லொழுக்கத்தையும் கண்டு, பொறாமையாய் இவரைச் சில சமயங்களில் அடிப்பதுந்தவிர, இவருடைய பத்தி வஞ்சகமென்றும், நல்லொழுக்கம் அகமரியாதையென்றும் சொல்லி நிந்திப்பார்கள். இவரோவென்றால், அவைகளைச் சட்டைபண்ணாமல் பொறுமையாய்ச் சகித்து வந்ததினால் அக்காலத்தில்தானே வேதசாட்சியென்னும் பெயர் அடைந்தார். அதல்லாமலும் தூய வெண்மையான லில்லியென்னும் பூவானது முட்செடியில்தானே அதிக வடிவாக மலருமாப்போல, சிற்றின்பம் வருவிக்கும் அரண்மனை மாய்கைகளுக்குள் அருளானந்தர் ஓர் அற்ப பாவின்றிக் கற்பென்கிற தூய புண்ணியத்தைக் காத்தமையால், அரண்மனையின் சம்மனசு என்று சொல்லப்படுவார்.

---

## 2-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் கடின வியாதியினின்று அர்ச். சவேரியாரின் வேண்டுதலால் சொஸ்தமான வர்த்தமானமாவது:

முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய பத்தியுள்ள தாயானவள், தன் நேச குமாரன் நாளுக்குநாள் சாஸ்திரப் படிப்பிலும் தேவ பயத்திலும் அதிகரித்து யாவருக்கும் பிரியப்படுகிறதாகக் கண்டு மிகவும் சந்தோஷம் அடைந்திருந்தாள். ஆனால், அருளானந்தர் பெரியவராகி ஆச்சரியத்துக்குரிய புண்ணியங்களைச் செய்து அனேகரை ஈடேற்றுவாரென்று காய்மகாரப்பட்ட துஷ்டப் பசாசானது செய்யத் துணிந்ததுவெதெனில்: செழிப்பாய் ஓங்கி வளர்ந்து பலன் தரும் நற்பயிரை ஒரு பெரும்புயல் எழும்பி நிர்மூலமாக்குவது போல, இவருக்குக் கடின நோய் வருத்தி, இவர் செய்யப்போகிற சுகிர்த கிருத்தியங்களைத் தடுக்க வருந்தினதாமே. அதெப்படியெனில், அருளானந்தர் பிறப்பில் மெலிந்த சரீரமுள்ளவரும், வளர்தலில் பலவீனமுள்ளவருமாகையால், கடின வியாதிவந்து அவஸ்தைப்பட்டபோது இவர் சாவாரென்று எல்லாரும் காத்திருந்தார்கள்.

இந்த அபாயமுள்ள தருணத்தில் அருளானந்தரும் அவருடைய தாயாரும் மனுஷரால் தங்களுக்குக் காரியம் இல்லையென்று தங்கள் நம்பிக்கையெல்லாம் அர்ச். சவேரியார்பேரில் வைத்து, வியாதியை நீக்கி ஆரோக்

கியும் கட்டளையிட வேண்டுமென்று அவனைப் பிரார்த்
தித்துக்கொண்டார்கள். தாயானவள் அவனை நோக்கி
வேண்டிக்கொண்டதேதெனில்: மிகவும் அர்ச்சிக்
கப்பட்டவரே! உமது வேண்டுதலால் என் குமாரன்
சொஸ்தமாகிப் பிழைப்பானேயாகில், உமது சபை
யான சேசு சபைக் குருசுவாமிமார்கள் அணியும் உடு
பாவனையை ஒரு வருஷமளவும் தரித்துக்கொள்ளுவா
னென்று நேர்ந்துகொண்டாள். அர்ச். சவேரியார்,
அருளானந்தர் குருவாகித் தமக்கு மிகவும் பிரியமுள்ள
சிந்து தேசத்தாருக்குச் சத்தியவேதத்தைப் போதித்து
அனேகாயிரம் அஞ்ஞானிகளை நன்னெறியில் சேர்ப்
பாரென்று விசாரித்து, இந்த மன்றாட்டுக்கிரங்கிச்
சர்வேசுரனை வேண்டிக்கொண்டதினால் இவருக்கு
ஆரோக்கியம் கட்டளையிடச் சித்தமானார்.

அற்புதமாய்ச் சௌக்கியமடைந்த அருளானந்தர்
நன்றியறிந்தவராய்த் தமது தாயார் நேர்ந்துகொண்ட
பிரகாரமே சேசு சபை சுவாமிமார்களுடைய ஆடை
களை ஒரு வருஷமளவாக உடுத்திக்கொண்டுவந்தார்.
இராஜ குமாரனின் மற்றத் தோழர், பொன் வெள்ளி
முத்து இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்டப் பட்
டுப்பட்டாவளிகளைத் தரித்துச் சலாக்கியமாய்த் திரி
கையில், அவர்களில் ஒருவரான அருளானந்தர் யா
தொரு சோடிப்பின்றி மேற்சொல்லிய ஆடைகளை
அணிந்துகொண்டே திரிவார். இந்த நீச கோலத்
தைத் தரித்திருந்தாலும், இவர் சற்றும் கூச்சமின்றி
அரண்மனையிலும் இராஜ சமூகத்திலும் பட்டணத்
தின் தெருக்களிலும் திரளாய்க் கூடிய கூட்டங்களி
லும் காணப்படுவார்.

அருளானந்தர் அர்ச். சவேரியார்பேரில் வைத்த நன்றியறிதலால் குருக்கள் அணியும் வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டதுமல்லாமல், அவர் காண்பித்த சுகிர்த புண்ணியக் கிரியைகளையும் கண்டுபாவித்து, அவர் போதித்த சிந்துதேசத்துக்குப் போகவும் அபேட்சித்து, சேசு சபையில் பிரவேசிக்கவேண்டுமென்று தம்மில் தீர்மானித்தார்.

---

## 3-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சேசு சபையில் பிரவேசித்த வர்த்தமானமாவது:

---

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் 15 வயதில் இப்பிரபஞ்ச வாழ்வு மகிமையையும் காணுவித நன்மைகளையும் வெறுத்து, அழியாத மோக்ஷ பாக்கியத்தையும் ஒழியாத பிரதாபத்தையும் அடைய அபேட்சித்து, இவைகளைப் பெறுவிக்கும் வழியாகிய சேசு சபையில் பிரவேசிக்கத் தமக்கு உத்தரவு தரும்படிக்கு அதின் சிரேஷ்டர்களிடத்தில் மிகுந்த ஆசையோடு கேட்டுக்கொண்டார். சிரேஷ்டர்கள் இவருடைய சுகிர்த நடக்கையையும் அபேட்சையையும் கண்டு இவரை ஏற்றுக்கொள்ளப் பிரியப்பட்டாலும், இவர் இராஜ குமாரனுக்குப் பட்சமுள்ள சிநேகிதராகவும் இராஜாவுக்குப் பிரியமுள்ளவராகவும் தமது தாயாருக்கும் கோத்திரத்துக்கும் ஆதரவாகவும் இருக்கிறாரென்று நிச்சயித்தமையால், இவருடைய விருப்பத்திற்குச் சம்மதிக்கவில்லை.

இவ்விக்கினங்களைக் கண்ட அருளானந்தர் தாம் விரும்பின அதிர்ஷ்டத்துக்கு மனிதரால் தடை நேரிடாமல் அது அனுகூலமாகும்படிக்குத் தமது ஆண்டவளாகிய தேவதாயையும் தமக்கு ஆரோக்கியம் கட்டளையிட்ட அர்ச். சவேரியாரையும் மகா பத்தியோடு வேண்டிக்கொண்டார். அதன்பின் தமது தாயாரிடத்தில் தாழ்மையான விண்ணப்பம்பண்ணி அவள் தம்முடைய கருத்துக்குத் தடைபண்ணாமல் உத்தரவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். இந்த விண்ணப்பத்தைக்கேட்ட தாயானவள் அவருக்கு உரைத்த மறுமொழி எதெனில்: "என் பிரியமுள்ள மகனே, நீ விரும்பிய காரியத்துக்கு நான் விக்கினம் செய்பவளல்ல. ஆயினும் நீ நினைத்த நினைவை நிறைவேற்றுமுன்னே, அது தேவ ஏவுதலினால் வந்ததோ இல்லையோவென்று நன்றாய் யோசித்துப் பார். சேசு சபையில் வழங்கிவரும் தவக் கிரியைகளையும், ஒடுக்க முறைமைகளையும், சாஸ்திரப் படிப்புகளையும், தேக பலவீனனான நீ சகிக்கக்கூடுமோ, இல்லையோவென்று ஆலோசித்துக்கொள். நீ அச்சபையில் பிரவேசித்தபின் அந்நெறியை விட்டு உலகத்துக்குத் திரும்பி வருவாயாகில் எனக்குத் தீராத கஸ்தி உண்டாகும்" என்றாள். அருளானந்தர் இந்த வார்த்தைகளைக் கேட்டு அகமகிழ்ந்து, சேசு சபையில் பிரவேசிக்க ஆசையைத்தந்த சர்வேசுரன், அதில் வழுவாதொழுக அனுக்கிரகம் செய்வாரென நம்பி இருக்கிறேனென்று மாறுத்தரம் சொன்னார்.

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தமது தாயார் உத்தரவு சம்பூரணமாய் அடைந்தபின்பு, இராஜ சமு

கத்தில் சென்று, அவர் தமது பேரில் பெரியமனசு வைத்துத் தமக்கு இந்நாள்வரையில் அளித்த சகல உபகாரங்களிலும் மேலான சகாயம் செய்யவும், தாம் அவ்வரண்மனையைவிட்டு உலக சுகசெல்வங்களைத் துறந்து சந்நியாசம்பண்ண உத்தரவு தரவும் வேண்டுமென்று மன்றாடினார். இராஜாவானவர் பத்தி விசுவாசமுள்ளவராய் இருந்தாலும், இவர் பேரில் தாம் வைத்த பட்சத்தி னிமித்தம் இவர் கேட்பதற்கு உத்தரவு கொடுக்க வருத்தப்பட்டார். ஆனாலும் அருளானந்தர் தமக்கு அப்பேர்ப்பட்ட அதிர்ஷ்டம் கட்டளையிட வேண்டுமென்று சுகிர்த நியாயங்களைக்கொண்டு கெஞ்சிக்கேட்டமையால், இவரை விட்டுவிடச் சம்மதித்தார். இராஜகுமாரன், தனக்கு மிகவும் நேச சிநேகிதனான அருளானந்தர் தன்னைவிட்டுப் பிரிகிறதாகக் கண்டு மிகவும் துக்கப்பட்டதுந்தவிர எப்போதும் இவர் பேரில் பிரியமுள்ளவனாய் இருந்தான்.

வேடர் கண்ணிகளில் சிக்கி வருத்தப்படும் மானானது அக்கண்ணிகள் அறக் குதித்துத் தப்பி வேடருக்கும் நாய்களுக்கும் எட்டாத காடுகளில் சந்தோஷமாய்த் துள்ளி ஓடுமாப்போல், அருளானந்தர் இவ்வுலகக் கண்ணிகளாகிய ஆஸ்தி செல்வம் மகிமை யாவையும் அகற்றி அச்சமற்ற தஞ்சமான சேசு சபையில் பிரவேசிக்கத் தீவரித்துப்போனார்.

## 4-ம் பிரிவு.

### முத். அருளானந்தர் சேசுசபையில் பிரவேசித்து நடத்திய சுகிர்த புண்ணியக் கிரியைகளாவன:

பாழ்நிலமான அரண்மனையில் உச்சித இருத்தியங்களை விளைவித்த அருளானந்தர், செழும் பூமியான சன்னியாசிகள் சபையில் பிரவேசித்ததும், எவ்வித புண்ணியங்களுடைய மலர்களையும் கனிகளையும் விளைவிப்பாரென்று எல்லோரும் எண்ணங்கொண்டிருந்தார்கள். இவரோவெனில் சேசுசபையில் பிரவேசித்த நாள் முதற்கொண்டு வேதசாட்சிகளுடைய மாட்சிமை பொருந்திய கிரீடம் தரிக்குந்தனையும் புண்ணிய நெறியில் ஓர் இராட்சதனைப்போல நடந்தாராமே. இவ்வுலக வாழ்வு செல்வம் மகிமைகளின்பேரில் பற்றுதலுள்ளவர்கள் எவ்வளவு ஆவலுடன் அவைகளைத் தேடுகிறார்களோ, அவ்வளவு அருவருப்புடன் இவர் அவைகளைப் பிறக்கணித்துச் சேசுக்கிறீஸ்துநாதரைக் கண்டுபாவிக்கவேண்டுமென்று, மனத்தாழ்ச்சி சிரேஷ்டருக்குக்கீழ்ப்படிதல் ஒடுக்கமுயற்சிகள். நீசத்தொழில் இவைகளைமாத்திரம் அபேட்சித்துத் தேடித்திரிவார். சேசு சபையிலுள்ள வாலிபர் அநுசரித்துவருகிற தவக்கிரியைகள், தியானச் செபங்கள், தர்மநடபடிக்கைகள் முதலிய ஞானக்கிருத்தியங்களைத் தாமும் சுமுத்திரையாய்ச் செலுத்திவருவார். எல்லாச் செய்கைகளிலும் தம்மைத் தாழ்த்தி யாவருக்கும் கீழ்ப்படிந்து ஊழியம் பண்ணப் பிரியப்படுவார்.

ஒருநாள் கடினவியாதியாய்க் கிடந்த ஒரு ஊழியனுக்கு இவர் மகா தாழ்ச்சி பிரியத்தோடு நீசஊழியம் செய்யும் தருணத்தில் இராஜகுமாரன் இவனைப் பார்க்க வந்தான். உயர்ந்த கோத்திரத்தில் பிறந்து மேன்மையாய் வளர்க்கப்பட்ட இவர் நீசப் பணிவிடை செய்கிறதாகக்கண்ட இராஜகுமாரன் பிரமித்துத் தன் பழைய சிநேகிதனுக்கிரங்கி அவனை நோக்கிச் சொன்னதாவது: "நீர் நம்மிடத்தில் உத்தியோகம் பண்ணுவதைவிட இந்த ஊழியனுக்குப் பணிவிடை செய்வதில் அதிக சம்பாவனை பெறுவீரென்பதற்குச் சந்தேகமில்லை" என்றான்.

பொர்த்துக்கல் இராச்சியத்தில் எளிய வியாதிஸ்தரைப் பராமரித்துச் சகாயம் பண்ணுவதற்குவேண்டிய தருமசாலை கட்டியிருக்கிறதாமே. இந்தத் தருமசாலைகளிலுள்ள பிணியாளிகளுக்கு ஊழியஞ்செய்வதில், தாழ்மை பிறர்சிநேகம் முதலான புண்ணியங்களில் அப்பியாசப்படும்படிக்கு, மேற்சொல்லிய சபைவாலியரை அவ்விடங்களுக்கு அனுப்புவார்கள். அருளானந்தர் அவ்விடங்களுக்குப்போய் அந்த நீசருக்கு நற்புத்தி சொல்லி அவர்கள் படுக்கையைப் பணிக்கைப்பண்ணவும் காயங்கட்டி மருந்துகொடுத்து அவர்களுக்குவேண்டிய ஊழியம் எல்லாம் செய்யவும் பிரியப்படுவார். இந்த நோயாளிகளில் ஒரு கிழவன் கோப முள்ளவனுமாய் மரியாதை யற்றவனுமாய்க் கொடுமையுள்ளவனுமாயிருந்தான். அருளானந்தர் அவனையே விசேஷ பக்ஷத்தோடு பேணி விடாத் கவனத்தோடு பராமரித்து, எவ்வித உபகாரத்தோடும்

போஷித்துக்கொண்டுவந்தாலும், இந்த முரட்டுக் கிழவன் அவரைக் கொடுமையாய்ப் பேசி அவமானப்படுத்தி அடிப்பான். இவரோவெனில் அவையெல்லாம் பொறுமையாய்ச் சகித்துத் தாம் அவனுக்குச் செய்யும் ஊழியத்தில் பின்வாங்காமல், அவனை அதிகமதிகமாய் விசாரித்துவருவார். கடைசியிலே அவ்வளவான சிநேகத்தையும் மாறாத பொறுமையையும் கண்ட கிழவன், பிரமித்து மனந்திரும்பி, அருளானந்தரின் சிரேஷ்டரை வரவழைத்துத் தான் செய்த கொடுமையை அறிவித்துத் தனக்குப் பொறுதிதர மன்றாடி, அருளானந்தருடைய பொறுமையை வாழ்த்தி, நான் இனி தேவசித்தத்துக்கு அமைந்து நடப்பேனென்று சொன்னான். அப்படியே தனக்குண்டான கஸ்தி வியாதி வருத்தத்தைப் பொறுமையாய்ச் சகித்து அருளானந்தருடைய நாமத்தை ஸ்துதியாகச் சொல்லிக்கொண்டிருந்தான்.

---

## 5-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் மேலான சாஸ்திரங்களைப் படித்த வர்த்தமானமாவது:

---

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இரண்டு வருஷமளவாக சேசுசபைச் சோதனையிடத்தில் யாதொரு பழுதின்றி யாவரும் மனமகிழச் சுமுத்திரையாய் நடந்துவந்தார். சிரேஷ்டர்கள் இவரைப் பரிசோதிக்கவேண்டிய யாவையும் பரீக்ஷை செய்ததின்பின்,

இவர் தம்மரணபரியந்தம் மண்ணாசை பொன்னாசை பெண்ணாசைகளை வெறுத்து, விரத்தனாகவும், தரித்திரனாகவும், சிரேஷ்டர் சொற்படி கேட்பவனாகவும் நடந்துவருவேனென்னும், இம்மூன்று பெரியவார்த்தைப்பாடுகளைக் கொடுத்தார். இவர் அச்சமயத்தில் அடைந்த சந்தோஷம் எவ்வளவோவெனில், தந்தை தாயிழந்து ஆதரவற்று ஏங்கும் ஓர் வாலிபனை, அரசாண்டுவரும் ஓர் இராஜா கண்டு இரங்கி, அவனைத் தன் மகனாகப் பாவித்து அவனுக்குப் பட்டங்கட்டிவைத்தால், இவன் எம்மாத்திரம் அக்களிப்பாயிருப்பானோ, அதைவிட இவர் மட்டுக்கடந்த மனப்பூர்த்தியை அடைந்தார் என்கிறதற்கு சந்தேகமில்லை.

அதன்பின் மேலான சாஸ்திரங்களைப் படிக்க இவரைச் சாஸ்திரமடத்துக்கு அனுப்பினார்கள். அவ்விடத்திலும் இவர் எல்லாருக்கும் சிறந்த மாதிரிகையாகி நாளுக்கு நாள் புண்ணியங்களில் அதிகரித்துத் தளராத முயற்சியோடு சர்வேசுரனுக்கு மாத்திரமே பிரியப்பட வருந்துவார். இவர் சுபாவத்தில்தானே புத்திக் கூர்மையுள்ளவரும், நானாவித காரியங்களில் சாமார்த்தியரும், எல்லாத்திலும் விவேகியுமாயிருந்தமையால், மேலான சாஸ்திரங்கள் யாவையும் அதிசீக்கிரமாய்ப் படித்து மேன்மையடைந்தார். இவருடைய சாமார்த்தியத்தையும் கல்வித்திறமையையும் எல்லாரும் கண்டு அதிசயித்துப் புகழ்ந்துபாராட்டினாலும், இவர் மனத்தாழ்ச்சியே தமக்குப் பெருமையாக எண்ணிச் சகலருக்கும் கீழ்ப்படிய விரும்புவார். இவர் இடைவிடாத முயற்சியோடு புஸ்தகங்களை வாசித்து சாஸ்திர நூல்களைப் பரிசோதித்து அருமையான

கிலக்கியானங்களில் அப்பியாசப்படும்போது, செபத் தியானத்திலும் தருமங்களையும் [illegible] நல்லொழுக்க முறைமைகளையும் [illegible] விட்டுவிட்டவரல்ல. எங்கும் வியாபகமா[illegible] கடவுளை மனதிருஷ்டியினாலே தெரிசித்துத் தம்முடைய செய்கைகளெல்லாம் அவருக்குப் பிரிய [illegible]மாகும்படிக்குச் செய்வார்.

எல்லாப் புண்ணியங்களிலும் சாங்கோபாங்கம் அடைய விருப்பமுள்ளவராயினும் பிறர் [illegible] அவருக்கு அதிகப்பிரியமாயி யாவருக்கும் [illegible] போலவும் அடிமையைப்போலவும் எவ்வித [illegible] பணிவிடையும் ஒத்தாசையுஞ் செய்ய வருந்துவார்.

மேற்சொல்லியபிரகாரமே முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சாஸ்திரங்களை முழுதும் படித்த பின்பு இலக்கியநூல்களைப் படிப்பிக்க [illegible] டார். இந்நூற்கள் படிப்பிப்பதில் தமக்கு ஞானப் பலன்கிடைக்கவும், மடத்துப்பிள்ளைகளுக்குப் பிரயோசனமுண்டாகவும் படிப்பிப்பாரொழிய, விசேஷமாய் இவர்கள் பாவத்தைவெறுத்துத் தங்கள் துர் இச்சைகளை அடக்கிச் [illegible] நெறியில் ஒழுகும்பொருட்டு மிகவும் பிரயாசப்படுவார். இப்படிப்பட்ட உபாத்தியாயருடைய [illegible]யிலிருந்த வாலிபர் படிப்பிலும் புண்ணியத்திலும் தேறிப்போய் அவரை மரணபரியந்தம் நேசித்து வணங்கி வந்தார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சேசசபையில் பிரவேசித்த நாள் முதற்கொண்டு அர்ச். [illegible]யைப் பின்பற்றி [illegible] தேசத்துக்குப் போய்ச் சத்தியவேதம் போதிக்கத்

தமக்கு எப்போது கூடுமோவென்று விரும்பிக்கொண்டிருந்தார். இந்த விருப்பத்துக்கு ஆரம்பமாகத் தாம் படிப்பித்த வாலிபருடைய ஆத்துமங்களை விசேஷ கவனத்துடன் விசாரிப்பார். ஒருநாள் இவர் அர்ச். சவேரியார் பேரில் பிரசங்கம் பண்ணுகிறபோது, தமது இருதயத்தில் பற்றி எரியும் தேவசிநேகத்தையும் ஞான ஆவலையும் எல்லாரும் கண்டு அதிசயப்பட வெளிப்படுத்தினார். அவர் நெடுநாள் சர்வேசுரனிடத்தில் கேட்டுக்கொண்ட அதிர்ஷ்டமானது, திருச்சபைப் பரம்புதலுக்காகவும் அநேகருடைய ஈடேற்றத்துக்காகவும் கடைசியாய் அவருக்குச் சித்தித்ததாமே.

---

## 6-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சிந்துதேசத்துக்குப் போக நியமிக்கப்பட்ட வர்த்தமானம்:

ஒன்றிலும் தமக்கு எதிரின்றி நினைத்த யாவையும் தடுக்கப்படாத வல்லபத்தோடு நடத்துகின்றவருமாய், கருதிய காரியங்களை இனியவிதத்தில் நிறைவேற்றுகின்றவருமாகிய சர்வஜீவ தயாபர சர்வேசுரன், தமது பிரிய தாசருளை முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் நெடுநாளாக மன்றாடிவந்த ஆசையுள்ள வேண்டுதலுக்கு இரங்கி, அவரைச் சிந்துதேசத்துக்கு அனுப்பத் திருவுளமானார். அதெப்படியென்றால்,

அக்காலத்தில் மதுரை, தஞ்சையூர், வேலூர் இவை முதலிய இராச்சியங்களில் எண்ணிலடங்காத அஞ்ஞானிகள் சத்தியவேதத்துக்குத் திரும்புவார்கள். ஆனால் அஞ்ஞானிகளில் அனேகர் மனந்திரும்பிக் கிறீஸ்தவர்களாக விரும்பினாலும், குருசுவாமிமார்கள் கொஞ்சம்பேர் மாத்திரம் இருக்கிறதினிமித்தமாகத் தாங்கள் விரும்பினபடி வேதத்துக்கு வரக்கூடாதவர்களாய் இருப்பார்கள். மீளவும் ஞானஸ்நானம் பெற்ற புதுக்கிறீஸ்தவர்கள் தகுந்த விசாரணையற்றவர்களாயும், தாங்கள் அபேட்சித்தபடி தேவதிரவிய அநுமானங்களைப் பெறக்கூடாதவர்களாயும் இருப்பார்கள். ஆனதுபற்றி அவர்களுக்கு வேண்டிய குருக்களை அழைத்துக்கொண்டு வரவும், நூதனமாய் ஸ்தாபிக்கப்பட்ட சிந்துதேசத்தின் சபைகளுக்கு வேண்டியவைகளைச் சம்பாதிக்கவும், மதுரை இராச்சியத்தினின்று ஐரோப்பாக் கண்டத்துக்குப் பேர்போன ஒரு குருசுவாமியார் அனுப்பப்பட்டார்.

பால்த்தசார் த கோஸ்தா என்னப்பட்ட இந்தச் சுவாமியார், அனேக வருஷம் இந்த சிந்துதேசத்தில் உழைத்து எவ்வித துன்பங்களுக்கும் பின்வாங்காமலும், எவ்வளவு குரூரத்துக்கு அஞ்சாமலும், திரளான அஞ்ஞானிகளை நன்னெறியில் திருப்பி அதிலிருந்த குருக்களுக்குச் சிரேஷ்டராகி வேத மகிமைக்காக அனேக சுகிர்த கிருத்தியங்களை நிறைவேற்றிக்கொண்டுவந்தார். இவர் போர்த்துக்கல் இராச்சியத்தில் சேர்ந்தவுடனே, சிந்துதேசங்களிலுள்ள சபைகளின் அவசரங்களையும், அதிலிருக்கும் புதிய கிறீஸ்தவர்களுடைய சுகிர்த நடபடிக்கைகளையும் காட்டி, எண்ணிக்

கையில்லாத அஞ்ஞானிகள் சத்தியவேதத்துக்கு வர விரும்புகிறதையும், ஞானஸ்நானம் பெற்ற விசுவாசிகள் அடிக்கடி தேவதிரவிய அநுமானங்களைப் பெற அபேட்சிக்கிறதையும், அதிலிருக்கிற குருக்கள் சத்தியவேதத்துக்காக எவ்வித நிந்தை வாதைப்பட்டும் தேவ ஊழியத்தைச் சரிவரச் செலுத்தக்கூடாதவர்களாய் இருக்கிறதையும், யாவருக்கும் விஸ்தரித்துச் சொல்லுவார். "தங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வரவேண்டுமென்று மன்றாடுகிற அந்த அஞ்ஞானிகள் பேரில் இரக்கமாயிருங்கள்! தங்களுக்குப் பாவசங்கீர்த்தனமும், சற்பிரசாதமான தேவநற்கருணையும், அவஸ்தைப்பூசுதலும் கொடுக்கவரும்படி அபயசத்தமிடுகிற புதுக் கிறீஸ்துவர்களின் கூக்குரலைக் கேட்டு இரங்குங்கள்! இவர்களும் அவர்களும் பசாசுக்கு இரையாகாமல் அவர்களுக்கு ஒத்தாசை செய்யத் தீவிரியுங்கள்" என்று திரளான கண்ணீர்களைச் சிந்திச் சொல்லுவார். அடர்ந்த காட்டில் பற்றின தீயானது காற்று வீச வீச ஏகமாய்ச் சுவாலித்து எரியுமாப்போல, இந்தச் சுவாமியாருடைய வார்த்தைகள் ஞான ஆசைகளால் நிறைந்திருந்த அருளானந்தருடைய மனதில் பட்டவே, மட்டுக்கடந்த விதமாய் அவ்வாசைகள் இவர் இருதயத்தில் பற்றி எரிந்ததாமே. தூண்டிய ஆசைப் பெருக்கத்தால் இவர் சிந்து தேசத்துக்குப் போக உத்தரவு கொடுக்கவேண்டுமென்று சிரேஷ்டரை மகா ஆவலோடு அடிக்கடி கெஞ்சிக் கேட்டுக்கொண்டார். இவர் தேக பலவீனராகையால் சிந்துதேசத்திலுள்ள சுவாமிமார்களுக்கு நேரிடுகிற வருத்தங்களைச் சகிக்க

மாட்டாரென்று சிரேஷ்டர் அறிந்திருந்தாலும், இவர் தமது தாழ்மையான மன்றாட்டுக்களினாலும் இடைவிடாத முயற்சியினாலும் தாம் விரும்பின உத்தரவை அடைந்தார். இதனால் இவர் அநுபவித்த சந்தோஷமும், சர்வேசுரனுக்கும், அர்ச். சவேரியாருக்கும் செலுத்தின தோத்திரமும் இவ்வளவென்று தக்கபடி சொல்லுந்தரமல்ல. தம்முடைய பிரிய தாயாரும் இராஜா முதலான பேர்களும் தமது பயணத்துக்குத் தடங்கல் செய்வார்களென்று பயந்து இதை ஒருவருக்கும் சொல்லாதிருந்தார்.

---

## 7-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் குருப்பட்டம் பெற்றுச் சிந்துதேசத்துக்கு யாத்திரையாய்ப் புறப்படுகிற வர்த்தமானமாவது:

---

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சிந்துதேசத்துக்கு யாத்திரையாய்ப் புறப்படுமுன்னே, தேவதிரவிய அநுமானங்களை நிறைவேற்றச் சுதந்தரம் அளிக்கிற குருப்பட்டத்தைப் பெறவேண்டியதாயிருந்தது. ஆகையால் அதற்குக் குறிக்கப்பட்ட காலம் நெருங்கி வருகையில், மற்ற அலுவல்களை ஒழித்துச் சில நாள் ஜெபத்தியானத்திலும் தவ தான தருமத்திலும் அதற்கு விசேஷ ஆயத்தம் செய்துகொண்டு வந்தார். பின்பு குருப்பட்டம் வாங்கி உத்தம பத்தி விச

வாசத்தோடும் அத்தியந்த ஞான சந்தோஷத்தோடும் மனுஷ ரூபமுள்ள ஓர் சம்மனசுவைப்போல முதல் விசை திவ்விய பூசை பண்ணினார். அதில் மனுஷரை இரட்சிக்க மனுஷாவதாரம் பண்ணின கர்த்தருடைய திருச்சரீரத்தையும், விலையேறப்பெற்ற திவ்விய இரத்தத்தையும் தமது கையில் எந்தும்போது, அவருடைய மனதில் பொங்கின சந்தோஷம் எவ்வளவென்று நம்மாலே சொல்லக்கூடாத விஷயமாமே. சிலுவையில் மனுமக்களுடைய அக்கிரமங்களை நிவர்த்திபண்ண இரத்தம் சிந்தின விதமாய்த் தம்மை நித்திய பிதாவுக்கு ஒப்புக்கொடுத்த செம்மறிக்குட்டியான சேசுநாதரை, இப்போது இரத்தம் சிந்தாத விதமாய் அருளானந்தர் தமது கையினாலே திவ்விய பூசையிலே மெய்யாகவே பலியாக ஒப்புக்கொடுக்கும்போது, தம்மையும் கூடப் பலியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று மகாப் பற்றுதலோடு வேண்டிக்கொண்டார். இந்த வேண்டுதலுக்கு இரங்கின சர்வேசுரன் இவர் விரும்பின அதிர்ஷ்டத்தை இவருக்குக் கட்டளையிட்ட விதம் எப்படியென்று இனி வரப்போகிற அதிகாரங்களில் சொல்லிக்காட்டுவோம்.

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் குருப்பட்டம் பெற்றுத் திவ்விய பூசைபண்ணி, ஆனந்த சந்தோஷ வெள்ளத்தில் அமிழ்ந்தினவராய், சிந்துதேசத்துக்குப் போகக் குறிக்கப்பட்ட நாள் எப்போது வருமோவென்று ஆவலுடன் காத்திருக்கையில், அவர் போகிறார் என்று இரகசியத்தில் இருந்த செய்தி பட்டணத்துக்குள்ளே பரம்பிற்று. உடனே இவருடைய தாயாரும், சுற்றத்தார், சிநேகிதர், பிரதானிகள், மந்திரிகள்

இராஜா முதலானோர் வெகு கஸ்திப்பட்டு இவரை நிறுத்துவதற்கு எவ்வித தடங்கலும் பண்ணினார்கள். இவருடைய தமையன் இராஜ படைகளிலே போர் செய்வதில் மரணமானமையால், முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தம்முடைய தாயாருக்கு நேசகுமாரனையும் விசேஷ தேற்றரவாயுமிருந்தார். ஆனதால் அவளைவிட்டுத் தூரதேசத்துக்குப்போகிறது கொடுமையென்று எல்லோரும் சொல்ல, இவர் போகக்கூடாதென்று இராஜாவின் கட்டளையாயிற்று. வெகுநாளாகச் சமுத்திரத்தில் அலைந்து விரும்பின துறையைக் காண்கிற சமயத்தில், பெரும் புயல் எழும்பிக் கரைக்கு வெகு தூரமாய்த் தள்ளப்பட்ட ஓர் கப்பற்காரன் கஸ்திப்படுவதுபோலே, அருளானந்தர் தாம் அத்தனை வருஷமாய்த்தேடின அதிர்ஷ்டம் தமக்குக் கிடைக்கும் தருவாயில் அதை இழந்துபோனதினிமித்தம் மிகவும் கஸ்திப்பட்டார். ஆகிலும் தமது நம்பிக்கையைவிடாமல் தமக்கு ஆரோக்கியம் கட்டளையிட்ட அர்ச். சவேரியாரையும், தமக்கு அனேக சகாயங்களைச் செய்த தேவமாதாவையும் பார்த்து, இந்த விக்கினம் எல்லாம் நீங்கிப் போகும்படிக்கு இடைவிடாமல் வேண்டிக்கொள்ளுவார்.

மேலும் அக்காலத்திலே போர்த்துக்கல் இராச்சியத்தில் ஓர் மேற்றிராணியார் அர்ச். பாப்புவின் ஸ்தானபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய தாயானவள் தன் குமாரன் அந்நிதேசத்துக்குப் போகாமல் சந்தோஷ மனதோடு

இவ்விடத்தில்தானே இருக்கச்சொல்லும்படிக்கு இந்த மேற்றிராணியாரிடத்தில் கேட்டுக்கொண்டாள். அப்படியே மேற்றிராணியாரானவர் அருளானந்தரை வரவழைத்து அவருடனே நெடுநேரம் பேசி, அனேக நியாயங்களைச்சொல்லி, நீர் எங்கும்போகாமல், இங்கேதானே இருக்கவேண்டுமென்று கற்பித்தார். அருளானந்தரோவெனில், மிகுந்த தாழ்ச்சி வினயத்துடனே, இவருக்குத் தம்மைச் சிந்து தேசத்துக்குப் போகிறதற்கு ஏவுகிற சர்வேசுரனுடைய சித்தத்தைக் காட்டி இவரைத் தமது மனதுக்குச் சம்மதிக்கப் பண்ணினார். மேற்றிராணியாரானவர் அருளானந்தர் மதுரை இராச்சியத்துக்கு அப்போஸ்தலராகவும், அனேகரை வேதத்தில் சேர்க்க தேவ ஏவுதலினாலே நியமிக்கப்பட்டவராகவும் இருக்கிறாரென்று நிச்சயித்து, அவருடைய பத்தியுள்ள தாயாருக்கு வேண்டிய உணர்ச்சிகளைச் சொல்லி அவளைத் தன் குமாரனுடைய விருப்பத்துக்குத் தடை செய்யாமல் வலிய மனதோடு உத்தரவு கொடுக்கச் செய்தார். இந்தப் புண்ணியவதி சம்மதிக்கவே, மற்றவர்களுடைய விக்கினமெல்லாம் நீங்கிப்போனதாமே. முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தன் தாயின் உத்தரவைப் பெற்ற க்ஷணமே இன்னும் வேறே விக்கினம் நேரிடுமென்று பயந்து, பயணநாள் வருமளவும் யாத்திரைக்குக் குறிக்கப்பட்ட கப்பலில் ஒளித்திருந்தார்.

## 8-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சிந்து தேசத்துக்குப்போகிற யாத்திரையில் அநுசரித்த சுகிர்த முயற்சிகளாவன:

அதன் பின் யாத்திரைக்குக் குறிக்கப்பட்ட நாள் வந்தவுடனே கப்பற்காரர் நங்கூரம் தூக்கிப் பாய்விரிக்கவே, கப்பலானது வேகத்தோடு கரைக்கு வெகு தூரமாய் ஓடுகையில் மாத்திரமே அருளானந்தர் தாம் ஒளிந்திருந்த இடத்தைவிட்டு வெளியில் வந்தார். அக்கப்பலில் சிந்துதேசத்துக்கும் சீனதேசத்துக்கும் போகிற அனேக குரு சுவாமிமார்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் சாஸ்திரப்படிப்பினாலும் புத்திக் கூர்மை பத்தி விசுவாசத்தினாலும் பெயர்பெற்றுத் தேவ ஊழியத்துக்காகவும் பிறர் ஈடேற்றத்துக்காகவும் தங்களை முழுதும் ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று விரும்பினவர்களாயினும், இவர்களில் அருளானந்தர் ஓர் சூரியனைப்போல விளங்கித் துலங்குவார். இந்தக் குருக்களெல்லோரும் யாதொரு விக்கினமில்லாமல் குறிக்கப்பட்ட தேசங்களுக்குக் கப்பல் சீக்கிரத்துச் சேரவேண்டுமென்று மகா ஆசையுடனே வேண்டிக் கொண்டாலும், சர்வேசுரன் இவர்களுடைய பொறுமையையும் தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படிதல் முதலிய மற்றப் புண்ணியங்களையும் சோதிக்கத்

திருவுளமானார். அது எப்படி என்றால், எல்லோரும் சந்தோஷப்பட நல்ல காற்றோடு ஓடின *கப்பலானது திடீரெனக் காற்று அமரவே, கப்பல் அங்கும் இங்கும் போகக்கூடாததாய் நடுச்சமுத்திரத்திலே நிறுத்தப்பட்டது. அதல்லாமலும் உருமநேரத்தில் சூரியன் நெருப்புபோலே கதிர்கள் வீசினமையால், உஷ்ணம் மிகுதியாகிக் கப்பலிலிருந்த நல்ல தண்ணீர் நாற, சாப்பாட்டுக்கு வைத்திருந்த தின்பண்டங்கள் கெட, எல்லாருக்கும் வெகு வருத்தமும் நெருக்கிடையும் உண்டாயிற்று. மீளவும் அந்த ஜனங்களுக்குள் பெருவாரிக்காய்ச்சல் பரம்பினமையால் அநேகர் செத்துப்போனார்கள். அத்தருணத்தில் அருளானந்தரும் மற்றக் குருக்களும் வியாதியாய் விழுந்தவர்களுக்குப் பலவித பணிவிடைசெய்து ஆறுதலாக நல்ல வார்த்தைகளைச் சொல்லித் தேவ சித்தத்துக்குக் கீழ்ப்படியவும், பொறுமையுடன் இருக்கவும் பண்ணினார்கள். விசேஷமாய் அவஸ்தையாய்க்கிடந்து சாகப்போகிறவர்களுடைய ஈடேற்றக் காரியத்தில் அதிகப் பிரயாசப்பட்டுக்கொண்டு வந்தார்கள். இவர்கள் இவ்விதமாய் உச்சித கிருத்தியங்களைச் செய்துகொண்டு வருகையில் அருளானந்தரும் வேறே சில குருக்களும் வியாதியாய் விழுந்து மிகவும் வருத்தப்பட்டார்கள். தெய்வச் செய்கையால் அருளானந்தருக்கு வியாதி நீங்கி ஆரோக்கியம் உண்டாயிற்று. இவரோடு வியாதியாய் விழுந்த வேறே எட்டுக் குருக்களும் தாங்கள் விரும்பின தேசங்களுக்குச் சேராமல், ஆண்டவர் அவர்களை அழைக்கச் சித்தமானமையால் பாக்கியமான மரணமடைந்தார்கள்.

பின்பு சிந்துதேசத்துக்குப் போகிற குருக்களுக்குச் சிரேஷ்டராயிருந்த முன்சொன்ன பால்த்தசார் நா கோஸ்தா என்னும் குருவானவர் வியாதியாய்விழுந்து அவஸ்தையானார். இவர் மதுரை இராச்சியத்தில் முப்பது வருஷகாலம் தேவ ஊழியத்தில் உழைத்துத் திரளான பெயரைச் சத்தியவேதத்துக்குச் சேர்த்து, அவ்விடத்துக்குத் திரும்பவும் போய்த் தம்முடைய பிராணனைத் தர விரும்பி இருந்தாராயினும், தேவ சித்தத்துக்கு அமைந்து முன் சொன்ன குருக்களுக்கு முன்னமே மரணமாகி மோக்ஷானந்தத்தைச் சுதந் தரித்துக்கொண்டார். அவர் சாகிற வேளையில், தமது பிரிய குமாரனைப்போல நேசித்திருந்த அருளானந்தர் தம்மிடத்தில் இருக்கிறதாகக் கண்டு, அவர் சிந்து தேசத்துக்குச் சேர்ந்து அபூர்வமான புண்ணியங்களைச் செய்து வெகு வருத்தப்பட்டு உழைத்து எண்ணிக்கை யில்லாத அஞ்ஞானிகளைத் திருப்புவாரென்று தூர திஷ்டியினால் அறிந்தாற்போல, அவரை விசேஷ பட் சத்துடன் ஆசீர்வதித்து, மலர்ந்த முகத்தோடு தமது ஆத்துமத்தைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்தார்.

இவர்கள் மரணமான பிற்பாடு அருளானந்தர் வியாதியினிமித்தம் தமக்கு வந்த பலவீனத்தைப் பாராமல், வியாதிக்காரருக்கு வேண்டிய பணிவிடை செய்ததுந்தவிர தங்களுக்கு வந்த இக்கட்டு மனுஷ ரால் தீர்க்கக்கூடாதென்று நிச்சயித்து, எவ்வித கிருபை யும் உடைத்தான சர்வேசுரன் தங்கள்பேரில் இரக்க மாய் இருக்கவேண்டுமென்று எல்லாரையும் மன்றாடச் செய்தார். இவரைப்போல மற்றக் குருக்களும்,

கப்பல் தலைவனும், அதில் இருந்த யாவரும், அர்ச். சவேரியாரை மன்றாடி, அவர் தங்களுக்காக தேவ சிம்மாசனத்தண்டையில் வேண்டிக்கொள்ளும்படியாக அவரைக் குறித்து நவநாள் பிரார்த்தனை செய்யத் தொடங்கினார்கள். இந்தப் பிரார்த்தனை ஆரம்பித்த இரண்டு மூன்று நாளைக்குப் பிறகு, அனுகூலமான காற்று அடிக்கவே கப்பல் ஓடிற்று, அன்றியும் அதில் வியாதியாய்க் கிடந்த யாவரும் அற்புத விதமாய் ஆரோக்கியம் அடைந்தார்கள். இப்படியே சிலநாள் யாதொரு விக்கினமின்றிக் கப்பல் ஓடிக் கேப் குடவுப் புறங்களில் சேர்ந்தது. அதில் கடின புயல் அடித்து மலைகளுக்கு ஒப்பாய் அலைகள் கிளம்ப, கப்பல் அமிழ்ந்திப் போகிறதாய் இருந்தது. இந்தப் பயங்கரமான வேளையில் சகலரும் ஒருவர் மேல் ஒருவர் விழுந்து, ஐயோ சாகிறோமே! அமிழ்ந்திப் போகிறோமே! என்று அழுகைச் சத்தத்தோடு கூக்குரலிட், அருளானந்தர் அர்ச். சவேரியார் தங்களுக்கு முன் கட்டளையிட்ட சகாயத்தை நினைப்பூட்டி, திரும்பவும் அவரைக் குறித்து நவநாள் பிரார்த்தனையைத் துவக்க ஏவினார். இந்தப் பிரார்த்தனை துவக்கினவுடனே புயல் நீங்கிக் காற்று அமர்ந்ததுமன்றிக் கப்பல் யாதொரு மோசமின்றிக் கோவைப் பட்டணத்துக்கு அதி சீக்கிரமாய்ச் சேர்ந்தது.

# 9-ம் பிரிவு.

## முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் அர்ச். சவேரியாருடைய கல்லறையைச் சந்தித்த வர்த்தமானமாவது:

அக்காலத்தில் கோவைப் பட்டணமானது, போர்த்துக்கீஸ்காரர் கீழ்ப்படுத்தி ஆண்டு வந்த சிந்து தேசத்தின் விஸ்தாரமான நாடுகளுக்குத் தலைமை நகராய் இருந்தது. அந்நகரில் உயர்ந்த அரண்மனைகளும் சிறந்த மாடமாளிகைகளும் உச்சிதக் கோவில்களும் இருந்தன. ஆகிலும் அதில், அழிவின்றி, அற்புதமாய்க் காக்கப்பட்ட அர்ச். சவேரியாருடைய திருச்சரீரம் வணங்கப்படுகின்றமையால், இப்பட்டணம் விசேஷ கீர்த்தியும் மகிமையும் அடைந்திருக்கிறதாமே. பூர்வீக காலத்தில் சேசுகிறீஸ்துநாதராலே தெரிந்துகொள்ளப்பட்ட அப்போஸ்தலர் பண்ணின மேலான புதுமைகளையும், நடத்தின அபூர்வமான செய்கைகளையும், இக்காலத்தில் நூதனமாய்ச் செய்ய அர்ச். சவேரியார் சர்வேசுரனாலே தெரிந்துகொள்ளப்பட்டவர்தானே. இந்த மகாத்துமா பத்து வருஷமாகச் சிந்து தேசத்தையும், ஐப்பானியா தேசத்தையும், பல தீவாந்தரங்களையும் மனோவாக்குக் கெட்டாத வருத்தத்தோடு சுற்றித் திரிந்து, எங்கும் எவ்வித அற்புதங்களையும் செய்து அநேக லக்ஷம் பேருக்கு ஞானஸ்நானம் கொடுத்து வந்தார். இதைப்பற்றிச்

சிந்துதேசத்தாரும், ஐப்பானியா தேசத்தாரும், இலாந்தரத்தாரும், அவரைத் தங்கள் அப்போஸ்தலராகவும் தகப்பனாராகவும் கொண்டாடிப் புகழ்ந்து மிகுந்த விநயத்துடனே வணங்குவார்கள். அவரோவெனில் வேறனேகரைச் சத்திய வேதத்துக்குத் திருப்ப வேண்டுமென்று விரும்பிச் சீனவென்னும் இராச்சியத்தில் பிரவேசிக்க ஆரம்பிக்கிறபோது, மோக்ஷபேரின்ப இராச்சியத்துக்கு வரவழைக்கப்பட்டுச் சஞ்சியானென்கிற தீவில் பாக்கியமான மரணத்தை அடைந்தார். அவருடைய தேகத்தின் தசையெல்லாம் கொஞ்சத்துக்குள் அழிந்துபோவதற்குச் சிலமாதம் சுண்ணாம்பில் புதைக்கப்பட்டும், வணக்கத்துக்குரிய அவருடைய சரீரம் ஓர் அற்ப அழிவில்லாதிருந்ததன்றியே, உயிருள்ள தேகம் போல் இருந்ததாமே. ஆகையால் இத்திருச்சரீரத்தைப் பூச்சியமாய்க் கப்பலில் ஏற்றிக் கோவைப் பட்டணத்துக்குக் கொண்டுபோய், பொன் வெள்ளி இரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட மகிமையான கல்லறையில் அதை ஸ்தாபித்தார்கள். இத்திருப் பிரேதத்தண்டையில் நடந்து வருகிற புதுமைகள் எத்தனையென்று சொல்லிலடங்கும் தன்மையல்ல.

இது இப்படியிருக்க, முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் அர்ச். சவேரியார் பேரில் வைத்த பத்தி மிகுதியினால், எப்போது அந்தப் பிரதாபமுள்ள கல்லறையைத் தரிசித்து அதிலிருக்கும் மாட்சிமைபொருந்திய திருச் சரீரத்தை வணங்குவேனோ என்று ஆசையோடிருந்தார்.

ஆகையால் போன பிரிவில் சொன்னபிரகாரம் அர்ச். சவேரியாருடைய வேண்டுதலால் இரண்டுதரம் அபாயத்தினின்று தப்பிக்கப்பட்ட கப்பலானது கோவையில் சேர்ந்தவுடனே, அருளானந்தரும் மற்றக் குருக்களும் கப்பலிலிருந்த யாவரும் இந்த அர்ச்சியஷ்டவருடைய கல்லறைக்குப்போய்த் தங்களுக்கு அவர் செய்த சகாயங்களுக்கு நன்றியறிந்தவர்களாய், சர்வ ஜீவ தயாபர சர்வேசுரனுக்கும் அவருக்கும் தோத்திரம் பண்ணினார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சேசுசபையில் பிரவேசித்த நாள் முதல் கொண்டு தமது பற்றுதலை விசேஷமாய் அர்ச். சவேரியார் பேரில் வைத்து, அவருடைய அதிர்த மாதிரிகைகளைக் கண்டுபாவிக்கவும், அவரைப் பின்பற்றிச் சர்வேசுரனுக்காகவும் ஆத்துமாக்களின் ஈடேற்றத்துக்காகவும் எவ்வித வருத்தமும் பட்டுப் பிராணனைத் தரவும் ஆசையாய் இருந்தார். ஆகையால் அர்ச். சவேரியாருடைய கல்லறையைத் தரிசித்து அவருடைய அழியாத சரீரத்தைக் கண்ணால் காண்கிற போது இவர் அடைந்த சந்தோஷமும், இவர் இருதயத்தில் பற்றி எரிந்த தேவசிநேகமும், பொங்கிய பிறர் ஈடேற்ற ஆவலும், எவ்வளவென்று வாக்கினால் சொல்லக்கூடும் தன்மையல்ல. முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் கோவையில் வசித்திருந்த நாளெல்லாம் அடிக்கடி இத்திருக் கல்லறையைச் சந்தித்து அர்ச். சவேரியார் வேண்டுதலால் தான் தேவ காரியங்களைச் சமுத்திணையாய் நிறைவேற்ற அநுக்கிரகித்தருள வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொள்வார்.

## 10-ம் பிரிவு.

### முத். அருளானந்தர் கோவைப்பட்டணத்தில் அநுசரித்த நற்கிரியைகளாவன:

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் கோவைப் பட்டணம் சேர்ந்தபின் அவ்விடத்தில் ஏழு மாத காலம் வாசம்பண்ணினார். அப்போது குருக்களுக்கு வேண்டிய தெய்வீக சாஸ்திரங்களில் அதிகரிக்க மென்மேலும் பிரயாசப்பட்டதுந்தவிர, சிந்து தேசத்தில் வழங்கி வருகிற பற்பல பாஷைகளை விசேஷ கவனத்துடன் கற்றுக்கொள்ளவும் வருந்தினார். நாலைந்து மாதத்துக்குள்ளாகக் கோவையில் வழங்கி வரும் பாஷையை நன்றாய்ப் படித்து அறிவுள்ளவர்களுக்குப் பிரசங்கம்பண்ணினார். அடுத்தப் பட்டணங்களிலும் பட்டிக்காடுகளிலும் சுற்றித் திரிந்து யாவர்க்கும் சத்திய வேதத்தைப் போதித்து அஞ்ஞானிகள் அநேகரைத் திருப்பிப் பழைய கிறீஸ்துவர்களை நன்னெறியில் ஸ்திரப்படுத்தி எல்லோர்க்கும் புத்தி சொல்லுவார். தம்மிடத்தில் பாவசங்கீர்த்தனம் பண்ணவருகிற திரளான ஜனங்களை மிகா பக்ஷத்தோடு அரவணைப்பார். சிறுபிள்ளைகள் சேசுக் கிறீஸ்துநாதருக்கு அதிக பிரியமுள்ளவர்களாய் இருக்கிறதாகவும், அவர்களுடைய மனம் பரிசுத்தமாய் இருக்கிறதாகவும், அவர்கள் சிறுபத்தில்தானே புண்ணிய நெறியில் நடந்தால் எப்போதும் நல்லவர்களாய் இருப்பார்களென்கிற நம்பிக்கை இருக்கிறதாகவு

அறிந்து, அவர்களை அன்புள்ள தாயைப்போல அனேத்துப் பேணி விசேஷ கவலையுடன் அவர்களுக்கு ஞானோபதேசத்தை விவரித்துக் காட்டுவார். பிணியாளிகள் வசிக்கும் விஸ்தாரமான சாலைகளுக்குப் போய் அவர்களுடைய சரீரத்துக்கும் ஆத்துமத்துக்கும் வேண்டிய பணிவிடைகளை மகா சந்தோஷத்தோடும் பொறுமையோடும் செய்துகொண்டு வந்ததுமல்லாமல், பட்டணத்திலே வீட்டுக்கு வீடு போய்த் தாம் இரந்த பிச்சையைச் செல்வராய் வாழ்ந்து தாரித்திரப்பட்டு இரக்க வெட்கப்படும் நிர்ப்பாக்கியருக்கு ஒருவரும் அறியாதபடிக்குக் கொடுப்பார்.

மீளவும் கோவைக்குச் சேர்ந்தவுடனே, மதுரா இராச்சியத்திலுள்ள குருசுவாமிமார்கள் அநுசரிக்கும் தவக்கிரியைகளில் தாமும் பழகத் தமது தேசத்தின் சாப்பாட்டு வகைகளைத் தள்ளிக் கொஞ்சம் சோறும் கீரையுமாத்திரமே சாப்பிடுவார். கட்டாந்தரையில் படுத்துக் கொஞ்சம் நேரம் நித்திரைசெய்து எழுந்திருந்து செபத்தியானத்தில் நெடுநேரம் செலவழிப்பார். இதன்றியே இந்த விஸ்தாரமான இராச்சியங்களில் உண்டான சகல அஞ்ஞானிகளுக்கு இரங்கி, அவர்களைச் சத்திய நெறியில் சேர்க்கவும், அவர்களுடைய திரும்புதலுக்காகத் தம்முடைய பிராணனைச் செலவழிக்கவும் கிருபைசெய்தருள வேணுமென்று சகல கிருபை உடைத்தான சர்வேசுரனைப் பார்த்து இரவும் பகலும் ஓயாமல் பிரார்த்தித்துக் கொள்ளுவார்.

அக்காலத்தில் கோவைப்பட்டணத்தில் அநேக சனமான அக்கிரமங்களும் பிரசித்தமான தாறுமாறு

கள் முதலான பாவதோஷங்களும் பரம்பி முக்கியப்
பட்டிருந்தன. அவ்வூரில் பற்பல தேசத்தார் கூடி
வியாபார மிகுதியால் திரவிய சம்பன்னராய் இருந்
தமையாலும், இவர்களுக்குள் ஒழுங்கு இல்லாமையா
லும், அநீதியை நீதிபோலவும், அக்கிரமத்தை கிரமத்
தை போலவும், பாவத்தை நல்லொழுக்கம் போலவும்
அநுசரித்து வருவார்கள். மேலும் அதிகாரம் செலுத்
துகிறவர்கள் முதலாய் இப்பேர்ப்பட்ட பொல்லாப்பு
களை அடக்காமல் தங்கள் கடமையைச் சரியாய்ச்
செலுத்தாமலும் பாவ வழியில் நடந்ததினால், மற்ற
வர்களும் பயமின்றித் திரிவார்கள். இம்மாத்திர
மான அக்கிரமங்களை முத்திப்பேறுபெற்ற அருணா
னந்தர் கண்டு மிகவும் துக்கித்து இவைகளை நிவர்த்
தியாக்க ஜெப தப தான தருமக்கிரியைகளை நடத்
தினதுமன்றி, சத்திய வேதத்தின் சத்தியங்களைக்
குறித்துப் பயங்கரமான பிரசங்கமும் பண்ணுவார்.
இவர் படிப்பில் சாமார்த்தியரும், பெயர்பெற்ற
வாய்ச்சாலகரும், முயற்சியுள்ள பிரசங்கியுமாய் இருந்த
தினாலே, அநேகர் இவருடைய பிரசங்கங்களைக் கேட்
கப் போவார்கள். அநேகர் குணப்பட்டுப் பாவ வழி
யை விட்டு நல்லவர்களானார்கள். கிரமந்தப்பித் திர
வியம் சம்பாதித்தவர்கள் அநியாயச்சம்பத்துகளைத்
திரும்பக் கொடுத்துவிடவும், மோகத்தில் பழகினவர்
கள் பாவத்தை விட்டுவிடவும், உலக மகிமைகளை மாத்
திரமே தேடினவர்கள் அவைகளைத் துறந்து விடவும்
உடன்பட்டார்கள். இது இப்படியிருந்தாலும் சில மூர்க்
கமான பாவிகள், இவர் சொல்லிய நற்புத்திகளுக்கு
இணங்காமலும், வற்புறுத்திய தேவ கோபாக்கினைக்கு

அஞ்சாமலும் பாவவழியை விடாதிருந்தார்கள். முத்
திப்பேறுபெற்ற அருணாசலர் இவர்களுடைய பிடி
வாதத்தைக் கண்டு, இவர்களுக்கு நல்ல புத்தி வர
வேண்டிக்கொண்டதன்பின், ஒவ்வொருவனுடைய
வீட்டுக்குப்போய் அவனவனுக்குத் தேவகிருபையைக்
காட்டியாவது தேவநீதியைக்கொண்டு மிரட்டியாவது
அவனவனை மனந்திருப்ப எவ்விதபிரயாசமும்பட்டார்.
ஆகையால் அநேகர் தேவ கிருபையால் மனந் திரும்
பிப் பாவமார்க்கத்தை விட்டுவிட்டார்கள். ஆயினும்
சிலர் பாவ வெறிகொண்டவர்களாய்த் தங்களுடைய
பாவ அக்கிரமங்களை விடாததுமன்றி, தங்களுக்குப்
பொருந்தாத புத்திகளைச் சொல்லும் அருணாசலர்
பேரில் கடுப்பகை வைத்து அவரைக்கொன்றுவிட
ஆலோசனை பண்ணினார்கள். ஒருநாள் பாவத்தில்
விழுந்தருவாயிலிருந்த இரண்டு வாலிபப் பெண்களை
இவர் இரட்சித்தபின் மடத்துக்குத் திரும்பிவருகை
யில், சண்டாளரான அந்தப் பாவிகள் எதிர்த்துவந்து
அவரை வெகுவாய் அடித்துக் கடினகாயப்படுத்திப்
போனார்கள். பட்டணத்தை ஆளும் துரை இதை அறி
ந்து அந்தத் துரோகிகளைப் பிடித்து அவர்களை நீதிப்பிர
காரம் தண்டிக்க ஆரம்பித்தான். அருணாசலரோ
வென்னில் தாம் பட்ட காயங்களினாலே வருத்தமாய்க்
கிடந்தபோதிலும் சர்வேசுரனைப்பற்றித் தமக்கு இந்
தப் பொல்லாப்பு வந்ததென்று சந்தோஷப்பட்டது
மன்றி, அந்தத் துரோகிகளைத் தண்டியாமல் விடுதலை
செய்யவேண்டுமென்று துரையிடத்தில் ஆள் அனுப்
பிக் கேட்டுக்கொண்டார். இந்தத் துரை இது பெரிய
துரோகமென்று எண்ணிப் பொறுக்கக்கூடாதென்க,

அருளானந்தருக்குக் கொஞ்சம் சொஸ்தமானவுடனே துரையைச் சந்தித்து அவனுடைய காலில் விழுந்து அவர்களை மன்னித்து விடவேண்டுமென் மன்றாடினார். இந்த அபூர்வமான தயாளத்தைக் கண்ட துரையானவன் இவருடைய முகத்தை முறிக்கமாட்டாதவனாய் அவர்களைத் தண்டியாமல் விட்டுவிட்டான்.

இப்பிரகாரமாய் அருளானந்த சுவாமியார் ஏழு மாதமளவும் கோவையில் தங்கியிருந்து எவ்வித சகிர்த புண்ணியங்களையும் பண்ணி அநேக பாவிகளையும் அஞ்ஞானிகளையும் திருப்பி அர்ச்சியசிஷ்டவராகவும் இரண்டாம் சவேரியாராகவும் யாவராலும் கொண்டாடப்படுகிறபோது தமது விருப்பப்படியே மதுரை இராச்சியத்துக்குப்போகக் கட்டளையிடப்பட்டார்.

# 2-ம் அதிகாரம்.

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் மதுரை இராச்சியம் தஞ்சையூர் இராச்சியம் மறவன் தேசம் முதலான இடங்களில் நடப்பித்த சுகிர்த நடபடிக்கைகளாவன.

## முதல் பிரிவு.

மதுரை இராச்சியத்தில் சத்தியவேதம் விளங்கத் துடங்கின வர்த்தமானமாவது:

கர்த்தர் பிறந்த 1540-ம் வருஷத்தில் சர்வஜீவதயாபர சர்வேசுரனுடைய விசேஷ பராமரிப்பினாலே இந்த தேசத்துக்கும் அதற்கு அடுத்த தீவுகளுக்கும் அர்ச். சவேரியார் அப்போஸ்தலராக எழுந்தருளிவந்தார். அவர் கோளைப்பட்டணத்திலிருந்து கன்னியாகுமரி மட்டும், கன்னியாகுமரியிலிருந்து மயிலாப்பூர்மட்டும் படாத பிரயாசப்பட்டு, எண்ணிக்கையில்லாத அற்புதங்களைச் செய்து மேற்கடல் கீழ்க்கடற்கரைகளில் வாசம்பண்ணுகிற நானாவித ஜாதி ஜனங்களைச் சத்தியவேதத்துக்குத் திருப்பி ஸ்திரப்படுத்தினாரே. அவர் பாண்டியன் இராச்சியத்திலும் சோழன் இராச்சியத்திலும் பிரவேசித்து, அவ்விடங்களிலும் சத்திய வேதத்தைப் பிரசங்கித்து ஸ்தாபிக்க வாரந்தினராகி

னும், இத்தேசத்தார் மெய்யான கடவுளை அறிந்து வணங்குவதற்குச் சர்வேசுரனால் குறிக்கப்பட்ட காலம் இன்னம் வராமையினால் அர்ச்சியசிஷ்டவர் பட்ட பிரயாசமெல்லாம் அவர் நினைத்த அனுகூலத்துக்குப் பலித்ததல்ல. மீளவும் மயிலாப்பூர் நாகபட்டணம் காயல் தூத்துக்குடி கொல்லம் கொச்சி முதலிய இடங்களில் அர்ச். சவேரியார் மூலமாய் மனந்திருப்பப்பட்ட புதுக்கிறீஸ்துவர்களை விசாரிக்குஞ் சேசுசபைச் சுவாமிமார்கள் சேர சோழ பாண்டியவென்னும் இம்மூவிராச்சியங்களிலுள்ள பிராமணரையும் சூத்திரரையும் மனந்திருப்ப எவ்வித பிரயாசப்பட்டாலும் அவர்களில் ஒருவனாவது மனந்திரும்பினவனல்ல. இப்படி 50 வருஷகாலமாய்த் தாங்கள் வருந்திப் பண்ணின முயற்சியெல்லாம் ஓர் பலனின்றிப் போகிறதாகக் கண்டுச் சொல்லிலடங்காத கஸ்திப்பட்டுக்கொண்டிருந்தார்கள். மதுரைப் பட்டணத்தில் வியாபாரத்துக்கு வருகிற பரதரையும் பொர்த்துக்கீஸ்காரரையும் விசாரிப்பதற்கு ஓர் குருசுவாமியார் இருந்தார். இவர் அதிவேகக் கோவிற் கட்டிச் சகிர்த புண்ணியங்களைக் காட்டி யாவரும் அதிசயிக்கச் சகிர்தமாதிரிகையாய் நடந்தாலும், இவரைக் கண்ட அஞ்ஞானிகள் பிரமித்துப் போவார்களொழிய ஓர் பறையன் முதலாய் மனந்திரும்பினவனல்லை.

1606-ம் ஆண்டில் இப்புறங்களிலுள்ள சகலமான சேசுசபைக் குருக்களுக்குச் சிரேஷ்டராயிருந்த சுவாமியாரும் தத்துவபோதகரென்னும் சுவாமியாருமாக இவர்கள் இருவரும் மதுரைப் பட்டணத்துக்கு எழுந்தருளிப்போய், அதிலுள்ள சகல காரியங்களையும் விசா

ரித்துச் சத்தியவேதம் பரம்புதலுக்குள்ள விக்கினங்க
ளை ஆராய்ந்துபார்க்குமளவில், மகாத்துமாவான தத்
துவபோதகர் நான் சிந்துதேசத்தாரைத் திருப்பத்தக்
கதாகச் சிந்துதேசத்தானாவேனென்று துணிந்தார்.
இவர் உரோமாபுரியில் உயர்ந்த கோத்திரத்தில் பிற
ந்து உலகசெல்வ மகிமையுடையவராயினும் இவை
யாவையும் துறந்து சேசுசபையில் பிரவேசித்து மேலா
ன சாஸ்திரங்களில் கீர்த்தி அடைந்து குருப்பட்டம்
பெற்றுச் சிந்துதேசத்துக்கு எழுந்தருளிவந்தார். இந்
த மகாத்துமா சேசுக்கிறீஸ்துநாதர் மனுஷரை மீட்டி
ரட்சிக்கத் தாமும் மனுஷனானாரென்றும், அர்ச். சின்
னப்பர் அழுவாரோடு அழுது மகிழ்வாரோடு மகிழ்ந்து
எல்லாரையும் கரையேற்ற எல்லாருக்கும் எல்லாம்
ஆனானென்றும் கருதித் தாந்தானே சிந்துதேசத்தா
ரைச் சேசுக்கிறீஸ்துநாதரிடத்தில் சேர்க்கச் சிந்துதே
சத்தானைப்போல நடக்கத் தொடங்கினார். தம்முடைய
சிரேஷ்டர் உத்தரவையும் கிராங்கனூர் அதிமேற்றிரா
ணியாருடைய அனுமதியையும் பெற்றுச் சந்நியாசப்
பிராமணர் உடுக்கிறதைப்போலச் சோமனை உடுத்திக்
குல்லாவை வைத்துப் பாதரக்ஷை தொடுத்துப் பூணூ
லையும் தரித்துக்கொண்டு, தமது சிஷப்பிள்ளையாக
வும் தவசிப்பிள்ளையாகவும் பிராமணரை மாத்திரம் ஏற்
றுக்கொண்டு சமஸ்கிருத பாஷையையும் தெலுங்குப்
பாஷையையும் தமிழ்ப் பாஷையையும் தெளிவுறக்
கற்று உயர்ந்த ஜாதியாருக்குச் சத்தியவேதம் போ
திக்க ஆரம்பித்தார். கொஞ்ச வருஷத்துக்குள்ளாக
அநேக பிராமணரும் நாயக்கர் வடுகர் வெள்ளாளர்
செட்டிகள் முதலிய பெயர்களும் இவருடைய மேலான

புண்ணியங்களைக்கண்டு சுகிர்த பிரசங்கங்களைக்கேட்டு நவமான கிரியைகளைத் தரிசித்துச் சத்தியவேதத்துக்குத் திரும்பினார்கள். இது இப்படியாகையில், சர்வ நன்மைக்குஞ் சத்துருவாயிருக்கிற பசாசினுடைய பகையினாலேயும் அனேகருடைய காய்மகாரத்தினாலேயும் எவ்வித விரோதம் நேரிட்டாலும் தத்துவபோதகர் பின்வாங்காதவராய் மதுரை, திரிசிராப்பள்ளி, சேலம், சத்தியமங்கலம் முதலான இடங்களிலும் சத்தியவேதத்தை ஸ்தாபித்து அநேக சுகிர்த புத்தகங்களைச் செய்து தமக்குப் பதிலாக வேறனேக குருக்களை வரவழைத்துத் தமிழ் இராச்சியங்களின் அப்போஸ்தலராக 1656-ம் ஆண்டில் மயிலாப்பூரில் பாக்கியமான மரணத்தை அடைந்தார்.

நான் வட்டத்தில் பல சூத்திரஜாதிகளையும் பறையர் முதலான கீழ்ச்சாதிகளையும் திருப்பி விசாரிக்கத்தக்கதாகப், பிராமணர்கோல குருசுவாமியார்களாலே சரியாய்க் கூடாதகாரியமென்று தத்துவபோதகர் கண்டு, சில குருக்களுக்குப் பண்டார சுவாமியார்களென்று பெயரிட்டு அவர்கள் எவ்விதத்திலும் சூத்திருடைய முறைமைகளை அநுசரிக்கப்பண்ணினார். இவ்விதமாய்ப் பிராமண சுவாமியார்களும் பண்டார சுவாமிமார்களும் ஏகோபித்து இத்தேசங்களிலெங்கும் சத்திய வேதத்தைப் பரப்பி ஸ்திரப்படுத்தினார்கள். தத்துவபோதகர் மரணமான 14-வருஷத்துக்குப்பின் முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் மேற்சொன்ன வண்ணமே கோவையில் இறங்கி அங்கே எழுமாதம் செலவழித்தபின் மறவா இராச்சியத்துக்கு அனுப்பப்

பட்டுப் பண்டார சுவாமிமார்களைப்போல வையாவனை தரித்துக்கொண்டார்.

---

## 2-ம் பிரிவு.

### அக்காலத்தில் தென் இந்துதேசத்தின் ஸ்திதியுந் தன்மையும் காண்பிக்கப்படுவது:

பூர்வகாலத்தில் இத்தேசமெல்லாஞ் சேரன், சோழன், பாண்டியன் என்னும் இம்மூவருடைய * விஸ்தாரமான இராச்சியங்களாக வகுக்கப்பட்டிருந்தன. அநேக வருஷத்துக்குப்பின் காற்றுமலைக்குக் கிழக்கிலிருக்கிற நாடெல்லாம் மதுரை, தஞ்சையூர், செஞ்சியென்று இம்மூன்று இராச்சியங்களாக வகுக்கப்பட்டு, மகா இராஜாக்களான நாயக்கர்களுடைய ஆளுகைக்குள்ளிருந்தன. வடபுறங்களிலுள்ள இராச்சியங்களெல்லாவற்றையும் துலுக்கர் படையேறிக் கீழ்ப்படுத்தினபின் கோலகொண்டையென்றும் விசையபுரமென்றும் இரண்டு நவாப்பு இராட்சியங்களுண்டானது. தத்துவபோதகர் காலத்திலே மதுரை திருமலைநாயக்கனும் தஞ்சையூர் நாயக்கனும் செஞ்சி நாயக்கனும் தாங்கள் அந்நாள்மட்டும் விஜயநகர் இராஜாவுக்குச் செலுத்திக்கொண்டுவந்த பகுதியைச் செலுத்தாதபடிக்கு ஆலோசனைபண்ணினார்கள். இதை யறிந்த விஜயநகர் இராஜா அவர்களுக்கு எதிராய்ப் படையெடுத்தான். அப்போது திருமலைநாயக்கன் பயந்து, தனக்கும் மற்ற இரண்டு நாயக்கர்களுக்கும்

ஒத்தாசையாகக் கோலகொண்டாபுரத்துத் துலுக்கரையும் விஜயபுரத்துத் துலுக்கரையும் வரவழைத்தான். துலுக்கர் தாமதமின்றி உடனே இத்தேசங்களுக்கு வந்து விஜயநகர் இராஜாவை ஜெயித்துச் செஞ்சிக்கோட்டையையும் சதிமானமாய்ப் பிடித்துச் செஞ்சி இராட்சியத்தை முழுதும் நிர்மூலமாக்கித் தஞ்சையூர் மதுரைநாயக்கர்களைத் தங்களுக்குப் பகுதி கொடுக்கச்செய்து எங்கும் கொள்ளையடித்து வடக்கே போய்விட்டார்கள்.

மீளவும் மைசூரார் நாயக்கரோடு யுத்தஞ்செய்து சத்தியமங்கலத்தைச் சேர்ந்த நாடெல்லாமும் மதுரைக் கோட்டையையு முதலாய்ப் பிடித்துப் பிரசைகளுக்குச் சொல்லிலடங்காத துன்பமும் வருத்துவித்தார்கள். இதல்லாமலும் மராட்டியர் இராட்சியத்தை உண்டுபண்ணின சிவோசி மகாராஜாவினுடைய தமையனான எக்கோஜியென்பவன் தஞ்சையூர் நாயக்கனை ஜெயித்துத் தன்னி அவ்விராச்சியத்துக்கு அதிபதியானான். அன்றியும் மதுரை நாயக்கனுக்குக் கீழ்ப்படிந்திருந்து மறவன் தேசத்தை ஆண்டுவருந் தேவர்கள் தஞ்சையூர் இராட்சியத்திலும் மதுரை இராட்சியத்திலும் நடந்த போர்ச்சண்டைகளைக்கண்டு தாங்களுந் துணிந்து அவ்விராட்சியங்களிற் பிரவேசித்து, அநேக பட்டணங்களைப்பிடித்து ஜனங்களை வெகுவாய் உபாதித்து எப்பக்கத்திலுங் கொள்ளையடித்துப்போனார்கள். இதன்றியே பாளையப்பட்டுத் துரைகள் அங்கங்கே கோட்டைகளைக் கட்டித் தங்களுக்குள் இடைவிடாத சண்டைகளைச் செய்து பிரசை

களை நெருங்கி எவ்வித இடைஞ்சலுஞ் செய்வார்கள். இவ்வருத்தமான காலங்களில் குடியானவர்கள் வெள்ளாண்மையைச் சரியாய்ச்செய்யக் கூடாமையால் அடிக்கடி கொடிய பஞ்சம் பரம்பும். இதினால் ஒரு வருஷத்தில் பதினாயிரங்கிறீஸ்தவர்கள் செத்துப் போனார்கள்.

அல்லாமலும் அந்தந்த இராஜாக்களும் மந்திரிகள் பிரதானிகள் படைத்தலைவர் முதலிய உத்தியோகஸ்தரும் சரியான பரிபாலனத்தாலும், நீதி விளக்கத்தாலும், அன்னியோன்னிய சமாதானத்தாலும், தருமக்கிரிகையாலும் மேற்சொல்லிய இன்மைகளுக்குத் தங்களால் இயன்றமட்டும் பரிகாரம்பண்ணுகிறதுமன்றித் தங்களுக்குள்ளே முடியாத சண்டைசெய்து குடிகளைக் கெடுத்து ஆஸ்திகளைப் பறித்து அவர்களை மனோவாக்குக்கெட்டாத துன்பப்படுத்துவார்கள். இத்துன்பங்களைப் பொறுக்கமாட்டாத அநேகர் தங்கள் சொந்த பூமியைவிட்டு அங்கங்கே ஓடிப்போவார்கள்.

இப்படியாகக்கொள்ள இங்கிலீஷ்காரர் இத்தேசத்தைக் கைப்பற்றி அரசாளத் துவக்குமுன், இருநூறு வருஷகாலத் துலுக்கரும் மைசூராரும் மராட்டியரும் சண்டைசெய்யும் போர்க்களமாயிருந்ததென்று சொல்லக்கடவோம்; அப்போது சத்தியவேதம் பரம்புவதற்குள்ள விக்கினம் எவ்வளவென்றும் சத்தியவேதக் குருக்கள் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவேதத்தைப் போதிப்பது எம்மாத்திரம் வருத்தமென்றுங் குருக்களுக்குங் கிறீஸ்துவர்களுக்கும் வந்த இடைஞ்சல் இம்மட்டென்றுஞ் சொல்லிமுடியாது. இந்த நிர்ப்பாக்கிய

மான காலத்திற்முனே முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இத்தேசத்துக்குவந்து, செஞ்சி, * தஞ்சையூர், மதுரை இம்மூன்று இராட்சியங்களில் அஞ்சாத துணிவோடுங் குன்றாத முயற்சியோடும் அஞ்ஞானிகளைத் திருப்பவும் பழைய கிறீஸ்துவர்களை விசாரிக்கவும் வருந்திக்கொண்டுவந்தார்.

---

## 3-ம் பிரிவு.

### முத். அருளானந்தர் செஞ்சி இராச்சியத்தில் பிரவேசம்பண்ணுகிற வர்த்தமானமாவது:

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் கோவைப் பட்டணத்தை விடுமுன்னே அர்ச். சவேரியாருடைய மாட்சிமைபொருந்திய கல்லறையைச் சந்தித்து, அதில் திரும்பவும் தம்மைச் சர்வேசுரனுக்குப் பலியாக ஒப்புக்கொடுத்துச் சர்வேசுரன் அவருடைய வேண்டுதலினாலே தம்மைக் கிருபையாய்ப் பார்த்துத் தாம் ஆரம்பிக்கப்போகிற வருத்தமுள்ள காரியத்துக்கு வேண்டிய சகாயத்தைக் கட்டளையிடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அப்போது இவர் தேவசிநேக அக்கினியினால் நிரப்பப்பட்டு அர்ச். சவேரியாரைக் கண்டுபாவிக்கவேண்டுமென்கிற ஆசையினிமித்தம் அங்கேயிருந்து சுவாமிமார்களை அனுப்புவித்துக்கொண்டு அம்பலக்காட்டு மடத்துக்கு எழுந்தருளிவந்தார். மலையாள

தேசத்திலுள்ள கிறீஸ்துவர்களை விசாரிக்கத்தக்கதா
கச் சேசுசபைக் சுவாமிமார்கள் மலையாளத்துப் பின்னை
களை அம்பலக்காட்டு மடத்தில் சேர்த்துக் குருப்பட்
டத்துக்கு வேண்டிய சாஸ்திரங்களை அவர்களுக்கு
படிப்பித்துக்கொடுத்து வந்தார்கள். அதல்லாமலும்
மதுரை, தஞ்சையூர், செஞ்சியிராச்சியத்துக்கும் மயிலா
ப்பூர், நாகப்பட்டணம், காயல், தூத்துக்குடி முதலிய
இடங்களுக்கும் அனுப்பப்படுகிற குருக்களனைவரும்
இம்மடத்தில்தானே சிலகாலிருந்து கற்கவேண்டிய
பாஷைகளைக் கற்றுத் தங்களுக்குவேண்டிய சரியங்
களைச் செய்துகொண்டு போவார்கள். முத்திப்பேறு
பெற்ற அருளானந்தரும் இம்மடத்துக்குவந்து மதுரை
தஞ்சையூர் இராச்சியங்களில் பிரவேசிக்குமுன்னே
ஒரு மாதமளவும் அதில் அர்ச். இஞ்ஞாசியாருடைய
ஒடுக்கத்தியானங்களை மகாப் பற்றுதலோடு செய்தார்.
எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்த்தால் அக்கினி
அதிகரிப்பதைப்போல அருளானந்தருடைய இருதய
த்தில் பற்றி எரிந்த தேவசிநேக அக்கினி இந்த
ஞானத்தியானங்களில் அதிகமாய்ப் பெருகினதாமே.

இவ்வண்ணமே முத்திப்பேறுபெற்ற அருளானந்
தர் சர்வகர்த்தரான சர்வேசுரனுடைய ஞான போர்ச்
சண்டை செய்வதற்கு வேண்டிய முஸ்திப்புச் செய்த
பின், சேசுக்கிறீஸ்துநாதருடைய இராச்சியத்தை இத்
தேசங்களில் பரப்புவதற்குத் தைரியமான சேவகனைப்
போல போர்க்களத்தில் இறங்கினார். 1675-ம் ஆண்
டில் மதுரை நாட்டில் அநேக வருஷகாலம் வருந்திப்
பிரயாசப்பட்ட பிலவேந்திரனென்னும் குருசுவாமியா

ருடன் அம்பலக்காட்டு மடத்தைவிட்டு மலைப்பாதை
யாய் இத்தேசங்களுக்கு வரப் பிரயாணப்பட்டார்.
இம்மடத்தின் சிரேஷ்டர் இந்த வருத்தமான பயணத்
தில் இரோகபலவீனமுள்ள அருளானந்தருக்கு ஓர் வாக
னம் கொடுக்கவேண்டுமென்று சொல்லுமிடத்தில்
இவர் சொன்னதாவது: "நான் வருத்தப்படுவதற்
கு இத்தேசத்துக்கு வந்தேனொழியச் சுகம்பெற
வரவில்லை" என்று சொல்லி வாகனமில்லாமல் கால்
நடையாய்ப் புறப்பட்டார். இப்பயணத்தில் அடர்
மழையினாலும் கடக்கவேண்டிய ஆறுகளினாலும் பசி
பட்டினியினாலும் இவ்விருவரும் அனுபவித்த வருத்
தம் எவ்வளவென்று சொல்லவும் கருதவும்முடியாது.
மீளவும் அன்னார் யானை புலி கரடி அம்மலையில் மிகுதி
யாயிருக்கிறபடியினாலே இவர்கள் ஜீவரித்து நடக்க
வேண்டியதாயிற்று. மூத்திப்பேறுபெற்ற அருளான
ந்தர் தம்முடைய மனத்தணிவினால் இவ்வருத்தங்க
ளைச் சகித்துவந்திருந்தாலும், இவர் காலிரண்டும்
காயமாகி வீங்கிப்போய் அப்பாலே நடக்கக்கூடாதவ
ராய் விழுந்தார்.

இப்படியிருந்தாலும் சற்றிளைப்பாறிச் சத்தியமங்
கலஞ் சேருமளவும் வெகு வருத்தப்பட்டு நடந்துபோ
னார். அதிற்சேர்ந்தபின் அவர் பயணத்திற்பட்ட
வருத்தமிகுதியினாலே கடின வியாதியாகி அவஸ்தை
யானார். சத்திய மங்கலத்துக் கிறீஸ்துவர்கள் இவர்
இத்தேசத்தாரை யீடேற்ற அவ்வளவு பிரயாசப்பட்டு
வந்தபின், ஓர் ஆத்துமத்தையாகிலும் திருப்பாமல்
செத்துப்போவாரோ? அவர் நெடுங்காலம் அபேக்ஷித்
த அதிஷ்டம் கைக்கொள்ளாமல் மரிப்பாரோ?

ஞான இருளில் அகப்பட்டவர்களைத் தெளிவிக்கவந்தவர் தமது விருப்பப்படி அநுகூலப்படுங்காலத்தில் மாய்ந்துபோவாரோ என்று அலறிப் பதறிக் கஸ்திப்படுகிறபோது, சர்வ இருபையுமுடைத்தான சர்வேசுரன் அற்புதவிதமாய் அருளானந்தருக்கு ஆரோக்கியம் கட்டளையிடத் திருவுளமானார். இவர் அவ்விடத்தில் ஒரு மாதமளவும் சௌக்கியம் பார்த்தபின், மைசூர் இராச்சியத்தைச் சேர்ந்த தருமபுரிக்குப் போகப் புறப்பட்டார்கள். அப்பயணத்தில் மிகவும் வருத்தப்பட்டார்களன்றியே ஓர் காட்டில் போகிறபோது அநேகம் புலிகள் அவர்களுக்கு எதிராக வரவே, அருளானந்தரும் பிலவேந்திரசுவாமியாரும் சர்வேசுரனை நம்பிச் சிலுவை வரைந்தவுடனே புலிகளெல்லாம் விலகிப்போய் யாதொரு மோசமின்றிப் போனார்கள். தருமபுரியிலிருந்த சேசுசபை அந்தோணியார் சுவாமியாரையும், குலசையப்பர் சுவாமியாரையும் மிகுந்த சந்தோஷத்துடனே கண்டுகொண்டு, செஞ்சிக் கோட்டைக்கு மேற்கே இருக்கும் கொளை என்னும் ஊருக்கு அர்ச். இஞ்ஞாசியார் திருவிழாவுக்கு முந்தின நாளையில் சந்தோஷமாய்ச் சேர்ந்தார்கள்.

அப்போது முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தாம் பட்ட பிரயாசத்தையும் அநுபவித்த வருத்தங்களையும் மறந்துபோய், உடனேக்குடனே செஞ்சியிராச்சியத்திலுள்ள கிறீஸ்துவர்களை விசாரிக்கவும், அஞ்ஞானிகளுக்கு நல்லபுத்தி சொல்லவுந் தொடங்கினார். கொளை என்னும் ஊருக்கு சமீபத்தில் ஓர் சிற்றூரிருந்தது. ஏறக்குறைய அதிலுள்ள குடிகளெல்லா

ரும் சத்தியவேதத்தைக் கைக்கொண்டு அதின் முறைமைகளைப் பழுதின்றி அநுசரித்துவருகையில், அந்தக் கொள்ளைநோய் பரம்பி அநேகர் வியாதியாய் விழுந்தார்கள். இதைக்கண்ட பூசாரிகளும் ஆண்டிகளும் கோவென்றலறி, இது தேவர்களுடைய ஆக்கினையென்று மிரட்டிப் புதுவேதத்தினுடைய பலனென்று பழித்து எவர்க்கும் துர்ப்புத்தி சொல்லித் திரிந்தார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இந்தச் செய்தியை அறிந்தக்ஷணமே அவ்வூருக்கு தீவரித்துப் போய் வீட்டுக்குவீடு அச்சமின்றிப்பிரவேசித்து, வியாதிக்காரருக்கான அவுழ்தங்கொடுத்து, அவஸ்தையாய்க் கிடக்கிறவர்களுக்குத் தேவதிரவிய அநுமானங்களை அளித்து, அஞ்ஞானிகளுடைய கபட தந்திரங்களை மறுத்துச் சகலருக்கும் உறுதிசொல்லி ஸ்திரப்படுத்த மிகவும் வருந்தினார்.

இவருக்கு ஒத்தாசையாகச் சந்தோஷியென்ற ஓர் உபதேசியார் வந்திருந்தார். இவர் சாமார்த்தியரும், வாய் சாலகரும், நாலு சாஸ்திரம் அறிந்தவரும், பத்தி விசுவாசமுள்ளவருமாய் இருந்தமையால், திரளான அஞ்ஞானிகளைத் திருப்பிப் பூசாரிகளுக்கும் பண்டாரங்களுக்கும் எதிர்ப்படையும் சத்தியவேதத்துக்கு ஓர் அசையாத வச்சிரத் தூணுமாய் இருந்தார். இவரும் சுவாமியாரைப் பின்பற்றினவராய்த் தமது உயிரைக் காக்க நினையாமல் நோயாளிகளுக்கு வேண்டின பணிவிடைசெய்து யாவரையும் திடப்படுத்தி வருகையில், கிருபையுடைத்தான சர்வேசுரன் இவரை அழைக்கச் சித்தமாகவே வியாதியாய்விழுந்து அவஸ்தையானார். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இந்த நல்ல உப

தேகியைச் சொஸ்தப்படுத்தத் தம்மாலாணமட்டும் வரு
ந்தினராயினும், நோய் மேற்கொண்டு கடினவருத்த
மாகித் தமது ஆத்துமத்தைச் சர்வேசுரனுக்குக் கைய
ளித்து மலர்ந்த முகத்தோடும் அமர்ந்த மனதோடும்
ஆனந்த சந்தோஷ வெள்ளத்தில் அமிழ்ந்தினவராய்ச்
சீவித்துப்போனார்.

அருளானந்த சுவாமியார் மிகவும் துக்கித்துச் சர்
வேசுராசுவாமி, உமது சித்தத்தின்படியாகட்டும், இந்த
நிர்ப்பாக்கியருக்கு இரங்கி அவர்களுக்குவந்த இக்கட்
டை நீக்கியருளுமென்று மன்றாடி வியாதிக்காரரைப்
பராமரித்துச் சகலரையும் தேற்றிக்கொண்டுவந்தார்.
இந்த உபதேசியார் சாகவே, அஞ்ஞானிகள் எல்லோ
ரும் நமது தெய்வங்களைப் பழித்துக்கொண்டுவந்தவன்
செத்தான், கர்த்தத் துரோகி நாசமாய்ப்போனனென
ன்று ஆகடியஞ் சொன்னார்கள். புதிதாய் ஞானஸ்
நானம்பெற்ற அருளாயி என்கிற ஓர் பெண்பிள்ளை
கொள்ளைநோய்க்குப் பயந்தோ அல்லது *பூசாரிகள்
சொன்ன துர்ப்புத்திக்கு இணங்கியோ, திருநீற்றைப்
பூசிச் சிவனைத் தொழுதாள். அக்ஷணமே வியாதி
யாய் விழுந்து அவலமாய்ச் செத்து நரகபாதாளத்தில்
புதைக்கப்பட்டாள். அன்னம்மாளென்னப்பட்ட
கைம்பெண்ணொருத்தி தன் பிள்ளைகளுடன் தானும்
வியாதியாய்விழுந்து மிகவும் வருத்தப்பட்டாள். மூத்
திப்பேறுபெற்ற அருளானந்தர் இவளுக்குவேண்டிய
மேன்புத்திகளைச் சொல்லித் தன் வருத்தப்பாடுகளைச்
சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்துப் பொறுமையாயிரு
க்கக் கற்பித்தார். அப்படியே இவளும் குன்றுத
பொறுமையுடன் சர்வேசுரனுக்குத் தோத்திரஞ்

சொல்லி என் பாவப்பரிகாரமாக இந்த வருத்தங்களை
ஏற்றுக்கொள்ளும் சுவாமி என்று மன்றாடிக்கொண்டி
ருந்தாள். வியாதி மேற்கொண்டு இவள் சாகிற தரு
வாயிலிருக்கும் சமயத்தில், ஆண்டிகளும் பூசாரிகளும்
கூட்டங்கூட்டமாய் இவளண்டைக்குவந்து, பாலோடு
கலந்த நஞ்சினைப்போல நல்ல வார்த்தை சொல்லி நீ
பரமசிவனை நம்பி இந்தத் திருநீற்றைப் பூசுவாயாகில்
உன்னுடன் பிள்ளைகளும் பிழைப்பார்கள், இல்லா
விட்டால் எல்லோரும் சாவீர்கள் என்றார்கள். இந்
தப் புண்ணியவதி மிகவும் பலவீனமுள்ளவளாயினும்,
இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே மனம் பொறு
மல் கோபமாய் எழுந்து அவர்களைத் தன் வீட்டுக்கும்
புறத்தியில் தள்ளிக் கதவடைத்து: "உங்கள் உடலைப்
பாருங்கள், எனக்குச் சாம்பல் வேண்டுமாகில் என்ன
டுப்பில் உண்டு, உங்கள் தெய்வங்களின் ஒத்தாசை
யும் தேவையில்லை, அவர்கள் கோபத்துக்கும் அஞ்
சேன், மெய்யான கடவுள் எனக்கு இரங்குவாராகில்
பிழைப்பேன். உங்களையும் உங்கள் தெய்வங்களையும்
திருநீற்றையும் வீண் சடங்குகளையும் சட்டைபண்ணு
வேனல்ல" என்றாள். இந்த வார்த்தைகளைக் கேட்ட
பூசாரிகளும் ஆண்டிகளும் நாணிப்போகையில், அவள்
சாஷ்டாங்கமாய் விழுந்து மகா பத்தி விசுவாசத்
தோடு ஆண்டவரைப் பார்த்துப் பிரார்த்தித்துக்
கொண்டாள். வேண்டுதல் முடிந்த க்ஷணமே புது
மையாய் இவளும் இவள் பிள்ளைகளும் ஆரோக்கியம
டைந்தார்கள். மற்றக் கிறீஸ்துவர்களோவெனில்
இந்தப் புதுமையினாலும் முத்திப்பேறுபெற்ற அருணா

னந்தர் சொல்லுகிற நற்புத்தியினாலும் திடப்பட்டு உறுதியானார்கள். தேவ கிருபாகடாக்ஷத்தினாலே கொஞ்ச நாளுக்குள்ளாகக் கொள்ளைநோய் நீங்கிப் போக, அருளானந்தர் கிறீஸ்துவர்களுக்கு வேண்டிய உறுதிசொல்லித் திரும்பக் கொளை என்னும் ஊருக்கு எழுந்தருளிப்போனார்.

---

## 4-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தத்துவஞ்சேரிப் பங்கில் நடப்பித்தச் சுகிர்த வர்த்தமானங்களாவன:

தேவ கிருபாகடாக்ஷத்தினாலேயும் காரணக் குருக்களுடைய பிரயாசத்தினாலேயும் செஞ்சி இராட்சியத்தில் நாளுக்குநாள் அதிகம் அதிகமாய்ச் சத்திய வேதம் பரம்புகின்றமையால், கொளையென்னுமூரின் பங்கானது இரண்டாகப் பிரிக்கவேண்டியதாயிற்று. இந்தச் செஞ்சி இராட்சியத்தின் தென்புறங்களையும் தஞ்சையூர் இராட்சியத்தின் சில இடங்களையும் விசாரிக்கத்தக்கதாக முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் நியமிக்கப்பட்டார். இவர் கொளையென்னும் ஊரை விட்டுக் கொள்ளிடத்தோரமாய் இருக்கும் தத்துவஞ்சேரி என்கிற ஸ்தலத்தைத் தெரிந்துகொண்டு, அதில் ஓர் கோவிலைக் கட்டினார். இந்த ஸ்தலம் ஒதுக்கமான இடமானதாலும், போர்ச்சண்டைகள் நடக்கிற போர்க்களத்துக்குப் புறம்பானதாலும், குருசுவாமியார் தியானத்திலிருக்கவும், பலஜாதி கிறீஸ்துவர்களை

விசாரிக்கவும் தகுதியான இடமாய் இருந்தது. முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் அவ்விடத்துக்குச் சேர்ந்தவுடனே அந்நாட்டை ஆண்டுவரும் இரண்டு துரைகளிடத்திலும் சில கிறீஸ்து பிராமணரோடு எழுந்தருளிப்போய், அவர்களாலே மகிமையாய் அநுசரிக்கப்பட்டுத் தாம் தடங்கலில்லாமல் சத்திய வேதத்தைப்போதிக்கவும், கிறீஸ்துவர்கள் இதில் விக்கினமின்றி நடந்து வரவும், அவர்களிடத்தில் சம்பூரணமான உத்தரவு பெற்றுக்கொண்டு வந்தார். அவ்விரண்டு துரைகள் இவருக்கு மகா பக்ஷத்தைக்காட்டி வெகு உபசாரஞ்செய்து இவரைத் தங்களுக்காக வேண்டிக்கொள்ள வேண்டுமென்று மன்றாடி, இவர் போதிப்பது சத்தியவேதமென்று அங்கீகரித்தார்களாயினும் மனந்திரும்பினவர்களல்ல. ஆதேனென்றால் இவ்வுலகிலுள்ள பெரியவர்கள் அஞ்ஞானிகள் வணங்குகிற தெய்வங்கள் பொய்த்தேவர்களென்றும், அவர்கள் அநுசரித்துவருகிற முறைமைகள் அபத்தமென்றும் ஒத்துக்கொண்டாலும், ஆஸ்தி மிகுதியினாலே அகங்கரித்து மோக வெறியினாலே மயங்குகின்றமையால், மனத்தாழ்ச்சியையும் கற்பென்கிற புண்ணியத்தையும் கற்பிக்கிற சத்திய வேதத்தில் சேரத்தகுந்தவர்களல்ல. அருளானந்தசுவாமியார் சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு இரத்தத்தினாலே இரட்சிக்கப்பட்ட ஆத்துமாக்களைத் திருப்பவேண்டுமென்கிற பொறுக்கப்படாத ஆசைகொண்டு எந்தப்பிரயாசத்துக்கும் பின்வாங்காமலும், எந்த வருத்தத்துக்கும் அஞ்சாமலும், அத்தேசத்தில் எங்கும் சுற்றித்திரிந்து அல்லும் பகலும் கிறீஸ்துவர்களுக்குத் தேவதிரவிய

அநுமானங்களை அளித்து, ஞானஸ்நானத்துக்கு வரு
கிற இரனான பெயர்களுக்கு வேண்டிய போதனை
செய்து, அஞ்ஞானிகளுக்கு மிகவும் வருந்திப் புத்தி
மதி சொல்லுவார். ஆத்துமாக்களை ஈடேற்ற வேண்
டுமென்கிற ஆசையானது இவருக்குப் போசனம்
போலவும் சீவியம்போலவும் சகல காரியம்போலவும்
இருந்ததாமே. இதன்றியே இவ்விராட்சியத்தில்
தேவகிருபையை வருவிக்கும்பொருட்டுக் கடின தவம்
செய்து தமது சரீரத்தை ஒறுத்துக் கொஞ்ச ஆகாரம்
மாத்திரம் சாப்பிட்டு மனுஷரூபமுள்ள ஒரு சம்மனசு
வைப்போலிருப்பார். இது இப்படியாகையில், இவர்
சுபாவத்தில் இரோக பலவீனராகையால், தேவ ஒத்தா
சையினாலே மேற்சொன்ன வருத்தங்களையெல்லாம்
அற்புதமாய்ச் சகித்துக்கொண்டு வருகிறாரென்பார்கள்
எல்லோரும். ஓர் நாள் இவரைச் சந்திக்க வந்த கிறீ
ஸ்துவனான ஓர் பெரிய உத்தியோகஸ்தன் இவர் பண்
ணுகிற தவத்தையும், படுகிற வருத்தங்களையும், நடத்து
கிற சுகிர்த கிரியைகளையுங் கண்டு பிரமித்து, இவர்
மகா அர்ச்சியசிஷ்டவரென்று புகழ்ந்து எங்கும்
சொல்லிக் கொண்டாடிக்கொண்டு திரிந்தான்.
முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தத்துவஞ்சேரி
பங்கிலிருக்கும்போது செய்த அற்புதமான காரியங்க
ளைப் பற்றும்பற்றாய்ச் சொல்லிமுடியாதாகிலும், ஒன்
றிரண்டு தெரிந்துகொண்டு விவரித்துக்காட்டுவோம்.
திருப்புரம்புயத்தில் வாசம்பண்ணுகிற வாலிபன் ஒரு
வன் தான் கிறீஸ்துவனாகவேண்டுமென்று விரும்பி
ஞானோபதேசத்துக்கு வந்துகொண்டிருந்தான். இவ
னுடைய தந்தை தாய் உறவின்முறையார் ஜாதி ஜனங்

கள் அனைவரும் இவனுக்குத் தங்களாலான விக்கினமெல்லாம் பண்ணினாலும், இவன் அவர்களுக்கு இடங்கொடாமல் உறுதியாய் நின்று ஆறுமாதத்திற்குப்பின் ஞானஸ்நானம்பெற்றான். ஞானஸ்நானம் பெற்றபின் இவனுக்குத் தீராத குஷ்டவியாதி பிடித்துக் கடின வருத்தமாய்ச் சாகத்திரிந்தான். அப்போது அஞ்ஞானிகள் எல்லாரும் சந்தோஷப்பட்டு இவனைச் சூழ்ந்துகொண்டு நீ எங்கள் தெய்வங்களைக் கைவிட்டு கிறீஸ்துமதத்தில் புகுந்ததினால், அவர்களுடைய கோபமே உன் வியாதிக்குக் காரணமென்கிறதற்குச் சந்தேகமில்லை. இந்த நூதனமார்க்கத்தைவிட்டு எங்களிடமாகச் சேரவேண்டுமென்று தேவதூஷணைகளை உச்சரித்துச் சொல்லும்போது, இந்தப் பத்தியுள்ள வாலிபன் அவர்களுடைய தந்திரங்களுக்குச் செவி கொடாமல், அர்ச். சவேரியாரை நோக்கி. வேண்டுதல் பண்ணிச் சர்வேசுரன் தனக்கு ஆரோக்கியம் கட்டளையிடவேண்டுமென்று மன்றாடினான். மன்றாடினவுடனே அஞ்ஞானிகள் எல்லாரும் அதிசயிக்க, அமிர்தையான நித்திரைபோய்க் குஷ்டமெல்லாம் நீங்கிச் சௌக்கியமடைந்து விழித்தெழுந்திருந்து தன் வேண்டுதலைச் செலுத்தி, அருளானந்தசுவாமியாருக்கு நடந்த செய்தியை அறிவித்துப் பாவசங்கீர்த்தனம்பண்ணித் தேவநற்கருணைவாங்கி, நன்றியறிந்தமனதோடு சர்வேசுரனுக்குத் தோத்திரம் பண்ணினான். இந்தப் புண்ணியவானுடைய தாயானவள் தன் மகனுக்குச் சம்பவித்ததைக் கண்டு, தானும் ஞானஸ்நானம்பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள்.

மருயமென்னும் வேறோர் ஊரிலே அவஸ்தையாய்க்
கிடந்த அஞ்ஞானி ஒருவன் சத்திய உபதேசத்தைக்
கேட்டு மகா பத்திவிசுவாசத்தோடு ஞானஸ்நானம்
பெற்றுப் பாக்கியமான மரணத்தை அடைந்தான்.
இவனைச் சூழ்ந்திருந்த அஞ்ஞானிகளுக்குள்ளே சிவ
மதத்துப் பூசாரி ஒருவன் இருந்தான். இந்தப் புதுக்
கிறீஸ்துவன் உயிர்விடுகிற க்ஷணத்தில்தானே பூசாரி
யானவன் பரவசமாகித் திகிலடைந்து கூவினதாவது:
“இந்தக் கிறீஸ்துவனுடைய ஆத்துமம் மோக்ஷத்துக்
கு எழுந்தருளிப்போகிறதைப் பாருங்கள். எப்பேர்ப்ப
ட்ட கொண்டாட்டம்! எவ்வளவான மகிமை! ஓகோ
இந்த ஆத்துமம் அத்தியந்த பிரதாபத்தோடும் மட்டுக்
கடந்த வடிவோடும் ஆடம்பரமாய் மோக்ஷஇராச்சியத்
தில் பிரவேசிக்கிறதைப்பாருங்கள்” என்றான். அனேக
அஞ்ஞானிகள் தங்கள் பூசாரி இப்படிச் சொல்லுகிற
தைக்கேட்டு, சத்தியவேதத்தை அறிந்து ஞானஸ்நா
னம் பெற்றார்கள். பூசாரியோவெனில், இந்தத் தரிச
னத்தைக் கண்ணால் கண்டிருந்தாலும், தன் மூர்க்க
த்தை விடாமல் அஞ்ஞானத்தில் நிலைகொண்டிருந்
தான்.

இதுவுமன்றி முத்திப்பேறுபெற்ற அருளானந்தர்
தீர்த்தத்தைக்கொண்டாவது அர்ச்சியசிஷ்ட பண்டங்
களைக்கொண்டாவது பசாசு பிடித்த அனேகரை இர
ட்சித்து, பரிகரிக்கப்படாத வியாதிகொண்டவர்களைச்
சொஸ்தப்படுத்தி, வெள்ளாண்மைகளில் விழுந்த பூச்
சிகளையும் வெட்டுக்கிளிகளையும் துரத்தி, இது முத
லிய அனேக அற்புதங்களைச் செய்து சத்திய வேத
த்தை எங்கும் விளங்கப்பண்ணினார்.

## 5-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் கொள்ளிடம் ஆற்றின் பெரும் வெள்ளத்தினின்று தப்பித்த வர்த்தமானமாவது:

சத்துவஞ்சேரிக் கோவிலும் அறைவீடும் கொள்ளிடத்துக்கு வடகரையில் ஒன்றரை நாழிகைவழி தூரமாய் ஓர் மேட்டின்பேரில் கட்டியிருந்தது. முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இந்த ஸ்தலத்தைத் தெரிந்துகொள்ளும்போது அவ்விடத்துக் குடிகளெல்லாரும் இதற்குமுன் ஆற்றினுடைய வெள்ளம் இவ்வளவு தூரம் வந்ததுமில்லை, இனி வரப்போகிறதுமில்லையென்று நிச்சயித்துச் சொல்லியிருந்தார்கள். 1677-ம் ஆண்டில் கார்த்திகை மார்கழி-மீ இப்புறங்களில் எங்கும் அடைமழைபெய்து முன்கடந்த வருஷங்களில் வந்த வெள்ளத்திலும் அதிகமாய்ப் பெருகிற்று. ஆயினும் கோவிலுக்குக்கிட்டித் தண்ணீர் வரவில்லை. இந்த மார்கழி-மீ 4-உ இராத்திரிவேளையில் முத்திப்பேறுபெற்ற அருளானந்தரும், இவருடன் 18 பெயருமாக யாதொரு பயமுமின்றி நித்திரை செய்கையில், அடுத்தவூரில் கோகோவென்று அபயசத்தமாகிறதாகக் கேட்டுத் திடீரென விழித்து எழுந்திருந்து பார்க்கையில், கோவிலிலும் அறைவீட்டிலும் வெள்ளம் பெருகிவருகிறதாகக் கண்டார்கள். இதைக் கண்டு எல்லாரும் பயப்படவே, அருளானந்த சுவாமியார் இவர்களைத் தேற்றிச் சர்வேசுரனை நம்பச்சொல்லித் தாம் கோவிலிற் பிரவேசித்து, அத்தியந்த பத்தியுடனே

தங்களை இரட்சித்தருள வேண்டுமென்றும் மன்றாடினார். அவரிப்படி மன்றாடிக்கொண்டிருக்கையில், மற்ற 18 பெயரும் மிகவும் பயந்து அவரைவிட்டுச் சமீபத்திலுள்ள மரங்களில் ஏற ஓடிப்போனார்கள். அருளானந்தருங்கூட தமக்கு மார்மட்டுக்கு தண்ணீர் வருகிறதைக் கண்டு கோவிலைவிட்டு வெள்ளத்துக்குள் முட்களையும் கள்ளிகளையும் பிடித்துச் சர்வாங்கத்திலுங் காயப்பட்டு அந்தத் தோப்புக்குத்தானே சேர்ந்தார். இந்தத் தோப்புக்கு அடுத்தாப்போல் ஓர் சிறமேடிருந்தது. இவர்கள் ஏறியிருந்த மரங்களில் திரளான பாம்புகள் வருகிறதாகக் கண்டு, இவர்கள் இவைகளுக்குத் தப்பும்படி எல்லாரும் மேற்சொல்லிய மேட்டுக்குப் போனார்கள். விடிந்தபின் வெள்ளம் எங்கும் ஓர் சமுத்திரம்போல் பெருகினதாகவும், ஆற்றில் செத்தவர்களின் பிரேதங்களும் அமிழ்ந்தின ஆடுமாடுகளும் இடிந்த வீடுகளின் மேற்கூரைகளும் போகிறதைக்கண்டு திகிலடைந்து மயங்கி மிகவும் பயந்திருந்தார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் எல்லாருக்கும் உறுதியாகச் சர்வேசுரனுடைய மட்டில்லாத தயாளத்தைக்காட்டி, அவர்பேரில் தங்கள் நம்பிக்கையெல்லாம் வைக்கச்சொல்லி அவர்களைத் தேற்றிக்கொண்டிருந்தார். வெள்ளத்தினால் எண்ணிக்கையில்லாத பாம்புகளும் விஷப்பூச்சிகளும் தங்களுடைய வளைகளினின்று தள்ளுண்டு இவர்களிருந்த மேட்டுக்குக் கூட்டங் கூட்டமாய் வருகிறபடியினாலே அவைகளை அடிக்கவும் தள்ளவும் இரவும் பகலும் விழித்துக் காத்திருக்க வேண்டியதாயிற்று. மீளவும் இவர்கள் வெள்ளத்துக்கும் பாம்புகளுக்குத் தப்பியிருந்தார்களா

யினும், எப்பக்கத்திலும் தண்ணீரால் சூழப்பட்டு யாதொரு ஆகாரமில்லாமையால் பசியினால் சாவார்கள் என்பது நிச்சயந்தானே. அப்போது அருளானந்தர் இடிந்துபோன தமது வீட்டில் ஓர் அரிசிப்பானையிருப்பதாகச் சொல்லி அதைக் கொண்டுவரும்படிக்கு நன்றாய் நீந்தும் ஒருவனை அனுப்பினார். இவன் ஆண்டவரை நம்பிச் சுவாமியாருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுத் தண்ணீரிலிறங்கி மிகுந்த பிரயாசத்தோடு நீந்திப்போய் அரிசிப்பானையைக்கொண்டுவந்தான். இரண்டுநாளுக்குப்பின் வெள்ளங் கொஞ்சங்கொஞ்சமாய்க் குறைந்ததாகக் கண்டு பயந்தெளிந்து பொறுக்கப்படாத பசியால் கொண்டுவந்த அரிசியைச் சமைக்க நினைத்தார்கள். ஆனால் நெருப்பில்லாமற்போயிற்று.

அப்போது முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் கழுத்தளவாக இருந்த தண்ணீரில் இறங்கித் தோப்பு மரத்து வாதுகளிற் சிக்கியிருந்த சில குச்சிகளைப் பொறுக்கிக்கொண்டுவந்து, நன்றாய்க் காய்ந்திருந்த இரண்டு குச்சிகளை எடுத்து விசையாய் ஒன்றோடொன்று தேய்க்கவே இரண்டும் பற்றிக்கொண்டு நெருப்புண்டாக மிகவும் வருத்தத்தோடு சமைத்துச் சாப்பிட்டார்கள். நாலாம்நாள் வெள்ளங் குறைந்துபோனதால், அருளானந்தரும் மற்றவர்களும் தங்களைக் காப்பாற்றின சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரம் பண்ணினார்கள். வெள்ளத்தினால் கோவிலும் அறைவீடும் நிலைமட்டும் விழுந்துபோனதினாலே கர்த்தர் பிறந்த திருவிழாவைக் கொண்டாடத்தக்கதாகச் சில கொப்புகளையும் பனைமட்டைகளையுஞ் சேர்த்து ஓர் சிறு குடில் கட்டினார்கள். இதுவுஞ் சேசுகிறீஸ்து

நாதர் பிறந்த மாட்டுக்கொட்டிலுக்கு மிகவுஞ் சரி
சமானமாயிருந்ததாமே. பூமியின் ஈரத்தாலும், வீடி
ன்மையாலும், வஸ்திர போசனக் குறைவாலும், வ
காற்றின் அகோரத்தாலும், முத்திப்பேறுபெற்ற அரு
ளானந்தர் அனுபவித்த வருத்தம் எவ்வளவென்று
சொல்லிமுடியாது. போன பிரிவில் சொன்ன இர
ண்டு துரைகளும் சுவாமியாருக்குச் சம்பவித்த ஆபத்
தை அறிந்தவுடனே, அவருக்குப் பக்ஷமுள்ள விண்
ணப்பம் எழுதித் தாங்கள் அவர் படுகிற இக்கட்டுக
ளைப்பற்றி மிகவுங் கஸ்திப்படுகிறதாகச் சொல்லித்
தங்கள் அரண்மனைக்கு எழுந்தருளி வரத் தயைசெய்
யவேண்டுமென்றும், அல்லது சந்நியாசியாயிருக்கிற
இவர், சமுசாரிகளான எங்கள் வீட்டுக்கு வரச் சம்மத
மில்லாவிட்டால், தங்கள் சொந்தச் செலவுபோட்டு
அவருடைய கோவிலையும் அறைவீட்டையுங் கட்ட
உத்தரவு கொடுக்கவேண்டுமென்றுங் கேட்டுக்கொண்
டார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சர்வே
சுரனுக்குத் தோத்திரஞ் சொல்லி, இந்தத் துரைகளு
டைய ஒத்தாசையைக்கொண்டு தாங்கள் வெள்ளத்
துக்குத் தப்பின மேட்டிலேதானே கோவிலையும் அறை
வீட்டையுங் கட்டுவித்தார்.

## 6-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தத்துவஞ்சேரியிலுஞ் சிறுகாம்பூரிலும் அநேகம் அஞ்ஞானிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்த வர்த்தமானமாவது:

மேற்சொன்ன பிரகாரமே முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தத்துவஞ்சேரியிலே தம்முடைய கோவிலையும் அறைவீட்டையுந் திரும்பக் கட்டுவித்துச் சுற்றுக்கிராமங்களினின்றுந் தஞ்சையூர் இராட்சியத்தினின்றும் வருகிற திரளான கிறீஸ்துவர்களுக்கு நல்ல புத்திகளைச் சொல்லி உறுதியைத் தருந் தேவ திரவிய அநுமானங்களை அளித்துக்கொண்டிருந்தார். இந்தக் கிறீஸ்துவர்கள் அத்தேசத்தில் எங்கும் நடக்கிற போர்ச்சண்டைகளையும், அஞ்ஞானிகளுடைய பற்பல இடைஞ்சல்களையும்பற்றி, நாலைந்து வருஷகாலம் ஞான விசாரணையற்றவர்களாய் இருந்தார்கள். ஆனதால் இவர்களுக்குள் நுழைந்த பொல்லாப்புகளை நீக்கவும், எந்தெந்த துன்பத்துக்கும் அஞ்சாதபடிக்கு அவர்களைத் திடப்படுத்தவும், அருளானந்தர் மிகவும் வருந்தினார். அவர் இப்படியே பிரயாசப்பட்டு வருகையில் சிரேஷ்டர் உத்திரவின்படியே வடபுறங்களிற் செஞ்சி இராட்சியத்திலுள்ள கிறீஸ்துவர்களை விசாரிக்கத்தக்கதாகப் புறப்பட்டுப்போனார். சிபோலி இராஜா நடத்துகிற சண்டைகளினிமித்தங், கொள்ளையென்னும் ஊரில் சுவாமியாருக்குக் கூடாமையால், கூத்தூரில் ஓர் யோக்கியமான கோவிலைக் கட்டுவித்தார். கூத்தூரிலுள்ள அஞ்ஞானப் பிராமணர் இவர் கோவிற்

கட்டாதபடிக்கு எவ்வித விக்கினமுஞ் செய்னார்களாயினும், அந்நாட்டையாளுந் துரையின் ஒத்தாசையைக்கொண்டு தாம் நினைத்தாப்போலே கோவிற் கட்டிமுடிந்தது. அதன்பின் அவ்விடங்களிலுள்ள கிறீஸ்துவர்களின் விசாரணைமுடிந்து தத்துவஞ் சேரிக்குத்திரும்பிவந்து அதிலே மகா ஆடம்பரத்தோடு பாஸ்குத்திருவிழாவைக் கொண்டாடி மூவாயிரத்துச் சில்வானபேர்களுக்குப்பாவசங்கீர்த்தனமும்,முந்நூறு அஞ்ஞானிகளுக்கு ஞானஸ்நானமுங் கொடுத்தார். ஆனால் தத்துவஞ்சேரிக்கு அநேக உயர்ந்தஜாதி அஞ்ஞானிகள் வருவதால், சாதியில் தாழ்ந்த கிறீஸ்துவர்களைச் சரியாய் விசாரிக்கத் தடையாயிருக்கிறதாகக் கண்ட அருளானந்தர், தத்துவஞ்சேரிக்குத் தென்கிழக்கிலிருக்குஞ் சிறுகரம்பூரில் வேறோர் கோவிலைக் கட்டப் போனார். இந்தப் பயணத்தில் மிகவும் வருத்தப்பட்டார். அன்றியே பெருகின சில ஆறுகளை நீந்திக் கடந்து மகாபிரயாசத்தோடு தாம் நினைத்தவிடத்துக்குச் சேர்ந்தார். சேர்ந்தவுடனே அடைமழைபிடித்துச் சிறுகரம்பூரின் இரண்டு நதிகளிலும் வெள்ளம் பெருகி இவரிருக்கிறயிடத்துக்கு ஒருவரும் வராமலும் இதைவிட்டொருவரும்போகாமலுஞ் செய்தமையால், முத்திப்பேறுபெற்ற அருளானந்தரும், அவருடைய சீஷர்களும் மூன்றுநாளளவும்யாதோர் ஆகாரமின்றி சில கிழங்குகளையுங் கீரைகளையுஞ்சாப்பிட்டுப்பிழைத்திருந்தார்கள். தண்ணீர் வந்தவுடனே எவ்வித கிருபையுமுடைத்தான சர்வேசுரனுடைய விசேஷதயவினாலே அநேக கிறீஸ்துவர்கள் மழையையுந் தண்ணீரையுஞ் சகதியையும் பாராமல், மகா சந்தோஷமாய்ச்

சுவாமியாரிடத்தில் வந்து பாவசங்கீர்த்தனம்பண்ணி
தேவநற்கருணை வாங்கினார்கள். இதல்லாமலும் ஒரு
மாதத்துக்குள்ளாக 300 அஞ்ஞானிகள் சத்திய உப
தேசத்தைக்கேட்டு ஞானஸ்நானம் பெற்றார்கள்.
வேறே 300 அஞ்ஞானிகளுக்கும் ஞானஸ்நானங்
கொடுப்பதற்கு வேண்டிய போதனைபண்ணும்போது
ஸ்ரேஷ்டர் கட்டளையின்படியே இவர் சில முக்கியகா
ரியங்களைத் தீர்மானிக்கத் தக்கதாகச் சென்னப்பட்ட
ணத்துக்கு எழுந்தருளிப்போனார். இவ்வளவு தூரம்
கால்நடையாய் நடந்தமையால், காட்டிலும் மேட்டிலு
மலையிலும் மிகவும் வருத்தப்பட்டார். சென்னப்பட்
டணத்துக்குச் சேர்ந்து குறித்தகாரியங்களை அனு
கூலப்படுத்தினதுமல்லாமல், அதிலுள்ள ஓர் பெரும்
பாவியைத் திருப்பினார். அதெப்படியெனில் இந்தக்
கிறீஸ்துவன் ஜாதியில் முதலியுந் திரண்ட ஆஸ்திக்
காரனுஞ் செல்வாக்குள்ளவனும் அநேக சனத்திரட்சி
யுள்ளவனுமாய் இருப்பதினாலே அகங்கரித்து, 10 வரு
ஷகாலம் கோவிலுக்கு வராமலும் குருக்களுடைய
கட்டளைக்கு அமையாமலுந் தன்மனதின்படியே நடந்
து வந்தான். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர்
அவனை வரவழைத்து வேண்டிய புத்திமதிகளைச்
சொல்லி அவன் கல்மனதை இளகப்பண்ணி முழு
தும் [illegible] மனிதனாய் ஆக்கினார்.

சில வருஷத்துக்குப்பின் முத்திப்பேறுபெற்ற அரு
ளானந்தர் ஸ்ரேஷ்டர் உத்தியோகஞ் செலுத்திவரும்
போது ஆகாரமென்கிற ஊரிலே இரண்டு ஆஸ்தியு
ள்ள கிறீஸ்துவர்கள் இருந்தார்கள். எந்த முகாந்தர
த்தினாலேயோ இவர்களுக்குள் வியாச்சியமுண்டாகி



மனஸ்தாபத்தோடிருந்தார்கள். இவர்கள் வர்மத்
தை விடத்தக்கதாகச் சுவாமிமார்கள் எவ்வித பிரயா
சப்பட்டிருந்தாலும், இவர்கள் ஆங்காரத்தை விட்டு
விட்டவர்களல்ல. இவர்கள் ஒருவருக்கொருவர் பேசி
க்கொண்டாலும் வர்மமில்லையென்றாலும், இவர்களுக்
குள் மனத்தாங்கலிருக்கிறதாக எல்லாரும் அறிவார்
கள். இவ்வூருக்கு எழுந்தருளிவந்த முத்திப்பேறு
பெற்ற அருளானந்தர், கிறீஸ்துவர்களெல்லாரும்
இராப் பிரார்த்தனைக்குக் கூடியிருக்கும்போது இவ்
விரண்டு பெயரைப் பார்த்துச் சொன்னதாவது:
“நீங்கள் ஒருவரொருவன்பேரில் பகையில்லாதிருக்
கிறது போதாது. எல்லாரையும் மீட்டிரட்சிக்கும்
பொருட்டு மரித்த சேசுக்கிறீஸ்துநாதருடைய சீஷர்
களான நீங்கள் அன்னியோன்னியமாய் நேசித்திருக்
கக்கடவீர்களாக. நான்தோறும் பரமண்டல மந்திரத்
தைச் சொல்லி வேண்டிக்கொள்ளும்போது எங்கள்
கடன்காரருக்கு நாங்கள் பொறுக்குமாப்போல எங்கள்
கடன்களைப் பொறுத்தருளுமென்று சொல்லுகிறீர்
களே, சர்வேசுரன் உங்களைப் பகைத்திருந்து உங்களு
க்கு வேண்டிய நன்மைகளைச் செய்யாவிட்டால் உங்
களுக்குப் போதுமோ? நீங்கள் உங்களுக்குள் வர்ம
மில்லையென்று கபடமாய்ச் சொன்னாலுஞ் சகலருடை
ய மனதையும் உற்றுப்பார்க்கிற சர்வேசுரனை யேய்க்க
கூடுமோ? நீங்கள் எந்தப்பிரகாரமாய் நடக்கிறீர்க
ளோ அந்தப்பிரகாரமே அவரும் உங்களை நடப்பிப்பார
ல்லோ” என்றார்.

இவ்வார்த்தைகளைக் கேட்டுக் கூடின கிறீஸ்துவர்க
ளெல்லாருக்கும் மனது இளகினாலும் இவ்வெதிரிகள்

சாக்குப்போக்குச் சொல்லுவார்களொழிய ஆங்காரத்தை விட்டவர்களல்ல. இவர்களுடைய மூர்க்கமான மனதைச் சுவாமியார் கண்டு இவர்களை நோக்கிச் சொன்னதாவது: "சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்து ஒருவனுக்கொருவன் பொறுக்கமாட்டீர்களோ? இதோ உங்கள் ஆத்துமங்களை ஈடேற்ற நாம்தாமே தேவநீதிக்குப் பரிகாரம்பண்ணப் போகிறோம்" என்று தமது தோளிற் போட்டிருந்த வஸ்திரத்தைக் கீழே போட்டு, அஞ்சுதலைக் கயிற்றையெடுத்து இரத்தம் ஓடத் தம்மை அடித்துக்கொண்டார். இதைக்கண்ட பகைவர் மனதிளகி எங்களுக்கு இது போதும், போதும், எங்கள் வர்மத்தை விட்டுவிட்டதுமல்லாமல், சிநேகிதராகவும் சகோதரராகவும் இருப்போமென்று கூவி, மகா பக்ஷத்துடனே ஒருவனொருவனைக் கட்டியணைத்துக்கொண்டார்கள். அதன்பின் இவர்கள் சுவாமியாருடைய பக்ஷத்தை ஒருபோதும் மறவாதிருந்ததன்றி, இருவரும் நித்திய சமாதானத்தோடிருந்தார்கள்.

---

## 7-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் 1679-ம் 1680-ம் 1681-ம் ஆண்டுகளில் நடப்பித்த அகிர்த்த வர்த்தமானங்களாவன:

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இம்மூன்று வருஷகாலம் செஞ்சி, தஞ்சையூர் இராச்சியங்களிலுள்ள கிறீஸ்துவர்களை விசாரிக்கவும், சத்திய உபதேசங்கேட்டுத் திரும்புகிற அஞ்ஞானிகளுக்கு ஞானதீட்சை



கொடுக்கவும் யாவர்க்கும் சத்தியவேதமகிமையை அறிவிக்கவும் மிகுந்த வருத்தப்பட்டுச் சஞ்சரித்திருந்தார். மைசூராரும், மராட்டியரும், துலுக்கரும், நாய்க்கரும் எங்குஞ் சண்டைசெய்கிறபடியினாலேயும் திருடர்கள் எப்பக்கத்திலுங் கொள்ளை அடிக்கிறபடியினாலேயும் அநேக பாளையப்பட்டுத் துரைகள் சத்தியவேதத்துக்கு இடைஞ்சல் செய்தபடியினாலேயும், முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இம்மூன்று வருஷமும் அநுபவித்த துன்பங்களும், இவருக்கு நேரிட்ட இக்கட்டு ஆபத்துக்களும் இவ்வளவென்று சரியாய்ச் சொல்லுவாரில்லை. சர்வேசுரனுடைய விசேஷ உதவியினாலேயும், தமது மனத்தைரியத்தினாலேயும் இவர் இதெல்லாத்துக்கும் அஞ்சாதிருப்பார். சில ஊர்களில் அதனமாய்க் கோவில்களைக் கட்டுவாரல்லாதே அக்கோவில்களில் மகா கொண்டாட்டத்தோடு திருநாட்களையும் நடப்பிப்பார். தஞ்சையூர் இராச்சியத்திலுள்ள கரம்பக்குடி நாட்டுக் கிறீஸ்துவர்களுக்கு அந்நாட்டை ஆண்டுவருந் துரைகள் அஞ்ஞானப் பிராமணரால் ஏவப்பட்டு, மிகவும் இடைஞ்சல்செய்கிறதாக அறிந்து அவ்விடத்துக்கு எழுந்தருளிப் போனார். அங்கே சேர்ந்த உடனே கிறீஸ்துவர்களுக்கு ஆறுதலான வார்த்தைகளைச் சொல்லிச் சில அஞ்ஞானிகளையும் திருப்பி, எதிரிகளாகிய பிராமணரைத் தம்முடன் வேதசம்பாஷணைசெய்ய வரச்சொன்னார். அதற்கு அவர்கள் இவரைப் பில்லிசூனியக்காரரென்றும், மந்திரவாதியென்றும், வித்தைக்காரரென்றும், தம்மிடத்தில் வருகிற யாவரையும் தமது மாந்திரியத்தால் மோசப்படுத்தி வேதத்துக்குத் திருப்புகிறபடியினாலே நாங்கள்

அவரண்டைக்குப் போவோமானால், எங்களையும் மோசப்படுத்துவார் என்றும் போக்குச்சொல்லி தர்க்கிக்கப் போகமாட்டோமென்றார்கள்.

அதன்பின் அருளானந்தர் சரம்பக்குடியைவிட்டுக் கும்பகோணத்துக்குப் போய், அந்நாட்டிலுள்ள கிறீஸ்துவர்களை விசாரித்துமுடிந்தபின், சற்று இளைப்பாறத்தக்கதாக தத்துவஞ்சேரிக் கோவிலுக்குப் போனார். அதில் சேர்ந்தவுடனே கபலக்குறி என்னும் ஊரில் ஞானமுத்து உபதேசியார் அவஸ்தையாய்க் கிடக்கிறதாக செய்திகேட்டுத் தமது கால் இரண்டுங் காயமாகி மிகவும் வருத்தப்பட்டிருந்தாலும் இதைப் பாராமல் உடனே கபலக்குறிக்கு எழுந்தருளிப்போனார். இவ்வுபதேசியார் எல்லா உபதேசிகளுக்கும் நன்மாதிரிகையாக அநேக வருஷம் தேவ ஊழியத்தில் உழைத்துக்கொண்டிருந்தார். இவர் அஞ்ஞானிகளைத் திருப்புவதற்காவது இடைஞ்சல்படுகிறவர்களுக்கு ஆறுதல் வருவிப்பதற்காவது வியாதிக்காரருக்கு ஒத்தாசை செய்கிறதற்காவது மழையிலேயும் வெய்யிலிலேயும் இராவும்பகலுஞ் சுற்றித்திரிவார். இந்த நல்ல உபதேசியார் சுவாமியாரைக் கண்டு மிகவுஞ் சந்தோஷப்பட்டு, மகா பத்திவிசுவாசத்துடன் அவஸ்தைப் பூசுதல்பெற்று, ஆனந்தசந்தோஷ வெள்ளத்தில் அமிழ்ந்தினவராய்ப் பாக்கியமான மரணத்தை அடைந்தார். மகா ஆரபாரத்துடன் இவரை அடக்கம்பண்ணினதின்பின் சுவாமியார் காரறம்பட்டிக்குப் போனார்.

வேறொரு சமயத்தில் முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் கொள்ளிடம் ஆற்றைக் கடந்து தஞ்சையூர்





இராச்சியத்தில் பிரவேசித்தார். இம்சேரிக் ஆறுகளெல்லாம் பெருவெள்ளத்தினாலே மூன்று ஆறுகளை நீந்திக் கடந்தபின் இருட்டிப் போனமையால், இவரும் இவருடைய சீஷர்களும் அப்பாலே போகக்கூடாதவர்களாய் ஓர் தோப்பில் இறங்கினார்கள். அங்கே மழையினாலும் காற்றினாலும் பசியினாலும் பொறுக்கப்படாத வருத்தப்படுகையில், நடுச்சாமத்திலேதானே இரண்டு அஞ்ஞானிகள் வந்து இவர்களை ஓர் வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய் தீ வளர்த்துக் குளிர்காயச் செய்து சாப்பாடுங் கொடுத்தார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சர்வேசுரனுக்குத் தோத்திரஞ்செய்து மறுநாட் புறப்பட்டுச் சாயங்காலமட்டும் மழையோடே நடந்து மஞ்சவாய்க்கால் அருகிற் சேர்ந்தார்கள்.

வெள்ளப் பெருக்கினாலேயும் தண்ணீர் இழுப்பினாலேயும் நடந்தாவது நீந்தியாவது இந்த வாய்க்காலைக் கடக்கக்கூடாதவராயிருந்தார். [illegible] இன்படியே ஆற்றைக் கடத்துவிக்கிறதற்கு அதில் சிலர் பரிசல்களை வைத்திருந்தார்களாயினும், சுவாமியாரை அக்கரைக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கமாட்டோமென்று சாதித்துச் சொன்னார்கள். அப்போது அருளானந்தர் பட்டினியாயும் வஸ்திரம் நனைந்தும், குளிரினாலே நடுக்கமெடுத்தும் ஓர் முள்ளுமரத்தின் அடியிலே ஜெபம்பண்ணத் துவக்கினார். இப்படியே ஜெபம்பண்ணிக்கொண்டிருக்கையில் பலமுள்ள வாலிபனொருவன் அக்கரையினின்று ஆற்றைக் கடந்துவந்து சுவாமியார் எங்கே என்று உரத்த சத்தத்தோடே கூப்பிட்டுக் கேட்டான். சுவாமியார் நாம்தாமே என்று சயிக்கினை காட்டவே, இந்த வாலிபன் தன்

ணீரிலிறங்கி இக்கரைக்கு நீந்திவந்து சுவாமியாருக்கு ஆசாரம்பண்ணி, அவருடைய பூசை ஆயத்தப் பெட்டியையும், மற்றச் சாமான்களையும் சுமந்து அக்கரைக்குக் கொண்டுபோய்த் திரும்ப சுவாமியாருடைய கையைப் பிடித்து யாதொரு வருத்தமில்லாமல் அக்கரையில் சேர்த்தான். மூன்றும் விசை வந்து சுவாமியாருடைய சீஷரையும், இவ்விதமாய் அக்கரையில் சேர்த்தான். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இந்த நல்ல வாலிபனுக்கு நன்றியறிந்த மனதோடே உபசார வார்த்தை சொல்லவேண்டுமென்று திரும்பிப் பார்க்கிறபோது அவன் காணாதே மறைந்துபோனான். இந்த வாலிபன் சர்வேசுரனாலே அனுப்பப்பட்ட மனுஷ ரூபமுள்ள ஓர் சம்மனசுவாயிருந்ததென்று அங்கீகரிக்கத்தக்க தன்மையாமே, ஆகையால் அருளானந்தர் எவ்வித அற்புதங்களையும் செய்கிற சர்வேசுரனுக்கு தோத்திரஞ் சொல்லிச் சந்தோஷமாய்ச் சிறுகரம்பூருக்குச் சேர்ந்தார்.

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இம்மூன்று வருஷத்திலும் நடப்பித்த அற்புதமான இருத்தியங்களையும், திருப்பின அஞ்ஞானிகளையும், பண்ணின பிரயாணங்களையும், பட்ட பிரயாசங்களையும் பற்றும்பற்றும் இவ்விடத்தில் விவரிக்கமுடியாது.



## 8-ம் பிரிவு.

### சத்தியவேதத்துக்கு இடைஞ்சல் பண்ணின சிலர் தேவநீதியால் தெண்டிக்கப்பட்ட வர்த்தமானமாவது:

மீனாட்சி என்னும் ஐயன் கூத்தூருக்குத் தலைவனும் துரையுமாயிருந்தான். இவன் சத்தியவேதத்துக்கு விரோதியாய் அவிதத் தூஷணித்துப் பழித்துக்கொண்டுவருவானல்லாதே அவ்வூரில் வாசம்பண்ணின நாலைந்து ஆறு கிறீஸ்துவர்களுக்குத் தன்னால் கூடுமான நெருக்கிடையெல்லாம் செய்துவந்தான். இந்நாட்டை விசாரித்துவருகிற பெரிய துரைகளிடத்தில் அநேகம்விசை பொய்யும் கபடமுமுள்ள வியாச்சியங்களைச் செய்து அருளானந்தர் கட்டின கோவிலைத் தரைமட்டமாக இடிக்க உத்தரவு தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். இந்தத் துரைகள் சுவாமியார்பேரில் வைத்த பக்ஷத்தினாலே அவன் கேட்டுக்கொண்ட உத்தரவைக் கொடாதேபோனார்கள். ஆயினும் ஐயனுடைய அகங்காரமும் பகையும் நீங்கிப்போனதல்ல. ஒருநாள் இவன் மேற்சொன்ன துரைகளால் தனக்கு ஒரு பொல்லாப்பும் வரமாட்டாதென்றெண்ணிக் கிறீஸ்துவர்கள் அனைவரையும் தன்னண்டையில் வரவழைத்துக் கோபத்தோடு உரைத்ததேதெனில்: “நாம் நாளையத்தினம் தேவர்களுக்குப் பூசை நமஸ்காரம் செய்யப்போகிறோம். ஆகையால் நீங்கள் அதற்கு வரிகொடுக்கவேண்டியதல்லாதே என்னுடன் நீங்களும் இந்தப் பூசை நமஸ்காரத்தைச்

செலுத்தவும் வேண்டும்" என்று கற்பித்தான். இதற்கு கிறீஸ்துவர்கள் ஒருபோதும் நீர் சொன்னதைச் செய்யமாட்டோமென்க, ஐயன் வெகுளித்து, அடிபட்ட நாகம்போலச் சீறிச் சேசுக்கிறீஸ்துநாதர்பேரில் சொல்லப்படாத தூஷணங்களைப் பேசி "நீங்கள் பொருந்திய மனதோடு செய்யமாட்டாத காரியத்தைப் பலவந்தமாய்ச் செய்யும்படிக்குப் பார்த்துக்கொள்ளுவேன்" என்று சொல்லி அவர்களை அவமானத்துடனே புறத்திலே தள்ளினான்.

இச்சக் கிறீஸ்துவர்கள் இரா முழுதும் விழித்திருந்து ஜெபம்பண்ணி தாங்கள் படுகிற இக்கட்டுகளைப் பார்த்துக் கிருபையுடன் தங்களுக்கு ஒத்தாசையாயிருக்கவும் தாங்கள் சத்தியவேதத்தை விடாதபடிக்குத் தைரியத்தைக் கட்டளையிடவும் வேண்டுமென்று சர்வேசுரனை மன்றாடிக்கொண்டிருந்தார்கள். சர்வவல்லபருமன்ன ஆண்டவர் இரங்கி இவர்களை மீட்டிரட்சிக்கச் சித்தமானார். அதெப்படியெனில், அந்த இராத்திரியிலேதானே ஐயனானவன் தேவ கோபாக்கினையால் கொளுத்தப்பட்டு, அகோரமாய்ச் செத்தான். விடியற்காலத்தில் அஞ்ஞானிகளுடைய கூக்குரலையும் ஐயோவென்று அழுகிற புலம்பலையும் கேட்ட கிறீஸ்துவர்கள், சர்வேசுரன் தங்களுடைய சத்துருவைச் சங்கரித்துத் தங்களைக் காப்பாற்றினதாக அதிக நன்றியறிந்த மனதோடு அவரைத் தோத்தரித்துக் களிகூர்ந்திருந்தார்கள். இந்தப் பாதகனுடைய பெண்சாதியானவள் தன் புருஷனுக்கு ஒப்பாய்க் கிறீஸ்துவர்களைத் துன்புறுத்தித் தூஷணித்துக்கொண்டிருந்தவளாம்; இவளும் அந்தப் பிரேதத்தோடு உடன்



கட்டை எரி நெருப்பில் செத்தாள். இந்த ஐயனுக்கு நேரிட்ட தேவ கோப ஆக்கினையை அநேக அஞ்ஞானிகள் கண்டு பிரமித்து மனந்திரும்பிச் சத்தியவேதத்துக்கு உட்பட்டார்கள்.

தாண்டவநல்லூர் நாட்டிலுள்ள வேறோர் பிராமணன் பிசாசினால் ஏவப்பட்டவனாய் ஆயுத முஸ்திப்புள்ள சில சேவகருடனே முத்திப்பேறுபெற்ற அருளானந்தரைப் பிடிக்கத் தத்துவஞ்சேரிக்கு இடமான வந்தான். சர்வேசுரனுடைய விசேஷ கிருபையினாலே முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் அவர்கள் வருமுன்னமே அவ்வூரைவிட்டு வேறோர் ஊருக்குப் போயிருந்தார். ஆகையால் தான் தேடிவந்தவரைக் காணாத பிராமணன் மிகவும் அகங்கரித்துக் கோவிலிலும் அறைவீட்டிலும் கொள்ளையடித்து அவ்விரண்டையும் சுட்டெரித்துப் போனான். இரண்டுவாரத்துக்குப்பின் அந்நாட்டில் சுழல் காற்று அடித்து அடை மழை பெய்ததினால் அநேகருக்கு மோசமாச்சுது. மேற்சொன்ன பிராமணன் வெள்ளம் வரும்போது உடனே ஓடிப்போகாமல், பொருளாசையால் தன் வீட்டிலுள்ள தட்டுமுட்டு சாமான்களை எடுத்துக்கொண்டு போகையில், சுழல் காற்றில் அகப்பட்டுத் தன் சொத்துக்களோடு ஆற்றில் விழுந்து நிர்ப்பாக்கியனாய்ச் செத்தான். வேத விரோதியாகிய இந்தப் பிராமணன் சர்வேசுரனால் தண்டிக்கப்பட்டுச் சாகையில் என்பது கிறீஸ்துவர்கள் தேவ கிருபையினாலே அற்புதமாய் இந்தச் சுழல் காற்றுக்குத் தப்பிப் பிழைத்தார்கள். அதெப்படியென்றால் இந்த என்பது பெயரும் ஓர் உபதேசியும் காற்றினால் வீடுகளெல்

லாம் விழுகிறதாகக் கண்டு, மிகவும் கெட்டியாய்க் கட்டியிருந்த ஓர் வீட்டிலே கூடினார்கள். இந்த உபதேசி அவர்களைத் தேற்றித் தேவ ஒத்தாசையை நம்பவேண்டுமென்று சொல்ல, எல்லாரும் அந்த இராமுழுதும் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்கள். விடிந்தபின் காற்று நீங்கவே வெளியில் புறப்பட்டார்கள். இவர்கள் வெளியில் வந்தவுடனே, அந்த வீடு இடிந்து விழுந்தது. இவ்விதமாய்ச் சர்வேசுரன் அந்தக் கிறீஸ்துவர்களைக் காப்பாற்றினதாகக் கண்ட அஞ்ஞானிகள் அநேகர் மனந்திரும்பினார்கள்.

செஞ்சி இராச்சியத்திலுள்ள ஓர் கொடிய தலைவன் கிறீஸ்துவர்களுக்கு இடைவிடாதத் தொந்தரை செய்துகொண்டிருந்தான். சத்திய வேதத்தின் பேரில் இவன் வைத்த பகையினாலே சில ஆட்களைக்கொண்டு கோனை என்னும் ஊரிலுள்ள கோவிலைத் தீ வைத்து நிர்மூலமாக்கினான். தீ வைத்த கொஞ்சநாளைக்குப் பின் அவன் அரண்மனையில் தீ பிடித்து, அவனுடைய ஆஸ்திபாஸ்தி எல்லாம் வெந்து சாம்பலாய்ப் போயிற்று. அவனோவெனில் சிபோலி இராஜாவின் மந்திரிகள் பலவந்தமாய்த் தன்னைக் கேட்கிற பெருந்தொகையைச் செலுத்தமாட்டாதவனாய், நஞ்சைத் தின்று அவலமாய்ச் செத்தான்.

1682-ம் ஆண்டில் அருளானந்தர் பாஸ்குத் திருவிழாவைக் கொண்டாடக் கூத்தூருக்குப் போகிறபோது வழியிலுள்ள ஓர் பனந்தோப்பில் இறங்கி ஜெபம் பண்ணத் துவக்கினார். இவரோடுகூட வந்த கணகப்பன் என்னும் உபதேசியார் அதிலிருந்த மடத்தில்

இளைப்பாறப் போனார். அப்போது அத்தேசத்துத் துரையானவன் அம்மடத்தில் இருந்தான். இவன் வேத விரோதியாகையால் உபதேசியாரைக் கண்டவுடனே அவரை நிந்தித்துக் கிறீஸ்து வேதத்தைப்பழித்துத் தேவ தூஷணங்களைச் சொல்லத் தொடங்கினான். இதைக் கேட்ட உபதேசியார் மிகவும் கஸ்திப்பட்டு அவன் சொன்னதெல்லாம் மறுத்ததுமல்லாமல் அஞ்ஞான தெய்வங்களுடைய நடபடிகளை அவனுக்கு விவரித்துக் காட்டி, இப்பேர்ப்பட்ட காமாதுரரையும் சண்டாளராகிய பெருந்துரோகிகளையும் தேவர்களாகத் தொழலாமோ என்றார். துரையானவன் பிரமித்து வெட்கி, வீண் மிரட்டுகளை மிரட்டும்போது, உபதேசியார் சுவாமியாரிடத்தில் வந்து நடந்ததெல்லாம் விவரிக்கவே சுவாமியார் மகா கஸ்திப்பட்டுச் சொன்னதாவது: "எட்டு நாளைக்குள்ளாக இந்தத் துரோகியின் வாய் புழுத்து நாறி அவலமாய்ச் சாவான். நீயும் அவனுடைய பாடையைக் கண்ணாலே காண்பாய்" என்று தீர்க்கதரிசனமாய் உரைத்தார். இவ்வண்ணமே எட்டுநாளைக்குப்பின் கனகப்ப உபதேசியார் இந்த இடத்துக்கு வந்து ஓர் பிரேதம் சுடுகாட்டுக்குக் கொண்டுபோகப்படுகிறதைக் கண்டு, இதென்னவென்று ஜனங்களை விசாரித்ததில், இந்நாட்டுத் துரையானவர் வாயிலே புண் புறப்பட்டுப் புழுக்கள் உண்டாகி மரித்தார். அவருடைய பிரேதம் இதுதான் என்றார்கள். உபதேசியார் சுவாமியார் சொன்ன தீர்க்கதரிசனத்தை நினைத்துத் தேவ நீதியின் ஆக்கினை இதென்று உறுதித் தாம் நியமித்த அலுவலை முடிக்கப் போனார்.

வடுகர்பேட்டை நாட்டாண்மைக்காரன் சத்தியவேதத்தின் மகிமையை அறிந்தவனாய் அதை ஏற்றுக்கொள்ள விரும்பினான். ஆயினும் அவனுக்கு இரண்டு பெண்சாதிகள் இருந்ததினிமித்தம் மதிமயங்கித் திரும்பினவனல்ல. அவ்விருவரில் ஒருத்தி தன் வடிவினாலும் சற்குணத்தினாலும் இவனுக்கு அதிகப் பிரியமுள்ளவளாயிருந்தாள். இவள் அநேக வருஷம் மலடியாயிருந்து கடைசியாய் ஓர் ஆண்குழந்தையைப் பெற்றாள். தகப்பன் மிகவும் சந்தோஷப்பட்டு இதற்காகப் பெரிய விருந்திட்டுச் சுற்றிலுமிருந்த பிராமணரை வரவழைத்தான். இந்தப் பிராமணர் தங்கள் தெய்வங்களைப் பாராட்டி, அவர்களுடைய சகாயத்தினால்தான் இந்தப்பிள்ளை பிறந்ததென்று நிச்சயித்துச் சொன்னார்கள். புத்தியற்ற தகப்பனானவன் இது மெய்யென்று அங்கீகரித்துப் பிராமணர் கையினால் தான் ஞானதீட்சைபெறவேண்டுமென்றான். ஆகையால் இந்தச் சடங்கை நிறைவேற்றத்தக்கதாகச் சீரங்கத்திலிருந்து ஓர் பெரிய பிராமணன் மகா கொண்டாட்டத்தோடு வந்தான். அதன்பின் பிராமணர் எல்லாருங்கூடித் தெய்வங்களுக்குப் பூசை நமஸ்காரஞ்செய்து மேற்சொல்லிய தீட்சைச் சடங்கை நிறைவேற்றிச் சிறப்பான விருந்துண்டு பிறந்த குழந்தையின் சாதகத்தைப் பார்த்து இவன் நெடுங்காலம் பிழைத்து அநேக திரவியங்களைச் சம்பாதித்துத் தாய்தகப்பனுக்கு மனை இரம்மியம் வருவித்து யோக்கியவானாய் வாழ்வானென்று சொல்லிப் புகழ்ந்துகொண்டிருந்தார்கள்.

அச்சமயத்தில்தானே அருளானந்தரும் வேறோர் சுவாமியாரும் வடுகர்பேட்டைக் கோவிலில் இருந்தார்கள். இவர்களிருவரும் இந்தக்கொண்டாட்டத்தைக் கேட்டுத் துக்கித்து அந்தப் பிராமணனைத் தடுமாறப்பண்ண வேண்டுமென்று ஆண்டவனைப் பிரார்த்தித்துக் கொண்டார்கள். அன்று இராத்திரி தானே குழந்தைக்கு வியாதிகண்டு அவஸ்தையாகிச் சாகிறதாயிருந்தது. தகப்பனானவன் உடனே ஓர் உபதேசியைக் கூப்பிட்டுக் குழந்தைக்கு ஞானஸ்நானம் கொடுக்கச் சொன்னான். ஞானஸ்நானம் பெற்றவுடனே குழந்தை மரித்துச் சம்மனசுகளோடே மோக்ஷத்துக்கு எழுந்தருளிப் போயிற்று. பிராமணர் இதைக்கண்டு வெட்கி, எவராலும் இகழப்பட்டு ஓடிப்போனார்கள். இந்தக் குழந்தையின் தாயும் அங்கேயுள்ள அஞ்ஞானிகள் அநேகரும் இந்தப் பிராமணருடைய தப்பறைகளைக் கண்டு அஞ்ஞானத் தெய்வங்களை வெறுத்து ஞானோபதேசம் கேட்க வந்தார்கள்.

## 9-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சர்வேசுரனுடைய விசேஷகிருபையினால் இரண்டு சமயத்தில் சாவினின்று காப்பாற்றப்படுகிறார்:

ஓர் சமயத்தில் முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் மன்னார்கோவிலைச் சேர்ந்த நாட்டுக்கு எழுந்தருளிப் போனார். அதிலே வீடில்லாமல் பதினைந்துநாளளவும் ஓர் காட்டுக்குள்ளிருந்து புசிக்கத் தகுங் காரி

யங்கள் இல்லாமையால், கொஞ்சம் சோறுந் தண்ணீருமாத்திரமே சாப்பிட்டு மிகவும் வருத்தத்தோடு பறையர் பள்ளர் முதலான தாழ்ந்த ஜாதிகளை விசாரித்து, இரண்டாயிரம் பேருக்குப் பாவசங்கீர்த்தனமும் நூற்றைம்பது அஞ்ஞானிகளுக்கு ஞானஸ்நானமுங் கொடுத்தார். பிறகு அக்காட்டினின்று புறப்பட்டுக் கரம்பக்குடி நாட்டுக்கு எழுந்தருளிப்போனார். இவ்விடத்தில் அநேகநாள் இருந்துகொண்டு இரவில் கிறீஸ்துவர்களை விசாரித்துப் பகலில் அஞ்ஞானிகளோடு தர்க்கம்பண்ணி அவர்களைத் திருப்ப மகா பிரயாசப்பட்டார். மேற்சாதியான சில அஞ்ஞானிகள் சத்தியத்தை அறிந்து விசேஷ பத்தியோடும் அத்தியந்த சந்தோஷத்தோடும் ஞானதீட்சைப் பெற்றார்கள்.

அதன்பின் சுவாமியார் திரும்ப வடக்கேபோகத் தீர்மானித்தமையால், அந்தப் புதுக்கிறீஸ்துவர்கள் இவர் போகிறாரென்ற செய்தி கேட்டுக் கஸ்திமிகுதியினாலே அழுதுகொண்டிருந்தாலும் இவர் அவர்களுக்குவேண்டிய உறுதியும் புத்திமதியுஞ்சொல்லிப் பயணப்பட்டுப் போனார். பெருகின அநேக ஆறுகளை நீந்திக் கடந்து எவ்வித வருத்தமும் அநுபவித்துத் திருக்கணையூர் நாட்டுக்குச் சேர்ந்தார். சேர்ந்தவுடனே தாம் பட்ட மிகுதியான வருத்தத்தாலும், இரவும் பகலும் நித்திரையற்று வேண்டிய ஆகாரமில்லாமையாலும், நேரிட்ட வேலை அதிகத்தாலுங் களைத்து மிகவும் மெலிந்து கடின வியாதியாய் விழுந்தார். இரத்தத் தாரைகளில் உதிரங் கொதிப்பாகிக், கடும் சுரத்தால் கால் இரண்டும் அகோரமாய்க் கொப்பளித்துக், கண்ணிமைக்குள் சதை வளர்ந்தமையால் கண் மறைபட்டுப்

பொறுக்கப்படாதவேதனை அனுபவித்துக்கொண்டிரு
ந்தார். கொடுத்த மருந்தெல்லாம் பிரயோசனமற்றுப்
போனதையும், வைத்தியரெல்லாரும் இனி நம்பிக்கை
இல்லை என்கிறதையும் கண்டு, முத்திப்பேறுபெற்ற
அருளானந்தர் தமக்கு முன் ஆரோக்கியங் கட்டளை
யிட்ட அர்ச். சவேரியாருடைய அநுக்கிரகத்தைத் தே
டினார். அவரைநோக்கிப் பிரார்த்தித்தது ஏதெனில்,
"அர்ச். சவேரியாரே! நான் உம்முடையவேண்டுதலா
ல் சௌக்கியம் அடைவேனாகில் உமக்கு மிகவும் பிரிய
மான இந்துஸ்தானைத் திருப்பத்தக்கதாக" என்
மரணபரியந்தம் வருந்துவேன் என்று வேண்டிக்கொ
ண்டார். உடனே அவர் பட்ட அகோர வேதனை
அசுப்பில் நீங்கிப்போய்க் கொஞ்சநாளுக்குள்ளாக
முழுதுஞ் சொஸ்தமாயிற்று. அதன்பின் இவரும்
இவருக்கு அவஸ்தைப்பூசுதல் கொடுக்கவந்த வேறோர்
சுவாமியாருஞ் சர்வேசுரனுக்கும் அர்ச். சவேரியாருக்
கும் நன்றியறிந்த மனதோடே தோத்திரம்பண்ணின
தின்பின் மகா தைரியத்தோடே தேவ ஊழியத்தைத்
திரும்ப ஏற்றுக்கொண்டார்கள்.

வேறோர் சமயத்திலே முத்திப்பேறுபெற்ற அரு
ளானந்தர் திருவான்கோட்டு இராச்சியத்துக்குச் சில
கனத்த காரியங்களை விசாரிக்கத்தக்கதாகச் சிரேஷ்
டர் கட்டளைப்படியே யாத்திரையாய்ப் புறப்பட்டுப்
போனார். போகிறபோது உக்கிரமமான கடலினா
லும் எதிர்காற்றினாலும் நீரோட்டத்தினாலும் பதி
னொரு நாளளவும் சமுத்திரத்தில் அலைந்து அப்பாலே
போகக்கூடாமையால், திரும்பக் கரையில் இறங்கி
மறவன் தேசத்தினின்று திருவான்கோட்டு இராச்சிய

மட்டும் கால்நடையாய்ப் போனார். அதில் தொப்புவென்னும் ஊரிலுள்ள சேசுசபை மடத்தின் மேலான சிரேஷ்டரைக் கண்டு தாம் வந்த காரியங்களையெல்லாம் அநுகூலமாய்த் தீர்மானித்துத் திரும்பத் தூத்துக்குடிக்குப் போய், அங்கிருந்த வேறே இரண்டு குருக்களோடே கப்பல் ஏறினார். கப்பல் ஏறின முப்பத்தைந்து நாளளவாகச் சமுத்திரத்தில் அலைகளினாலும் காற்றின் அகோரத்தினாலும் இடைவிடாத ஆபத்தில் அகப்பட்டார்கள். இவர்கள் ஏறின கப்பலானது காற்றின் அகோரத்தால் கல்லிலே மோதி உடைந்து தகர்ந்துபோயிற்று. இம்மூன்று சுவாமிமார்களுஞ் சமுத்திரத்தில் விழுந்து, உடைந்த கப்பலின் சில பலகைகளைப் பிடித்து அலைகளால் தள்ளப்படுகிறபோது, துலுக்கருடைய ஓர் கப்பலானது அவ்வழியே வந்து சாவுக்கு ஏதுவாயிருந்த இம்மூவரையும் ஏற்றிக்கொண்டது. ஆகிலும் சற்றுநேரத்திற்குப்பின் துலுக்கர் அகோர காற்றுக்குப் பயந்து எப்போ கரைக்குச் சேருவோமோவென்றும், கப்பலிலுள்ள தின்பண்டங்களும் குடிநீரும் இவ்வளவு பெயருக்குக் காணுமோ இல்லையோவென்றும் விசாரித்துக், கப்பலைநடத்தத் தேவையான பெயர்கள் தவிர மற்றவர்களைச் சமுத்திரத்தில் தள்ளத் தீர்மானித்தார்கள். ஆகையால் அருளானந்தரையும் மற்ற இரு குருக்களையும் பாயுந் தண்டுமோ இல்லாத ஓர் பழைய சிறு படகில் இறக்கிச் சமுத்திரத்தில் விட்டார்கள். பெரிய கப்பல் காற்றின் அகோரத்தால் எங்கேயோ தள்ளப்படுகையில், இம்மூன்று சுவாமிமார்களுந் தங்களுடைய நம்பிக்கை

யெல்லாம் சர்வேசுரன்பேரில் வைத்து, யாதொரு மோசமுமின்றிச் செஞ்சி இராச்சியத்தின் ஓர் துறையில் சேர்ந்தார்கள். அருளானந்தர் கொஞ்சம் இளைப்பாறினபிறகு தஞ்சையூர் இராச்சியத்திற்கு வந்து, மார்கழி-மீ 13-ம்வ நல்லூர், ராஜாப்பேட்டை, திருக்கடையூர், மன்னார்கோவில், வேதாரணி என்னும் இவ்வைந்து நாடுகளிலுள்ள கிறீஸ்துவர்களை மகா பிரயாசத்தோடு விசாரித்துக்கொண்டு வந்தார்.

---

## 10-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இத்தேசங்களிலுள்ள சேசுசபை சந்நியாசிகளுக்குச் சிரேஷ்டராக நியமிக்கப்பட்டு அதிக பிரயாசப்படுகிற வர்த்தமானமாவது:

மேற்சொன்னபிரகாரமே முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தேவ ஊழியத்தில் வருந்தி எங்குஞ் சுற்றித்திரிந்து கிறீஸ்துவர்களை விசாரித்து அஞ்ஞானிகளுக்குப் புத்திமதிசொல்லி அநேக அற்புத கிருத்தியங்களை நடத்திக்கொண்டு வருகையில், மதுரை, தஞ்சையூர், செஞ்சி, வேலூர், கோலகொண்டாபுரம் என்னும் இவ்வைந்துவிஸ்தாரமான இராச்சியங்களிலுள்ள சேசுசபையின் சகல சந்நியாசிகளுக்குச் சிரேஷ்டராக நியமிக்கப்பட்டார். இவர் மனத்தாழ்ச்சியுள்ளவரானதாலும், யாவருக்கும் ஓர் அடிமையைப்போல் கீழ்ப்படிய வேண்டுமென்பதே தமது தாற்பரியமானதாலும், தமக்குச் சிரேஷ்டர் உத்தியோகம் வந்ததைக்கண்டு மிகவும்

கிலேசப்பட்டார். ஆகிலும் இந்த உத்தியோகத்தால்
இவருக்கு மகிமையும் இளைப்பாற்றியும் வராததுமன்றி,
அதிக பிரயாசமும் வருத்தமும் அலைச்சலும் நேரிட்ட
தென்கிறதற்குச் சந்தேகமில்லை. அதெப்படியெனில்,
தமது உத்தியோகத்தைச் செலுத்தத்தக்கதாகத் தெற்
கே கன்னியாகுமரியினின்று வடக்கே கிஷ்ணைநதி
வரைக்கும், மேற்கே சத்தியமங்கலம் நாட்டினின்று
கிழக்கே சமுத்திரம் வரைக்கும், இரண்டுமூன்றுதரஞ்
சுற்றித்திரிந்து குருக்களை விசாரித்துக் கிறீஸ்துவர்க
ளுக்குள் நல்ல ஒழுங்கு ஸ்தாபித்து, எங்கும் சத்திய
வேதத்தை ஸ்திரப்படுத்திக்கொண்டு வருவார்.

அல்லாமலும் குருக்களுக்கும் புதுக்கிறீஸ்துவர்களுக்
கும் எங்கே அஞ்ஞானிகளால் துன்பமும் இடைஞ்சலு
ம் நேரிடுமோ அவ்விடத்துக்கு உடனே எழுந்தருளிப்
போய் எல்லாருக்கும் புத்திமதி சொல்லி உறுதிப்படு
த்தி எல்லாப் பொல்லாப்புகளையும் நிவர்த்தியாக்கப்
பிரயாசப்படுவார். அப்போது இவருடைய இடைவி
டாத பிரயாசத்தாலும், அயராத முயற்சியாலும்,
மேன்மையான புத்தி தத்துவத்தாலும் அற்புதமாய்ச்
சத்தியவேதம் வர்த்தித்ததன்றியே, நூதனமாய் அனே
க நாடுகளிலும் இடங்களிலும் பரம்பி ஸ்திரமாய்
ஸ்தாபிக்கப்பட்டதாமே. எவ்வித நன்மைக்கும் தற்
சுபாவமாய் எதிராளியான பசாசு, தன் ஆலயங்கள்
தகர்க்கப்படுகிறதையும், தனக்குச் செய்யப்படும் ஆரா
தனை நீங்கி யாவரும் தன்னைக் கைவிட்டு மகா விருப்
பத்துடன் நவநூல்வேதத்தில் சேருகிறதையுங்கண்டு,
சதிவேல்போலத் தன் உள்ளத்தைக் குத்த, காய்ம
காரத்தால் புழுங்கிவேர்த்து, இனி எனக்கு வரும் இழிவு

காண்பேனென்று ரோசப்பட்டுச் சத்தியவேதத்தை நிர்மூலமாக்கத் தன்னால் கூடுமான பிரயாசமெல்லாம் பட்டதாமே.

அதெப்படியெனில்: கானகத்திலுள்ள கொடிய வேங்கைகள் கலைமான் போகிறதைக்கண்டு, அதின்மேல் பாய்ந்து நிஷ்டூரமாய்க் கொன்று, அதின் இரத்தத்தைக் குடிக்கத் தங்களுக்குள் ஒன்றோடொன்று அகோரமாய்க் கர்ச்சித்துச் சண்டை செய்வதுபோல், துலுக்கரும், மைசூராரும், மராட்டியரும் தளர்ந்துபோன நாயக்கர் இராச்சியங்களின் பல நாடுகளையும் பட்டணங்களையும் கைவசப்படுத்தத் தங்களுக்குள் ஓயாத யுத்தங்களை நடப்பிக்க பசாசு தூண்டினதுமன்றி, ஒவ்வொரு நாட்டிலும் பட்டணத்திலும் ஊரிலுஞ் சரியான நீதிபரிபாலனமற்று, எவ்வகைக் குழப்பமும் தொல்லையும் அநீதமும் நடக்கச்செய்தது. மீளவும் பஞ்சத்தினாலுங் கொள்ளைநோய்களினாலும் நேரிட்ட வருத்தங்கள் இவ்வளவென்று சொல்லத்தகுந் தன்மையல்ல.

இதுவுமல்லாமல் மேற்சொல்லிய சண்டைக் குழப்பங்கள் எங்கும் நடந்துவருகையில், சத்தியவேதத்தைக் கெடுக்கத்தக்கதாகத் துஷ்ட பசாசினால் ஏவப்பட்ட பிராம்மணரும், அநேக வேத விரோதிகளுங் காரணக் குருக்கள்பேரிலும் கிறீஸ்துவர்கள்பேரிலும் இல்லாத அவலாதிகளையுங் குண்டணிகளையும் இகழ்ச்சிகளையும் எங்கும் சொல்லிக்கொண்டு திரிவார்கள். இப்படியே [illegible]டங்களில் பலவந்தமாயும், சிலவிடங்களில் [illegible]யும் சத்திய திருச்சபையை அழிக்க நினைத்தார்[illegible] ஆகிலும் சர்வ வல்லபமுள்ள சர்வே

சுரன் இவ்வளவான ஞான சத்துருக்களை வென்று ஒழிக்கவும், இவ்வளவான விரோதங்களை மறுத்து அழிக்கவும், இவ்வளவான விக்கினங்களை விலக்கித் தவிர்க்கவும், முத்திப்பேறுபெற்ற அருளானந்தரை இரண்டாம் சவேரியாரைப்போல் அனுப்பினாரென்கிறதற்குச் சந்தேகமில்லை. வஞ்சகப் பசாசோவெனில், போர்க்களத்திலே படைத்தலைவன் வெட்டுண்டு மாண்டால் படைகளெல்லாம் முறிந்தோடும் என்றபடியால், ஞானத் தலைவராகிய அருளானந்தரைக் கொல்லத் தன் வல்லமையெல்லாங் கொண்டு பிரயாசப்பட்டதாமே. இவரோவெனில் சத்தியவேதத்துக்காக எப்போது என் இரத்தம் சிந்துவேனோவென்ற ஆசையுள்ளவராய், ஞான சத்துருக்களோடு அஞ்சாத் துணிவோடு வீரியமாய்ப் போராட குருக்களையும் கிறீஸ்தவர்களையும் ஏவிக்கொண்டு, அஞ்ஞானிகளின் பல மதங்களை நிர்மூலமாக்கத் துணிந்தார். இவர் சிரேஷ்டர் உத்தியோகத்தைச் செலுத்தினாலும், மேற்சொல்லிய இந்த இராச்சியங்களிலுள்ள கிறீஸ்துவர்களை விசாரிப்பதற்காவது, வேத உபதேசங்கேட்கும் அஞ்ஞானிகளுக்கு ஞானதீட்சை கொடுப்பதற்காவது, மற்ற அஞ்ஞானிகளுக்கு வேதத்தினுடைய மகிமைகளைப் பிரசங்கிப்பதற்காவது, எப்போதும் எங்கும் சுற்றித் திரிவார். இந்த விஸ்தாரமான இராச்சியங்களில் சுற்றித்திரியும்போது வெய்யிலினாலும், மழையினாலும், மணலினாலும், ஆறுகளினாலும், அஞ்ஞானிகளுடைய இடைஞ்சல்களினாலும் அன்னசில்லறையினாலும் மனுஷவாக்குக்கெட்டாத வருத்தங்களை அநுபவித்தாரென்கிறதற்குச் சந்தேகமில்லை. சர்வேசுர

னுடைய விசேஷ கிருபையினாலே, அவருக்கு நேரிட்ட
இக்கட்டுகளுக்கு விலகி, அவரைக் கொல்லத் தேடின
வர்களுக்குத் தப்பி, எவ்வித அபாயங்களிலும் உறுதி
யாய் நின்று, எல்லாரும் அதிசயிக்க மோசமின்றிப்
பிழைத்து, முந்தின வருஷங்களில் உழைத்ததை விட
அதிகமாய் உழைத்துக்கொண்டுவந்தார்.

இவ்வருஷத் துவக்கத்தில் மறவன்தேசத்துக்கு அரு
கே கள்ளிமேட்டுக்கு அடுத்த நாட்டில் அருளானந்தர்
இருக்கையில், வியர்த்தமான சாஸ்திரத்தைப் பாராட்
டும் அகந்தையுள்ள அஞ்ஞானிகளில் இருவர் இவரு
டன் தர்க்கிக்கத் துணிந்தார்கள். ஒவ்வொரு மனு
ஷனும் உற்பவிக்கும்போது மறுக்கப்படாத எழுத்துக்
களோடு தனக்குவரப்போகிறதெல்லாம் தலைமண்டை
யிலே விதித்துக்கொண்டு பிறக்கிறதென்றும், பிர்
மா, விஷ்ணு, சிவன்முதலிய தேவர்களும் இந்தத் தலை
விதியை மாற்றக்கூடாதென்றும் அவர்கள் சாதித்துச்
சொன்னார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர்
பல நியாயங்களைக்கொண்டு இந்த எண்ணம் அபத்த
மாகவும் புரட்டாகவும் இருக்கிறதாகக்காட்ட, அவர்
கள் ஒரு மறுமொழியும் சொல்லக்கூடாதவர்களாய்
வெட்கிச் சுவாமியாரைத் தூஷணித்துப் பழித்து அவ
மானப்படுத்தித் தங்கள் ஆங்காரத்தை விடாமற் போ
னார்கள். அருளானந்தரோவெனில், இவையெல்லாம்
பொறுமையோடே சகித்ததுமல்லாமல், சேசுக்கிறீஸ்
துநாதருடைய திரு வேதத்துக்காகத் தமது இரத்
தத்தைச் சிந்த மிகவும் விரும்பினார். அந்நாட்டிலே
சத்திய வேதத்துக்கு விரோதம் பண்ணக்கூடிய வல்ல
வர் அநேகர் இருந்தாலும், சர்வேசுரனுடைய கிருபாக

டாக்ஷத்தினாலே அநேகர் சத்திய வேதத்தை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று அதிசயத்துக்குரிய தைரியத்தைக் காண்பித்துப் பழைய கிறீஸ்துவர்களுக்கும் மாதிரிகையாக அத்தியந்த பத்தியோடு நன்னெறியில் நடந்துவந்தார்கள்.

அதன்பின் முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் வட்டபுறங்களுக்கு எழுந்தருளிப்போய் ஒருமாதமளவும் அடர்ந்த காட்டுக்குள்ளிருந்த ஒர் உயர்ந்த பாறையில் ஒளிந்து வாசம்பண்ணினார். ஒரு சிறு மரத்தின் நிழலானது அவருக்கு அறைவீடுமாய் சில மரக்கொப்புகள் கோவிலுமாய் இருந்தது.

அதில் புலி பாம்புகளின் பயத்தினாலும், வெய்யிலின் கொடுமையினாலும், காற்றின்மையினாலும், சாப்பாட்டுக்குறைவினாலும் மிகவும் வருத்தப்பட்டார். இராக்காலத்தில் பறையரை விசாரித்துப் பகலில் அஞ்ஞானிகளோடு தர்க்கிப்பார். இந்நாட்டுத் துரைகள் தங்கள் அதிகாரத்துக்குள்ளடங்கிய ஜனங்களுக்குச் சத்தியவேதத்தைப் போதிக்கக்கூடாதென்று சுவாமியாரை விலக்கம் பண்ணியிருந்தார்கள். ஆகையால் அருளானந்தர் தங்களுடைய கட்டளையைமீறிக் காட்டுக்குள் ஒளிந்து கிறீஸ்துவர்களை விசாரித்துச் சத்தியவேதத்தைப் போதிக்கிறாரென்கிற செய்தி கேட்டவுடனே, இராத்திரி நேரத்திலே சிவமதஸ்தரான சில சேவகரை அனுப்பிச் சுவாமியாரைப் பிடித்து வெட்டக் கற்பித்தார்கள். இந்தச் சேவகர் காட்டுக்குள் நுழைந்து சுவாமியாரிருக்கிற கற்பாறைக்கு அருகே வந்து, ஒரு கிறீஸ்துவனைக் கண்டு, சுவாமியார் எங்கேயிருக்கிறாரென்றும், அவர் இருக்கிறவிடத்தைக் காண்

பிக்கவேண்டுமென்றுங் கேட்க, அவன் தப்பித்து ஓடி அருளானந்தரிடத்தில்வந்து தேவரீரைப் பிடிக்கவந்த சேவகர், இதோ! ஒரு கூப்பிடுதூரத்தில் வருகிறார்களென்றான். சுவாமியாரும் அவரோடிருந்த எட்டுப் பெயர்களும் தங்களுக்குச் சாவு நேரிட்டதென்றுநிச்சயித்துக் கோவிற்சாமான்களை ஒளித்துவிட்டு வேதசாட்சிகளாக மரணமடைவோமென்று சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஆனால் இந்தச் சேவகர் இராமுழுதுங் காட்டுக்குள் சுற்றித்திரிந்தாலும், கண்குருடர்போல சுவாமியார் இருக்கிற பாறையைக்கண்டுபிடிக்கக்கூடாமற் போய்விட்டார்கள். சற்றுநேரத்துக்குப்பின் காலாட்சேவகரும் இராவுத்தரும் சுவாமியாரைப் பிடிக்க அனுப்பப்பட்டார்கள். இவர்களும் காட்டுக்குள்ளே சுற்றித்திரிந்து தேடினாலுஞ் சர்வேசுரனுடைய விசேஷ உதவியினாலே சுவாமியாரைக் கண்டுபிடிக்காமற் போனார்கள்.

அதன்பின் முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் கோலகொண்டாபுரத்துக்குப் போய் உத்தமகல்லூர் என்னும் பட்டணத்தில் கொஞ்சகாலம் தங்கியிருந்தார். அதில் திரளான ஜனங்களைச் சத்தியவேதத்துக்குட்படுத்தி, 180 பெயர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து, மற்ற அனேகருக்கு மந்திர உபதேசங் கற்றுக்கொடுக்கச்சொல்லி, திரும்ப செஞ்சி இராச்சியத்துக்கு வந்து அதில் ஆயத்தமாயிருந்த பெயர்களுக்குத் தீட்சை தந்து, தஞ்சையூர் இராச்சியத்துக்குத் தீவிரித்துப்போனார். மன்னார் கோவிலுக்கும் கள்ளிமேட்டுக்கும் அடுத்த நாடுகளில் விசாரணை பண்ணினதின்பின் சற்று இளைப்பாறச் சிறுகரம்பூருக்கு எழுந்தரு

ளிப்போனார். இந்நாட்டையாளுந் தலைவன், சுவாமியார் வந்தாரென்ற செய்தி அறிந்தவுடனே, அவரைப் பிடித்துச் சிறைச்சாலையில் வைக்கவும் அவர் உடைமையெல்லாம் பறிமுதல் செய்யவும் கட்டளையிட்டான். அதிலுள்ள திரளான கிறீஸ்துவர்கள் இதைக் கேள்விப்பட்டவுடனே கூட்டமாய்த் தலைவனண்டைக்குப் போய், "உம்மால் எங்கள் சுவாமியாருக்கு யாதொரு மோசம் செய்யப்படுமேயானால், நாங்கள் எல்லோரும் இத்தேசத்தைவிட்டு ஓடிப்போவோம்" என்று திடமனதாய்ச் சொன்னார்கள். இதைக்கேட்ட தலைவன் வெருண்டு தான் இட்ட கட்டளையை ரத்துசெய்தான். ஆகிலும் தன் மனதில் பொங்கின ஆங்காரமும் பகையும் விட்டுவிட்டவனல்ல. ஆகையால் அன்று இராத்திரிதானே ஒரு சேர்வைக்காரனையும் சில சேவகரையும் இரகசியமாய் அழைத்து, "நான் சுவாமியாரிடத்தில் பேசுவதற்கல்ல, ஆனால் அவர் முகத்தைப் பார்வையிட ஆசையாயிருப்பதால் அவருடைய தலையை வெட்டிக் கொண்டுவாருங்கள்" என்று கற்பித்து அனுப்பினான். உடனே இவர்கள் புறப்பட்டுச் சிறுகரம்பூர் கோவில் கிட்டச் சேரும்போது திடீரென மின்னல் மின்னி இடிஇடித்து மழைபெய்து அகோரப் புயலெழும்பிற்று. அப்போது இவர்கள் நடுநடுங்கித் திக்குத் திசையறியாதலைந்து பின்வாங்கினார்கள். இதை அறிந்த கிறீஸ்துவர்கள் சுவாமியாருக்கு நடந்ததெல்லாம் அறிக்கையிட்ட பின்பேரில், அவர் இந்தக் கோவிலைவிட்டு எழுந்து அங்கே நீங்கிக் கடந்து செஞ்சி இராச்சியத்துக்குப் போனார். அவ்விராச்சியத்திலுள்ள கிறீஸ்துவர்களை விசாரணைபண்ணி இரண்டு மாதத்துக்குப்



பின் திரும்ப அஞ்சாத்துணிவோடு தஞ்சைபூர் இராச்சியத்துக்கு எழுந்தருளிவந்து கொஞ்ச நாட்களுக்குள்ளாக 1800 பெயர்களுக்குப் பாவசங்கீர்த்தனமும் தேவநற்கருணையுங் கொடுத்தார்.

---

## 11-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தரது விசாரணையில் ஆச்சரியத்துக்குரிய அற்புதங்கள் நடந்ததும், அவர் பிடிபட்டுச் சிறையிலடைபட்டதுமான வர்த்தமானமாவது:

சர்வவல்லபமுள்ள சர்வேசுரன் சத்திய வேதத்தின் மகிமை அவ்விராச்சியங்களில் மென்மேலும் விளங்கப் பண்ணும்படியாய் அக்காலத்தில் அநேக அற்புதங்களைச் செய்யத் திருவுளமானார். அவைகளில் ஒன்றிரண்டை தெரிந்துகொண்டு விவரித்துக் காட்டுவோம். சத்திப்பாடியென்னும் ஊரிலே மூன்று இளந்தையான ஆண்பிள்ளைகள் காட்டிலிருக்கும்போது புயல் எழும்பவே ஓர் மரத்தடியில் ஒண்டியிருந்தார்கள். திடீரென மரத்தில் இடிவிழுந்து இம்மூவரும் செத்துப்போனார்கள். இவர்களில் இரண்டுபெயர் அஞ்ஞானிகளானதால் அத்தேச வழக்கத்தின்படியே அவர்களுடைய பிரேதங்களைச் சுட்டுப்போட்டார்கள். பதின்மூன்று பிராயமுள்ள மற்றொருவன் அருளானந்தரால் சில வருஷத்துக்குமுன் ஞானஸ்நானம் பெற்றவனாயிருந்தான். உறவின் முறையார் கூடி இழவு

கொண்டாடிப் பிரேதத்தைக் குழியில் வைக்க ஆரம்பித்தார்கள். சில அஞ்ஞானிகள் இந்த அபாயமுள்ள சாவைக்கண்டு செத்தவனுடைய தாய்தகப்பனைப் பழித்து, தலைமுறையாய் வழங்கிவருகிற தெய்வங்களைக் கைவிட்டமையால், இதோ உங்களுக்குச் சம்பவித்த நஷ்டமிது என்று ஆகடியமாகச் சொல்லிக்கொண்டிருந்தார்கள். தாயானவள் இதையெல்லாம் கேட்டுத் திரளான கண்ணீரைச் சிந்தித் தன் நம்பிக்கையெல்லாம் சர்வேசுரன்பேரில் வைத்து முழந்தாளிட்டு எல்லாருங்கேட்க வேண்டிக்கொண்டதாவது: "பிரதாபமுள்ள அர்ச். சவேரியாரே! நான் சில வருஷத்துக்குமுன் சத்திய உபதேசத்தைக் கேட்டு ஞானஸ்நானம்பெற்றேனென்று அறிந்திருக்கிறீரே. உம்முடைய மன்றாட்டினால் சர்வேசுரன் என்னைக் காப்பாற்றுவாரென்று நம்பி அஞ்ஞானிகளான என் சுற்றத்தாரிடத்தில் சொல்லிக் கொண்டிருந்தேனே. இப்போ இவர்கள் என் மகனுடைய சாவைக்கண்டு என்னையும் வேதத்தையும் நகைத்துப் பழிக்கிறார்களே. மகா அர்ச்சியசிஷ்டவரே, நானும்மை நம்பினதினாலே மோசம் போகவில்லையென்று அவர்களுக்குக் காண்பித்தருளும். உம்முடைய திருநாமத்தைக்கொண்டிருக்கிற இந்த என் பிள்ளை உமது அடைக்கலத்தில் இருக்கிறதென்றும், தேவகிருபையை நம்புகிறவர்கள் தங்களுடைய மன்றாட்டை யடையாமல் போகிறதில்லையென்றும் காட்டியருளும். சர்வேசுரனுடைய வல்லமையும் சத்திய வேதத்தினுடைய மகிமையும் விளங்கும்படியாய் என் மகனுக்கு உயிர் தந்தருளும்" என்று மன்றாடினாள். உடனே இந்தப் பிள்ளைக்கு



உயிர்வந்து எல்லாருங்காண எழுந்திருந்தான். இழவுக்குவந்த கிறீஸ்தவர்களும் அஞ்ஞானிகளும் இதைக்கண்டு அதிசயித்து, உயிர்த்த வாலிபனோடு கோவிலுக்குப்போய்ச் சர்வேசுரனுக்கு ஸ்தோத்திரம் பண்ணினார்கள்.

பிராமண ஸ்திரீ ஒருத்தியை 20 வருஷகாலமாய்ப் பேய் பிடித்து அகோர வேதனைப்படுத்திக்கொண்டிருந்தது. அடிக்கடி பசாசு இவள்பேரில் ஆவேசம் ஏறியதால் கடின சன்னிபிறந்து ஆகாசத்தில் தூக்கப்பட்டு எங்கேயாவது ஓரிடத்தில் விழுவாள். எவ்வித மருந்தெல்லாம் பிரயோகித்தும், சாஸ்திர சகுனமெல்லாம் பார்த்தும் இவைகளால் தனக்கு யாதொரு ஆறுதலும் வரவில்லையென்று கண்டு, சத்திய வேதத்தின் அடைக்கலத்தைத் தேடிப் பத்துமாதமளவும் ஞானோபதேசம்படித்து மகா பத்தி விசுவாசத்தோடு ஞானஸ்நானம் பெற்றாள். ஞானஸ்நானம் பெற்ற க்ஷணத்திலேதானே பசாசு ஓட்டப்பட்டு இருபதுவருஷகாலமாய் அவள்பட்ட வேதனையெல்லாம் நீங்கிப்போனதாமே. பெற்றார் பிறந்தார் உறவின்முறையார் இவளுக்குப் பொறுக்கப்படாத நெருக்கடைசெய்தாலும் சத்தியவேதத்தில் நிலைக்கொண்டு மகா புண்ணியவதியாய் [illegible].

இந்தப் பிராமண ஸ்திரீக்குச் சம்பவித்ததுப்போலே, பேய்பிடித்த அநேக அஞ்ஞானிகள் சத்தியத்தை அறிந்து ஞானஸ்நானம் பெற்ற க்ஷணத்திலேதானே பசாசு ஓடிப்போகும்.

அருளப்பன் என்னப்பட்ட ஓர் புதுக்கிறீஸ்தவன் விசுவாச மந்திரத்தைச்சொல்லி வியாதியஸ்தர் அநே

களை அசப்பிலே சொஸ்தமாக்கிக் கொண்டிருந்தா- இதினால் அநேக அஞ்ஞானிகள் அவனிடத்தில் வந்து தங்களை மந்திரிக்கவேண்டுமென்று கேட்பார்கள். இவனும் அவர்கள்பேரில் விசுவாசமந்திரத்தைச் சொல்லி அவர்களுடைய வியாதிகளை சொஸ்தப்படுத்துவதுமல்லாமல், யாவர்க்கும் நல்ல புத்திமதிகளைச் சொல்லுவான். இவைமுதலான அற்புதங்களை அஞ்ஞானிகள் கண்டு தங்களுடைய பொய்மார்க்கத்தை விட்டுக் கூட்டங்கூட்டமாய்ச் சத்தியவேதத்தில் சேர்வார்கள்.

இவையெல்லாம் இப்படியிருக்க, முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தஞ்சையூர் இராச்சியத்தில் மேற்சாதியான அநேக அஞ்ஞானிகளுக்கு ஞானதீட்சை கொடுத்ததின்பின், மதுரையைச்சேர்ந்த ஓர் ஊருக்கு எழுந்தருளிப்போனார். அவ்வூரில் அந்நாள்மட்டும் அஞ்ஞானிகளுடைய பயத்தினால் ஒரு சுவாமியாராவது பிரவேசித்ததில்லை. அதில் கோவிலும் அறைவீடும் இல்லாமையால் அருளானந்தர் ஓர் பனந்தோப்பில் இறங்கி அஞ்ஞானிகளுக்குச் சத்தியவேதத்தைப் போதிக்கத் துடங்கினார். தேவ அருளினால் அநேகர் ஞானோபதேசத்துக்குச் செவிகொடுத்து ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். ஆகையால், அருளானந்தர் 200 பேர்களுக்கு ஞானஸ்நானங்கொடுக்க எதுவாயிருக்கிறசமயத்தில், பிராமணரால் ஏவப்பட்ட அஞ்ஞானிகள் ஆயுத முள்ளிப்போடே சுவாமியாரைப் பிடிக்கவந்தார்கள். அவர்கள் வருகிறார்களென்று சுவாமியார் அறிந்து, ஞானோபதேசத்தைக் கேட்கிற யாவரையும் போகச்சொல்லி,

சேசுக்கிறீஸ்துநாதர் பாவனையாகத் தம்மைப் பிடிக்க வருகிறவர்களுக்கு எதிராகப்போய் யாரைத் தேடுகிறீர்களென்று கேட்டார். இதற்கவர்கள் ஒரு மறுமொழியும் சொல்லாமல், செம்மறிக்குட்டியின்பேரில் ஓநாய்கள் விழுகிறதுபோலச் சுவாமியார்பேரில் விழுந்து அவமானப்படுத்திக் கன்னத்தில் அறைந்து தடியால் அடித்துக் கயறுகளினால் இறுகக்கட்டி அவரையும் அவரோடிருக்கிற உபதேசிகளையும் இழுத்துத் தள்ளிக்கொண்டுபோய்ச் சிறைச்சாலையில் வைத்தார்கள். இப்படியே அநேகநாள் இவர்களைச் சிறையிலடைத்து உபாதித்து எவ்வித தொந்தரையும் செய்து இரண்டுதரம் உருவின கத்திகளோடு இவர்களுடைய தலையை வெட்டப்பார்த்தார்கள். சுவாமியாரும் உபதேசிகளும் தங்களுடைய பிராணனைச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்துத் தங்களை வெட்டவருகிறவர்களுக்கு அஞ்சாது தலையை நீட்டிக் கொடுக்கும்போது, கொல்லவந்த பாதகரும் பிராமணரும் யோசனைபண்ணி இராஜாவினால் தங்களுக்குப் பொல்லாப்பு நேரிடுமென்று பயந்து பின்வாங்கினார்கள். அதன்பின் அநேகநாள் இவர்களைச் சிறைச்சாலையில் வருத்தப்படுத்திக் கடைசியாய் இவர்களிடத்திலிருந்ததெல்லாம் பறித்துக்கொண்டு இவர்களை விட்டுவிட்டார்கள்.

## 12-ம் பிரிவு.

### அக்காலத்தில் சத்தியமங்கல இராச்சியத்தில் சத்திய வேதத்துக்குச் செய்யப்படும் இடைஞ்சல் நீங்கின ஆச்சரியத்துக்குரிய வர்த்தமானமாவது:

---

மகாத்துமாவான தத்துவபோதகர் முதல் பின்வந்த காரணக் குருக்களுடைய முயற்சியினால் சத்தியமங்கல இராச்சியத்தில் திரளான ஜனங்கள் சத்தியவேதத்தைக் கைப்பற்றினார்கள். இந்தக் கிறீஸ்துவர்களை நன்றாய் விசாரிக்கத்தக்கதாக அந்த இராச்சியம் இரண்டு பங்காகப் பிரிக்கப்பட்டு, எல்லமங்கலத்தில் ஒரு சுவாமியாரும், கணவாய்க்கரையில் வேறொரு சுவாமியாரும் இருந்தார்கள். இந்த இராச்சியத்தை மைசூரார் ஆண்டுவருகையில் சத்திய திருச்சபை பிரபலியமாகி மிகவும் விளங்கிக்கொண்டிருந்தது. ஆகிலும் மராட்டியர் மைசூராரோடு யுத்தம்பண்ணி அந்த இராச்சியத்தில் படையேறிக் குடிகளெல்லாரையும் மனோவாக்குக்கெட்டாத துன்பப்படுத்துகையில், சத்தியவேதத்தை நிர்மூலமாக்க இது நல்ல சமயமென்று எண்ணி, சிவமதத்துக்குத் தலைவனும், விஷ்ணு மதத்துத் தலைவனுமாகிய இரு பிராமணர் எண்ணிக்கையில்லாத படைகளைச் சேர்த்து, மைசூராரைத் தள்ளவும், கிறீஸ்துவர்களைச் சங்கரிக்கவும் துணிந்தார்கள். கருமத்தம்பட்டித் துரையானவன் அஞ்ஞானியாய் இருந்தாலும், மேற்சொல்லிய பிராமணரோடு சேராததுமன்றிச் சத்தியவேதத்தை விரோதியாமலுமிருந்தான். இவ்விரு பிராமணர் கிறீஸ்துவர்களைத் துன்பப்படுத்த

எங்கும் சுற்றிக்கொண்டு திரிகையில், சாமிநாதர் என்னும் சுவாமியார் கருமத்தம்பட்டிக் கோட்டைக்குட் பிரவேசித்து அதிலுள்ள கிறீஸ்துவர்களை விசாரித்துக் கொண்டிருந்தார். இதை அறிந்த பிராமணர் சுவாமியாரைப் பிடித்துக் கட்டிக் கூட்டிக்கொண்டுவரச் சில சேவகரை அனுப்பினார்கள். சுவாமியாரோவெனில் வேதத்துக்காகத் தமது உயிரைக் கொடுப்பதே பெரிய பாக்கியமென்று எண்ணி, வருகிற சேவகருக்கு எதிராய்ப் போய், அவர்களுக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார். கருமத்தம்பட்டித் துரையானவன் இதை அறிந்து கோட்டையினின்று புறப்பட்டு, என் அடைக்கலத்தில் இருக்கிற சுவாமியாரைத் தொடுவோருண்டோவென்று, வந்த சேவகரைத் துரத்திச் சுவாமியாரைத் திரும்பக் கோட்டைக்குள் வரப்பண்ணினான்.

இந்த செய்தி கேட்ட பிராமணர் மதயானையைப் போல அகோரமாய் வெருண்டு, சேவகரை அனுப்பி, அநேக கோவில்களை அழித்துக் கிறீஸ்துவர்களை வெகுவாய் உபாதித்து எங்கும் கொள்ளை அடித்துக் கொண்டிருந்தார்கள். கருமத்தம்பட்டித் துரையானவன் இந்த அக்கிரமங்களைப் பொறுக்கமாட்டாதவனாய்த் தன் பாளையத்தோடு புறப்பட்டுப்போய்க் குழப்பக்காரரைச் சிதறடித்து அநேகரை வெட்டி மகா ஜெயமடைந்தான். பிராமணர் அதிக கோபங்கொண்டு சத்தியவேதத்துக்கும் புதுக் கிறீஸ்துவர்களுக்கும் ஆதரவாயிருக்கிற இந்த நீசன் உயிரோடே தப்புவானோ பார்ப்போமென்று சபதங்கூறித் தங்கள் இராணுவங்களோடு கருமத்தம்பட்டிக் கோட்டையைப் பிடிக்க வந்தார்கள். கோட்டைக்குள் இருக்கிற சுவா

மியார் யாவர்க்கும் உறுதி சொல்லி, நடக்கிறதெல்லா வற்றையும் அந்தோணியார் சுவாமியாருக்கு ஒர் ஆளின் மூலமாய் அறிவித்தார். இந்தச் சுவாமியார் வியாதி யாயிருந்தாலும், தாமதமின்றிச் சத்தியமங்கலத்துக்குப் போய், மைசூர் இராஜாவின் ஸ்தானபதியான பெரிய படைத் தலைவனுக்கு இந்தச் செய்தியை அறிவித்தார். அதற்குத் தலைவன்: "நீர் அதி சீக்கிரம் கருமத்தம்பட்டிக்குப் போய் அந்தக் குழப்பக்காரரைத் தடுத்து, நான் என் சேவகருடன் தீவிரித்து வருகிறதாகக் கோட்டைத் தலைவனுக்கு அறியப்பண்ணும்" என்று சொல்லி மிக பட்சத்தோடு உபசரித்து அனுப்பினான். அதற்குள் முன்சொன்ன இரு பிராமணரும் அவர்களுடைய படைகளும் கருமத்தம்பட்டிக் கோட்டையைப் பிடிப்பதற்கான வகையெல்லாம் தேடி அகழ் கடந்து மதிலேறி புலிகளுக்கொப்பாய்ப் பாய்ந்து உள்ளே பிரவேசிக்க வருந்தினாலும், கிறீஸ்தவர்களான கோட்டைச் சேவகரெல்லாரும் சுவாமியாரால் திடப்பட்டு ஒன்றுக்கும் அஞ்சாமல் சத்துருக்களை எதிர்த்து வெட்டித் தள்ளுவார்கள். இப்படியே 25 நாளளவும் ஓயாமல் அல்லும் பகலும் மகா வீரத்தோடு இரு திறத்தாரும் சண்டை செய்தார்கள்.

சுவாமியார் கிறீஸ்தவர்களுக்குத் தைரிய வார்த்தைகளைச் சொல்லி, ஆண்டவர் நமது பாரிசமாய் இருப்பதால் நம்மை மீட்டு இரட்சிப்பாரென்று திடமனதாயிருக்கவென்று அவர்களைத் திடப்படுத்தி, இவர்களுடன் கோட்டை மதிலின்மேலே இரவும் பகலும் அஞ்சாமல் காத்திருப்பார். கெடு துரையானவன் அஞ்ஞானியானதால் கோட்டை பிடிபட்டுச் சத்துருக்கள் கையில்

அகப்படுகிறது பெரிய அவமானமென்று நினைத்து, ஒன்றில் தன் சேவகருடன் எதிரிகள்மேல் பாய்ந்து அவர்களை வென்றொழிக்கிறது, அல்லது மகிமையாய்ச் சாவதே சரியென்று எண்ணிக் கோட்டையை விட்டுப் புறப்பட எத்தனித்திருக்கையில், சுவாமியார் தேவ ஒத்தாசை வருமென்று நிச்சயமாய்ச் சொல்லித் துரையின் யோசனையைத் தடுத்தார். அத்தருணத்தில் தானே சத்தியமங்கலத்துக்குப் போயிருந்த அந்தோனியார் சுவாமியார், தேவ உதவியால் வழியிலுள்ள சத்துருக்களுடைய படைகளுக்குள் பிரவேசித்து, யாதொரு மோசமின்றிக் கருமத்தம்பட்டிக் கோட்டைக்குள் சேர்ந்தார். மைசூர் இராஜாவின் ஸ்தானாபதியான படைத்தலைவன் அவர்களுக்கு ஒத்தாசையாக வருகிறானென்று இவர் சொல்லவே, அவர்களுக்குச் சந்தோஷமும் மனத்திடனும் உண்டாயிற்று. எதிராளிகளான பிராமணரும் சத்துருக்களும் இதை அறிந்து, திகிலடைந்து மயங்க, இவ்விரு சுவாமிமார்களுடைய ஆலோசனையின்படியே கருமத்தம்பட்டியாருடன் சமாதானம் பேசிக்கொண்டு ஒதுங்கிப்போனார்கள். மைசூர் இராஜாவின் ஸ்தானாபதியானவன் சந்தோஷப்பட்டு இவ்விரு சுவாமிமார்களுக்கு உபசார வார்த்தை* சொன்னதுமல்லாமல், இவர்களுக்காக சத்தியமங்கலத்தில்தானே பெரிய கொண்டாட்டம் பண்ணினான். இந்தச் சுவாமிமார்கள் அப்போது பட்ட வருத்தத்தாலும், அநுபவித்த கிலேசத்தாலும் மிக மெலிந்து வியாதிப்பட்டு பாக்கியமான மரணத்தை அடைந்து பேரின்ப வீட்டின் நித்திய ஆனந்தத்தைச் சுதந்தரித்துக்கொண்டார்கள். தங்களுக்கு ஞானத்தகப்

பன்மாராகவும் காரணக் குருக்களாகவுமிருந்த சுவாமி [illegible] ஷித்து அறுகையில் விரோதிகளான அஞ்ஞானிகள் அகமகிழ்ந்து இருந்தார்கள்.

ஆகிலும் இவர்களுடைய சந்தோஷம் இடமொனத் துக்கமாய் மாறிப்போயிற்று. அதெப்படியெனில், மைசூர் இராஜா மேற்சொல்லிய செய்திகளை அறிந்து, குழப்பக்காரரெல்லாரையும் சங்கரித்து, அஞ்ஞானத் தெய்வங்களின் ஆலயங்களைத் தரைமட்டாக இடித்து, அக்கோவில்களைச் சேர்ந்த ஆஸ்தி பூமிகளைப் பிடித்து, சத்திய வேதத்தாருக்கு ஒரு பொல்லாப்பும் செய்யாமல், சகலத்தையும் தான் ஆக்யாபித்தபடி நிறைவேற்றி வரும்படியாக படைகளை அனுப்பினான். அப்படியே சேவகர் போய் இராயனுடைய கட்டளையின்படியே சகலத்தையும் நிறைவேற்றி வந்தார்கள். நடந்த விசேஷங்களையும், சுவாமியார்கள் மரணமான செய்தியையும் முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் அறிந்து மிகவும் கஸ்திப்பட்டு உடனே சத்தியமங்கலத்துக்குப்போக விரும்பினார். ஆயினும் சுற்றிலும் நடந்த கலகங்களைப்பற்றி உடனே போகக்கூடாமல் கொஞ்சத்துக்குப் பின் அவ்விடத்துக்குப் போய்க் கிறீஸ்துவர்களைத் தேற்றி அவர்களுக்குள் நல்ல ஒழுங்கை ஸ்தாபித்து, அவ்விடங்களிலுள்ள கிறீஸ்துவர்களை விசாரித்துக்கொண்டு வந்தார்.

## 13-ம் பிரிவு.

### தஞ்சையூர் இராச்சியத்திலுள்ள கிறீஸ்துவர்களுக்கு அகோர இடைஞ்சல் செய்யப்படுகிற வர்த்தமானமாவது:

11-ம் பிரிவில் சொல்லியபிரகாரமே முத்திப்பேறு பெற்ற அருளானந்தர் சிறைச்சாலையில் உபாதிக்கப் படும்போது, தஞ்சையூர் இராச்சியத்துக் கிறீஸ்துவர்களுக்கு வெகு நெருக்கிடையும் இடைஞ்சலும் செய்யப்பட்டதாமே. அதெப்படியெனில், மேற்சொல்லிய 11-ம் பிரிவில் சொல்லப்பட்டதுபோலே முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தஞ்சையூர் இராச்சியத்தில் நூதனமாய் உயர்ந்த ஜாதியில் திரளான அஞ்ஞானிகளுக்கு ஞானதீட்சை கொடுத்திருந்தார். இந்தப் புதுக்கிறீஸ்துவர்கள் தாங்கள் அநுபவிக்கிற மனமகிழ்ச்சியை உள்ளடக்கமாட்டாமல், பிரசித்தமாய் அஞ்ஞானத் தெய்வங்களைப் பழித்துத் தூஷணித்துத் தாங்கள் அந்நாள்மட்டும் பூசித்துக்கொண்டுவந்த விக்கிரகங்களைத் தகர்த்துடைத்துப் பூச்சியமாக வைத்திருந்த லிங்கத்தை மிதித்துதைத்துச் சத்தியவேதத்தின் மகிமையை யாவர்க்கும் தெரிவித்துக் கொண்டாடுவார்கள். பிராமணரும் மற்ற அஞ்ஞானிகளும் இவை யாவையும் கண்டு மிகுங்கோபமுற்றுச் சத்திய வேதத்தை எவ்விதத்திலும் நிர்மூலமாக்கவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

ஆகையால் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றும் படிக்குப் பிராமணர் இராஜாவின் மந்திரியிடத்தில்

சென்று கிறீஸ்துவர்கள்பேரில் பொய்யான பற்பல குற்றங்களைச் சாட்டி அவர்களைப் பிடித்துக் கும்பகோணத்துச் சிறைச்சாலையில் அடைக்கும்படிக்குக் கட்டளைக் கொடுக்கச் செய்தார்கள். இந்தப் பிரகாரமாய்ச் சேவகர் எங்கும் போய் எண்ணிக்கையில்லாத கிறீஸ்துவர்களைப் பிடித்து சிறைச்சாலையில் அடைத்தார்கள். இவர்களில் 18-பிராயமுள்ளவனும் உயர்ந்த கோத்திரத்தில் பிறந்தவனுமான ஆனந்தனென்னும் வாலிபன் சத்திய வேதத்துக்காக மகா வீரத்தோடு ஞான யுத்தம் செய்தான். அதெப்படியென்றால், இவன் பிடிபட்டு சிறையில் அடைபட்டிருக்கும்போது நாள்தோறும் நடுவனண்டைக்கு விலங்கோடே கூட்டிக்கொண்டு வரப்படுவான். அப்போது நடுவன் இவனை நோக்கி, நீ சத்திய வேதத்தை விடவேண்டுமென்று கற்பிக்க, இவன் ஒருபோதும் விடமாட்டேனென்று சொல்லுவான். ஆகையால் இந்த நடுவனிட்ட கட்டளையின்படியே சேவகர் இவனைப் பிரம்புகளால் அகோரமாயடிக்க அவனுடைய தேகமெல்லாம் நொறுங்கி ஏக காயமாகி வீங்கிப்போம். இவனுக்குச் சொந்த ஜனங்களான உத்தியோகஸ்தர் வேதனைகள் மூலமாய் இவன் மனதைத் திருப்புவது கூடாதென்று கண்டு, கபடத்தால் அவனைக் கெடுக்க வருந்தினார்கள். அப்படியே இரக்கத்தைக் காட்டித் தங்களுடைய வங்கிஷ மகிமையைப் பாராட்டி அவனுக்குரைத்த வார்த்தைகளாவன: "எங்கள் சகோதரனே உன்னைப் பெரிய பாதகனைப் போலவும் நீசனைப்போலவும் எல்லாருமறிய உபாதிப்பதை நாங்கள் பார்க்கும்போது எங்களுக்குப்

பொறுக்கப்படாத வெட்கம் உண்டாயினதாமே. இவ்விராச்சியங்களிலுள்ள இராஜாக்களும் பிரபுக்களும் தலைவர்களும் துரைகளும் வங்கிஷபதிகளும் சாஸ்திரிகளும் வணங்கிவரும் பரம தேவர்களையகற்றி, நீச தேவனையும் அருவருப்புள்ள மதத்தையும் அங்கீகரித்து ஏற்றுக்கொள்ளுகிறது எப்பேர்ப்பட்ட மூடத்தனம்! நம்முடைய முன்னோர்கள் இத்தேவர்களுடைய மகத்துவத்தையும் மேன்மையான இலக்ஷணங்களையும் அறிந்தல்லோ கோடா கோடி செலவழித்துக் கெம்பீரமான கோவில்களையும் உயர்ந்த கோபுரங்களையும் கட்டுவித்தார்கள். இப்போது நீங்கள் நூதனமாய் வணங்கும் தேவனுக்கோ வெளியில் மண்குடிசை கட்டியிருக்கிறதேயல்லாமல் வேறே கோவில்களில்லை. எங்களுடைய சாஸ்திரிகளையும் ஞானிகளையும் சத்தியத்தை அறியாதவர்களென்று சாதித்து, சொற்பபுத்தியுள்ள நீயும் நீசப் பறையரு மாத்திரமே ஞாயங்கண்டுபிடித்தவர்களென்று பாராட்டுவது ஏற்காத அகந்தையல்லவா? உன்னுடைய பிடிவாதம் முற்றியதால் நீ உன் ஜனத்தை மதியாமற் போனாலும், உன்னைப்பற்றி அவமானப் படுகிற உன் குடும்பத்தின்பேரிலாவது இரக்கமாயிரு" என்றார்கள்.

இதற்கு ஆனந்தன் குன்றாத தைரியத்தோடு உரைத்ததேதெனில், "கிறிஸ்துவர்களுடைய வேதமே மெய்யான வேதம்; அதை அநுசரித்துவருகிறவர்கள் கொஞ்சம் பெயராகவும் கீழ்ச்சாதிகளாகவும் இருந்தபோதிலும் இதினால் வேதத்தின் மகிமையும் சத்தியமும் குறைந்துபோகிறதில்லை. இந்த வேதத்தைவிட்டுவிடுகிறதையும் என் விசுவாசத்தை மறைக்கிறதையும்

விட என்பிராணனைக் கொடுக்கத் துணிவேன், சேசுக்கிறீஸ்துநாதருடைய வேதத்துக்காக உபாதிக்கப்படுகிறதே எல்லா மகிமைகளிலும் மேலான மகிமை" என்று உறுதியாய்ச் சொன்னான்.

இதைக்கேட்டு அவர்கள் குத்தப்பட்ட புலியைப்போல வெகுண்டு மறுநாளே இவனைக் கொல்லவேண்டுமென்று தீர்மானித்து அவனை சிறைச்சாலைக்கு அனுப்பிவிட்டார்கள். அன்று இராத்திரியில் ஆனந்தனுக்குக் கிட்டுறவான 16 பிராயமுள்ள ஓர் சிறுபெண்பிள்ளை இன்னம் ஞானஸ்நானம் பெறாதிருந்தாலும் அவனை அடைத்திருந்த சிறைச்சாலைக்குப் போய் அவன் முன்பாக முழந்தாளிட்டு அழுதுகொண்டு சொன்னதாவது: "ஓ என் தமயனே! சகல நன்மை உடைத்தானவராகிய சர்வேசுரனுக்காக வருத்தப்படவும் மரிக்கவும் உமக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தை நானும் அடைய எவ்வளவோ விரும்புகிறேன்! நீர் அவருடைய திருச்சமுகத்திற்குச் சேர்ந்தபின் இந்த அதிர்ஷ்டம் எனக்குங் கிடைக்கும்படியாகப் பிரார்த்தித்துக்கொள்ளும். நானிப்போது அதிசீக்கிரமாய் ஞானஸ்நானம் பெறத்தக்கதாக அவரிடத்தில் கேட்டுக்கொள்ளும்" என்றாள். சிறைக் காவற்காரர் இதையெல்லாம் கண்டு மனமிளகி மிகவும் அதிசயப்பட்டார்கள். அவர்களில் ஒருவன் இவ்வளவான தைரியத்தைச் சிறுபிள்ளைகளுக்குமுதலாய் வருவிக்கும் வேதமானது மெய்யான வேதமென்றங்கீகரித்துத் தன் குடும்பத்தோடு ஞானஸ்நானம் பெற்றான். ஆனந்தன் காவற்காரருடைய இரக்கத்தினாலே நடுச்சாமத்தில் தன்வீட்டுக்குப்போய் முத்திப்பேறுபெற்ற

அருளானந்தருடைய கையினால் தன்னுடன் ஞானஸ்நானம்பெற்ற தன் தாயாரையும் பெண்சாதியையும் மற்ற ஜனங்களையும் கடைசியாய்ப் பார்த்து அவர்களுக்குச் சொன்னதாவது: "தேவ கிருபாகடாக்ஷத்தினாலே சேசுக்கிறீஸ்துநாதருக்காக மரிக்கப்போகிறேன்; என் மனதைப் பூரிப்பிக்குஞ் சந்தோஷமும் மகிழ்ச்சியும் இவ்வளவென்று சொல்லிமுடியாது. உங்களைக் கடைசியாய்க் கட்டியணைத்து முத்தமிட வந்த நான் உங்களை மூன்று காரியம் கேட்டுக்கொள்ளுகிறேன். அதின் முதலாவது: நானுயிர்விடுமட்டும் சத்தியவேதத்தில் உறுதியாயிருக்க வேண்டிக்கொள்ளுங்கள்; இரண்டாவது: நான் அடையப்போகிற மரணத்தை அவமானமென்றெண்ணாமல் சர்வேசுரன் தமக்குப் பிரியமுள்ளவர்களுக்குக் கட்டளையிடுகிற மேலான மகிமையென்று மதிக்கக்கடவீர்கள். மூன்றாவது: நீங்களெல்லோரும் உங்களுடைய வரிசை மரியாதையையும் ஆஸ்தி திரவியத்தையும் பிராணனையும் இழந்துபோவதைப்பற்றி பயந்து ஒருபோதும் சத்தியவேதத்தை விட்டுவிடாதேயுங்கள்" என்றான். அவர்கள் எல்லாரும் இவனுக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தைக் கொண்டாடி இவன் கேட்டுக்கொண்டபடி செய்வதாக வார்த்தைப்பாடு கொடுத்தார்கள். அதன்பின் ஆனந்தன் சற்றுநேரம் அவர்களுக்குத் தேற்றரவான வார்த்தைகளையும் நற்புத்தியையும் சொல்லித் திரும்பச் சிறைச்சாலைக்கு வலியமனதோடு போனான். சிறையிலிருக்கும்போது தான் விரும்பின மரணம் எப்போ வருமோவென்ற ஆவலோடு சந்தோஷமாய்க் காத்திருந்தான். ஆனால் நீதிக்கார

ரும் பிராமணரும் இராஜ உத்தரவின்றி யாதொருவனையும் கொல்லக்கூடாதென்ற ராஜ கட்டளை இருந்தபடியால், செய்த தீர்மானத்தை நிறைவேற்றக் கூடாதவர்களாய், ஆனந்தனைச் சிறைச்சாலையிற்றானே மற்றவர்களுடன் அடைத்துவைத்திருந்தார்கள்.

---

## 14-ம் பிரிவு.

### தஞ்சோரின இடைஞ்சல் நீங்கின அதிசயமான வர்த்தமானமாவது :

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சிறைச்சாலையைவிட்டு நீங்கினவுடனே தஞ்சையூர் இராச்சியத்தில் தம்முடைய பிள்ளைகளுக்குச் செய்யப்படுகிற கடின இடைஞ்சலையறிந்து இவர்களுக்கு ஆறுதல் சொல்லப்போகப் பிரயாணப்பட்டார். நேரே கும்பகோணத்துக்குப் போய் அதிலுள்ள கிறீஸ்துவர்களுக்கு உறுதிசொல்லி அங்கிருந்து தஞ்சையூருக்குப் போகலாமென்று யோசித்தார். ஆயினும் அவரிடத்துக்கு வந்த கிறீஸ்துவர்கள் இதையறிந்து சுவாமியாருக்குச் சொன்னதாவது: ஓனாய்கள் சில ஆடுகளைப் பிடித்துக் கொன்றால் பொல்லாப்புத்தானே. ஆனால் இடையன்தானே பிடிக்கப்படுவானாகில் மந்தைக்கு என்ன சம்பவிக்குமென்று சொல்லி அவரைக் கொள்ளிடம் வடகரைக்குப்போகச் சம்மதிக்கப்பண்ணினார்கள். ஆகையால் முத். அருளானந்தர் கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள ஓர் கோவிலிலிருந்து

கொண்டு திருச்சபைக்கு நேரிட்ட நெருக்கிடையை விலக்கத்தக்கதாக வேண்டிய பிரயாசையெல்லாம் பட்டுக்கொண்டிருந்தார்.

தஞ்சையூரின் எத்திசையிலும் பிடிபட்டுச் சிறையில் அடைபட்டிருந்த கணக்கில்லாத கிறீஸ்துவர்களை விடுதலையாக்கத்தக்கதாக இராஜாவிடத்தில் மனுப்பேசவும் சிபாரிசு காகிதங் கொடுக்கவும் ஒருவரும் வராதபடிக்கு அரண்மனையில் உத்தியோகமாயிருந்த பிராமணரெல்லாரும் தடைசெய்துகொண்டிருந்தார்கள். அந்த அரண்மனையில் தானே சில கிறீஸ்துவர்கள் இராஜாவினிடத்தில் சேவித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் எவ்விதத்திலும் தங்களுக்கும் மற்றக் கிறீஸ்துவர்களுக்கும் செய்யப்படும் இடைஞ்சலை இராஜாவிடத்தில் தெரியப்படுத்த வருந்தினாலும், பிராமணருடைய விக்கினத்தால் கூடாமற்போயிற்று. அப்போது முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் அவ்வரண்மனையில் சேவிக்கும் கிறீஸ்துவர்களுக்கு ஓர் நிருபம் எழுதியனுப்பி, இராஜ படைகளுக்குத் தலைவனாயிருந்த தாலுக்கனிடம் போய் நடக்கும் விசேஷங்களையெல்லாம் அவனுக்கு அறிவித்து, இராஜாவிடம் சென்று தங்கள் நிர்ப்பாக்கியத்தை அறிவித்தருளவேணுமென்று அவனைக் கேட்கக் கற்பித்தார். சுவாமியாருடைய நிருபத்தை வாசித்துப் பார்த்ததும் அவர்கள் எல்லாரும் கூட்டமாய்ப் படைத்தலைவனிடத்தில் சென்று ஆசாரம்பண்ணித் தங்களுக்கு நேரிட்ட இடைஞ்சலை அவனுக்கு விவரித்துக்காட்டி, "இராஜாவானவர் எங்களை விசாரணைசெய்து எங்கள்பேரில் சாட்டப்படுங் குற்றங்களில் ஒன்றாவது ஒப்பிக்கப்படுமே

யாகில் எங்களனைவரையும் சிரச்சேதனை செய்யட்டும்; ஆனால் விசாரணை செய்வதில் எங்கள் பேரில் குற்றமில்லையென்று கண்டால் எங்களுக்கு மந்திரிகள் செய்யும் நெருக்கிடையை நீக்கியருளவேண்டும்' என்று கேட்டார்கள். இதற்குத் துலுக்கன் சொன்னதாவது: "நீங்கள் சொல்லுகிறது சரி. பிராமண[ர்] எல்லாரும் உங்களுக்கு எதிரிகளாயிருக்க நான் ஒருவன் என்ன சகாயம் செய்யக்கூடும்? ஆகிலும் சமயம் பார்த்து இராஜாவிடத்தில் பேசுவேன்" என்று சொல்லி அனுப்பினான். கிறீஸ்துவர்களுக்குப் பிரதான சத்துருவாகிய இராம நாயக்கன் இந்தச் செய்தியை அறிந்தவுடனே துலுக்கனாகிய படைத்தலைவனைச் சந்தித்து அவனுக்குக் கெம்பீரமான முஸ்தீபோடு ஓர் யோக்கியமான குதிரையையும் மற்று அனேக சிறந்த கொடைகளையும் கொடுத்துக் கிறீஸ்துவர்கள் பேரில் அனேக குற்றங்களைச் சொல்லி அவனைத் தனதுபடுத்திக்கொண்டான். இக்கொடைகளை பெற்றுக்கொண்ட படைத்தலைவன் கிறீஸ்துவர்களுக்குச் சகாயம் பண்ணாததன்றி அவர்களுக்கு எதிரியாய் நின்றான்.

அப்போது கிறீஸ்துவர்கள் மிகவும் கஸ்திப்பட்டு மகா அதிகாரமுள்ள வேறொரு துலுக்கனை அண்டி மேற்சொல்லிய படைத்தலைவன் செய்த கொடுமையையும் தங்களுக்கு நேரிட்ட இடைஞ்சலையும் அறிவித்து இதற்கு இப்போது என்ன செய்யலாமென்று இரகசியமாய்க் கேட்டார்கள். இந்தத் துலுக்கன் சற்று ஆலோசித்துச் சொன்னதாவது: "இராஜாவின் குதிரைகளையும் யானைகளையும் விசாரித்துக்கொண்டுவரும்

கிறீஸ்தவப் பறையரெல்லாரையும் தங்கள் சேவகத்தை விட்டுப்போகச் செய்யுங்கள். அதன்பின் நடக்கப்போகிற காரியங்களை நான் பார்த்துக்கொள்ளுவேன்" என்று சொல்லியனுப்பினான். அப்படியே பறையரெல்லாரும் ஓடிப்போக குதிரைகளும் யானைகளும் இரையின்றிக் கிடந்து மெலிந்துபோயின. சிலநாள் சென்று இராஜாவானவன் தன் குதிரைகளையும் யானைகளையும் பரிட்சையிட்டு அவைகள் மிகவும் மெலிந்துபோனதைக் கண்டு துக்கித்து இதின் முகாந்தரம் என்னதென்று விசாரித்தான். அப்போது அதிகாரியாகிய தலுக்கன் சொன்னதாவது: "மகா இராஜாவே! கிறீஸ்தவப் பறையரெல்லாரும் தங்களுடைய கஸ்தியைப் பொறுக்கமாட்டாமல் ஓடிப்போய்விட்டார்கள். ஆகையால் குதிரைகளுக்கும் யானைகளுக்கும் தீபனம் கொண்டுவருவாரின்றி மெலிகின்றன" என்றான். இதற்கு இராஜா நமது ஊழியத்திலிருப்பவர்களுக்குக் கஸ்தி வந்த காரணம் ஏதென்று கேட்டான். உடனே தலுக்கன் மறுமொழியாகச் சொன்னதாவது: "உத்தியோகஸ்தர் எல்லாரும் சத்தியவேதங்கேட்ட ஏழைச் சனங்களை விரோதித்து அவர்கள் பேரில் இல்லாத குற்றங்களைச் சாட்டி வெகு துன்பப்படுத்துகின்றமையால் மிகவும் வருத்தப்படுகின்றார்கள். இதின் நிமித்தமாகத்தானே தீட்சைபெற்ற குதிரைக்காரரெல்லாரும் போய்விட்டார்கள். நீதிகோனே தாங்களே அந்த ஏழைக் குடிகளுக்குக் கிருபைசெய்து அவர்கள் கேட்கும் மன்றாட்டுக்குச் செவிகொடுத்தருளும். அதேதென்றால் அவர்கள் தங்கள்

பேரில் சாட்டப்படுகிற குற்றங்களைத் தப்பறையென்று காட்டக் கேட்கிறார்கள்" என்றான்.

இதைக்கேட்ட இராஜா மனமகிழ்ந்து இந்த நியாயத்தை விசாரிக்க வேண்டுமென்று பிரதானிக்குக் கண்டிப்பான கட்டளை கொடுத்தான். உடனே பிரதானியானவன் அரண்மனையிலுள்ள பிரதான கிறீஸ்தவர்களில் ஆறுபெயரை வரவழைத்து, இராமநாயக்கர் உங்கள் பேரில் சாட்டின ஆறு குற்றங்களுக்குத் தகுந்த மறுமொழி சொல்லுங்களென்று கற்பித்தான். அதற்கு இவர்கள் "இராமநாயக்கர் எங்கள் பேரில் சாட்டுகிற முதல்குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறோம். அதேதெனில் நாங்கள் பரலோகத்துக்கும் பூலோகத்துக்கும் ஆண்டவராகிய ஒரே கடவுளை வணங்கி இத்தேசத்தின் பற்பல தெய்வங்களைத் தள்ளுகிறது மெய்தான். ஆனால் எங்களைப்போலத் துலுக்கரும் இத்தெய்வங்களை வணங்காதிருக்கிறதன்றியே அஞ்ஞானிகளில் தானே அனேகர் மற்றவர்கள் தொழுகிற தெய்வங்களை யகற்றி வேறே தெய்வங்களை வணங்குகிறார்களே. ஆகையால் இம்முதற்காரியத்தில் எங்கள் பேரில் குற்றமுண்டோ இல்லையோவென்று பாரும். வேறே ஐந்து குற்றங்களையும் கண்டிப்பான விசாரணை செய்து அவைகளில் ஒன்றாவது ஒப்பிக்கப் படுமேயாகில் சகல தெண்டனைக்கும் உள்ளாவோம்" என்று திடமனதாய்ச் சொன்னார்கள். இந்தப் பிரகாரமாய் அத்தாட்சி எழுதித் தங்களுடைய உடைமை உற்பத்திகளையும் பிராணனையும் ஈடாக வைத்தார்கள்.

பிரதானி தான் விசாரித்த காரியங்களையும் கிறீஸ்துவர்கள் சொன்ன மறுமொழியையும் இராஜாவுக்கு அறிக்கையிட்டபின்பேரில், இராஜா அந்தக் கிறீஸ்துவர்களையும் அவர்கள் எழுதிக்கொடுத்த அத்தாட்சியையும் கும்பகோணத்து நியாயஸ்தலத்துக்கு அனுப்பி இவ்வியாச்சியத்தை நீதிப்பிரகாரம் தாமதமின்றி விசாரிக்கக் கட்டளைகொடுத்தனுப்பினான். இராஜாவின் கட்டளையைக் கண்ட பிராமணரும் மந்திரிகளும் ஏங்கிக் கலங்கி இதற்கென்ன செய்யக்கூடுமென்று தங்களுக்குள் ஆலோசனை பண்ணினார்கள். நீசராகத் தாங்கள் எண்ணின கிறீஸ்துமார்க்கத்தாராலே தோற்கடிக்கப்படுகிறது தங்களுக்கு மிகவும் குறைவும் மானக்கேடுமென்று எண்ணினார்களாயினும், இராஜா இந்த வியாச்சியத்தை நன்றாய் அறிந்திருக்கிறபடியினாலே அநியாயம் செய்தால் தங்களுக்குப் பொல்லாப்பு நேரிடுமென்று பயந்துகொண்டிருந்தார்கள். இவர்கள் இப்படி தத்தளித்துக்கொண்டிருக்கையில், சில பிராமணர் யாதொரு விசாரணையும் செய்யுமுன் பிரதான கிறீஸ்துவர்களைக் குதிரை வாலில் கட்டிப் பட்டணத்தின் எல்லாத்தெருக்களிலும் அவமானமாய் அடித்துக் கொன்றுபோடவேண்டுமென்றும், அதன்பின் அவர்கள்பேரில் பொய்யான முகாந்தரங்களைச் ~~காட்டித்~~ தீர்மானம்பண்ணலாமென்றும் சொன்னார்கள். ஆனால் நியாயஸ்தலத்தின் தலைவனான பிராமணன், இப்படிச் செய்தால் தனக்குப் பொல்லாப்பு வருமென்று கருதி, இந்த அநியாயமான ஆலோசனைக்கு இடங்கொடாமல், பிராமணர் அனைவரையும் வரவழைத்து அவர்கள் நடுவில் இராஜாவின் கட்டளையை

அறிவித்து சொன்னதாவது: "உங்களில் யாராவது கிறிஸ்துமதத்தார்பேரில் சாட்டப்பட்ட குற்றங்களில் ஒன்றையாவது ஒப்பிக்கக்கூடுமானால் சிறைச்சாலையில் அடைபட்டிருக்கிறவர்களை வெட்டிப்போட்டு இவ்விராச்சியத்தில் எங்கும் வாசம்பண்ணுகிற மற்றக் கிறிஸ்துவர்கள் எல்லாரையும் சாவுக்குத் தீர்வையிடுவேன். அவர்கள் பேரில் ஒரு குற்றமாவது ஒப்பிக்கப்படாதவரையில் அவர்களை ஆக்கினைக்குட்படுத்துகிறது என்றால் கூடாதகாரியம்" என்றான். இதற்கு அவர்கள் ஒன்றும் சொல்லக்கூடாமையால், கிறிஸ்துவர்கள் குற்றமற்றவர்களென்றும் சிறையில் அடைபட்டவர்களை விடுதலாக்கவேண்டுமென்றும் அவர்கள் தங்கள் மதாசாரப்படியே நடக்கலாமென்றும் பெரிய பிராமணன் தீர்ப்புச் செய்தான். இந்தத் தீர்ப்பின்படியே சிறையில் அடைபட்ட கிறிஸ்துவர்களெல்லாரும் விடுதலாக்கப்பட்டார்கள்.

இவையெல்லாம் கும்பகோணத்தில் நடக்கையில், ஆற்றுக்கு வடகரையிலிருந்த முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தமது ஞானப்பிள்ளைகளான கிறிஸ்துவர்களுக்கு யாதொரு பொல்லாங்கும் நேரிடாதபடிக்கு இடைவிடாமல் சர்வேசுரனைப் பார்த்துப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தார். பெரிய பிராமணன் செய்த தீர்ப்பை அறிந்தவுடனே அத்தியந்த சந்தோஷத்தையடைந்து அப்பேர்ப்பட்ட சகாயத்தைத் தங்களுக்குக் கட்டளையிட்ட சர்வேசுரனுக்கு நன்றியறிந்த மனதோடு தோத்திரம்பண்ணினார். உடனே ஆற்றைக்கடந்து இந்தத் தைரியமான கிறிஸ்துவர்களைச் சந்திக்கத் திரும்பிப்போனார். ஆனந்தனை மகா

பக்ஷத்துடன் அணைத்து மற்றவர்களையும் போற்றிப் புகழ்ந்து அவர்கள் காண்பித்த மனத்திடனை வாழ்த்தி அவர்கள் எப்போதும் சத்தியவேதத்தில் உறுதியாயிருக்க ஏவினார். அதன்பின் பிராமணரை நோக்கிச் சொன்னதாவது: "நீங்கள் இந்தப் புதுக்கிறீஸ்தவர்களைத் துன்பப்படுத்துகிறது ஞாயமல்ல. கிறீஸ்து வேதம் உங்களுக்கு ஏற்காதாகில் அதைப் போதிக்கும் என்னைத்தானே பிடிக்கவேண்டியதாயிருக்கிறது. நான் போதிக்கும் வேதம் சத்தியமென்று ஒப்பிக்கவும் நீங்கள் அதற்குச் சொல்லும் ஆக்ஷேபங்களைத் தடுத்து மறுக்கவும் இதோ காத்திருக்கிறேன். மகாவிராஜாவின் சந்நிதியிலேதானே பிரசித்தமான தர்க்கம்பண்ண வாருங்கள்" என்றார். இவர்களோவெனில் குருசுவாமியார் மற்றப் பிராமணரோடு அனேகம்விசை தர்க்கம்பண்ணி அவர்களை வென்று தோற்கடித்தாரென்று அறிந்து தர்க்கத்துக்கு வரப் பின்னிட்டு வெட்கிப்போனார்கள். அதன்பின் முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் யாவராலும் கொண்டாடப்பட்டு, யாதொரு தடங்கலின்றி வெளியரங்கமாய்க் கிறீஸ்துவர்களை விசாரிப்பதிலும் அஞ்ஞானிகளுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதிலும் சிலநாள் தஞ்சையூர் இராச்சியத்தில் செலவழித்தபிறகு, மறவன் தேசத்துக்கு எழுந்தருளிப்போகத் தீர்மானித்தார்.

# 15-ம் பிரிவு.

## முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் மறவன் தேசத்தில் சத்தியவேதத்துக்காக அகோரமாய் உபாதிக்கப்படுகிற வர்த்தமானமாவது:

---

1669-ம் ஆண்டில் மறவன் தேசத்தில் சத்தியவேதத்துக்குப் பயங்கரமான இடைஞ்சல் செய்யப்பட்டபடியினாலே கிறீஸ்துவர்களுக்கு எவ்வித துன்பமும் வருத்தமும் தெண்டனையும் நேரிட்டதாமே. என்றாலும் அத்தேசத்திலுள்ள அநேகம்பேர்கள் உபதேசிமார்களைக்கொண்டாவது, பழைய கிறீஸ்துவர்கள் மூலமாயாவது, சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய வேதத்தின் மகிமையை அறிந்து ஞானஸ்நானம் பெற, மதுரைக்கானாலும் முள்ளிப்பாடிக்கென்கிலும் மற்ற இடங்களுக்காயினும் போவார்கள். ஆகிலும் எல்லாரும் அந்தேசத்துக்குப் போகக்கூடாமையால், மறவன் தேசத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் நெடுநாளாய் விரும்பிக்கொண்டிருந்தார். அந்நாள்மட்டும் சிரேஷ்டரான சுவாமிமார்கள் தாங்கள் அவ்விராச்சியத்துக்குப்போனால் கிறீஸ்துவர்களுக்கு அதிக நெருக்கிடையும் இடைஞ்சலும் நேரிடுமென்று அறிந்து அங்கே போகக்கூடாதென்று தீர்மானித்திருந்தார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சிரேஷ்டர் பட்டம் அடைந்தவுடன் எப்படியாகிலும் அத்தேசத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று ஆலோசித்திருந்தார். ஆகையினாலே தஞ்சையூர் இராச்சியத்தில் சம்பவித்த

கொடிய நெருக்கிடை தேவ ஒத்தாசையால் அநுகூலமாய்த் தீர்ந்தபின்பின், 1686-ம் வருஷத்தில் தாமதமின்றி அத்தேசத்துக்கு எழுந்தருளிப்போனார். அத்தேசத்தார் சுவாமியார் வந்ததினிமித்தம் சந்தோஷப்பட்டு அவரிடத்தில் சத்தியவேதத்தைக் கேட்கக் கூட்டங் கூட்டமாய்ப் போவார்கள். இவர் அவ்விடங்களில் படாத பிரயாசங்களைப்பட்டுச் சொல்லிலடங்காத வருத்தங்களை யநுபவித்து இரண்டரை மாதத்துக்குள்ளாக 2070 அஞ்ஞானிகளுக்கு ஞானதீட்சை கொடுத்தார். இவர் இந்தச் சகிர்த கிருத்தியங்களை நடத்துகிறபோது வடபுறங்களில் திரளான பெயர்கள் சத்திய உபதேசத்தைக் கேட்டு ஞானஸ்நானத்துக்குக் காத்திருக்கிற [illegible] கேட்டு, ஆடி மாதம் 4-ம் தேதி [illegible]குளத்து அர்ச். மரியம்ம[illegible] கோவிலில் திவ்விய பூசை பண்ணி அவ[illegible]ர்களிடத்திற்குப் போகப் பிரயாணப்பட்டார்.

இப்பிரகாரமாய் முத். அருளானந்தரும், இவரோடு உபதேசிகளான சிலுவைநாயக்கரும் கனகப்பிள்ளையும், பெயர்போன கிறீஸ்துவர்களான சூரப்பபிள்ளையும் சத்தியநாதன் செட்டியும், இளைஞனான அருளும், வேறொரு வாலிபனுமாக, இந்த ஆறுபேர்களும் வடக்கே போவதற்கு மங்கலம் என்னும் ஊர் அருகில் செல்லுகையில், மறவன் தேசத்து இராஜாவின் பிரதானமந்திரியும் படைத்தலைவனுமாகிய குமாரபிள்ளை என்பவனுடைய சேவகர் கையில் அகப்பட்டார்கள். இதை அறிந்த குமாரபிள்ளை, சுவாமியாரையும் கூடப்பிடிப்பட்டவர்களையும் கட்டிக்கொண்டுவரக் கற்பித்தான். சேவகர் அவர்களைப் பிடித்து, உதைத்து,

மிதித்து அவமானப்படுத்திக் குமாரபிள்ளையின் சமுகத்துக்குக் கூட்டிக்கொண்டு போனார்கள். சுவாமியாரைக் கண்டவுடனே குமாரபிள்ளை மேரை மரியாதையின்றி, மகா இரைச்சலோடு, "ஆ, ஆ! வந்தாயோ? மந்திரவாதி! நீ போதிக்கும் புது வேதம் எப்படிப்பட்டதென்று சொல், பார்ப்போம்" என்றான். இதற்கு அருளானந்தர் அஞ்சாத துணிவோடு: "நான் போதிக்கிற சத்தியவேதத்தில் தந்திரமும், மோசமும், பொய்யும் இல்லை" என்று உரைத்தார். பின்பு, குமாரபிள்ளை சிலுவை நாயக்கரைக் கண்விழிதெறிக்கப் பார்த்து, இவன் யாரென்று கேட்க, சூழ நின்ற பிராமணர்கள் "பரமசிவனுக்கு இவனே முதல் எதிரி, இவன் புது மார்க்கத்தை எங்கும் போதித்து, யாவரும் இந்தத் தெய்வத்தை நிந்திக்கச் செய்கிறான்" என்றார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்டவுடனே குமாரபிள்ளை கோபமிகுதியால் மதி மயங்கி வாய் குளறி அவர்களை வெகுவாய் மிரட்டிச் சுவாமியார் பேரில் பாய்ந்து, தாறுமாறாய் அடித்து, "இவர்களைக் கை கால்களில் விலங்கு பூட்டிக் கனத்த மரக்கட்டைகளோடு இறுகக் கட்டிக் கொடூரமாய் உபாதியுங்கள்" என்று கற்பித்தான்.

இப்பிரகாரம் வேதசாட்சிகள் கட்டப்பட்டு அன்று இராத்திரியிலும், மறுநாள் இருபது நாழிகைவரையிலும் யாதொரு ஆகாரமின்றி, சேவகராலும், கீழ்ச்சாதிகளாலும் அடியும் உதையும்பட்டு, முகங்களில் துப்பிப் பயித்தியக்காரர்களைப்போலப் பரியாசம்பண்ணப்பட்டு மிகவும் வருத்தப்பட்டார்கள். அதன்பின் குமாரபிள்ளை அவர்களை வரவழைத்து, வஞ்சனையுள்ள

இரக்கத்தைக் காட்டி, "நீங்கள் மோசம் போகவே
ண்டாம், இன்றுமாத்திரம் பரமசிவனைக் கும்பிடுங்
கள். அதற்கப்பால் உங்கள் வேதத்தை அநுசரித்து
க்கொள்ளலாம். இப்படிச் செய்வீர்களாகில் உங்களு
க்கு அநேக வரிசை வெகுமானங்களை அளிப்பதுமன்
றிக் குருவுக்கு ஒரு கிராமத்தையும், பயணத்துக்கு ஒரு
நல்ல குதிரையையும் கொடுப்பேன்" என்றான். இத
ற்குச் சுவாமியார்: "சர்வ லோகங்களையும் படைத்து
ஆண்டுவரும் மெய்யான கடவுளைத் தொழுவோ
மொழிய, மற்றத் தெய்வங்களை அறியோம்" என்று
சொல்லவே, மற்ற ஆறு பேரும் ஒருவாய்ப்பட்டாற்
போலே "ஒருபோதும் சிவனைக் கும்பிடமாட்டோம்"
என்றார்கள். இந்த வார்த்தைகளைக் கேட்ட குமார
பிள்ளை காட்டினின்று எழும்பின சிங்கம்போலக் குதி
த்து, இந்தத் துஷ்டனைக் கொண்டுபோய் உயிர்ச்சே
தமின்றிச் செய்யக்கூடுமான உபாதையெல்லாம் செய்
யுங்களென்று கற்பித்தான். அப்படியே சேவகர்
இவர்களைத் தள்ளிக்கொண்டு போய்ச் சுவாமியாரு
டைய கால்களையும் கைகளையும் வெவ்வேறாகக் கயற்
றால் கட்டி, உயர்ந்த மரத்தில் தலை கீழும், கால் மேலு
மாகத் தொங்க வைத்தார்கள். அந்தச் சண்டாள
ராகிய பாவிகள் சுவாமியாரை இவ்விதமாய் உபாதிக்
கையில், அவருடைய சீஷர்களான சிலுவைநாயக்கனை
யும், சூரப்பபிள்ளையையும், மற்ற நாலுபேரையும்,
வரிசையாக நிறுத்தி, இவர்களுடைய சதை தெறித்
துக் கீழே விழவும், இரத்தம் வெள்ளமாய் ஓடவும்,
முதுகெலும்பும், மார்பெலும்பும் காணவும் அடித்தா
ர்கள்.

அதன்பின், சுவாமியாரையும் இவர்களையும் விலங்கு பூட்டித் துர்க்கந்தமான சிறைச்சாலையில் அடைத்தார்கள். இவர்கள் அந்த இராத்திரி முழுதும் வேதசாட்சிகளுக்குத் திடனைத் தந்தருளுகிற சர்வேசுரனைப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள். மறுநாள் இவர்களைச் சிறைச்சாலையினின்று கூட்டிக்கொண்டுபோய் [illegible] செய்தார்கள். இந்த வேதனையின் தன்மையாவது: அக்காலத்திய கர்த்தத்துரோகியின் கைதிகளைக் கயிற்றால் கட்டி ஓர் உயர்ந்த மரத்தில் கப்பியோட்டு இவனை ஆகாயத்தில் தூக்கி, ஆழ்ந்த கிணற்றிலாவது, குளத்திலாவது, திடீரெனக் கயிற்றைவிட்டுத் தண்ணீருக்குள் அமிழ்ந்தச் செய்வார்கள். இவன் தண்ணீரில் மிதப்பானாகில், கொலைக்காரர் வந்து இவனை அமிழ்த்திச் சாகடிப்பார்கள்; அல்லது திரும்ப ஆகாயத்தில் தூக்கி இவன் சாகுமளவும் இப்பிரகாரமாய்த் தண்ணீருக்குள் [illegible]. குமாரபிள்ளை இட்ட கட்டளையின்படியே கொடிய சேவகர் சுவாமியாருக்கும் இவருடன் பிடிக்கப்பட்ட ஆறு பேருக்கும் இப்படி அகோரமான வேதனை பண்ணினதுமல்லாமல் இவர்களை [illegible] உக்கிரத்தோடு அடித்தார்கள்.

அதன்பின் சுவாமியாருடன் [illegible] சிறையில் அடைத்துச் சூசைப்பிள்ளையையும் சத்தியநாதன் செட்டியையும், சிறையிலேயும் பிரம்புகளால் அடித்தார்கள். இந்த அடிகளைப் பொறுக்கமாட்டாமல் சத்தியநாதன் செட்டி [illegible] சொல்லி [illegible]ப்பட்டான். சூசைப்பிள்ளையோவெனில் [illegible] தைரியத்தோடே இந்த [illegible] எல்லாம் பொறுத்துப் பெயர்பெற்றிருக்கிற உங்கள் [illegible]

ஒருபோதும் வணங்கமாட்டேன் என்றமையால், சேவகருக்குக் கோபமிகுதியாகி இன்னம் இப்படிச் சொல்லுகிறாயோ என்று இவர் பேரில் சிங்கங்களைப் போலப் பாய்ந்து சாகும்மளவும் அடித்தார்கள். அடி மிகுதியால் சூரப்பப்பிள்ளைக்கு ஒன்றும் தெரியாமல் செத்தவனைப்போல் விழுந்துகிடந்தார். இவர் செத்ததாகக் கண்ட சேவகர் பயந்து இது செய்தியைக் குமாரபிள்ளைக்கு அறிவித்தார்கள். இதைக்கேட்ட குமாரபிள்ளை அவன் செத்தது மெய்யோ பொய்யோவென்று அறிய அவன் காலைக் கொள்ளிக்கட்டையால் சுடுங்கள், பார்ப்போமென்றான். அப்படியே சேவகர் செய்யச் சூரப்பப்பிள்ளை நெருப்பின் சூட்டால் கொஞ்சம் அசைந்தார். இன்னம் உயிர் இருக்கிறதென்று கண்ட சேவகர் இவரைத் தூக்கிக்கொண்டு போய் மற்றவர்களுடன் சிறைச்சாலையில் போட்டடைத்தார்கள். மூன்றுநாளளவும் ஆகாரமில்லாமல் கிடந்த இந்த வேதசாட்சிகளுக்கு அன்று கொஞ்சம் சாப்பாடு கொடுத்தார்கள்.

பின்பு மங்கலத்திலிருந்து காளையார் கோவிலுக்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்டார்கள். வேதசாட்சிகள் வழியில்பட்ட நிந்தை வாதையும், கேட்டுச் சகித்த உதாசனங்களும் இவ்வளவென்று சொல்லிமுடியாது. இவர்களில் மிகவும் தூஷணிக்கப்பட்ட சிலுவை நாயக்கர் தம்மைத் தூஷணிக்கிறவர்களை நோக்கி: “உங்கள் அவலக்ஷண தெய்வத்தை வணங்குவதைப் பார்க்கிலும் தேவ கிருபையால் ஆயிரம்விசை சாகத் துணிகிறேன்” என்பார். வேதசாட்சிகள் காளையார் கோவிலில் சேர்ந்து நிரம்பவும் அடி மிதிபட்டுத் தூர்க்

கந்தமான ஓர் இருண்ட சிறைச்சாலையில் தள்ளப்பட்டார்கள். அதில் எட்டுநாள்பரியந்தம் பசி தாக முதலிய நிர்ப்பந்தங்களால் வருத்தப்பட்டாலும் சேசுக்கிறீஸ்துநாதர் பட்ட பாடுகளையும் மோக்ஷவிராச்சியத்தில் தங்களுக்கு நியமித்திருக்கிற முடியையுந் தியானித்துச் செபத்தியானஞ்செய்து ஆனந்த சந்தோஷ வெள்ளத்தில் அமிழ்ந்தியிருந்தார்கள். எட்டாம் நாளில் குமாரபிள்ளை வாசம்பண்ணுகிற ஊரான பாகனிக்குக் கூட்டிக்கொண்டு போகப்பட்டார்கள். குமாரபிள்ளை இவர்களைக் கண்டவுடனே மகா சினத்தோடு பரமசிவனைக் கும்பிடுங்களென்று கற்பித்தான். அதற்கு இவர்கள் ஒருபோதும் அப்படிச் செய்யமாட்டோமென்க, அவன் மேரைமரியாதையின்றிக் கடுங்கோபங்கொண்டு சினந்து கண்ணிலே பாய்ந்த எரிவேல்போல இவர்களைக் கைமடித்து குத்திக் காலால் உதைத்து மிதித்து எல்லா அவமானமும் படுத்தினான். தலைவன் செய்வதைக் கண்டு அடுத்து நின்றவர்களெல்லாரும் இப்படியே வேதசாட்சிகளைக் கைமடித்துக் குத்தியுங் காலால் உதைத்து மிதித்து வாதித்தார்கள். இந்த நிஷ்டூரனை குமாரபிள்ளை சுவாமியாரை முதல்விசை கன்னத்திலறையவே இவர் முகத்தைச் சுளியாமல் மறுகன்னத்தைக் காட்டினார். இந்த மன தைரியத்தைக் கண்டவர்கள் மிகவும் அதிசயப்பட்டார்கள்.

குமாரபிள்ளையோவெனில், தான் சொல்லுகிற ன்ன நியாயங்களுக்கு இணங்காமலும் மிரட்டும் மிரட்டல்களுக்கு அஞ்சாமலும், இவர்கள் இடும் ஆக்கினைகளுக்குப் பின்வாங்காமலும், தைரியமாய் நிற்கி,

தைக் கண்டு சுவாமியாருக்கு மகா நிர்ப்பந்தமுள்ள வேறோர் ஆக்கினைசெய்யக் கட்டளையிட்டான். அதேதெனில் நடு மத்தியானத்திலே கொலைக்காரர் சுவாமியாரைச் சிறைச்சாலையைவிட்டு வெளியே வரச்சொல்லி அவர் அணிந்திருந்த வஸ்திரங்களையெல்லாம் உரிந்து அகோர வெய்யிலால் காய்ந்திருந்த பெரும்பாறையில் கிடத்தித் தடிகளாலும் கசைகளாலும் இரத்தம் வெள்ளமாயோட நிஷ்டூரமாய் அடித்தார்கள். சுவாமியார் இந்தக் கொடூரவேதனையை அநுபவிக்கையில் யாதொரு முறைப்பாடின்றி ஒவ்வொரு அடிக்கொருவிசை, சேசுவே என்பார். அதன்பின் ஓனாய்க்களைப் பார்க்கக் கொடிய பாவிகள் மகா நிஷ்டூரத்தோடு இந்தச் சுணைப்பாறையில் இவருடைய திரேகமெல்லாங் காயப்பட இவர்மேல் ஏறிமிதித்தார்கள். இப்படி சர்வாங்கத்திலுங் காயப்படுத்தின சுவாமியாரைக் கடும்வெயில்பட அந்நாள்முழுதும் இந்தப் பாறையில்தானே கிடக்கவிட்டு இராத்திரியில் சிறைச்சாலையில் கொண்டுபோய் அடைத்தார்கள்.

குமாரபிள்ளை சுவாமியாருடைய வெல்லப்படாத தைரியத்தைக் கண்டு இவருடைய பிரதான சீஷனாகிய சிலுவை நாயக்கனைக் கெடுக்கத்தக்கதாக ஆன பிரயாசமெல்லாம் பட்டான். அதெப்படியென்றால் முதலில் இவருக்குப் பக்ஷத்தைக் காட்டி இவனைப் பார்த்து உயர்ந்த கோத்திரத்தில் பிறந்த நீ இந்த நீச மதத்தை அநுசரித்துவருகிறது உனக்கு மகிமையோ? நம்முடைய தேசத்தின் சிறந்த தெய்வங்களைப் பூசிக்கிறதே அதிலுந்தாவிலை. ஆனதால் இந்த நீச மதத்தைப் பிறக்கணித்து நம்முடைய பரமசிவனைத் தொழ

வேண்டும். இப்படிச் செய்வாயாகில் உன்னாசைக்குத் தக்கது செல்வமும் வரிசையும் தருவேனென்றான். இதற்குச் சிலுவைநாயக்கர்: "மகா துரையே, என்வேதமே எனக்கு ஆஸ்தி மகிமையுமாமே. இந்த வேதத்திக்காகச் சாவேனாகில் எனக்குப் பரமபாக்கியம். உம்முடைய சுகசெல்வம் எனக்குத் தேவையில்லை. இவைகளை விரும்புகிறவர்களுக்குக் கொடும்" என்றார். அப்போது குமாரபிள்ளை நீ சாகவேண்டுமோ என்க, இவர், ஆம், எனக்காக தம்முடைய பிராணனைத் தந்த சேசுக்கிறீஸ்துநாதரைப்பற்றி என் இரத்தத்தைச் சிந்துகிறதே எனக்கு உத்தமமென்றார். அதற்குக் குமாரபிள்ளை இப்படியானால் உன் ஆசையின்படி நிறைவேறக்கடவது என்றான். உடனே கொலைக்காரர் இவரைப்பிடித்துச் சுவாமியாரை வாதித்ததுபோல் இவரையும் உபாதித்தார்கள். இந்தத் துஷ்டப் புலிகள் செம்மறிக் குட்டியைப்போல் பொறுமையாயிருக்கிற சிலுவைநாயக்கரைப் பிரம்புகளாலும் தடிகளாலும் மகா நிஷ்டூரமாயடித்தார்கள். அடிக்கும்போது கண்ணிலடிபட்டு விழி தெறித்து வெளியிற் புறப்பட்டுக் கன்னத்தில் தொங்கிக்கொண்டிருந்தது. இதைக்கண்டு குமாரபிள்ளை அவரை நகைத்து இந்தக் குரு தன் சிஷனுக்குத் திரும்பக் கண்ணைக் கொடுப்பானாகில் இவனுடைய வேதம் சத்தியமென்று ஏற்றுக்கொள்வேனென்று பரிகாசமாகச் சொன்னான். குமாரபிள்ளை சொன்னதைச் சிலுவைநாயக்கர் கேட்டு இப்பேர்ப்பட்ட அற்புதத்தைச் செய்வது கடவுளுடைய சித்தம். அவருக்காக என்னுடைய மறுகண்ணையும் செவியையுமிழக்க விரும்புகிறேனென்றார். பிற்பாடு

இவர் சிறைச்சாலைக்குப் போனதின்பின் முத்திப்பேறு பெற்ற அருளானந்தர் இவனை அன்போடணைத்து இவருடைய காயங்களை வணக்கத்தோடு முத்தமிட்டு இவருடைய மனத்திடனை வாழ்த்திப் புகழ்ந்தார். அப்போது சிலுவைநாயக்கர் சர்வ தயாபர சர்வேசுரனுடைய வல்லபத்தை நம்பிச் சொன்னதாவது: "சுவாமீ! தேவரீர் என்னுடைய கண்ணின்பேரில் சிலுவை வரைந்தருளும்" என்று கேட்டார். முத். அருளானந்தர் சற்றே ஜெபம்பண்ணித் தொங்குகிற விழியை அதின் குழியிலே வைத்து, அர்ச். பிரகாசியம்மாளுடைய நாமத்தைச் சொல்லிச் சிலுவை வரைந்தார். உடனே வலியெல்லாம் நீங்கிப்போனதுமல்லாமல் கண்டவர்களெல்லாரும் அதிசயிக்கக் கண்ணுக்குச் சவுக்கியமும் பார்வையும் உண்டாயிற்று. குமாரபிள்ளை இந்தச் செய்தியை அறிந்து சிலுவை நாயக்கரைத் தன் சமுகமுன் வரவழைத்துத் தானே ஓர் ஓலையில் சிலவார்த்தைகளை எழுதி இவருக்குக் கொடுத்து மறுகண் மூடித் தெறித்துவிழுந்த கண்ணோடே வாசியென்றான். உபதேசியார் எழுத்தற வாசித்து வருகையில் ஒளிபெறாத வௌவாலைப் போலக் குமாரபிள்ளை இந்தத் திர்ஷ்டாந்தமான அற்புதத்தை அங்கீகரியாமல், இது மாந்திரியத்தால் சம்பவிக்குங் காரியமென்றான். ஆனால் இவனுடைய முதற்சம்பிரதியான அழகப்பிள்ளை யென்பவன் இப்பேர்ப்பட்ட அதிசயங்களைச்செய்விக்கிற வேதமானது மெய்யான கடவுளின் வேதமேயல்லாமல் வேறல்லவென்று பிரசித்தமாய்ச் சொன்னான்.

அடிபட்ட நாகம் அதிக விஷங் கக்கி அடித்தவனைக் கடிக்குமாப்போல் குமாரபிள்ளை இவ்வேதசாட்சிகள் தன் சொற்படி நடவாததினிமித்தம் இவர்களைக் கொல்லத் தீர்வையிட்டான். அப்படியே மறுநாள் ஓர் அதிகாரி சில சேவகருடன் சிறைச்சாலைக்குப் போய்த் தலைவனான குமாரபிள்ளை செய்த தீர்வையை வேதசாட்சிகளுக்கு வாசித்துக் காட்டினான். இந்தக் கட்டளையாவது: "சந்நியாசியானவன் சகல உலகங்களை ஆண்டு அளித்துவரும் கடவுளினது வேதத்தைப் போதிப்பவனென்று தன்னைப் பாராட்டி எங்களுடைய வேத புராணங்களுக்கு விரோதமாய் ஓர் புதுமார்க்கத்தைப் பரம்பச் செய்வதாலும், பரமசிவனை வணங்கமாட்டேனென்பதாலும், தன் சீஷர்கள் பரமசிவனைத் தொழாதபடிக்கு விலக்குவதாலும் அவனுக்கு இரண்டு கைகளையும் கால்களையும் வாங்கிக் கழுமரத்திலேற்றவும், அவனுடைய பிரதான சீஷர்களாகிய சிலுவைநாயக்கனையும் கனகப்பிள்ளையையும் சந்நியாசியைப்போலவே கை கால்வாங்கிக் கழுமரத்திலேற்றவும், சூரப்பபிள்ளைக்கும் இளந்தைகளான மற்ற இருவருக்கும் ஒரு காதும் ஒரு கையும் இரண்டு காதும் மூக்கும் நாக்கும் அறுத்துவிட்டு வீட்டுக்கனுப்பவும் வேண்டுமென்று கட்டளையிடப்படுகிறது" என்பதே. வேதசாட்சிகள் இந்தத் தீர்வையைக் கேட்டவுடனே அகமகிழ்ந்து முழந்தாளிட்டுத் தேவமாதா பிரார்த்தனையையும் இருபைதயாபத்துமந்திரத்தையும் சொல்லி ஞானப்பாட்டுகளைப் பாடி ஏக திரித்துவ சர்வேசுரனுக்குத் தோத்திரம் பண்ணினார்கள். ஆனாலும் தலைவன் செய்த தீர்மானத்தை உடனே நிறைவேற்ற

மல் இவர்களை அநிகநாள் வருத்தப்படுத்தும்பொருட்டு சிறைச்சாலையில்தானே அடைத்து வைத்தார்கள். அங்கே இவர்கள் பசிதாக மிகுதியால் செத்துப் போயிருப்பார்கள். ஆனால் அருளாயி என்னப்பட்ட புண்ணியவதியொருத்தி இவர்களுக்குநாள்தோறும் இரகசியத்தில் கொஞ்சம் அரிசியையும் பாலையும் கொடுத்துக்கொண்டிருந்தாள். சிலநாட்சென்று குமாரபிள்ளை செய்த தீர்மானத்தை நிறைவேற்றுவதற்குச் சேவகர் கழுமரத்தையும் வாளையும் எடுத்துக்கொண்டு சிறைச்சாலைக்கு வந்தார்கள். அதில் செய்யவேண்டியவைகளை முஸ்திப்புச் செய்து, கடைசிக் கட்டளை வருமளவும் காத்திருக்கையில், சர்வ இருத்தியங்களையும் கடப்பித்துக்கொண்டு வருகிற சர்வேசுரன் தம்முடைய சிஷர்களைத் துரோகிகள் கையினின்று மீட்கத் திருவுளமானார்.

---

## 16-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தமக்கு நேரிட்ட சாவுக்குத் தேவ கிருபையால் தப்பிக்கிற வர்த்தமானமாவது:

மேற்சொன்ன பிரகாரமே முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் அடி மிதிகளையும் தண்ணீர் வேதனையையும் சரீரம் நெருக்குதல் முதலிய கொடிய நிக்கை வாதைகளையும் படுகிறபோது அதிசயமான தைரியத்தையும் அத்தியந்த சந்தோஷத்தையுங் காட்டி

எல்லாரையும் பிரமிக்கப்பண்ணுவார். அன்றியும் சர்வ வல்லபமுள்ள சர்வேசுரனுடைய விசேஷ கிருபையினாலே இவருக்குச் செய்யப்படும் காயங்களெல்லாம் யாதொரு பரிகாரமில்லாமல் குணமாகிச் சீக்கிரமாய் மாறிப்போகும். இதெல்லாம் அஞ்ஞானிகள் கண்டு அனேகம்விசை சாவுக்கேதுவான இந்த வேதனைகளை மனுஷனானவன் தன் சுபாவ பலத்தினால் பொறுக்கக்கூடாமையால் தெய்வச் செய்கையால் மாத்திரம் இந்தச் சந்நியாசியார் சகித்தாரென்று பிரமித்துச் சொல்லுவார்கள். ஜாதியில் உயர்ந்த அனேகரும் சில பிராமணரும் வேதனைகளைச் சந்தோஷமாய் அநுபவிக்கச் செய்து இவ்வுலக வரிசை மகிமைகளை மதிக்கிறதை விட எவ்வித அவமானங்களையும் அதிகமாய் மதிக்கச்செய்யும் வேதமானது மெய்யான வேதமென்று நிச்சயித்து அதில் பிரவேசிக்கத் துணிந்தார்கள்.

பெண்பிள்ளை ஒருத்தி முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் காண்பித்த மனத்திடாரிக்கத்தையும் பொறுமையையும் சந்தோஷத்தையுங் கண்டு அதிசயித்து, சுவாமியாருடன் பிடிக்கப்பட்ட உபதேசிகளில் ஒருவனை ஒருநாள் தண்ணீர் வாதையால் அகோரமாய் வாதிக்கும்போது கொலைக்காரருக்குச் சொன்னதாவது: "ஏன் இப்படி இவனை வருத்தப்படுத்துகிறீர்கள்? உங்களுக்குள்ள கோபமெல்லாம் குருவின்பேரில் காட்டுங்கள். அவர் ஒருவரோ இந்த வருத்தங்களை அநுபவிப்பதற்குத் திராணியுள்ளவர்" என்றாள்.

முத்திப்பேறுபெற்ற அருளானந்தரும் மற்ற ஐந்து வேதசாட்சிகளும் சிறைச்சாலையிலிருக்கும்போது குமாரவின்னை கட்டளையிட்ட சாவைக்குறித்து அகமகிழ்ந்து

தங்களுக்குள் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டிருக்கும்போது மூத்தப்பேறுபெற்ற அருளானந்தர் இவ்வைந்து பெயருக்குள் மிகவும் வாலிபனை சிறுவனை நோக்கிச் சொன்னதாவது : "என் மகனே, என்னுடன் உன்னையும் சத்தியவேதத்துக்காகக் கொல்ல வருவார்களேயாகில் சந்தோஷமாய் மரிக்கத் துணிவாயோ" என்க, இவ்வாலிபன் சுவாமியாரை நோக்கி: "என் பிரியமுள்ள தகப்பனே! நீரும் நானும் இத்தருணத்தில் சாகப்போகிறதில்லை. நீர் உம்முடைய ஜென்ம தேசத்துக்குப் போய் இந்நாட்டுக்குத் திரும்பிவந்து தலைவெட்டப்படுவீர்" என்றான். புத்தியீனருக்கு அறிவைத் தந்தருளுகிறவரும் சிறியோரைப் பெருமைப்படுத்துகிறவரும் சகலத்தையும் அறிகிறவருமாகிய சர்வேசுரன், இச்சிறுவனுடைய வாயினாலே வரப்போகிற காரியங்களைத் தீர்க்கதரிசனமாய் அறிவிக்கச் சித்தமானொன்று அங்கீகரிக்கத்தக்க சத்தியமாமே.

படைத்தலைவன் செய்த தீர்மானத்தின்படியே வேதசாட்சிகளைக் கொல்ல முடிவான கட்டளை கொடுக்கப்போகிற தருணத்தில்தானே இராஜாவான் இரங்கநாத தேவன் ஓர் தூதன்மூலியமாய் இராமநாதபுரத்து அரண்மனையில் ஓர் பலத்த சதிமானங் காணப்பட்டதென்று அறிவித்து, தாமதமின்றி உடனே படைகளுடன் படைத்தலைவன் ஓடிவரவேண்டுமென்று கட்டளைகொடுத்தனுப்பினான். குமாரபிள்ளை தன் இராஜாவுக்கு நேரிட்ட ஆபத்தை அறிந்தவுடனே வேதசாட்சிகளைச் சிறையிலிருக்கவிட்டு இராஜாவைக் காப்பாற்றும்படி தீவிரித்துப்போனான். வேதசாட்சிகள் நடக்கிற செய்திகளொன்றும் அறியாமல்

இருபத்திரண்டு நாளையும் சிறைச்சாலையிலேயிருந்து, வேதத்துக்காகத் தங்கள் பிராணனைக் கொடுக்க தாங்கள் விரும்பின நேரம் எப்பொழுது வருமோவென்று ஜெபம் செய்துகொண்டு காத்திருந்தார்கள். இருபத்துமூன்றாம் நாள் இவர்களெல்லாரையும் இராமனாதபுரத்து இராஜாவின் சமுகத்துக்குக் கூட்டிக்கொண்டு போகவேண்டுமென்று கட்டளை பிறந்தது. அதுகாதவழி தூரமாயிருந்த இராஜதானிக்குக் கால்நடையாகவும் மகா நிஷ்டூரத்தோடும் நடக்கப்பண்ணினார்கள். அஞ்ஞானிகள் முதலாய், சுவாமியாருக்குச் செய்யப்பட்ட கிலேசங்களையும், இவர் இருக்கிற நிர்ப்பாக்கியமான கோலத்தையும் இவர் சர்வாங்கத்திலும் பட்ட காயங்களையும் கண்டு, அவர்பேரில் இரக்கமாயிருப்பார்கள். வேதசாட்சிகள் இராமனாதபுரத்திற் சேர்ந்தவுடனே பெருந்துரோகிகளைப்போல ஒரு இருட்டான சிறைச்சாலையில் தள்ளப்பட்டார்கள். சாஸ்திரிகளும், பிராமணரும், பூசாரிகளும், திரளாய் இந்தச் சிறைச்சாலைக்கு வந்து சுவாமியாரைப் பழித்து நகைத்துப் அவமானித்துச் சந்தோஷம் கொண்டாடினார்கள். அவர்களில் சிலர் சுவாமியார் பட்ட காயங்களாலும், சிந்தின இரத்தத்தாலும், அநுபவித்த எவ்வித வருத்தங்களாலும் தயங்கியிருக்கிறதாகக் கண்டு, அவரை எளிதாய் ஜெயித்துக்கொள்ளலாமென்று எண்ணி, அவரோடு தர்க்கம்பண்ணத் துணிந்தார்கள்.

அருளானந்தசுவாமியென்பவர், விசேஷ தேவ ஒத்தாசையினாலேயும் தம்முடைய மனத்திடாரிக்கத்தினாலேயும், தம்முடைய சரீர பலவீனத்துக்கு மேற்பட்டு, இந்தக் கள்ள ஞானிகளுடைய ஆக்ஷேபனைகளையெல்லாம் நிர்

மூலமாக்கினதுமன்றி, அஞ்ஞானிகளுடைய மதங்கள் பைத்தியமென்றும், துரோகமென்றும், அருசியென்றும் தெளிவாய் ஒப்பித்து, மறுக்கப்படாத மூலாந்திரங்களைக்கொண்டு சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய வேதம் மாத்திரமே சத்தியமென்று காண்பித்தார். இந்த அகங்காரிகளான சாஸ்திரிகள் மறுமொழி சொல்லக்கூடாமல் அதிசயப்பட்டு எல்லாரும் கேட்க சொன்னதாவது: "இந்தச் சந்நியாசியானவர் நமது மதங்களையும், மதாசாரங்களையும் எதிர்த்தாலும், அவர் போதிக்கிற வேதம் பரிசுத்தமுள்ளதென்றும், மாட்சிமை பொருந்தியதென்றும், நியாயத்துக்கு இயற்கையானதென்றும், ஒத்துக்கொள்ளக்கடவோம்" என்றார்கள். இரங்கநாததேவன் இந்த ஞானிகள் சொன்னதைக் கேட்டுச் சுவாமியாரைப் பார்க்கவும், அவர் போதிக்கிற வேதத்தை அறியவும் விரும்பி, அவரை அரண்மனைக்குக் கூட்டிக்கொண்டுவரக் கற்பித்தான். அருளானந்தர் இராஜாவின் கட்டளையைக் கேட்டு, தாம் எப்போதும் அபேட்சித்துக்கொண்டிருந்த மரணத்தின் சமயம் வந்ததென்று நிச்சயித்து, தமது பிரிய சீஷர்களை அழைத்து முத்தமிட்டு அவர்களைத் தேற்றி, மரணபரியந்தம் உறுதியாயிருக்கும்படியாக சொல்லி, அரண்மனைக்குப் போனார். இரங்கநாததேவன் சுவாமியாரைக் காணவே, மிகுந்த வணக்கத்துடன் உபசாரம்பண்ணி, இவரைத் தனதருகில் உட்காரவைத்து, "நீர் போதிக்கிற வேதம் இன்னதென்று எனக்கு விவரியும்" என்றான். அப்போது குமாரபிள்ளை இராஜாவின் தயாளத்தை உபாயமாய்த் தடுக்கவும், சுவாமியாரைக் கள்ளத்தனமாய் மோசப்படுத்த

வும், இவனை நோக்கி: "நீர் பரம சிவனைக் கும்பிடாதிருக்கிறது என்ன" என்று கேட்டான். சுவாமியார் இதற்கு "பிரமா மதத்தார் பிரமாவைக் கும்பிடுவார்கள், விஷ்ணு மதத்தார் விஷ்ணுவைக் கும்பிடுவார்கள், சிவ மதத்தார் சிவனைக் கும்பிடுவார்கள். சோதிமண்டலத்தையும் பூமண்டலத்தையும் சிருஷ்டித்த ஏக கடவுளை அறிந்தவனாகிய நான் அவரைமாத்திரமேயுபசரிக்கிறேன்" என்று மறுமொழியாகச் சொன்னார்.

இராஜா இந்த விவேகமுள்ள மறுமொழியைக் கேட்டுப் பிரமித்துச் சுவாமியாரை நோக்கிச் சொன்னதாவது: "இதெல்லாம் இருக்கட்டும்; நாம் உம்மை வருத்தப்படுத்துகிறதற்கல்ல, ஆனால் நீர் போதிக்கிற வேதத்தை அறிவதற்குத்தானே உம்மை வரவழைத்தோம். அச்சமின்றி இவ்வேத காரியங்களை அறிவியும்" என்றான். அப்போது அருளானந்தர் அத்தியந்த சொல்வன்மையோடும், மகா வாக்கு வல்லபத்தோடும், தேவசற்பனைகளையும் தெய்வீக இலக்ஷணங்களையும் விவரித்துக் காட்டினார். இராஜா இதையெல்லாம் கேட்டுப் பிரியப்பட்டு, அடுத்துநின்ற பிரதானிகளையும் பரிசாரகரையும் பார்த்துச் சொன்னதாவது: "இவர் போதிக்கிற வேதம் எல்லா அக்கிரமங்களையும் விலக்கிச் சகல தர்ம புண்ணியங்களையும் கற்பிக்கிறதினாலே, இது எல்லா மார்க்கங்களிலும் பரிசுத்தமுள்ள [illegible] குருக்கள் [illegible]ச்சியுள்ளவர்கள், இவரே மெய்யான குரு" என்றான். இதற்குக் குமாரபிள்ளையும், பிராமணரும், "இது சரி; ஆனால் இவர் பரம சிவனை

வணங்கமாட்டோம் என்கிறீரோ" என்றார்கள். இரங்கநாததேவன் அவர்களைக் கடிந்து, "இவர் சொன்னதை மறந்தீர்களோ? அவனவனுக்கு இஷ்டமான தெய்வத்தை ஆராதித்தால் இதினால் நமக்கு என்ன குறை" என்றான். அப்போது பிராமணர் வாய்குளறித் தங்கள் தெய்வங்களைப் பாராட்டி, வேத புராணங்களை விஸ்தரித்துப் புகழ்ந்து, "நமது மதங்களுக்கு மேற்பட்ட மதங்கள் இல்லை" யென்று வீம்பாய்ச் சொல்ல, இரங்கநாததேவன் அவர்களைத் தடுத்து இவ்வளவு பரிசுத்த வேதத்தைப் போதிக்கும் சந்நியாசியார் கனவுகளுக்கு ஒப்பான உங்கள் பிதற்றுதலை ஒப்புக்கொள்ளுவாரோ? பொய்க்கும் மெய்க்கும் சம்பந்தம் உண்டோ" என்றான்.

பின்பு இரங்கநாத தேவன் சுவாமியாரை நோக்கி "உமக்கும் உம்முடைய சீஷர்களுக்கும் உயிரையும், விடுதலையும் கட்டளையிடுகிறோம். உங்களுடைய தேவனை வணங்கி, அவருடைய வேத ஒழுக்கை அநுசரித்து வாருங்கள். ஆனால் இந்த வேதம் எங்களுடைய தெய்வங்களுக்குச் செய்கிற ஆராதனையையும், களவு செய்தலையும், பல மனைவிகள் வைத்தலையும், விலக்குகிறபடியினாலே இதை நம்முடைய பிரஜைகளுக்குப் போதிக்கக் கூடாது. இதை மீறிச் சத்தியவேதத்தைப் போதிக்கிறவர்களுக்குச் சாவு நேரிடும்" என்று சொல்லிக் கொலுமண்டபத்தைவிட்டுப் போனான். இவன் கற்பித்தபடியே சுவாமியாரையும் அவரோடு பிடிபட்டவர்களையும் உடனே விட்டுவிட்டார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இராஜாவின் தயாளத்தையும் நல்ல மனதையும் கண்டு, 'அவன் சத்

தியவேதம் போதிக்க வேண்டாமென்று இட்ட விலக்குகளைத் தள்ளுவாரென்றும், ஒருவேளை மனந்திரும்புவாரென்றும் கருதி, திரும்ப அவனிடத்தில் சத்தியவேதத்தின் மகிமையையும் அதனால் வருகிற பாக்கிய சந்தோஷத்தையும் விவரித்துக் காண்பிக்கத்தக்கதாக அவனிடத்துக்குப் போகப் பிரயாசப்பட்டார். ஆனால் இவருக்கு இராஜா முதல்விசை காண்பித்த பட்சத்தை பிராமணர் கண்டு, திரும்ப இவர் இராஜசமூகத்துக்குப் போவாரேயாகில், தமது மாந்திரீயத்தால் இராஜாவைத் தனதுப்படுத்துவாரென்று பயந்து, அரண்மனையில் இவர் பிரவேசியாதபடி ஏற்பாடு செய்தார்கள்.

எவ்வித கிருபையுமுடைத்தான சர்வேசுரன் இவ்விதமாய்த் தமது ஊழியனை இரட்சித்ததின்பின், தவறாத நீதிப்பிரகாரம் இவர்களை உபாதித்த சண்டாளரான பாவிகளைத் தெண்டிக்கச் சித்தமானார். அதெப்படியென்றால், மதுரை நாயக்கனும் இரங்கநாத தேவனும், கொஞ்சக்காலம் சமாதானமாய் இருந்ததின்பின், சில முகாந்தரங்களைப்பற்றி இருவருக்கும் பலத்த யுத்தம் உண்டாயிற்று. அப்போது படைத்தலைவனான குமாரபிள்ளை இரங்கநாத தேவனுக்குச் சதிமானஞ்செய்ய ஆலோசித்தான். இதை அறிந்த இரங்கநாத தேவன் குமாரபிள்ளையைப் பிடித்து, அவன் முத்திப்பேறுபெற்ற அருளானந்தருக்குச் செய்ததும், கட்டளையிட்டதுமான வாதையெல்லாம் இவனுக்கு இடக் கற்பித்தான். ஆகையால், இவனுடைய இரண்டு கைகளையும் கால்களையும் வெட்டி இவனைக் கழுமரத்தில் ஏற்றிக் கொன்றுவிட்டார்கள். இவன் கூட்

பிறந்தவர்களும் இதே பிரகாரமாய் வாதிக்கப்பட்டு மாண்டார்கள். மீளவும் இவனுடைய பெண்சாதிகளும் உறவின்முறையாரும் சாகத்தீர்மானிக்கப்பட்டுச் செத்தமையால், இந்தப் பாதகனும் இவனுடைய சபிக்கப்பட்ட குடும்பமும் ஒரேநாளில் நிர்மூலமாக்கப்பட்டார்கள். இந்தச் செய்தியை அறிந்த சகலரும் பிரமித்து "அந்தச் சண்டாளன் வேத ரிஷியை அநீதியாய் உபாதித்ததினாலே தேவ கோபம் இவனையும் இவன் இனத்தாரையும் அழித்தது" என்பார்கள்.

---

## 17-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் ஐரோப்பா கண்டத்துக்கு அனுப்பப்படுகிற வர்த்தமானமாவது:

---

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் பட்ட அடிமிதி முதலான வருத்தங்களையும், சிறைச்சாலையினின்று அற்புதமாய் விடுதலையாக்கப்பட்டதையும் மேலான சிரேஷ்டர் அறிந்து, இவருக்கு ஓர் பக்ஷமான கடிதம் எழுதித் தொப்போவென்கிற ஊரிலுள்ள மடத்திலே கொஞ்சநாள் இளைப்பாற வரும்படிக்குக் கட்டளையிட்டார். அப்படியே அருளானந்தர் அம்மடத்தில் கொஞ்சநாள் இளைப்பாறினபின், திரும்பவும் மதுரை தேசத்துக்குப் போகப் புறப்பட்டார். ஆனால் கொஞ்ச தூரத்துக்கப்பால் போனபிறகு, மறுபடியும் சிரேஷ்டரால் வரவழைக்கப்பட்டார். அதேனெனில் சில குருக்

களைக் கூட்டிக்கொண்டுவரவும், புதுக்கிறீஸ்துவர்களுக்கு வேண்டியவைகளை சேகரிக்கவும், இவை முதலிய சில கனத்த காரியங்களைத் தீர்மானித்துவரவும் முன் ஐரோப்பா தேசத்துக்கு அனுப்பப்பட்ட பயிலென்ஜும் சவேரியார் சுவாமியார் அவ்விடத்திற் சேராமல் யாத்திரையிலேயே செத்துப்போனதாகச் செய்திவந்தமையால், இவருக்குப் பதிலாக அருளானந்தரை அனுப்புவதே உத்தமமென்று ஜிரோஷ்டர் எண்ணிக்கொண்டு இவரைத் தம்மிடத்துக்கு வரக் கற்பித்தார். அப்படியே அருளானந்தர் வரவே, ஜிரோஷ்டர் இவருக்கு மகா பக்ஷத்தைக் காட்டி, ஐரோப்பா தேசத்துக்கு அனுப்பப்பட்ட சுவாமியார் மரணமான செய்தியை அவருக்கு அறிவித்து, வேறே குருக்களைச் சேகரிப்பதும் கிறீஸ்துவர்களுக்கு வேண்டிய ஒத்தாசைகளைக் கேட்டடைவதும் மற்றுமுள்ள காரியங்களைத் தீர்மானித்துவருவதும் எவ்வளவு அவசரமென்று விவரித்துச் சொன்னதாவது: "பொர்த்துகால் இராஜாவை அறிந்தவரும் பிரபுக்கள் மந்திரிகள் பிரதானிகள் முதலான உத்தியோகஸ்தரோடு சிநேகமாயிருந்தவருமான நீரே இவையெல்லாம் அநுகூலமாய் முடியச் செய்வதற்கு தகுந்தவராயிருக்கிறீராலே, உம்மை அவ்விடத்துக்கு அனுப்பத் தீர்மானிக்கிறோம்" என்றார்.

இதைக்கேட்டு முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தமதுயிரில் இடிவிழுந்தாற்போல் திகிலடைந்து சற்றுநேரம் பேசாதிருந்து, திரளான கண்ணீரைவிட்டுச் ஜிரோஷ்டர் பாதத்திலே விழுந்து, அப்பேர்ப்பட்ட பயணத்தைச் செய்யத் தமக்குக் கட்டளையிடாதிருக்

வேணுமென்று கெஞ்சிக் கேட்டார். எவ்விதி வருத்தங்களுக்கும் அஞ்சாதவரும் சகல நிந்தை வாதைகளை அகமகிழ்ந்த மனதோடே சகித்தவருமான இவர், தாம் இவ்வளவு வருத்தப்பட்ட தேசத்தை விட்டுத் தமது தாயாரையும் சுற்றத்தாரையும் சிநேகிதரையும் பார்க்கப்போவதற்கு மிகவும் பயப்பட்டார். ஆனதுபற்றி தமது இரோக பலவீனத்தையும் தாம் படுகிற மற்பல வருத்தங்களையும் தடையாகச் சொல்லி, தமது வரவுக்கு எண்ணிக்கையில்லாத கிறீஸ்துவர்கள் அஞ்ஞானிகள் காத்திருக்கிறார்களென்றும், தமது மரணபரியந்தம் சிந்துதேசத்திலிருப்பதாக சர்வேசுரனுக்குக்கொடுத்த வார்த்தைப்பாடு முதலான நியாயங்களையும் வெகு தாழ்ச்சி தைரியத்தோடு கிரோஷ்டருக்கு விவரித்துக் காட்டினார். இவர் படும் கஸ்தியைக்கண்டு கிரோஷ்டர் மகா இரக்கத்தோடு இவர் சொல்லுகிறதெல்லாவற்றையும் கேட்டு, இவருக்கு மகா பக்ஷத்தைக் காட்டி, இவருடைய விக்கினங்கள் யாவையும் தீர்த்து, இவர் பொருந்திய மனதோடே போகச் சம்மதிக்கும்படி பிரயாசப்பட்டார். ஆகிலும் அருளானந்தர் இக்காரியத்தில் வெல்லப்படாத வெறுப்பைக்கொண்டிருக்கிறதைக்கண்ட கிரோஷ்டர் இவருடைய மனக்கீழ்ப்படிதலையும் நன்றாயறிந்திருந்தமையால், அவரை நோக்கிச் சொன்னதாவது: "சுவாமியாரே! உம்முடைய இஷ்டத்தின்படி நடப்பதற்கல்லவே, ஆனால் கிரோஷ்டர் மூலமாய் உமக்கு அறிவிக்கப்பட்ட தேவசித்தத்தை நிறைவேற்றுதற்கல்லோ சேசுசபையில் பிரவேசித்தீர். இந்நாடுகளுக்குக் குரு சுவாமிமார்கள் மிகவும் தேவையாயிருக்கிறதாக நன்றாயறிந்திருக்

கிறோம்: நீர் ஐரோப்பா தேசத்துக்குப் போவது எவ்வளவு அவசியமாயிருக்கிறதென்று நமக்கு நன்றாய்த் தெரியும். ஆகையால் இதையும் அதையும் ஆராய்ந்துபார்த்துச் சர்வேசுரனுடைய தோத்திரத்துக்காக நீர் உடனே ஐரோப்பாவுக்குப் பிரயாணப்படக் கற்பிக்கிறோம்" என்றார். அருளானந்தர் இவ்வார்த்தைகளைக் கேட்டுச் சம்மதித்து யாதொரு தடங்கல் செய்யாமல் பிரயாணத்துக்குவேண்டிய முஸ்திப்புப் பண்ணினார்.

ஸ்ரேஷ்டரானவர் இவரை மகா பட்சத்துடன் அணைத்துத் திரளான கண்ணீரைச் சிந்தி ஐரோப்பாவில் தீர்மானிக்கவேண்டியவைகளை இவருக்கு விவரித்து இவரை அனுப்பினார். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் உடனே புறப்பட்டு 1688-ம் ஆண்டு தை மாதத்தில் கோவையில் சேர்ந்தார். அதிலே தாமதமின்றித் தேசாதிபதியானவன் பொர்த்துக்கால் இராச்சியத்துக்குப்போக ஏறியிருந்த இராஜ கப்பலில் இவருமேறி தேசாதிபதியாலும் மற்றவர்களாலும் மகா வணக்கத்தோடே அனுசரிக்கப்பட்டார். பிரயாணத்தில் இவர் தம்முடைய மனத்தாழ்ச்சியையும் பிறர் சிநேகத்தையும் தேவபற்றுதலையும் எல்லாரும் அதிசயப்படக் காண்பித்து, ஆவணி மாதத்தில் லிஸ்போன் என்கிற பட்டணத்துக்குச் சிந்தாத்திரையாய்ப் போய்ச் சேர்ந்தார்.

# 3-ம் அதிகாரம்.

## முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் வேதசாட்சியாக மரணமடைந்த வர்த்தமானமாவது:

---

## முதல் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் போர்த்துக்கால் இராச்சியத்தில் தாம் வந்தகாரியங்களைத் தீர்மானித்த வர்த்தமானமாவது:

---

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் பொர்த்துக்கால் இராச்சியத்தில் சேர்ந்தவுடனே அவ்விடத்திலிருக்கும் சிரேஷ்டர்களிடத்திற்போய்த் தம்மை அவர்களுடைய அதிகாரத்துக்கு முழுதும் கீழ்ப்படுத்தினார். இவர் வந்திருக்கிறாரென்கிற செய்தி பட்டணத்தில் பரம்பினவுடனே மேன்மையுள்ள பெயர்கள் யாவரும் இவரைச் சந்தித்து மிகவும் ஆசாரம்பண்ணினார்கள். இவர் மறவன் தேசத்துச் சிறையில் அடைபட்டிருக்கும்போது ஓர் காகிதம் எழுதித் தாம் செய்வதையும் அநுபவிக்கிற நிந்தை வாதை முதலிய சகலத்தையும் அறிவித்திருந்தார். இவர் பொர்த்துகால் இராச்சியத்திற்குச் சேருமுன்னே இந்தக் காகிதம் அவ்விடத்திற்கு வந்ததினாலே யாவரும் இவரை மகிமைக்குரிய வேதசாட்சியென்றும், திரளான ஜனங்களைத் திருப்பின அப்போஸ்தலனென்றும் எண்ணிக்கொண்டிருந்

காா்களாகையால், இவர் அவ்விடத்துக்குச் சேர
எல்லாரும் இவரைப் பார்க்கவும் இவரிடத்தில் ஆசீ
ர்வாதம் பெறவும் விரும்பி மகா ஆசையோடு இவரை
சந்தித்து வெகு சங்கைபண்ணுவார்கள். இராஜாவா
னவர் தாம் சிறுபிராயத்தில் அனேக வருஷகால
இவரோடு வளர்க்கப்பட்டிருந்தமையால் இவர்மேபரி
விடாத பட்சத்தைக் கொண்டிருந்தார். இதினிமி
த்தம் இவர் வந்திருக்கிற செய்தி அறிந்தவுடனே
ரைத் தமது அரண்மனைக்கு வரவழைத்து மகாபக்ஷ
லதையும் வணக்கத்தையும் காட்டி வெகுவாய்ச் சந்தோ
ஷப்பட்டார். இராக்கினியானவள் இவரைக்
மாய் எண்ணிச் சங்கைசெய்து இவர் செய்கிற பூ
கண்டு இவருடைய கையினாலே தேவநற்கருணை வாங்
கப் பிரியப்பட்டாள். இவருடையதாயார் இன்ன
உயிரோடிருந்தமையால், இப்பேர்ப்பட்ட தன் மகனை
திரும்பக் காண்கிறபோது சந்தோஷத்தினாலேயும்
வியினாலேயும் அழுது மிகுந்த வார்த்தைக்கெட்டாத மன
மகிழ்ச்சியடைந்தாள். அதன்பின் இவர்சேசுசபை
க்குத் தலைவரான சிரேஷ்டருமாய் உரோமாபுரியில் எ
பேர்தம் வாசம்பண்ணுகிறவருமாயிருக்கிற பெரி
சுவாமியாருக்கு ஒரு விண்ணப்பம் எழுதிச் சிந்துதே
சத்திலுள்ள குருக்களையும் கிறீஸ்தவர்களையும் சேர
ந்த காரியங்கள் யாவையும் பற்றும் பற்றாய் அறிவி
பண்ணவேண்டுமென்றிக் தாம் தாமதமின்றிச் சிந்துதேசத்
திற்குப் போவதற்காகத் தம்மை உரோமாபுரிக்கு வர
[illegible] காரியங்களையும் சீக்கிரமாய்த் தீ
மானித்தனுப்ப வேண்டுமென்று உத்தரவு கேட்டுக்கொ
ண்டார். இராஜா இராக்கினி பிரதானிகள் முதலி

பெரியவர்களால் இவர் சங்கிக்கப்படுகிறபோது தற்
ருகிலும் தம்மைப் பெருமையாய் எண்ணாமல் மகா சிர
வணத்தோடும் தாழ்மையோடும் நடந்துகொண்டு வரு
வார். சிந்துதேசத்திலுள்ள குருக்களுடைய உடுபா
வனையை விடாமலும் வேறே பதார்த்தங்களைச் சாப்
பிடாமலும் கொஞ்சம் நெல்லுச்சோற்றையும் மரக்கறி
களையு மாத்திரமே சாப்பிட்டுத் தரையிலே நித்திரை
செய்வார். அர்ச். பாப்புவின் ஸ்தானபதியானவர்
ஒருநாள் இவரை விருந்துக்கு வரவழைக்கப்போனார்.
ஆயினும் அன்றுமுதலாய்த் தமது தவக்கிரியைகளை
விட்டுவிட்டவரல்ல. தமக்கு மிகவும் பிரியமுள்ள
சிந்துதேசத்தாரைச் சற்று மறவாமல் கிறீஸ்தவர்களை
விசாரிக்கவும் அஞ்ஞானிகளைத் திருப்பவும் வேண்டிய
குருக்களைக் கூட்டிக்கொண்டு சடுதியில் புறப்படவும்
[illegible] பிரயாசப்பட்டார். அதன்பின் எவோரு
கோணிம்பிரிக்கா என்னும் பட்டணங்களிலுள்ள சேசு
சபை சுவாமிமார்கள் சாஸ்திரங்களைப் படிப்பிக்கும்
பெயர்பெற்ற மடங்களுக்கு எழுந்தருளிப் போனார்.
இவர் சிந்துதேசத்தில் சத்தியவேதத்துக்காக அனுப
வித்த வருத்தங்களையும் நடத்தின சுகிர்த கிருத்தியங்
களையும் திருப்பின திரளான அஞ்ஞானிகளையும்
சாஸ்திரங்களைப் படிக்கிற சுவாமிமார்கள் கேள்விப்
பட்டு, அவரிடத்தில் வந்து கண்ணீரைச் சிந்தி முழங்
காலிட்டுத் தங்களை அந்தேசத்துக்குக் கூட்டிக்கொ
ண்டுபோகத் தெரிந்துகொள்ளவேண்டுமென்று இவ
ரை மகா ஆசையோடே மன்றாடினார்கள். இவர்
அவர்களுடைய மனத் திடாரிக்கத்தைப் பரிசோதிக்
கத் தக்கதாகச் சிந்துதேசத்திலுள்ள குருக்களுக்கு

## 3-ம் அதிகாரம்.

வெய்யிலினுலேயும் மழையினுலேயும் பசிதாகத்தினுலேயும் சாப்பாட்டு வகையினுலேயும் செய்யவேண்டிய பிரயாணங்களினுலேயும் அஞ்ஞானிகளுடைய இடைஞ்சலினுலேயும் நேரிடுகிற வருத்தப்பாடுகளைப் பாராட்டி இவைகளைச் சகிக்க உங்களுக்குத் திராணியுண்டோ இல்லையோவென்று பாருங்களென்ருர். இதைக்கேட்டு அவர்கள் அதிகமதிகமாய் ஆசைப்பட்டு தேவகிருபையினுலே இந்தத் துன்பங்களையெல்லாம் அநுபவித்து வேதத்துக்காக எங்களுடைய பிராணனைக்கொடுக்க வலிய மனதோடே துணிவோமென்ருர்கள். அவர்களுடைய தைரியத்தையுந் துணிவையுங் கண்டு இவர் சந்தோஷப்பட்டு அவர்களில் இளம்பிராயமுள்ள ஆறுபேரை மாத்திரம் தெரிந்துகொண்டார். தெரிந்துகொண்ட இந்த ஆறுபேர்களையல்லாமல் கல்விசாஸ்திரங்களில் தேறிச் சேர்ந்துபெற்ற மடங்களில் மேலான சாஸ்திரங்களைப் படிப்பித்துக்கொண்டுவருகிற சில சுவாமிமார்கள் இவரோடு தாங்களும் இந்துதேசத்துக்குப் போக உத்தரவு கொடுக்கருளவேண்டுமென்று சிரேஷ்டரிடத்தில் கேட்டார்கள். இப்பேர்ப்பட்ட சாஸ்திரிகளை விட்டுவிடுகிறதே பொல்லாப்பென்று சிரேஷ்டர் எண்ணமல், சிந்து இராச்சியங்களில் இவர்கள் தேவ ஊழியத்துக்கு நன்ருய் உழைப்பார்களென்று விசாரித்துக் கேட்ட உத்தரவைச் சந்தோஷமாய்க் கொடுத்தார். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் வாலிப சந்நியாசிகளையும் சாஸ்திரக் குருக்களையும் ஒருமிக்கச் சேர்த்து அவர்களை ஸ்திரப்படுத்தித் தவக்கிரியைகளில் பழக்கும்படிக்கு வருந்தினார். நாள்தோறும் அவர்களைக் கூட்டி

வைத்துப் பிரசங்கம்பண்ணி வரப்போகிற ஜனங்
களைப் பற்றும் பற்றாய் விவரித்துச் செய்யவேண்டிய
தரும கிரியைகளைப் படிப்பித்து மோக்ஷ பேரின்ப
இராச்சியத்தில் அவர்களுக்கு நியமித்திருக்கிற சம்பா
வனையை விரித்துரைப்பார். அல்லாமலும் அவர்கள்
சிறுபிள்ளைகளுக்கு ஞான உபதேசத்தைச் சொல்ல
வும் பிணியாளிகளுடைய மண்டபங்களில் வியாதி
யஸ்தருக்குத் தாழ்மையான ஊழியம் செய்யவும் சற்
றுக்கிராமங்களில் பிரசங்கிக்கவும் பண்ணுவார். இவர்
களெல்லாரும் இவருடைய புத்திமதிகளைக் கேட்டுக்
காண்பிக்கும் சகிர்த மாதிரிகைகளைக் கண்டுபாவித்து,
தேவசிநேக அக்கினியினால் நிரப்பப்பட்டு மேன்மே
லும் தேவ ஊழியத்தில் வருந்துவார்கள்.

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் மேற்சொல்
லிய குருக்களைச் சேர்த்ததின்பின் இந்துதேசத்தி
லுள்ள குருக்களுக்கும் கிறீஸ்துவர்களுக்கும் வேண்டி
ய ஒத்தாசைகளைச் சேகரிக்க எத்தனப்பட்டார். இது
வுந் தேவகிருபையினாலே யாதொரு வருத்தமுமில்
லாமல் நிறைவேறப்பட்டது. அதெப்படியென்றால்
இராஜாவானவர் அந்தியந்த பத்தியுள்ளவரும் சகல
தருமக் கிருத்தியங்களை நடத்துகிறவருமான [illegible]
அருளானந்தர் சொன்ன நியாயங்களுக்கிணங்கித்
தன் பொக்கிஷத்தினின்று இவருக்கு வேண்டியவை
களைக் கொடுக்கச் சித்தமானார். இதல்லாமலும் குருக்
களுடைய விசாரிப்பு முதலான செலவுகளுக்கு வரு
ஷந்தோறும் குறைவின்றிக் கொடுக்கும்படிக்குக் கட்
டளையிட்டார். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர்

இராஜாசெய்த உபகாரங்களைப்பற்றி நன்றியறிந்த மனதோடே இராஜாவுக்குத் தோத்திரம் பண்ணினார்.

---

## 2-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தமது பிரயாணத்துக்குச் செய்யப்பட்ட விக்கினங்களை ஜெயித்துச் சிந்துதேசத்துக்குத் திரும்பிவருகிற சரித்திரமாவது:

---

மேற்சொல்லிய பிரகாரமே முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தமக்கு குருக்களைச்சேர்த்துக்கொண்டு இராஜாவின் உதாரகுணத்தால் வேண்டிய ஒத்தாசையும் பெற்றுத் தாம் விரும்பினபடி உரோமாபுரியிலிருக்கும் அதி. சிரேஷ்டருடைய உத்தரவு கேட்டுக்கொண்டு திரும்பச் சிந்துதேசத்துக்கு வர எத்தனப்பட்டார். ஆனால் இவர் போகாதபடிக்கு ஓர் பெரிய விக்கினம் உண்டாயிற்று. அதெப்படியென்றால் இராஜாவானவர் தம்மோடு வளர்க்கப்பட்டவரும் தாம் மகா இஷ்டத்தோடு நேசித்திருந்தவருமான இவரைப் பார்க்கும்போது இவரோடு அநேக காரியங்களைப்பற்றிச் சம்பாஷணை பண்ணும்போது இவருடைய புண்ணியங்களையும் அபூர்வமான விவேகத்தையுங்கண்டு இவரை மிகவும் மதித்து நேசித்து இவரைத் தமது அரண்மனையிலிருக்கச் செய்யத் தீர்மானித்து, இனி இராஜாவைப்போல தமது குமாரனுக்குக் குருவாகவும் ஆசாரியராகவும் இவரை நியமித்து, இவர் தம்மிட

த்தில் எப்போதுமிருக்கவேண்டுமென்று தாற்பரியமாயிருந்தார். ஆனபடியினாலே ஒருநாள் இவரை அரண்மனைக்கு வரவழைத்துச் சாடையாகத் தம்முடைய கருத்தை இவருக்குக் காண்பித்தார். இவர் இராஜாவின் மனதைத் தாம் அறியாததுபோலக் காட்டும்போது இராஜா இவரைத் தனியே கூட்டிக்கொண்டுபோய் மறைவில்லாமல் தாம் பண்ணின தீர்மானத்தை வெளிப்படுத்தினார். அப்போதிவர் தமதுபேரில் இடி விழுந்தாற்போல துக்கித்து இப்பேர்ப்பட்ட உத்தியோகத்துக்குத் தாம் தகுந்தவரல்லவென்று பல நியாயங்களைச்சொல்லி இராஜா தம்மை விட்டுவிடவேணுமென்று கெஞ்சிக்கேட்டார். பிற்பாடு இராஜாவை நோக்கி, மகா இராஜாவே, நீர் அடியேன்பேரில் வைத்த அத்தியந்த பக்ஷத்தைப்பார்த்தாலும் நீர் எப்போதும் காட்டின தேவசிநேகத்தைப்பற்றியென்கிலும் என்னை உம்மிடத்தில் நிறுத்தி எனக்கியலாத உத்தியோகத்தைக் கட்டளையிட்டு எனக்குப் பிரியமுள்ள ஞானப்பிள்ளைகளைத் திரும்பப் பார்க்கிறதற்கு விக்கினம் செய்யாதேயும். நான் அரண்மனையில் சுகமாயிருக்கையில் எண்ணிக்கையில்லாத ஆத்துமாக்கள் கெட்டுப்போகிறார்களென்று நினைப்பேனாகில் பொறுக்கப்படாத கஸ்தி உண்டாகுமே என்றார். இதற்கு இராஜா நீர் அரண்மனையினின்று சிந்துதேசத்துக்கு மற்றக் குருக்களை அனுப்பி அவர்களைக்கொண்டு வேண்டிய கிருத்தியங்களை நடத்திச் சர்வேசுரனுக்கு அதிக மகிமையும் திருச்சபைக்கு வெகு பிரயோசனமும் வருத்துவிப்பீரோவென்று சொல்ல, இவர் அப்படியல்லவே, நான் இளைப்பாற்றியிலிருக்க மற்றவர்

களைச் சண்டைக்கு அனுப்புவது தகுமோ? நானே போகாமல் பிறரை எவினாலும் போவார்களோ? ஆகையால் மகா இராஜாவே உமது மனச்சாக்ஷியறிய நரகத்துக்குப்போகிற அனேக ஆத்துமாக்களுக்கு மோக்ஷவாசலை அடைக்கிறது பாதகமல்லவோவென்று, இராஜா சொன்னதற்குச் சம்மதியாமல் புறப்பட்டுப் போனார். ஆனால் அப்பேர்ப்பட்ட சமயத்தில் தம்முடைய இஷ்டத்தின்படியே நடக்கக்கூடாதென்று யோசித்து, உரோமாபுரியிலிருக்கும் அதி சிரேஷ்டருக்குக் காகிதமெழுதி இராஜா சொன்ன நியாயங்களையும் தாம் அதற்குச் செய்த ஆக்ஷேபனைகளையும் அறிவித்துத் தாம் என்னசெய்கிறதென்று அறிவிக்கக் கேட்டார்.

இதற்குள்ளாக இராஜாவானவர் அருளானந்தர் தமக்குச்சொன்ன நியாயங்களை ஆராய்ந்துபார்த்து அவரை நிறுத்துகிறது பாவமென்று பயந்து, இதைக் குறித்துச் சாஸ்திரிகளுடைய ஆலோசனையைக் கேட்கச் சித்தமானார். ஆகையால் சில சாஸ்திரிகளை வரவழைத்துத் தாம் நினைத்த கருத்தையும் அதற்கு அருளானந்தர்சொன்ன விக்கினங்களையும் இவர்களுக்கறிவித்து நீங்கள் சர்வேசுரனுடைய சமுகத்தில் நாம் நினைத்த உத்தியோகத்துக்குச் சுவாமியாரைப் பாவமில்லாமல் நிறுத்தக்கூடுமோ இல்லையோவென்று சொல்லுங்களென்றார். அப்போதிவர்கள் ஆலோசனைசெய்து சுவாமியாரை நிறுத்தக்கூடாதென்று சர்வேசுரனுடைய சித்தம் தெளிவாய்க் காணப்படுகிறபடியால் அவரை நிறுத்துவது ஆகாதென்றார்கள். அப்பொழுது இராஜா சம்மதியாமல் வெகுவா

ஆலோசித்துக் கடைசியாய்ச் சுவாமியாருடைய விருப்பத்துக்கிடங்கொடுத்தார். சுவாமியார் விக்கினமெல்லாம் நீங்கிப்போனதாக நினைத்து இராஜாவைப் போற்றித் தம்மோடு வருகிற குருக்களைக் கப்பலிலேற்றிச் சகல காரியங்களையும் தீர்மானித்துத் தாமும் கப்பலில் ஏறப் புறப்பட்டார். இவர் நடுப்பட்டணத்தில் அரண்மனைக் கருகே போகிறபோது இவருக்கிஷ்டமுள்ள பிரதானி யொருவன் இவருக்கெதிராய் வந்து, நீர் இன்னமொருவிசை இராஜாவைக் கண்டுகொள்ள வேண்டுமென்று கபடமாய்ச் சொன்னான். அரண்மனையில் கொஞ்சநேரம் தாமதம் பண்ணினால் ஒருவேளைக் கப்பல் பாய்விரித்துப் போகுமென்று இவர் பயந்து உள்ளே பிரவேசியாதிருக்கையில் பிரதானி நானும்மைக் கப்பலுக் கனுப்புவேனென்று சொன்னதின்பின் இராஜ சமுகத்துக்குப்போனார். இராஜாவும் இராக்கினியும் இவரைக்கண்டு வெகு பக்ஷத்தைக்காட்டித் தங்கள் பிள்ளைகளை இவருக்கு முன்பாக நிறுத்தி இவர்களுக்கு நற்புத்திசொல்லி ஆசீர்வாதந் தரக் கேட்டார்கள். மந்திரிகளும் பிரதானிகளும் பரிசாரகரும் இராஜாவின் மனதை நன்றறிந்து பற்பல உபாயங்களைச் செய்து இவரைத் தாமதப்படுத்தப் பிரயாசப்பட்டார்கள். கடைசியிலே சுவாமியார் தமக்குச் செய்யப்படுகிற கபடத்தைக் கண்டுபிடித்து, இராஜாவின் உத்தரவைப்பெற்று மகா அவசரத்தோடு ஓட்டமாய்ப்போய்க் கப்பல் துறைக்குச் சேர்ந்தார்.

ஆனால் அப்பொழுது, அரண்மனையினின்று வந்த கட்டளைப்படி கப்பலானது நங்கூரந் தூக்கிப் பாய்

விரித்துத் திவிரித்துப் போகிறதாகக் கண்டார். உடனே ஓர் சிறு பட்டிலேறிக் கப்பலில் சேர பிரயாசப்பட்டார். இப்படியுள்ளவர்கள் தண்டுவலித்து எவ்வளவு பிரயாசப்பட்டாலும் பாய்விரித்தோடுகிற கப்பலைச் க்குப்போய்ச் சேரக்கூடுமோ? ஆகிலும் அருளானந்தர் தமக்கு அநேக சகாயங்களைக் கட்டளையிட்டிருக்கிற அர்ச். சவேரியாரை நோக்கி வேண்டுதல்பண்ணி எப்படியாகிலும் தம்மைக் கப்பலுக்குச் சேர்த்தருளவேண்டுமென்று மன்றாடினார். அரண்மனையினின்று வந்த கட்டளையை அறியாமல் கடல் துறையில் அதிகாரம் செலுத்திக்கொண்டு வருகிற பிரதானியானவன் சுவாமியார் ஆபத்துப்படுகிறதைக் கண்டு ஓர் பெரிய கப்பலை அனுப்பிச் சுவாமியாரைக் கப்பலில் சேர்ப்பித்தான். இவரோடே இந்துதேசத்துக்கு வருகிற குருக்கள் இவரைக் காணாமல் அங்கலாய்த்து மிகவும் துக்கப்பட்டுக் கொண்டிருந்தார்கள். இவர் அக்கப்பலில்போய்ச்சேரவே யாவரும் இவரைப் பக்ஷத்துடன் அணைத்து மனோவாக்குக்கெட்டாத சந்தோஷமடைந்து சர்வ கிருபையுமுடைத்தான சர்வேசுரனுக்குத் தோத்திரம்பண்ணினார்கள். இவர் கப்பலில் ஏறினவுடனே சகலருக்கும் புத்திமதி சொல்லித் தாழ்மையான பணிவிடைசெய்து எல்லாரையும் நல்லவர்களாக்க வருந்தினார். கப்பற்காரருக்குள் ஓர் கடின வியாதி பரம்பி அவர்களில் நாற்பதுபேர் செத்துப்போனார்கள். அச்சமயத்தில் அருளானந்தர் வியாதிஸ்தரைப் பேணி நன்றாய் விசாரித்து இரவும் பகலும் வருத்தப்படுவார். இவ்வளவு வருத்தங்களைப் பொறுக்கமாட்டாதவராய் இவரும் வியாதியாய் விழுந்து அவஸ்தையானார். கப்பலி

73



விருந்த பெரியவனொருவன் அவருக்கு வேண்டிய ஒத்தாசை பண்ணுகிறபோது அவரை நோக்கி: "சுவாமியாரே! நீர் சாவீரென்று எல்லாரும் பயப்படுகிறோம்" என்றான். அதற்கு இவர்: "என்மட்டில் கவலைப்படாதேயுங்கள், என்னோடு வருகிற சுவாமிமார்களைத் தானே நன்றாய் விசாரியுங்கள்; மதுரை இராச்சியத்தில் அநேக அஞ்ஞானிகள் என் கையால் ஞானஸ்நானம்பெறக் காத்திருக்கிறபடியினாலே இப்போது நான் சாகப்போகிறதில்லை" என்றார். இந்த வார்த்தைகள் இவர் தீர்க்கதரிசனமாய்ச் சொன்னப்போலாயிற்று. அதேதெனில் கொஞ்ச நாட்களுக்குள்ளாக இவருக்கு சவுக்கியமுண்டாக, மற்ற சுவாமிமார்களில் இருவர் வியாதியால் செத்தார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் ஆரோக்கியமடைந்தவுடனே வியாதிக்காரருக்கு வேண்டிய பணிவிடை செய்து எல்லாரையும் நன்றாய் விசாரித்து வந்தார். ஏழுமாதமளவும் சமுத்திரயாத்திரையிலிருந்து வெயிலினாலேயும் குளிரினாலேயும் எதிர் காற்றினாலேயும் காற்றின்மையினாலேயும் இரோகச் சோர்வினாலேயும் மிருந்த து[illegible]ய வாதைகளை அனுபவித்துக் கடைசியாய்க் கோவைப் பட்டணத்துக்கு வந்து சேர்ந்தார்.

## 3-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் மதுரா இராச்சியத்திற் சேர்ந்த வர்த்தமானமாவது :

வேடர் கையில் அகப்பட்டு நெடுநாள் இருந்தின இராஜகுமாரனொருவன் மீட்கப்பட்டுத் தனது ஜென்ம தேசம்போய்ச் சேரும்போது எவ்வளவு சந்தோஷப் படுவானோ, அவ்வண்ணமே முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் பொர்த்துக்கால் இராச்சியத்திலும் இராஜ அரண்மனையிலும் தமக்குச் செய்யப்பட்ட சங்கை புகழ்ச்சிகளுக்குத் தான் தப்பினதாகக் கருதி மிகவும் களிகூர்ந்து கோவைப்பட்டணத்தில் சேர்ந்தார். இராஜாவானவர் இவரை நிறுத்துவதற்குத் தாம் பட்ட பிரயாசமெல்லாம் வீணாய்ப்போனதைக்கண்டு, இவரைத் திரும்பவும் சிந்துதேசத்தினின்று வரவழைப்பதற்கான வழியெல்லாந் தேடினாராமே. அதெப்படியென்றால், சேசுசபையின் மேலான சிரேஷ்டருக்கு ஓர் நிருபம் எழுதச்செய்து, தாம் அந்நாள்மட்டும் சேசுசபையாருக்குச்செய்துவந்த உபகாரங்களைப் பாராட்டியும், தாம் நெடுங்காலமாய் அருளானந்தர்பேரில் வைத்திருந்த பக்ஷத்தைக் காண்பித்தும், அவரைத் தமது ஆலோசனைக்காரராகவுந் தமது குமாரனுக்குப் போதகராகவும், அதனால் சத்தியவேதத்துக்குஞ் சிந்துதேசத்திலுள்ள குருக்களுக்கும் எவ்வளவோ பிரயோசனமுண்டாகுமென்றும் விவரித்துக்காட்டி, எப்படியாகிலும் அவரை வரவழைக்க வேண்டுமென்று மகா ஆசை

யோடே கேட்டுக்கொண்டார். இதற்குச் சிரேஷ்டரானவர் மறுமொழியாக, இராஜாவினுடைய பத்தி விசுவாசத்தையும் தயாளக் கிருபையையுங் கொண்டாடி, திரளான அஞ்ஞானிகளைத் திருப்பின் இரண்டாம் சின்னப்பனாய்ப்போலவும், அனேகந்தேவவரங்களையடைந்த அப்போஸ்தலனைப்போலவும் இருக்கிற அருளானந்தனை வரவழைப்பது தேவசித்தத்துக்கு ஏற்குமோ என்பதை இராஜாதானே யோசித்துப்பார்க்கவேண்டுமென்று எழுதியனுப்பினார். இதையறிந்த இராஜா தமது விருப்பம் தேவதிருவுளத்துக்கு விரோதமாகுமென்று அஞ்சிப் பின்வாங்கினார். ஆயினும் இராக்கினியானவள் மறுபடியும் இதைக்குறித்து மேலான சிரேஷ்டனை நயந்து கெஞ்சித் தன் குமாரனுக்கிரங்கித் தங்களாசையைத் தடுக்காமல், எப்படியாகிலும் அருளானந்தனை வரவழைத்தருள வேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். மேலான சிரேஷ்டர் இராஜாவுக்கனுப்பின மறுமொழிப்பிரகாரமே எழுதினமையால், இராக்கினி மிகவும் துக்கித்துத்* தன் விருப்பத்தை விட்டுவிட்டாள். கடைசியாய் இராஜாவும் இராக்கினியும் தங்கள் நேசத்துக்குரிய அருளானந்தனை வரவழைத்துக்கொள்ள கூடாமையைக்கண்டு, இவனை கிரங்கனூர் அதிமேற்றிராணியாராகவாவது ஸ்தாபிக்கத் தீர்மானித்தார்கள். ஆகிலும் எவ்வித சங்கையையும் அருவருக்கிற அருளானந்தர் இதற்குச் சம்மதியாததைப்பற்றி, இவர் சித்தத்தின்படி ஆகட்டுமென்றிருந்துவிட்டார்கள்.

இப்படியாக பொர்த்துக்கால் இராச்சியத்தில் நடந்தேறுகையில் முன்சொன்னபிரகாரமே அருளானந்தர்

கோவையிற் சேர்ந்தார். அப்பட்டணத்தாரெல்லோரும் வெகுவாய் அகமகிழ்ந்து அவர் வந்ததை ஓர் பெரிய திருவிழாவைப்போல் பிரபலியமாகக் கொண்டாடினார்கள். குருப்பட்டம் பெறுவதற்குவேண்டிய சாஸ்திரங்களை படிப்பதற்கு சிந்துதேசத்தின் பற்பல நாடுகளினின்று அர்ச். சின்னப்பர் மடத்தில் கூடின வாலிபர்கள் கீதவாத்தியத்தோடு அவருக்கு எதிரேபோய் மகா ஆடம்பரமாய் அவரை மடத்துக்குக் கூட்டிக்கொண்டுவந்து சிலநாள் அவரைப் பாடிப் புகழ்ந்து பாராட்டிக்கொண்டிருந்தார்கள். இராஜாவின் ஸ்தானாதிபதியும், தலைவன் முதலிய பெரியோர்கள் யாவரும், இவருக்கு வெகுபட்சத்தைக்காட்டி வெகுசங்கைபண்ணினார்கள். மனத்தாழ்ச்சி நிறைந்த அருளானந்தர், தமக்குச் செய்யப்படுகிற சங்கையுங் கொண்டாட்டமும் பொறுக்கமாட்டாதவராய், யாதொரு தாமதமின்றி மதுரையிராச்சியத்துக்குப்போக சிரேஷ்டருக்கு விண்ணப்பம் எழுதி உத்தரவுகேட்டார். சிரேஷ்டர் இவருக்கு மறுமொழி எழுதி, ஐரோப்பா தேசத்தில் இவர் அநுகூலப்படுத்தின காரியங்களைப்பற்றி இவரைப் புகழ்ந்து, தாம் இருக்கிற திருவாங்கோட்டு இராச்சியத்துக்கு வரக்கட்டளையிட்டார். அருளானந்தர் உடனேபுறப்பட்டு அவ்விடத்துக்குப்போய்த் தாம் செய்ததெல்லாம் சிரேஷ்டருக்குப் பற்றும்பற்றாய் விவரித்தார். சிரேஷ்டரானவர் அநேக வருஷகாலமாக இத்தேசங்களில் வருந்தின சில குருக்களைக் கூட்டி, அவர்களோடும் அருளானந்தரோடும் வேதகாரியங்களைக் குறித்து ஆலோசனைபண்ணினார். சகல காரியங்களையுந் தீர்மானித்தபிறகு; மதுரை, தஞ்சையூர்,

செஞ்சி, வேலூர், கோலகொண்டாபுரம் முதலான இராச்சியங்களிலுள்ள குருக்களுக்கும், கிறீஸ்துவர்களுக்கும் மேல்விசாரணைக்காரராக அருளானந்தரை நியமித்து அனுப்பினார். செஞ்சியிராச்சியமான புதுச்சேரியில் குடியேறி வாசம்பண்ணின பிராஞ்சுக்காரர், அத்தேசத்திலுள்ள சுவாமிமார்களுக்கு வெகு உபகாரங்களைச் செய்துகொண்டிருந்தார்கள். ஆகையால் அருளானந்தர் புதுச்சேரிக்கு எழுந்தருளிப்போய், பிராஞ்சு இராஜாவின் ஸ்தானபதியான மர்த்தீனென்னும் பெரிய தலைவனுக்கும் மற்ற உத்தியோகஸ்தருக்கும் நன்றியறிந்த தோத்திரஞ்சொல்லி, அதிலுள்ள சேசுசபைக் குருக்களுடன் ஒருமாதமளவும் வசித்திருந்தார். யாவரும் இவருடைய அதிர்த நடபடிக்கைகளைக் கண்டு தேவசிநேக அக்கினியால் நிறைந்த உணர்ச்சிகளைக் கேட்டு அதிசயப்பட்டு இவரை மகா அர்ச்சியசிஷ்டவராக எண்ணிச் சங்கைபண்ணுவார்கள்.

கடைசியாய் முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தாம் இடைவிடாமல் விரும்பிக்கொண்டிருந்தபடியே தென் இராச்சியங்களுக்கு எழுந்தருளிவந்தார். முன் தாம் வெகு வருத்தத்தோடு சுற்றித்திரிந்த நாடுகளையும் தம்முடைய ஞானப்பிள்ளைகளையும் திரும்பப் பார்க்கிறபோது அவரடைந்த சந்தோஷம் எவ்வளவென்று சொல்லவுங் கருதவுங்கூடாது. குருக்களும் கிறீஸ்துவர்களும் தங்களுடைய ஞானத்தகப்பனைப் பார்த்தபோது அத்தியந்த சந்தோஷத்தை அனுபவித்தார்களாமே. முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தமக்களிப்பட்ட உத்தியோகத்தைச் செலுத்தத்தக்கதாக, மேற்சொல்லிய இராச்சியங்களில் மகா பிரயாசத்

துடன் சுற்றித்திரிந்து, குருக்களெல்லாரையும் சந்தித்துத் தேற்றித் தேவசினேக அக்கினியால் நிரப்பி, யாவர்க்கும் புத்திமதிகளைச் சொல்லிக்கொண்டுவந்தார். இவர் இதெல்லாத்தையும் நடத்துகிறபோது எந்த இடத்திலாவது இவரை நிறுத்தக் குருக்களும் கிறீஸ்தவர்களும் பிரயாசப்பட்டாலும், இவருடைய விருப்பமும் பற்றுதலும் மறவன் தேசத்திலிருந்ததாமே. அதிலே திரளான அஞ்ஞானிகளை மனந்திருப்பிச் சேசுக்கிறீஸ்துநாதருக்காக அதிக வருத்தங்களை அநுபவித்திருந்தார். அவ்விடத்தில்தானே வேதசாட்சிகளுடைய பிரதாபமுள்ள கிரீடம் தமக்குக் கொடுக்கப்படுமென்று தூரதிஷ்டியினாலே அறிந்திருந்தார். ஆகையால் தன் கன்றைப் பிரிந்து தேடும் பசுவைப்போல அருளானந்தருக்கு மேல்விசாரணை முடிந்தவுடனே மறவன்தேசத்துக்குத் தீவரித்துப்போனார்.

---

## 4-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் மறவன் தேசத்தில் நடத்தின சுகிர்த கிருத்தியங்களாவன :

---

ஆதித்தன் உதித்துப் பூமியின் எப்பக்கத்திலும் உஷ்ணத்தையும் பிரகாசத்தையும் பொழிந்து உச்சிமத்தியானத்துக்குச் சேருமளவில், அதிக பிரதாப ஒளியோடு இலங்குமாப்போல, முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இத்தேசத்துக்கு வந்த நாள்முதற்கொண்டு

வேதசாட்சியாக மரிக்குமளவும் நாளுக்குநாள் அதிகமதிகமாய்த் தேவசினேக அக்கினியினாலெரிந்து யாவரும் அதிசயிக்கச் சகிர்த கிருத்தியங்களை நடத்தினாரமே. இவர் மறவன்தேசத்தைவிட்டு ஐரோப்பாக்கண்டத்துக்குப் போனதின்பின், மறவன்தேசத்திலுள்ள கிறீஸ்துவர்களுக்கு நெருக்கிடை வருமென்று பயந்து குருக்களொருவரும் அவ்விடத்துக்குப் போகாதிருந்தார்கள்.

ஆகையால் தகப்பனற்ற பிள்ளைகளைப்போலேயும், இடையனில்லாத ஆட்டுக்குட்டிகளைப் போலேயும், இந்தப் புதுக் கிறீஸ்துவர்கள் வேண்டிய விசாரணை இல்லாதிருந்தார்கள். இப்படியிருந்தாலும், அவர்களுக்குள் சத்தியவேதங் குறையாதிருந்ததன்றியே பெரியவர்களில்முதலாய் அனேகர் ஞானோபதேசங் கேட்டு ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டிருந்தார்கள். மற்ற அனேக அஞ்ஞானிகள் சத்தியவேதத்தின்பேரில் பற்றுதல்வைத்து அதை எப்போது ஏற்றுக்கொள்ளக்கூடுமோவென்று ஆவலுடன் காத்திருந்தார்கள். கிறீஸ்துவர்களும், அஞ்ஞானிகளில் திரளான பேர்களும், அருளானந்தசுவாமியார் இந்தத்தேசத்துக்கு மறுபடியும் எழுந்தருளிவந்தாரென்கிற செய்தியை அறிந்து, அவரைக்காணவேணுமென்று மிகவும் ஆசைகொண்டிருந்தார்கள்.

ஆனதால் மறவன் தேசத்துக்கடுத்த இடங்களில் இவர் வந்திருக்கிறாரென்ற செய்தியைக் கேட்டதும், கூட்டங்கூட்டமாய் அவரண்டைக்குப் போவார்கள். தன் பிள்ளைகளைவிட்டுப்பிரிந்து அனேகவருஷம் தூர தேசம் போயிருந்த தகப்பனை அவர்களைத்

திரும்பப் பார்க்கிறபோது எவ்வளவு சந்தோஷப்படுவானோ, அப்படியே முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் தமக்கு மிகவும் பிரியமுள்ள பிள்ளைகளான மறவன்தேசத்தாரை திரும்பப்பார்க்கும்போது சொல்லிமுடியாத சந்தோஷமடைந்தார். ஆனாலும் இதில் அவர்களுக்கு இடைஞ்சலும் தொந்தரவும் நேரிடாதபடிக்கு, இவர்களுடைய நாடுகளில் உடனே பிரவேசியாமல், அடுத்த இடங்களில் வாசம்பண்ணினார். மதுரை இராஜாவுக்குக் கப்பங்கட்டிக்கொண்டும் தனது பூமியில் சுய அதிகாரஞ் செலுத்திக்கொண்டும் ராச்சிய பரிபாலனம் செய்துவந்த மூனியூரின் துரையைச் சந்திக்கப்போனார். இந்தத் துரையானவன் இவருடைய ஆரிய தவத்தையும் தருமக்கிரியைகளையும் சுகிர்த நடபடிக்கைகளையும் கண்டறிந்து, இவரை மகிமைப்படுத்தி இவர் விரும்பினதுபோல் தன் அதிகாரத்திலுள்ள நாடுகளில் சத்தியவேதத்தைப் போதிக்கவுங் கோவில்களைக் கட்டவும் உத்தரவு கொடுத்தான். ஆகையால் இவர் மறவன் தேசத்தின் எல்லையில்தானே ஓர் கோவிலைக்கட்டுவித்து அதில் வாசம்பண்ணினார். மட்டில்லாத கிருபையுடைத்தான சர்வேசுரன் இத்தேசத்தின்பேரில் தம்முடைய வரப்பிரசாதங்களை ஏராளமாய்ப் பொழிகிறதினாலே எண்ணிக்கையில்லாத பெயர்கள் மகா ஆசையோடே சுவாமியாரிடத்தில் வந்து வேத உபதேசங்கேட்டுத் தீட்சை பெறுவார்கள். வருகிற ஜனங்களுக்கு கட்டின கோவில் போதாமையால், இவர் ஓர் விஸ்தாரமான மைதானத்தில் பீடம்போட்டு திவ்வியபூசை பண்ணிப் பிரசங்கஞ்செய்வார். அவ்வளவான ஜனங்கள் அத்தியந்த பத்தியோடே பீடத்

தில் இறங்குகிற கர்த்தரை வணங்குகிறதையும், யாதொரு பராக்கின்றிச் சுவாமியார் சொல்லுகிற புத்திமதிகளைக் கேட்கிறதையும், பொறுக்கமுடியாத ஆசையோடே தங்களுக்கு ஞானதீட்சை கொடுக்கவேண்டுமென்று மன்றாடுகிறதையுங்கண்டு சம்மனசுக்கள்முதலாய் அதிசயப்படுவார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் அனேகம்விசை திரளான பெயர்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறபோது, அர்ச். சவேரியாருக்குச் சம்பவித்தாப்போலே ஞானச் சடங்குகளை நிறைவேற்றக் கையை உயர்த்தி நிறுத்தக்கூடாமையால், இவருடைய கையை உபதேசிமார்கள் தாங்கிக்கொண்டிருப்பார்கள். இப்பிரகாரமாய் வலித்தேவலென்ற ஊரிலே ஒரேநாளில் 3,000 பெயர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, 10 நாட்களில் 1,2000 பெயர்களுக்கு ஞானதீட்சை கொடுத்தாரென்று கண்ணாலே கண்டபெயர்கள் ஆணையிட்டுச் சாட்சிசொன்னார்கள். இப்படியுங் கொஞ்சமாதத்துக்குள் எண்ணிக்கையில்லாத பெயர்களுக்குத் தமது கையினாலே ஞானஸ்நானங் கொடுத்தார். சத்தியவேதத்தைக் கைக்கொள்ள விரும்பின பெயர்கள் எல்லாரும் முனியூர்க் கோவிலுக்குப் போகக் கூடாமையாலும், அவ்விடத்துக்குப் போனவர்களில் அனேகர் மந்திர உபதேசம் நன்றாய்க் கற்றுக்கொள்ளுமளவும் நிற்கக்கூடாமையாலும், முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் மறவன் தேசத்துக்கடுத்த அடர்ந்த காடுகளில் மூன்று கோவில்களைக் கட்டுவித்தார். இந்தக் கோவில்களில் சில உபதேசிமார்களை ஏற்படுத்தி, சுற்றுக்கிராமங்களினின்று வேதத்திற் சேரவிரும்பி வருகிறவர்களை இந்த, உபதேசி

மார்கள் வேண்டிய ஆயத்தப்படுத்தினபின் அவர்களைக் கூட்டங் கூட்டமாய் ஞானஸ்நானம்பெறச் சுவாமியாரிடத்துக்குக் கூட்டிக்கொண்டு போவார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இரகசியமாய் அனேகம்விசை அந்தக் கோவில்களுக்கு எழுந்தருளிப்போய்க் கிறீஸ்துவர்களை ஸ்திரப்படுத்தி ஆறுதல் சொல்லித் திரளாய் வருகிற அஞ்ஞானிகளுக்குச் சத்தியவேதத்தின் மகிமையை விவரிப்பார். சர்வ வல்லபமுள்ள சர்வேசுரன் தமக்குகந்த சிஷனாகிய அருளானந்தர் பட்ட பிரயாசத்துக்கும் அனுபவித்த வருத்தங்களுக்கும் இரங்கி, யாவருக்கும் சேசுக்கிறீஸ்துநாதருடைய வேதமே மெய்யென்று ஒப்பிக்கும்பொருட்டு இவர் மூலமாய் எண்ணிக்கைக்குள்ளடங்காத அற்புதங்களைச் செய்யத் திருவுளமானார். இராச வியாதியுள்ளவர்களும் பசாசினுற் பீடிக்கப்பட்டவர்களும் ஞானஸ்நானம் பெறுகிறபோதாவது மந்திரிக்கப்படுகிறபோதாவது தீர்த்தந் தெளிக்கப்படுகிறபோதாவது அசுப்பிலே ஆரோக்கியம் அடைவார்கள். ஆகையால் சத்தியவேதம் நாளுக்குநாள் அதிகமதிகமாய்ப் பரம்பி அத்தேசத்தில் எங்கும் ஸ்திரப்பட்டுக் கொஞ்சத்துக்குள் எல்லோரும் அஞ்ஞானத்தைவிட்டுக் கிறீஸ்துவர்களாவார்களென்று கொடிய பசாசுகளினுல் ஏவப்பட்ட பிராமணர் கண்டு, இவ்வற்புதச் செய்கைகளுக்குக் காரணமாயிருந்த சுவாமியாரை எப்படியாவது கொல்லவேண்டுமென்று தீர்மானித்தார்கள்.

## 5-ம் பிரிவு.

### பிரபுதுரையான தடியத்தேவன் அற்புதமாய் மனந்திரும்பின வர்த்தமானமாவது:

மறவன்தேசத்து இராஜாவாகிய இரங்கநாதத்தேவனுடைய இட்டின உறவாகிய தடியத்தேவனென்னும் ஓர் பெரிய தலைவனிருந்தான். தலைமுறை தலைமுறையாய் இவனுடைய கோத்திரத்தில் இராஜாங்கம் வழங்கிக்கொண்டிருந்தாலும், இரங்கநாதத்தேவன் பலவந்தமாய் இராச்சியபாரம் பண்ணிக்கொண்டிருந்தான். ஆகிலும் தடியத்தேவனுடைய கீர்த்த குணத்தையும் உதாரத்தையும்பற்றி எல்லாரும் இவன்பேரில் வெகு பக்ஷம் வைத்திருந்தார்கள். அல்லாமலும் இவன் தனது வீரசூரத்தாலும் போர்ச் சண்டைகளில் காட்டிய அஞ்சாத தைரியத்தாலும் பாடைச் சேவகரையும் தலைவர்களையும் கைவசப்படுத்தி இருந்தான். ஆனால் இவனுக்கு எவ்வகைப் பரிகாரத்தாலும் சொஸ்தமாகாத ஓர் வியாதி உண்டாயிருந்தது. இவன் அவஸ்தையாய்க் கிடக்கிறபோது சத்திய வேதத்தின் மகிமையான இலக்ஷணங்களையும், அருளானந்த சுவாமியார் பண்ணும் அற்புதங்களையும் கேட்டு, இந்த வேதத்தைக் கைக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான். ஆனதால் ஒருவனைச் சுவாமியாரண்டைக்கு அனுப்பி, தான் புதுமார்க்கத்தை ஏற்றுக்கொள்ளவும், தான் அவருக்கு ஞானச் சீஷனாகவும் ஆசையாயிருப்பதால், சுவாமியார் தன்னிடத்துக்கு

எழுந்தருளிவரவேண்டுமென்று மன்றாடினான். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இந்த செய்திகேட்டுச் சந்தோஷப்பட்டு உடனே அவனண்டைக்குப்போக விரும்பினார். ஆயினும் இராஜாவினால் வேதம் போதிக்கக்கூடாதென்று விலக்கப்பட்ட தேசத்தில் பிரவேசித்தால் அதிகப்பொல்லாங்கு நேரிடுமென்றெண்ணி, தாம் போகாமல் புத்திக் கூர்மையுள்ள ஓர் உபதேசியை அனுப்பி, தலைவனுடைய உறுதியையும், மனதுமுதலிய காரியங்களையும் பரிசோதித்து தமக்கு அறிக்கையிட வேண்டுமென்று கற்பித்தார். உபதேசியார் தலைவனுடைய அரண்மனைக்குச் சேர்ந்தபோது தலைவன் அதிக அவஸ்தைப்பட்டுச் சாகிற தறுவாயிலிருந்தான். உபதேசியார் அத்தருணத்தில் சொல்லவேண்டிய ஞாயங்களைச் சொல்லி, கிறீஸ்துவர்கள் வணங்குகிற ஏக கடவுளை உறுதியாக நம்பவேண்டுமென்று கற்பித்து, தலைவன்பேரில் விசுவாசமந்திரத்தையும் சுவிசேஷ வார்த்தையையும் உச்சரித்தார். அக்ஷணமே அங்கிருந்தவர்களெல்லாரும் அதிசயிக்க, அவஸ்தையாய்க்கிடந்து சாகப்போகிற தடியத்தேவன் எழுந்திருந்து யாதொரு வருத்தமும் வியாதியுமின்றி திடமுள்ள வாலிபனைப்போலே நடந்தான். இவ்வதிசய அற்புதத்தைக் கண்ட தடியத்தேவன் சத்திய வேதமே மெய்யென்று அங்கீகரித்துத் தேவ கிருபையால் உறுதியடைந்து, எப்படியாகிலும் ஞானஸ்நானம் பெறவேண்டுமென்று சொல்லி, சுவாமியார் சீக்கிரமாய் வரும்படியாக மன்றாடி, அவரண்டைக்கு ஸ்தானாபதிகளை அனுப்பினான். கருணாம்பர சர்வேசுரன் இந்தத் தலைவனுக்குக் கட்டளையிட்ட சகாயத்தை

அறிந்த சுவாமியார் அத்தியந்த சந்தோஷத்தை அனுபவித்தார். அத்தேசத்தில் பிரவேசித்து எண்ணிக்கையில்லாத ஜனங்களைச் சத்தியவேதத்துக்குத் திருப்ப நற்சமயம் கிட்டினதாகத் தோற்றினதும், தம்மைப்பற்றிக் கிறீஸ்துவர்களுக்கு இடைஞ்சலும் நெருக்கிடையும் நேரிடுமென்று பயந்திருந்தார். சர்வேசுரனுடைய சித்தத்தை அறிவதற்கு மகா பத்தியோடு வேண்டிக்கொண்டபின், உபதேசிமார்களையும் விவேகமுள்ள சில கிறீஸ்துவர்களையுங் கூட்டிக்கூட்டி, சகலத்தையும் அவர்களுக்கு அறிவித்து, தடியத்தேவன் கேட்டுக்கொண்டபடி தாம் போவது நலமோ இல்லையோவென்று அவர்களை ஆலோசனைகேட்டார்.

அதற்கு இவர்களெல்லாரும் தெய்வ செயலையால் இந்தச் சமயம் கிடைத்ததென்றும், தடியத்தேவன் ஞானஸ்நானம் பெறுவானேயாகில் கிறீஸ்துவர்களுக்கு வெகு ஆதரவாயிருப்பானென்றும், அவனைக்கொண்டு எண்ணிக்கையில்லாத அஞ்ஞானிகள் மனந்திரும்புவார்களென்றும், இவை முதலிய நியாயங்களைச் சொல்லி எப்படியாகிலும் போகத்தான் வேண்டுமென்று தீர்மானித்தார்கள். நெடுநாள் யுத்தஞ்செய்யாமல் தடுக்கப்பட்டிருந்த வீரனானவன் தடை நீங்கினதும் போர்க்களத்திற்பாய்ந்து மகாவீரத்தோடு யுத்தஞ்செய்வதுபோல அருளானந்தர் சேசுக்கிறீஸ்துநாதருக்காக ஞான யுத்தங்களைப் பொருத உண்டான விக்கினமெல்லாம் நீங்கிப்போயிற்றென்று எண்ணித் தடியத்தேவனிடத்துக்குத் தீவிரித்துப்போனார். தடியத்தேவன் சுவாமியாரைக் கண்டதும், மோக்ஷமண்டலத்தில் நின்று இறங்கிவந்த ஓர் சம்மனசை ஆசரிப்பதுபோற்

அவளை ஆசரித்து, தாமதமின்றித் தன்னை மெய்யான கடவுளினுடைய பிள்ளைகளுக்குள் ஒருவனாகச்சேர்த்தருள வேண்டுமென்று மகா ஆசையோடு மன்றாடினான்.

மூத். அருளானந்தர் இவனைப் பரிசோதனைபண்ணித் தேவ இரகசியங்களையும் மந்திர உபதேசத்தையும் நன்றாய் கற்றுக்கொண்டு சத்தியவேதத்தைக் கைக்கொள்ளவும் அதின் கட்டளைகள் யாவையும் சமுத்திரையாய் அநுசரிக்கவும், உறுதியான மனதைக்கொண்டிருக்கிறானென்று கண்டு, மிகவும் சந்தோஷப்பட்டார். ஆகிலும் இவனுக்கு ஞானஸ்நானம் கொடுப்பதற்கு ஓர் பலத்த விக்கினம் உண்டாயிருந்தது. அதெப்படியென்றால், இவன் ஐந்து பெண்சாதிகளையும், சில வைப்பாட்டிகளையும் வைத்துக்கொண்டிருந்தான். இந்தப் பெண்பிள்ளைகளெல்லாரும் இராஜ கோத்திரத்திலாவது பெரிய தலைவர்களுடைய கோத்திரத்திலாவது பிறந்த பெண்களாகையால், அவர்களைத் தள்ளிவிடுவது அவர்களுக்குப் பெரிய அவமானமும், அவர்களுடைய சுற்றத்தாருக்கு மகா துரோகமுமாய் இருக்குமே. ஆனதால் இவர்கள் சத்தியவேதத்தை வெறுத்[illegible]லைத்துப் பெரிய குழப்பம் செய்வார்களென்று அருளானந்தர் நன்றாய் அறிந்திருந்தார். இது எப்படியிருந்தாலும் சர்வேசுரன் சகல காரியங்களையும் தம்முடைய சித்தத்தின்படியே நடப்பிப்பாரென்று விசுவசித்துத் தடியத்தேவனை நோக்கிச் சொன்னதாவது: "நீ ஞானஸ்நானம் பெற்றுக் கிறீஸ்துவனாகவேண்டுமென்று கேட்கிறது சரியே. ஆனால் நாம் போதிக்கிற இந்த வேதமானது பரிசுத்த வேதமானதால், ஒவ்வொருவன் ஓரே பெண்சாதியை வைத்

இருக்கவேணுமேதவிர அநேக மனைவிகள் ஆகாது" என்றார். இதற்கு தடியத்தேவன் சத்தியவேதத்தின் பேரில் அதிகப் பிரியப்பட்டு உடனே மறுமொழியாக சொன்னதாவது: "என் அன்புள்ள குருவே! இந்த விக்கினம் உம்முடைய ஆசையின்படியே தாமதமில்லாமல் நீங்கிப்போம்" என்றான். இவ்வபூர்வ காரியத்தை வகையோடு முடிப்பதற்கு வேண்டிய உபாயத்தை சுவாமியார் இவனுக்கு கற்பித்தபின், தடியத்தேவன் தன் பெண்சாதிகளை வரவழைத்து அவர்களுக்குச் சொன்னதாவது: "நாம் சாகப் போகிறதாய் இருக்கையில், நீங்களெல்லாரும் உடன்கட்டை ஏறி நமது பிரேதத்தோடு வெந்துபோகிறதாய் இருந்தீர்கள். ஆனால் இப்பொழுது எந்த அதிசயத்தினால் நமக்குத் திரும்ப உயிர் வந்ததென்று உங்களுக்குத் தெரியுமே. ஆகையால் நமக்கு உயிரைத் தந்த மெய்யான கடவுளினுடைய சத்தியவேதத்தை ஏற்றுக்கொள்ளுகிறதே ந்யாயமல்லவா? இந்தத் திவ்விய வேதமானது ஒரே ஒரு பெண்சாதியைமாத்திரமே வைத்துக்கொள்ளக் கற்பிக்கிறதினாலே உங்களை விட்டுவிடுகிறது நமக்குக் கஸ்தியாயினும் விடவேண்டியதுதானே. இது எப்படியிருந்தாலும் நீங்கள் துக்கப்படவேண்டாம். உங்களை நமது தங்கச்சிமார்களைப்போலே நேசித்து வேண்டினவைகளை யாதொரு குறைவின்றி விசாரித்து வருவோம்" என்றான். அதன்பின் தனக்குப் பெண்சாதியாக ஒருத்தியை வைத்துக்கொண்டு மற்றவர்களை அனுப்பிவிட்டான்.

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இந்த அபூர்வமான தைரியத்தைக் கண்டு, சர்வேசுரனுடைய

சித்தத்தை நிச்சயமாய் அறிந்து, சிலநாள் தடியத்தேவனுடைய அரண்மனையில் சஞ்சரித்து, அதில் தானே மூன்று இராஜாக்கள் திருவிழாவில் தடியத்தேவனுக்கும், தாம் அவ்விடத்துக்கு வந்தபின் தாம் மனந்திருப்பின மற்ற 200 அஞ்ஞானிகளுக்கும் ஞானஸ்நானம் கொடுத்தார். ஞானஸ்நானச் சடங்குகளை நிறைவேற்றி, வரப்போகிற துன்பங்களுக்கு அஞ்சாதபடிக்கு இவர்களெல்லாருக்கும் உறுதி சொன்னதின்பின், திரும்பவும் முனியூர்க் கோவிலுக்கு எழுந்தருளிப்போனார்.

---

## 6-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் பிடிபட்ட வர்த்தமானமாவது:

முன் சொன்னவண்ணமே தடியத்தேவன் தேவ கட்டளைக்கமைந்து நீக்கிவைத்த பெண்பிள்ளைகள் அனைவரும் தங்களுக்குச் சகிக்கப்படாத அவமானம் வந்ததென்றெண்ணி மிகவும் துக்கித்து அலறிப்புலம்பி அழுதுகொண்டிருந்தார்கள். இவர்களில் இளையவளான கடலையென்பவள் வெகுவாய் விசனப்பட்டுத் தன் புருஷன் மனதிளக அவனுக்கு மகா இரக்கத்தைக்காட்டித் தன் கண்ணீரினாலேயும் விம்மலினாலேயும் கெஞ்சுதலினாலேயும் அவன் செய்த தீர்மானத்தை நிறைவேற்றாதபடிக்கு எவ்வளவோ பிரயாசப்பட்டாள்! ஆனால் தான்பட்ட பிரயாசமெல்லாம்

பலியாமல்போனதாகக்கண்டு, உக்கிரமமான எரிச்சலோடு மேரைமரியாதையின்றிச்சினந்து: "எப்படியாகிலும் உன்னைப் பழிவாங்குவேன்" என்றாள். இவள் அரசனாகிய இரங்கநாதத்தேவனுடைய சகோதரியின் மகளானதால், தீராத கஸ்திகோலத்துடன் அரசனண்டைக்குத் தீவிரித்துப்போய், அவன் சமுகத்திலிறைஞ்சிவிழுந்து, மழைத்தாரைபோலக் கண்ணீரைச்சிந்தி அவன் மனதை இளகச்செய்து, தனக்கு நேரிட்ட நிர்ப்பாக்கியத்தை விவரித்துரைத்து, தன் புருஷனை மாந்திரியத்தால் மோசப்படுத்தின ரிஷியைப் பழிவாங்கிச் சத்தியவேதத்தை முழுதும் நிர்மூலமாக்கவேணுமென்று கேட்டுக்கொண்டாள். இரங்கநாதத்தேவன் சுபாவத்திலேயே சத்தியவேதத்தைப் பகைத்தன்மையால், நியாயத்தை விசாரியாமல், தனது பிரிய மருமகளுடைய அழுகையைக் கண்டு, அவளுக்கு நேரிட்ட அவமானம் தனக்கே நேரிட்டதாக எண்ணி, கடுங்கோபங்கொண்டு: "நல்லது, நாம் அந்த ரிஷியை விசாரித்துக்கொள்ளுவோம்" என்று சொல்லி, இவளைத் தேற்றி அனுப்பினான். இவள் அரண்மனையைவிட்டுப் புறப்பட்டுப்போய், பிராமணருக்குத் தலைவனாகிய பொம்பாவணவையன்முன் ஓர் பைத்தியக்காரிகோலமாய்த் தோன்றி, தனது துன்பங்களை விஸ்தாரமாய்ச் சொல்லி, சுவாமியாரைத் தூஷணித்துப் பிராமணனைப் புகழ்ந்து, அவனது சாமர்த்தியத்தை அத்தருணத்தில் காட்டவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள். இந்தப் பிராமணனுடைய சுபாவமேதெனில், முத்திப்பேறுபெற்ற அருளானந்தரையும் மற்ற கிறீஸ்துவர்களையும் சகலரும் பகைக்கும்படியாக பொய்ப்புரட்

டான நியாயங்களையும், வஞ்சக வார்த்தைகளையும் இவன் எங்கும் சொல்லிக்கொண்டு திரிவான். ஆனதால் இராஜாவின் மருமகள் சொன்னதைக் கேட்டவுடன், சத்தியவேதத்தை அழிப்பதற்கு இதுவே நல்ல சமயமென்று சந்தோஷித்து, மற்றப் பிராமணரைக் கூட்டமாகச் சேர்த்து, அந்தப் பெண்பிள்ளை சொன்ன யாவையும் அவர்களுக்கறிவித்துத் தங்கள் பிழைப்பைக் கெடுக்கிற நூதன வேதத்தையும், தங்களுக்கு எதிரியாயிருக்கிற சந்நியாசியையும் எவ்விதமாய் நிர்மூலமாக்கக்கூடுமென்று ஆலோசனை செய்யக் கற்பித்தான். கூடின பல பிராமணர் பல உபாயங்களைச் சொல்லத் தங்கள் தந்திரங்களைக் ஒரு கட்டுப்பாடு செய்துகொண்டு, வெகு கூட்டமாய் அரண்மனைக்குப்போய் வெகுவாய்ப் புலம்பிக் கூக்குரலிட்டுக் கடுங்கோபங்காட்டிப் பலத்த கலகம் உண்டாக்கினார்கள். இந்த இரைச்சலைக்கேட்ட இராஜா எழுந்திருந்து வந்து: "நீங்கள் வந்த காரணமேதென்று கேட்க" இவர்கள் மகா சத்தத்தோடு: "உமது பிரஜைகள் எல்லோரும் புதுமார்க்கத்தைக் கைக்கொள்ளுகின்றமையால் தெய்வங்கள் ஆராதனையற்றுக் கோவில்களும் பூசை திருவிழாவும் இல்லாமல் போவது உமக்குத் தெரியாதா? இதினாலே தெய்வங்களால் இத்தேசத்துக்கு அகோர ஆக்கினைகள் நேரிடுமென்கிறது தப்பாது" என்றார்கள். தன் மருமகளுடைய இடைவிடாத கண்ணீராலும் புலம்பலாலும் ஏற்கனவே கோபங்கொண்ட இராஜாவானவன், பிராமணருடைய கலகத்தைக் கண்டவுடனே எரிகிற தீயில் எண்ணெயை வார்த்தாற்போல் மட்டுக்கடந்த விசனமாய்ப்

பொங்கி சினந்து, தன் பிரஜைகளுக்கும், தன் இராச்சியபாரத்துக்குமே பெரும் பொல்லாப்பு இட்டிருந்தாற்போல மிகவும் பயந்து "இக்ஷணமே கிறீஸ்துவர்களுடைய வீடுகள் யாவையுங் கொள்ளையிட்டுச் சகல ஆலயங்களையும் தீயினால் அழித்து, நூதன வேதத்தைப் போதித்துக்கொண்டு திரியும் சந்நியாசியைப் பிடித்துக்கொண்டுவாருங்கள்" என்று கண்டிப்பான கட்டளை கொடுத்தனுப்பினான். அப்படியே தாமதமில்லாமல் சேவகர்போய் அவ்விராச்சியமெங்கும் சுற்றித்திரிந்து கிறீஸ்துவர்களைப் பிடித்துத் துன்பப்படுத்தி, அவர்கள் ஆஸ்திகளையெல்லாம் கொள்ளையிட்டமையால் எண்ணிக்கையில்லாத கிறீஸ்துவர்கள் சகலத்தையும் விட்டுவிட்டு, பரதேசத்துக்கு ஓடிப்போனார்கள். சுவாமியாரைப் பிடித்துக்கொண்டுவர அனுப்பப்பட்ட சேவகர், சந்நியாசி தப்பி ஓடாதபடிக்கு நான்கு வகுப்பாகப் பிரிந்து, முனியூர்க் கோவிலுக்கு ஓர் வகுப்பும், காட்டுக்குள் கட்டப்பட்டிருக்கிற மற்ற மூன்றுகோவில்களுக்கு ஒவ்வொரு கோவிலுக்கோர் வகுப்புமாகத் திவிரித்துப்போனார்கள். முனியூரானலும் காட்டானது வேறோர் சுயாதிபதியான துரையின் அதிகாரத்துக்குள்ளிருந்ததாயினும், இந்தச் சண்டாளரான சேவகர் நீதிபிசகி அவ்வூருக்குள் பிரவேசிக்கத் துணிந்தார்கள்.

கர்த்தருக்குப்பெயரிட்ட திருவிழாவுக்குப் பிந்தின எட்டாம்நாளில் முக்திப்பேறுபெற்ற அருளானந்தர் முனியூர்க்கோவிலில் திரளாய்க்கூடிய ஜனங்களுக்குப் பாவசங்கீர்த்தனமும் தேவநற்கருணையுங் கொடுத்து, பூசை முடிந்தவுடனே வரப்போகிறதெல்லாம்

தீர்க்கதரிசனமாயறிந்து, கூடினவர்கள் எல்லாரையும் சீக்கிரமாய்த் தங்கள் வீடுகளுக்குப் போகச்சொன்னார். சிலர் தாமதம்பண்ணுகிறதைக் கண்டு: "என் பிரியமுள்ள பிள்ளைகளே, ஓர் கனத்த நெருக்கிடை வரப்போகின்றது, நீங்கள் சீக்கிரமாய் ஓடிப்போங்கள், இங்கே இனி இராதேயுங்கள்" என்று தெளிவாய்க் கற்பித்து அனுப்பினார். அல்லாமலும் கடந்த பிரிவுகளில் பிரஸ்தாபித்த கனகப்பபிள்ளை உபதேசியாரும் அன்று சுவாமியாரோடிருந்தார். இவர் வெகு பலசாலியாயும் சிலம்பத்தில் கெட்டிக்காரராயும் முன்கோபக்காரராகவுமிருந்ததால், ஒருவேளை வருகிற சேவகரை எதிர்த்துச் சண்டைசெய்வாரென்று பயந்து, சுவாமியார் இவரை அடுத்த கிராமத்துக்கு அனுப்பிச் சில காரியங்களை விசாரித்து வரச்சொன்னார். அதன்பின் சுவாமியாரும் உபதேசியாரான பிராமண அருணானந்த ஐயருமட்டும் கோவிலிலிருந்தார்கள். சற்றுநேரத்துக்குப்பின் சிலர் சுவாமியாரிடத்தில் ஓடிவந்து: "சுவாமீ! இதோ தேவரீரைப் பிடிக்கக் குதிரை இராணுவத்தார் கிட்டிவருகிறார்கள்" என்றார்கள். அப்போது சுவாமியார் அந்த ஆபத்துக்குத் தப்பியோடிப் போகாததுமன்றி, சேசுக்கிறீஸ்துநாதர் பாவனையாக அகமகிழ்ந்த முகத்தோடு தம்மைப்பிடிக்கவருகிறவர்களுக்கு எதிராகப்போனார். அந்தச் சண்டாளரான பாவிகள் அப்பேர்ப்பட்ட சாதுகுணத்தைக்கண்டு சற்றும் மனமிரங்காமல், இவர்பேரில் புலிகளைப்போலப் பாய்ந்து அடித்து உதைத்து மிதித்துச் சுவாமியாரையும் பிராமண உபதேசியாரையும் சங்கிலியினால் இறுகக் கட்டினார்கள்.

சுவாமியாருடைய இரு இளைக்கச் சேஷாக்களும் தங்கள் பிரியமுள்ள குருவானவருக்குச் செய்யப்படுகிற நிஷ்டூரத்தையும் அவமானத்தையும், அவர் சகிக்கிற பொறுமை சந்தோஷத்தையுங்கண்டு, யாதொன்றுக்கும் அஞ்சாமல் இவரண்டைக்கு ஓடிவந்து, இவரைக் கட்டியணைத்து விடாதிருந்தார்கள். சேவகர் இவர்களையகற்றித் தள்ளப் பிரயாசப்பட்டாலும், இவர்கள் சுவாமியாரை விடாதிருந்தமையால், இவ்விரண்டு மாசற்ற செம்மறிக்குட்டிகளையும் கட்டிச் சுவாமியாரோடுடன் இழுத்துக்கொண்டு போனார்கள். இந்நான்கு வேதசாட்சிகளுக்கும் விலங்கிட்டபின், இவர்களுடைய கழுத்திலே நீண்ட கயிறுகளைக்கட்டி நாலு சேவகர் குதிரைமேலேறிக்கொண்டு இவர்களைக் குதிரைக்குப் பின் ஓடிவரச் செய்தார்கள். தேவ ஊழியத்தில் தாம் அநுபவித்த வருத்தங்களாலும், அருந்தவக் கிரியைகளாலும் தளர்ந்துபோன முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் குதிரையின்பின் ஓடக்கூடாதவராய் அடிக்கடி தரையில் குப்புற விழுவார். விழவே, சூழ்ந்துவந்த கொடிய சேவகர் இவரைப் பிரம்புகளினால் அடித்து உடனே எழுந்து இளைத்து ஓடச் செய்வார்கள். முனியூருக்கு வெகுதூரமான அநுமந்தங்குடியைச் சேருமளவும், இப்படியே அநியாயமாய் அடித்து இழுத்துத் தள்ளிக்கொண்டுபோனார்கள். வழியில்பட்ட அடிகளினாலும், கல்லிலும் முள்ளிலும் மோதியுண்டான காயங்களினாலும் அருளானந்தர் இரத்தஞ் சிந்துகையில், இவருடைய ஆத்துமமானது சிலுவை சுமந்து கல்வாரி-மலைக்குப்போன தமது திவ்விய இரட்சகரை நினைத்து அத்தியந்த சந்தோஷத்தை அநுபவிக்கும்,

அநுமந்தக்குடியிற் சேர்ந்தபின் சொலையாதகர், வேதசாட்சிகளுக்கு அற்பநேரமாகிலும் இளைப்பாற்றி கொடுக்காமல், அவர்களுக்கு அதிக வருத்தமும் அவமானமும் உண்டாகும்பொருட்டு அவ்வூரிலிருந்த ஓர் பெரிய தேர்மேல் அவர்களை ஏற்ற, அவ்வூர் அஞ்ஞானிகள் திரளாய்க் கும்பல்கூடி வேதசாட்சிகள் இருந்த கோலத்தைக்கண்டு சத்தியவேதத்தை நகைத்து இகழ்ந்து கேட்போர் காதிரண்டும் வெடிக்க, பொல்லாத தூஷண வார்த்தைகளைக் கக்கி, சேறுஞ் சாணியும் அவர்கள்பேரில் எறிந்து, "இதோ பண்டாரங்களைப் பாருங்கள்" என்று ஆர்ப்பரித்து ஆகடியம்பண்ணி ஓர் பெரிய திருவிழாவைப்போல ஆடம்பரம் பண்ணினார்கள். வேதசாட்சிகள் அவ்விராத்திரியிலும் மறுநாட் காலையிலும் துஷ்டரால் செய்யக்கூடிய நிந்தை சிறுமையெல்லாம் அநுபவித்தார்கள். அன்றிரவு நடுச்சாமத்துக்குமேற் கூட்டமெல்லாங் கலையவே, இவர்களைக் காக்க ஏழு சேவகர் மாத்திரமிருந்தார்கள். கடைசியாய் இந்தச் சேவகருந் தூக்கமிகுதியால் சோர்ந்து நித்திரைபோனார்கள்.

நடந்த செய்தியெல்லாங் கேள்விப்பட்டுத் தக்கித்த கணக்கப்ப உபதேசியார் மகா தீவிரமாய் ஓடிவந்து சேவகர் தூங்குகிறவேளையில்தானே சுவாமியாரிருந்த விடத்திற்சேர்ந்து, வெகு அழுகையுடன் சுவாமியாருடைய ஆசீர்வாதங் கேட்டுநின்றார். இவரைக்கண்டவுடனே சுவாமியார் இவர் வந்த காரணம் இன்னதென்று அறிந்து சொன்னதாவது: "என் மகனே, ஏன் வந்தாய்? நாம் உன்னை ஓர் அலுவலுக்கு அனுப்பியிருந்தோமே, நீ அந்த முகாந்தரத்தை நன்றாயறிந்திருக்கி

றேம். வீண் பொல்லாப்பைத் தேடாதே; நீ வீட்டுக்குத் திரும்பிப்போ" என்று கற்பித்தார். அப்போது கனகப்பபிள்ளை மறுமொழியாக: "எனது மிகவும் நேசத்துக்குரிய தகப்பனாரே! தேவரீர் சும்மாயிரும், சேவகர் ஏழுபேர்மாத்திரம் இருக்கிறார்களே, தேவரீர் உத்தாரங் கொடுத்தாலே போதும், நான் ஆகவேண்டியதைப் பார்த்துக்கொள்ளுவேன்" என்றார். அதற்குச் சுவாமியார்: "அப்படியல்லவே; நீ உன் அலுவலைப் பார்க்கப்போ" என்று சொல்ல, கனகப்பபிள்ளை மிகவுங் கெஞ்சிச் சொல்லுவார்: "அவர்கள் ஏழுபேர் மாத்திரம் இருக்கிறார்களே, நான் தேவரீரை யாதோர் ஆபத்தில்லாதயிடத்துக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கத் துணிந்திருக்கிறேன்" என்றார். இதற்குச் சுவாமியார்: "அந்த எண்ணத்தை விட்டுவிடு. நாம் ஒரு கள்ளனைப்போல் ஓடிப்போவோமா? தேவதிருவுளத்துக்குத் தடைசெய்யாதே. நீ போகவேண்டும்" என்று கற்பித்தார். இதைக்கேட்ட கனகப்பபிள்ளை மிகவும் பயந்து மனங்கலங்கி, சுவாமியார் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, சற்றப்பாலே போய், என்ன நடக்குமோவென்று பார்த்துக்கொண்டிருந்தார். மறுநாள் மத்தியானத்தில் சேவகர் வேதசாட்சிகளை இராமநாதபுரத்துக்கு அழைத்துக்கொண்டுபோனார்கள். வழியிலே சுவாமியாரை மிகவும் வாதித்து அவர் கழுத்தில் கயிறுகட்டி இழுத்துக்கொண்டு போனபடியினாலே அடிக்கடி கீழே விழுந்து சாகிற ஆபத்திலிருந்தார். சுவாமியார் பிடிபட்டதையும், மகா நிஷ்டூரத்தோடும், மானபங்கத்தோடும் இராமநாதபுரத்துக்குக் கொண்டு வரப்படுகிறதையும், இராமநாதபுரத்துப் பண்டத்தலை

வருகிய சின்னப்பதேவன் அறிந்து வெகுவாய் அங்கலாய்த்துச் சுவாமியார் ஏறிவரும்பொருட்டுத் தன் குதிரைகளிலொன்றைக் கொடுத்தனுப்பினான். அப்படியே ஒருவன் மகா தீவிரத்துடனே குதிரையைக்கொண்டுபோய்ச் சுவாமியாரிடம் சேர்ப்பித்து, அங்குள்ள சேவகரிடத்தில், "இந்தக்குதிரைமேல் சுவாமியாரை ஏற்றி யாதொரு தொந்தரவுஞ் செய்யாமல் இவரைக் கூட்டிக்கொண்டு வரவேண்டும்", என்று சின்னப்பதேவன் கற்பித்தனுப்பினதாகச் சொன்னான். சேவகர் சுவாமியாரை அவமானமாய்க் கட்டிக்கொண்டுபோக நினைத்தார்களாயினும், படைத்தலைவனுக்குப் பயந்து, அவனிட்ட கட்டளைப்படியே சுவாமியாரைக் குதிரைமேல் ஏற்றிக் கூட்டிக்கொண்டு போனார்கள். இவர்கள் இராமநாதபுரத்திற்சேர்ந்ததும், வேதசாட்சிகளை ஓரிருண்ட சிறைச்சாலையில் அடைத்தார்கள்.

முன்சொன்ன காட்டில் கட்டப்பட்டிருந்த மூன்று கோவில்களிலும் பிடிபட்ட உபதேசிமார்களும் இச்சிறைச்சாலையில்தானே மறுநாள் அடைக்கப்பட்டார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் இந்த உபதேசிமார்களைக் கண்டவுடனே மகா பட்சத்தோடு அவர்களைக் கட்டியணைத்து, அவர்களுக்கு பூட்டியிருந்த விலங்குகளை முத்தமிட்டு, அவர்களைத் தேற்றி, வேதத்துக்காக மரிக்கிறது எவ்வளவோ அதிர்ஷ்டமென்று சொல்லிப் புகழ்ந்து அவர்களை உறுதிப்படுத்தினார். இவர்களும் பூர்வீக திருச்சபையில் விளங்கின வேதசாட்சிகளுக்கொப்பாய் எவ்வகை வேதனைகளுக்கும் அஞ்சாமல் அத்தியந்த தைரியத்தைக் காட்டினார்கள்.

இவ்வகையான அவமானம் நிந்தைவாதைகளை முன் சொன்ன இளங்கதைகளான இருசீஷர்முதலாய் மகா திடாரிக்கத்துடனும் மனமகிழ்ச்சியுடனும் அநுபவித்ததைக் கண்டு எல்லோரும் அதிசயப்பட்டார்கள்.

முத்திப்பேறுபெற்ற அருளானந்தரோவெனில் தம்மோடு அடைபட்டிருக்கிற தமது ஞானப்பிள்ளைகளாகிற வேதசாட்சிகளுக்கு உறுதிசொல்லி, தங்களுக்கு வரப்போகிற மகிமையைப் பாராட்டி மோட்சவாசிகளுக்கு ஒப்பாய் அகமகிழ்ந்து, ஓயாமல் செபத்தியானஞ் செய்துகொண்டிருந்தார். ஒருநாள் தியானத்தில் இவர் தமது ஞானவிருப்பத்தை அடக்கமாட்டாமல், தமது பாடுபட்ட சுரூபத்தைநோக்கி: "என் ஆண்டவரான சேசுவே! எனக்காகப் பிடிபட்டுச் சிலுவையில் அறையுண்டு மரித்தீரே, நான் உமக்காக என் பிராணனைச் செலவழிக்கவும், ஒன்றுக்கும் உதவாத என் சரீரம் அடக்கம் பண்ணப்படாமல் துண்டு துண்டாக வெட்டுண்டு மிருகசெந்துக்களுக்கு இரையாகப் போடப்படவும் செய்தருளுஞ் சுவாமீ" என்று பிரார்த்தித்துக் கொண்டார். மீளவுந் தாம் விரும்பின மரணந் தமக்குக் கிடைக்கும்படியாகவும், தமது மரணபரியந்தம் சத்தளியாமல் உறுதியாயிருந்து மரிக்கும்படியாகவும், தேவமாதாவின் வேண்டுதலால் சர்வேசுரன் தமக்கிரங்கும்பொருட்டு, மூன்றுநாள் ஒருசந்தி பிடித்து ஜெபம்பண்ண வேண்டுமென்று மற்றச் சுவாமிமார்களையும் அவர்கள் மூலமாய் மற்ற கிறீஸ்துவர்களையும் கடித மூலமாகக் கேட்டுக்கொண்டார்.

இதிப்படியிருக்கையில் இவருக்கு உகந்தவர்களான சிலுவைநாயக்கர் குரப்பிள்ளையென்ற உபதேசி

மார்கள், சுவாமியாருக்குச் சம்பவித்ததையெல்லாம் அறிந்து இராமநாதபுரத்துக்குப்போய், கனகப்பபிள்ளையோடும் தலைவர்களான கடியத்தேவனோடும் சின்னப்பதேவனோடும், மற்றும் உத்தியோகஸ்தராயிருந்த கிறிஸ்துவர்களோடும், தங்களுக்குக் குருவுந் தகப்பனுமான அருளானந்தரை விடுதலையாக்கக் கூடிய உபாயங்களைப்பற்றி ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள். இதை முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் அறிந்து, அவர்களுக்கு ஒரு சீட்டெழுதி, "நான் வெகு காலமாக விரும்பியிருந்த பாக்கியம் எனக்குக் கிடைக்கப்போகுந் தருணத்தில், அது எனக்குக் கிடைக்காதபடி நீங்கள் தடைசெய்வது சரியல்ல. தேவ திருவுளப்படி சகலமும் நிறைவேறக்கடவது; நீங்கள் சும்மாவிருங்கள்" என்று அறிவித்தார்.

---

## 7-ம் பிரிவு.

**முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் பிராமணருடைய மாந்திரீயங்களை அடக்கினதும், இராஜ சமுகத்தில் நிறுத்தப்பட்டதுமான வர்த்தமானமாவது:**

இவையெல்லாம் இராமநாதபுரத்தில் நடக்கையில், இரகுநாத தேவன் எந்த மூகாந்தரத்தினாலேயோ வேறிடத்துக்குப் போயிருந்து, தை-மீ 9-ம் தேதி இராஜதானி பட்டணம் வந்துசேர்ந்தான். பிராமணர் சத்தியவேதத்துக்கு விரோதமாய்த் தாங்கள் செய்யத்

நடந்ததெல்லாம் [illegible] நிரு[illegible]தி, அதிக ஆங்காரங்கொண்டு பெரு நெருப்பில் எண்ணெய்வார்க்கிறாப்போலே இராஜனைத் [illegible] கோபத்தை அதிகரிக்கப்பண்ணி இவ்வின் பட்டணத்துக்கு வந்த மறுநாள்காலே வெகு கூட்டமாய் அரண்மனைக்குச் சென்றார்கள். அவர்கள் வந்தகாரணமே தென்று இராஜா கேட்க, இவர்கள்: "அந்தக் கள்ள சன்னியாசியும், அவன் மயக்குவித்த சீஷர்களும் தேவ துரோகிகளாகவும், இராஜ துரோகிகளாகவும், தேச சத்துருக்களாகவும், அகோர மாந்திரியவாதிகளாகவும் இருக்கிறார்கள். இவர்களைத் தாமதமின்றி கொல்லவேண்டும்" என்று சொன்னார்கள். அப்போது இராஜனண்டையிலிருந்த தடியத்தேவன் தன் பிரிய குருவின்பேரில் சாட்டப்பட்ட அநியாயக் குற்றங்களைக் கேட்டு வெகுவாய் கஸ்திப்பட்டு, யாதொன்றுக்கும் அஞ்சாமல், மகா கோபத்தோடு பிராமணருடைய சதிமானத்தையுங் கொரூரத்தையும் கள்ளத்தனத்தையும் விஸ்தரித்துக் காட்டி, இராஜாவை நோக்கி: "யாதொரு விசாரணையில்லாமல் ஒரு ரிஷியைக் கொல்லுகிறது மகா பாதகமல்லவா? இந்தச் சன்னியாசியாரோடே தர்க்கிக்க உம்முடைய பிராமணரெல்லாரையும் வரவழையும்" என்று தைரியமாய்ச் சொன்னான். இதைக்கேட்டு இராஜா வெகுவாய்ச் சினந்து, "நீ பேசாதிரு" எனக்கடிந்து இவனையும் இவன் ஏற்றுக்கொண்ட வேதத்தையும் பழித்துத் தூஷணித்து "நீ உடனே பரமசிவனைக் கும்பிட வேண்டும்" என்றான். இதற்குத் தடியத்தேவன் சற்றும் அச்சப்படாமல்: "மகா இராஜாவே! கூடாத

காரியத்தைத் தடுக்கிறீர். மெய்யான கடவுளின் பிள்ளையாகிய நான் அவருக்குச் சத்துருவாகிய பசாசைக் கும்பிடுவேனோ? என் சரீரத்தின்மட்டில் உமக்கு அதிகாரமுண்டு, ஆத்துமமோவெனில், உமது அதிகாரத்துக்குள்ளடங்காது. நீர் என் தேகத்தைக் கொல்லக்கூடும், ஆனால் என் ஆத்துமம் கடவுளுக்குமாத்திரம் உரியதாமே" என்று உரத்த சத்தத்தோடு சொன்னான். இந்தத் துணிகாரமுள்ள வார்த்தைகளைக் கேட்ட இராஜாவின் இருதயத்தில் கோபம் மிகுதியாய்ப் பொங்கினாலும், என்ன பொல்லாப்பு வருமோவென்று இராஜா பயந்து, தடியத்தேவனுக்கு யாதொரு மாறுத்தாரமுஞ் சொல்லவில்லை. ஆகிலும் தனக்குவந்த குறைவையும் தோர்வையையும் மறைக்கத்தக்கதாக, அங்கிருந்த பூவாடு தேவனைப் பார்த்து, மகா சினத்தோடு "நீ பரமசிவனைக் கும்பிடு" என்றான். பூவாடு தேவனென்னும் தலைவன் ஒன்பதுவருஷகாலமாய்த் தீர்க்கப்படாத வியாதியால் பீடிக்கப்பட்டுக் கடைசியாய் அற்புதமாய் ஆரோக்கியமடைந்ததினிமித்தம், ஞானஸ்நானம்பெற்ற கிறீஸ்துவனாயிருந்தான். ஆயினும் இந்த தலைவனுக்கு அரசன் விசேஷ பக்ஷம்காட்டி அநேக உபகாரங்களையும் செய்துவந்தமையால், இவன் இராஜாவின் முகத்தை முறிக்கமாட்டாதவனாய்ப் முழந்தாளிட்டுச் சிவனைக் கும்பிட்டான். ஆனால் சகல பாவிகளின்பேரில் இரக்கமுடைத்தான சர்வேசுரன் இந்தத் துரோகியின்பேரிலிரங்கி இவனை மனந்திருப்பத்தக்கதாக, அந்நேரமே அவனுடைய பழைய வியாதியால் மறுபடியும் அவன் பீடிக்கப்படச் சித்தமானார். இவன் இந்த வியாதியின் கொடுமையினாலே அவஸ்

தைப்பட்டுத் தன்னைக் கிருபையாய்த் தெண்டிக்கிற சர்வேசுரனை நினைவுகூர்ந்து, தான் பண்ணின துரோகத்தையறிந்து விசனப்பட்டு, ஓர் பாடுபட்ட சுரூபத்தைக் கொண்டுவரச் சொல்லி, அதைக் கையிலேந்தி முத்தமிட்டு முழங்காளினின்று திரளான கண்ணீரைச் சிந்தி, "அறியாமல் செய்தேன், என் குற்றத்தைப் பொறுத்தருளுஞ் சுவாமீ," என்று மன்றாடினான். இந்த மன்றாட்டுக்கிரங்கின கருணாம்பர சர்வேசுரன் திரும்பவும் இவனுக்கு ஆரோக்கியத்தைக் கட்டளையிட்டார். அதன்பின், இவன் மரணபரியந்தம் கடவுளினுடைய அளவிறந்த கிருபையைக் கொண்டாடிச் சத்தியவேதத்தில் உறுதியாயிருந்தான்.

இரங்கநாதத்தேவனோவெனில், தனது இராச்சியத்தில் திரளான கிறீஸ்துவர்கள் இருக்கிறதையும், தன் தலைவர்களுக்குள்முதலாய் அனேகர் சத்திய வேதத்தை * ஏற்றுக்கொண்டதையும், நன்றாய் அறிந்து, சுவாமியாரைப் பிரசித்தமாய்க் கொன்றால் குழப்பமும் பொல்லாப்பும் நேரிடுமென்று பயந்திருந்தான். தன் பொல்லாத ஆசையை நிறைவேற்றத்தக்கதாக என்ன செய்யலாமென்று அவன் அங்கலாய்த்து யோசனை செய்து, கடைசியாய் பிராமணருடைய துர்ப்போதனையினாலே சுவாமியாரைப் பில்லிசூனியத்தால் சங்கரிக்கத் துணிவுகொண்டான். தன் தேவர்களுடைய வல்லமையானது புது வேதத்தைவிட அதிகமாய் மேற்பட்டதென்று அவன் நினைத்திருந்தமையால், பேர்பெற்ற மந்திரவாதிகளான சில பிராமணரைக் கூட்டி சத்துரு சங்காரமென்னும் பத்திரகாளிப் பூசையைச்

செய்யக்கற்பித்தான். அப்படியே பிராமணர் மூன்று நாளளவும் பசாசுகளுக்கடுத்த சடங்குகளையெல்லாம் நிறைவேற்றி, குசால் மாந்திரியவித்தை முழுமையும் நடத்தி முடித்ததும், அவர்களுக்குச் சத்துருவான சந்நியாசியார் சந்தேகமில்லாமல் சாவாரென்றே நினைத்து எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் மூன்றுநாளில் சுவாமியாருக்கு ஓர் அற்ப மோசமும் வரவில்லையென்றுகண்டு, இராஜாவும் பிராமணரும் வெட்கிப் போனார்கள். என்றாலும், பிராமணர் இராஜாவை நோக்கி, "மகா இராஜாவே! இன்னம் ஐந்துநாள் பொறுத்துக்கொள்ளும், அதற்குள்ளாக நாங்கள் சாலேதி யெக்கியம் வளர்த்து அதிக வல்லபமுள்ள குனியங்களைச்செய்து எப்படியாகிலும் அந்தச் சந்நியாசியைக் கொல்லுவோம். அப்போதும் அவன் சாகாதிருப்பானாகில் எங்களை என்ன செய்யவேண்டுமோ அதெல்லாஞ் செய்யலாம்", என்றார்கள். இராஜா இதற்கும் சம்மதிக்க, பிராமணர் நரகத்திலுள்ள பேய்களையெல்லாம் அழைத்துப் பெரும் ஆணைகளையிட்டு உச்சாடனம் பண்ணி தங்களை இரட்சிக்கவேணுமென்று அலறிப்பதறி தங்கள் சரீரத்தை இரத்தமோட அடித்து ஐந்துநாளளவும் கெஞ்சிமன்றாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது சுவாமியாரும் மற்ற வேதசாட்சிகளும் செபத்தியானத்தில் அமர்ந்து சர்வவல்லவரான சர்வேசுரனைப் பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் சிறைச்சாலையின் காவற்காரராகிய அஞ்ஞானிகளான சேவகர் பயங்கரமான சில பூதங்களைக்கண்டு மிகவும் நடுக்கமுற்று பயந்தமையால், இவர்கள் சுவாமியாருக்குமுன் சாஷ்டாங்கமாய்

விழுந்து தாங்கள் காண்கிற பயங்கரமான பூதங்களை அகற்றியருளவேண்டுமென்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள். அருளானந்தர் இவர்களுக்கிரங்கி ஆசீர்வதித்தார், உடனே இவர்களுக்கு உண்டாயிருந்த மயக்கமும் அவர்கள் கண்களுக்குத் தோன்றிய பூதங்களும் விலகிப்போயின. பிராமணர் இதையறிந்து தங்களுடைய வித்தைகளால் அவருடைய தலைமயிர்களில் ஒன்று கூட விழவில்லையென்றுகண்டு வெட்கி, அவர் தங்களிலும் வலுவான மந்திரவாதியென்றும், பில்லிசூனியக்காரனென்றும் பிதற்றி, சத்தியவேதத்தின் மகிமையையும் இலட்சணங்களையும் ஒப்புக்கொள்ளாமல் போனார்கள்.

பிராமணருடைய சூனிய வித்தை மாந்திரீகமெல்லாம் வியர்த்தமாய்ப் போனதைக் கண்ட சகலரும் அவர்களை நகைத்திகழ்ந்து சிரித்தார்கள். இதை இராஜா அறிந்து, தன் கடுங்கோபத்தை அடக்கமாட்டாதவனாய்ச் சுவாமியாரைத் தன் சமூகத்துக்கு கூட்டிக்கொண்டுவரக் கற்பித்தான். சுவாமியார் வந்தவுடனே, பொங்கின கடலையொத்த முகத்தோடு அவரைநோக்கிச் சொல்லுவான் : "நமது இராச்சியத்தில் புதுமார்க்கத்தைப் போதிப்பவர்களுக்குச் சாவு நேரிடுமென்று ஏற்கனவே உனக்கு அறிவித்திருக்க, நமது கட்டளையை மீறி நமது எல்லையில் உன் மார்க்கத்தைப் போதிக்க எப்படித் துணிந்தாய்?" என்றான். அதற்கு முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் : "நான் போதிப்பது என் வேதமல்ல, சோதிமண்டலத்தையும் பூமண்டலத்தையும் சிருஷ்டித்த ஏக கடவுளு

டைய வேதமாமே. உலகமெங்கும் இந்த வேதத்தைப் போதிப்பாயாகவென்பது அவர் கற்பனையாயிருக்க, நான் உமக்குக் கீழ்ப்படியவோ? அல்லது, அதிபதியும் இராஜாதி இராஜனுமாகிய சர்வேசுரனுக்குக் கீழ்ப்படியவோ?” என்று தைரியமாய்ச் சொன்னார். அப்போது அங்கேநின்ற கறுப்பனென்னுஞ் சேர்வைக்காரன் மகா விசைவாய் அவரைக் கன்னத்தில் அறைந்து, “ மறவன் தேசத்தில் எங்களுடைய இராஜாவுக்கும் மேலான இராஜாவுண்டோ?” என்றான். இதற்கு முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சற்றும் முகங்கோணாமல் மறுகன்னத்தைக் காண்பித்தார். இந்தக் கொடிய சேர்வைக்காரன் திரும்பவும் அவரை அடிக்க எத்தனப்படுகையில் இராஜா கண்சயிக்கினையாய் அவனை விலக்கினான். அதன்பின் இரகுநாததேவன் சுவாமியாரைச் சங்கரிக்கத் தீர்மானித்தான். [illegible] தான் முன் அவர்பேரில் பிரயோகித்த சகல [illegible]யவித்தை மாந்திரியங்களையெல்லாம் அவர் வென்று வியர்த்தமாய்ப் போகச் செய்ததை அரசன் நினைவுகூர்ந்து, அவ்வளவு வல்லமையுள்ள அவர் வருத்தமில்லாமல் படை ஆயுதங்களுக்குத் தப்பித்துக்கொள்வது அரிதல்லவென்று ஆராய்ந்து, தனக்குத் திரும்பவும் மனக்கேடு நேரிடாதபடிக்கு முன்னதாகவே சுவாமியாருடைய வல்லபத்தை இன்னும் பரிசிக்கக் கருதி, சுவாமியாரை நோக்கி: “ துப்பாக்கிக் குண்டு உன்பேரில் படுமா ” என்று கேட்க, சுவாமியார்: “ படும்; ஏனென்றால் சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய வேதமானது பில்லிசூனியங்களை

ஜெயிக்கிறதேயல்லாமல் அவைகளைச்செய்கிறதில்லை" என்று குன்றாத தைரியத்தோடுரைத்து, தமது வஸ்திரத்தைத் திறந்து மார்பைக்காண்பித்தார். அப்போது இராஜா, சுவாமியார் கக்கத்தில் வைத்திருந்த ஜெபப் புத்தகத்தைக்கண்டு: "இந்தப் புத்தகத்தினாலேயோ ஆயுதங்களைத் தடுக்கிறாய்" என்றுகேட்க, முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் "இப்புத்தகத்தில் ஒரு மாந்திரீகமுமில்லை, தேவ தோத்திரங்களும் சங்கீதங்களுமாத்திரம் இதில் அடங்கியிருக்கின்றன" என்று சொன்னவுடனே, கொடுங்கோலனான இராஜா, "இப்பொழுது உன் வித்தை எங்களுடைய துப்பாக்கிகளைத் தடுக்குமோ பார்ப்போம்" என்று சொல்லி ஜெபப்புத்தகத்தை அவருடைய கழுத்தில் கட்டி, "இவரை முற்றத்தின் நடுவில் நிறுத்திக் குறிவைத்துச் சுடுங்கள்" என்றான். இந்தக்கட்டளைப்படியே சேவகர் சுடப்போகிற தருணத்தில், தடியத்தேவன் தன் துக்கத்தையும் கோபத்தையும் பொறுக்கமாட்டாதவனாய், சேவகர் நடுவில் பாய்ந்து, "நிறுத்துங்கள்" என்றுசொல்லி, இராஜாவை உக்கிரம எரிச்சலோடு நோக்கி, "நீர் இவரைத்தொடுவீராகில், நானே உம்மைப் பழிவாங்குவேன்" என்றான். கொடுங்கோலன் தடியத்தேவனுடைய துணிகரத்தையும், படைகள் இவன்பேரில் வைத்திருந்த பக்ஷத்தையும், கிறீஸ்தவர்களுடைய கிரட்சியையும் நன்றாய் அறிந்திருந்தபடியால், என்ன பொல்லாப்பு வருமோவென்று பயந்திருந்தான். ஆயினும் தன் ஆங்காரத்தை அடக்கக்கூடாதவனாய்ச் சுவாமியாருடைய ஜெபப் புத்தகத்தைப் பக்கத்தில் வைக்கச்சொல்லி அதைச் குறிவைத்துச்

சுடக்கற்பித்தான். அப்படியே ஓர் சேவகன் புஸ்தகத்தைப்பார்த்துச்சுடவே புஸ்தகத்தில் குண்டு பாய்ந்து புத்தகக் கட்டிடத்தைக் கிழிக்க, அதினுள்ளிருந்து ஓர் படம் வெளியில் விழுந்தது. அப்போது இராஜாவின் குமாரனான இராமலிங்கமென்பவன் ஓடிவந்து அந்தப்படத்தைக் கிழித்தெறிந்தான். இராஜாவானவன் புத்தகத்தைச்சுட்ட சேவகனுக்கும், படத்தைக் கிழித்த தன் மகனுக்கும், யாதொரு பொல்லாங்கும் நேரிடாததைக்கண்டு, வெகு சந்தோஷப்பட்டு: "ஜெயம்! ஜெயம்! இன்று கிறீஸ்து மதத்தை யழித்தோம், இராமனுடைய வேதத்தை ஸ்திரப்படுத்தினோம், இராமேசுரக்கோவிலைத் திறந்தோம். "ஜெயம்! ஜெயம்!" என, சூழ நின்றவர்களும் "ஜெயம் ஜெயம்!" என்று கொக்கரித்தார்கள். அதன்பின் இரங்கநாதத்தேவன் தீர்மானித்ததேதெனில், "இந்தப் பரதேசியான சந்நியாசி நாமிட்ட கட்டளைக்கு விரோதமாய் நமது இராச்சியத்தில் புதுமார்க்கத்தைப் போதித்ததினால், இவனை மறவன் தேசத்துக்கு அப்புறப்படுத்தவும், இவனுடைய சீஷர்களுக்கு நாம் ஓர் தீர்மானம் செய்யுமளவும் அவர்களை விலங்குடன் சிறையில்வைத்துக் காவல் செய்யவும் வேண்டும்" என்று கற்பித்து எல்லாரையும் அனுப்பிவிட்டான்.

## 8-ம் பிரிவு.

### முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் வேதசாட்சியாகக் கொல்லப்படுகிற வர்த்தமானமாவது:

---

முன்னடந்த விசேஷங்களால் பொய்த்தேவர்களுடைய பலவீனமும் சத்தியவேதத்தின் மகிமை வல்லபமும் உச்சிப்பகலிலும் தெளிவாய்விளங்கினபோதிலும் எவ்வித பாவச்சேற்றிலும் அமிழ்ந்திருந்த இரகுநாத தேவன் சற்றும் மனம் இளகாமல், கோபவெறி மேலிட்டவனாய், எப்படியாகிலும் வேதரிஷியைக் கொல்ல வேண்டுமென்று ஓரே பிடிவாதமாய் இருந்தான். ஆனால் தடியத்தேவனுக்குப் பயந்து இராஜதானியான இராமநாதபுரத்தில் வெளியரங்கமாய் இந்தக் கொலைபாதகத்தை நிறைவேற்றத் துணியாமல், அதை வேறே வகையாய் முடிக்கத் தீர்மானித்தான். ஆகையால், முன் தான் இட்ட கட்டளைப்படி சுவாமியாரை மறவன்தேசத்துக்குப் புறம்பாய் அனுப்புவதாக வெளிக்குச் சொல்லிக்கொண்டு, இரகசியத்தில் ஓரியூருக்குத் தலைவனாயிருக்கிற தன் சகோதரனான உடையாத்தேவனிடத்துக்குச் சுவாமியாரை கொண்டுபோகும்படி கட்டளையிட்டு, அந்தத் தலைவனுக்கு ஓர் காகிதம் எழுதி, வருகிற சந்நியாசியாரைத் தாமதமில்லாமல் எவ்விதத் துன்பமும் செய்து கொல்லவேண்டுமென்று கண்டிப்பாய்க் கற்பித்து அனுப்பினான். மறவன்தேசத்துக்கும் தஞ்சையூர் இராச்சியத்துக்கும் கடைசி எல்லையான பாம்பாறென்னும் ஆற்றருகில்

ஓரியூர் என்ற பட்டணம் கட்டப்பட்டிருந்ததாமே. முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சேவகராலே அடித்திழுத்துத்தள்ளப்பட்டு, மகா பிரயாசத்தோடு இரண்டு நாள் பயணம் நடந்து, தை-மீ 20-ம் உ ஓரியூர் சேர்ந்தார். உடையாத்தேவன் சுவாமியாரைக் கண்டவுடனே வெகு பட்சத்தைக் காட்டிச் சங்கைபண்ணினான். ஏனெனில், அநேக வருஷம் இவனுடைய இரேகத்தில் எங்கும் பெருங்குஷ்டம் பரவ, இவன் பொறுக்கமுடியாத கஸ்தி அநுபவித்துக்கொண்டிருந்தான். வியாதி தீரச் செய்யக்கூடுமான வைத்தியமெல்லாம் செய்திருந்தாலும், இவனுக்கு ஓர் அற்ப ஆறுதலும் சகாயமும் வரவில்லை. எங்கும் கீர்த்திபெற்ற இந்த ரிஷியானவர் எவ்வித வியாதிஸ்தரையும் அற்புதமாய்ச் சொஸ்தப்படுத்துகிறாரென்று கேள்விப்பட்டுத் தனக்கும் ஆரோக்கியம் கட்டளையிடுவாரென்று நம்பியிருந்தான். ஆகையால், சுவாமியாருக்குத் தன் வியாதியின் கொடுமையையும் தான் படுகிற நிர்ப்பந்தத்தையும் வெளிப்படுத்தி, "தேவரீர் அடியேனைச் சொஸ்தப்படுத்தினீரானால், உம்மை விடுதலாக்குவதுமன்றி, அநேக திரவியங்களையும் கொடுப்பேன்" என்றான். இதற்குச் சுவாமியார்: "நான் உமக்குச் சில மருந்துகளைமட்டும் கொடுக்கக்கூடுமேயல்லாது, ஆரோக்கியத்தைக் கட்டளையிடுவது என் காரியமல்ல. சோதிமண்டலத்தையும் பூமண்டலத்தையும் உண்டுபண்ணினவருமாய்ச் சகல வஸ்துகளுக்கு ஆண்டவருமாயிருக்கிற மெய்யான சர்வேசுரன் மாத்திரமே ஆத்துமத்திலும் சரீரத்திலும் உண்டான வியாதிகளைத் தீர்க்கத் திராணியுள்ளவர்; ஆகையால், விசுவாசம், நம்

பிக்ஷையோடு அவனை வேண்டிக்கொள்ளவேண்டும்" என்றார். சண்டாளனான தலைவன் இந்த மறுமொழியை ஏற்றுக்கொள்ளாமல், இரும்பவும் பலபல வெகுமானங்கள் கொடுப்பதாகச் சொல்லி, அதற்கும் சுவாமியார் இணங்காததைக் கண்டு, வெகுவாய்ச் சினந்து இரங்கநாதத்தேவன் அனுப்பின கட்டளையைச் சுவாமியாருக்குக் காண்பித்தான். சற்றும் அஞ்சாத வேதசாட்சியானவர் இதற்குச் சொன்னதேதெனில்: "உம்முடைய நல்ல வார்த்தைகளுக்கு நான் இணங்காததுபோல, உம்முடைய கோபத்துக்கும் அஞ்சேன். இவ்வுலக நன்மைகளை அற்பமாகிலும் மதியாமல், சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய வேதத்துக்காக ஆயிரம் விசை என் பிராணனைக் கொடுக்கவேண்டியிருந்தாலும் கொடுப்பதே எனக்கு ஆசையேயல்லாமல் எனக்கு வேறு ஆசையில்லை" என்றார். இவ்வார்த்தைகளைக் கேட்டவுடனே உடையாத்தேவன் அங்கம் பதறிக் கண்விழி சிவந்து அடிபட்ட நாகம்போலச்சீறி வெகுளித்துச் சுவாமியாரை நோக்கி: "நீ உடனே பரமசிவனைக் கும்பிடு" என்றான். "ஒருபோதும் அப்படிச் செய்யேன்" என்று சுவாமியார் சொல்ல, இந்தப் பாதகன் அடுத்து நின்ற சேர்வைக்காரனான பன்னமூத்துக் குடும்பனை நோக்கி: "நீ இக்ஷணமே இந்த நீசனுடைய தலையை வெட்டு" என்று கற்பித்தான். அதற்குக் குடும்பனென்பவன், தான் கிறீஸ்துவனாயிருக்கிறதாகச் சொல்லி, "ஒருபோதும் என் குருவை வெட்டமாட்டேன்" என்றான். உடையாத்தேவனுக்கு அவன் பெண்சாதியும் மூத்துக்குடும்ப சேர்வைக்காரனும் நல்லவார்த்தைகளைச் சொல்லி

அவனுடைய கோபத்தை அமர்த்தப் பிரயாசப்பட்டதினாலே, சுவாமியாரை இறைச்சாலையிலடைத்துவிடும்படிக்குக் கட்டளையிட்டான். ஆனால் அவனுடைய முதல் மந்திரியான முருகப்பபிள்ளையென்றழைக்கப்பட்ட ஓர் பிரதானியானவன் இந்தச்செய்தியால் அதிர்ந்து, உடையார்த்தேவனிடம் விரைந்துசென்று, அவனை நோக்கி: "நீ சுவீனகெட்டவன்; தெய்வங்களின்பேரில் பக்தியற்றவன்; தவிர, இராஜாவின்பழி உன்பேரில் தப்பாமல்வரும்" என்று இவைமுதலான உரோசமுள்ள வார்த்தைகளைச் சொல்லி, "நான்தானே இந்தச் சந்நியாசியைக் கொல்லச்செய்து இராஜாவின் கட்டளையை நிறைவேற்றுகிறேன், உத்தரவு தாரும்" என்றான். உடையார்த்தேவனும் இதற்குச் சம்மதித்துச் சுவாமியாருடைய காரியமுழுமையும் தன் மந்திரியிடத்தில் ஒப்பித்துவிட்டான். இவ்விசேஷங்களெல்லாம் தமக்கு ஒருவரும் அறிவிக்காமலே முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் ஞானதிருஷ்டியினால் அறிந்து முந்தின இராத்திரியில்தானே தமது சிரேகத்தை ஓர் மெல்லிய வஸ்திரத்தால்சுற்றி, அடுத்துநின்ற கிறிஸ்துவர்களைப் பார்த்து, "என் தலையை வெட்டுவதற்காக என்வஸ்திரங்களைக் கழற்றுவார்கள்; அப்போது நான் மானபங்கமாயிராதபடிக்கு இப்படிச் செய்கிறேன்" என்றார். அதன்பின் கொஞ்சங் கரியை உறைத்து ஓர் நாணல் தட்டையைச் சீவி கரியில் தோய்த்துத் தமது சிரேஷ்டருக்கு ஒரு கடிதமெழுதினார்.

அந்தக் கடிதமாவது: "சிரேஷ்டரான எனதன்புள்ள குருவே! சேசுகிறீஸ்துநாதருடைய சமாதானம் எல்லாருக்கும் உண்டாகக்கடவது. தை-மீ

17-ம்௳ இரங்கநாதத்தேவன் எனக்கு மரணத்தீர்வையிட்டுத் தன்சமுகத்தில்தானே என்னைச் சுட்டுப்போடக் கட்டளையளித்தான். இந்தக்கட்டளை நிறைவேறப்போகிற தருணத்தில் பெரியகுழப்பம் வருமென்று அவன் பயந்து, என் பிரியமுள்ள பிள்ளைகளான மற்ற வேதசாட்சிகளிடத்தினின்று என்னைப் பிரித்துத் தன் சகோதரனான உடையாத்தேவனிடம் என்னை அனுப்பி, தாமதமில்லாமல் என்னைக்கொல்லவேண்டுமென்று கண்டிப்பான ஒரு தாக்கீதும் எழுதியனுப்பினான். அப்போது என் சரீரம் மிகவுந் தேய, என் ஆத்துமம் வெகுவாய் அகமகிழ்ந்து, தை-௴ 21-ம்௳ இவ்விடம் சேர்ந்தேன். உடையாத்தேவனுடைய சமுகத்தில் நெடுநேரங் கேள்விகேட்கப்பட்டுத் திரும்பவும் சிறையில் அடைக்கப்பட்டேன். நான் இடைவிடாத ஆசையோடு விரும்பின சாவுக்குக் காத்திருக்கிறேன். இந்த மரணந்தானே நான் பட்ட பிரயாசங்களுக்கும் அனுபவித்த வருத்தங்களுக்கும் மேலான சம்பாவனையாமே. நான் சர்வேசுரனுடைய சத்திய வேதத்தைப் போதித்ததும் பொய்த்தேவர்களின் ஆராதனையை விலக்கினதுமாத்திரமே என்பேரில் சாட்டப்பட்ட குற்றம். இதுவே என் விலங்குகள் வாதைகளினடுவில் என் ஆத்துமத்தை அத்தியந்த சந்தோஷத்தினால் பூரிப்பிக்கிறது. சேவகர் அடுத்து நிற்கின்றமையால், இன்னுமதிகமாய் எழுதக்கூடவில்லை. சிரேஷ்டரான என் பிரியமுள்ள குருவே! சர்வேசுரன் உம்மைக் காக்கக்கடவாராக! என் சகோதரரான மற்ற குருக்களே! சர்வேசுரன் உங்களை பாது

காப்பாராக! நீங்கள் எல்லோரும் என்னை ஆசீர்வதித்து எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள்.

இப்படிக்கு ஓரியூர் சிறைச்சாலையிலிருந்து 1693-ம் ஆு தை-மீ 23-ம்உ.

"சேசுக்கிறீஸ்துநாதருடைய சமுகத்திலே உங்கள் அபாத்திரவானும் சகோதரனும் ஊழியனுமான,

சேசுசபை தே பிறித்தோ-அருளானந்தர்."

மறுநாள் முருகப்பபிள்ளை சகலத்தையும் முஸ்திப்புச் செய்துகொண்டு, சுவாமியாரைக் கொலைக்களத்துக்கு அழைத்துவரக் கட்டளையிட்டான். இக்கட்டளையை முத். அருளானந்தருக்கு அறிவித்ததும், அவர் தமது அகமகிழ்ச்சி மிகுதியால் கண்ணீர்சிந்தி, நீடித்த ஆசை நிறைவேறப்போகிறதைக்கண்டு, தமக்கு அப்பேர்ப்பட்ட சகாயத்தைக் கட்டளையிடுகிற சர்வேசுரனுக்குத் தோத்திரம்பண்ணினார். ஓரியூருக்குக் கூப்பிடுதூரத்துக்கப்பாலுள்ள ஓர் ஆற்றருகில் ஒரு சிறு மேடு இருந்தது. அவ்விடத்தில் தானே சுவாமியாரைக் கொல்லவேண்டுமென்று நியமிக்கப்பட்டிருந்தபடியினாலே, எண்ணிக்கைக்குள்ளடங்காத அஞ்ஞானிகள் தங்களுடைய தெய்வங்களுக்கு எதிரியாயிருந்த குருவானவர் தலைவெட்டப்படுகிறதைப் பார்க்கும்படிக்கு அவ்விடத்துக்குக் கூட்டம் கூட்டமாய் வந்திருந்தார்கள். அல்லாமலும், அவ்விடத்தில் அநேகம் கிறீஸ்தவர்கள், தங்கள் நேசத்தகப்பனாரின் கடைசி ஆசீர்வாதத்தைப் பெறும்பொருட்டு, மகா கஸ்தியோடு காத்திருந்தார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் கொலைக்களத்துக்குச் சேர்ந்து, அங்கே நாட்டப்பட்டிருந்த ஓர் மரக்கம்பத்தையும், கொலைக்காரனான பெருமாள் என்னும் சேவ

களையும் கண்டார். அப்போது அநேகம் சேவகர் சூழ்ந்திருக்க, திரளாய்க் கூடின ஜனங்களெல்லாரும் திகிலடைந்தாற்போல் பேசாதிருக்க, முருகப்பபிள்ளை பெருமாள் சேவகனை நோக்கி வசனித்த தீர்மானமாவது: "இந்தச் சந்நியாசி எங்களுடைய தெய்வங்களை வணங்கக்கூடாதென்று விலக்குகிறபடியினாலேயும், இவன் போதிக்கிற மதம் நாளுக்குநாள் அதிகமதிகமாய் இத்தேசமெங்கும் பரம்புகிறபடியினாலேயும், நமது இராஜாவான இரங்கநாதத் தேவருடைய பேரால் நீ இவன் தலையை வெட்டவேண்டுமெனக் கற்பிக்கிறோம்" என்றான். இவ்வார்த்தைகளைக் கேட்டதும், வேதசாட்சியான முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய முகத்திலே மோட்சவாசிகளுடைய சந்தோஷமும் அமைதியும் துலங்கினமையால், அதைக் கண்ட அஞ்ஞானிகள் "இவர் சாவுக்கு வரவழைக்கப்பட்டாரோ, அல்லது விருந்துக்கு வரவழைக்கப்பட்டாரோ?" என்றார்கள். முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் மரக்கம்பத்தின் அடியில் முழந்தாளிட்டுச் சேவகரை நோக்கி: "நான் வணங்குகிற சர்வேசுரனை சற்றுநேரம் பிரார்த்திக்க உத்தரவு தரவேண்டும்" என்று கேட்டார். அப்படியே சேவகர் சம்மதிக்க, இவர் கிழக்கே முகத்தைத் திருப்பி, வானத்தை அண்ணார்ந்து பார்த்து, ஒருநாழிகையளவு மகா பத்தியோடே வேண்டிக்கொண்டார். அதன்பின், எழுந்திருந்து தம்மைக் கொல்லப்போகிற கொலைக்காரனை வெகு பட்சத்தோடு கட்டி அணைத்து, முத்தமிட்டு, அவனுக்கு முன்பாக முழந்தாளினின்று: "இப்போதே ஆயத்தமாயிருக்கிறேன். உனக்குக் கொடுக்கப்

பட்டகட்டளையை இனி நிறைவேற்றலாம்'' என்றார். கொலைக்காரன் இவருடைய வஸ்திரங்களைக் கழற்றுகிறபோது, இவர் அர்ச்சியசிஷ்ட பண்டங்களை வைத்திருந்த கருவி இவருடைய கழுத்தில் இருக்கிறதைக் கண்டு, கணக்கில்லாத அஞ்ஞானிகளை மோசப்படுத்தின மாந்திரீகக்கட்டு அதில் இருக்கிறதாக நினைத்துப் பயந்து சற்றே பின்வாங்கினான். மாந்திரியமுள்ள இந்தக் கருவியைத் தொட்டால், தானும் மயங்கக்கூடுமென்றும், மாந்திரீகம் வைத்திருக்கிற சந்நியாசியைக் கொன்றால் தனக்கும் பெரிய பொல்லாப்பு வரக்கூடுமென்றும் அஞ்சி, அந்த அர்ச்சியசிஷ்ட பண்டங்களைக் கட்டிக் கழுத்தில் போட்டிருந்த சிறு கயிற்றை அறுக்கத் தன் கத்தியை ஓங்கிப் பலமாய் அடித்து, அவருக்குப் பலத்த காயம் உண்டுபண்ணினான். வேதசாட்சியானவர் சிந்தின இரத்தத்தைச் சந்தோஷமாய்ச் சர்வேசுரனுக்கு ஒப்புக்கொடுத்துக்கொண்டிருக்கையில்தானே, கொலைக்காரன் மறுபடியும் வாளோங்கி, கழுத்தை வெட்டினான். தலை வெட்டுண்டதும் வேதசாட்சியானவர் எப்போதும் பரலோகத்தையே நாடியிருந்தமையால், அவர் தேகம் குப்புற விழாமல் மல்லாக்காய் விழுந்தது. இதைக்கண்ட அஞ்ஞானிகள் எல்லோரும் வெகு ஆச்சரியப்பட்டார்கள். ஆனாலும், சுவாமியாருடைய திருச்சிரசு நரம்பிலே தொடுத்துக்கொண்டு மார்போடு படிந்திருக்கிறதைச் சேவகர் கண்டு, திகிலித்துப் போய் ரிஷியினுடைய மாந்திரிய பலத்தால் இந்தச் சிரசு திரும்பவும் தேகத்தோடு ஒட்டிக்கொண்டு, அவர் திரும்ப உயிர்ப்பாரென்று பயந்து, அதை அறவே வெட்டி அப்பாலே கொண்டு

போனார்கள். முத். அருளானந்தர் வேதசாட்சி முடி பெற்றபோது வயது 45-ம், அவர் இவ்விராச்சியங்களு க்கு எழுந்தருளிவந்து வருஷம் 17-ம் ஆனது.

அதன்பின், சுவாமியார் மெய்யாகவே செத்துப் போனாரென்றும், திரும்ப உயிர்க்கப்போகிறதில்லையெ ன்றும் கண்டு, சேவகர் இவருடைய இரண்டு கால் களையும் கரங்களையும் வெட்டி இலைகளையும் சிரசை யும் தேகத்தோடு சேர்த்துக் கட்டி, ஒரு மரக்கம்பத் தில் ஏற்றிக் காவல் காத்திருந்தார்கள்.

## 9-ம் பிரிவு.

முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய பிரதாப முள்ள மரணத்துக்குப்பின் சம்பவித்த வர்த்தமானங்களாவன:

மேற்சொன்னபிரகாரமே முத்திப்பேறுபெற்ற அரு ளானந்தசுவாமி இவ்விராச்சியங்கள் எங்கும் காரணக் குருவாய்த் திரிந்து, ஆறாத பத்தியும் அவியாத விசுவா சமும், சலியாத தயையும், மெலியாத தவமும், உடை யாத பொறுமையும், இன்னும் மற்ற சுகிர்த புண்ணி யங்களும், விளங்கினவராய், சேசுக்கிறீஸ்துநாதரு டைய பரிசுத்த வேதத்தைப் போதித்த பின்பு, அது வே மெய்யான வேதமென்றும், அதில் மாத்திரமே ஈடேற்றம் உண்டேயொழிய, வேறில்லையென்றும், தாமே சத்திய வேதசாட்சியாக ரூபிக்கத்தக்கதாக, கர்த்தர் பிறந்த 1693-ம் ஆண்டில் தை-மீ 23-ம்உ

யாகிய பெப்ரவரி-மீ 4-ம்உ புதன்கிழமையன்று எண்ணிக்கையில்லாத அஞ்ஞானிகள், கிறீஸ்துவர்களுக்கு முன்பாக மகிழ்ந்த மனதோடும் உயர்ந்த துணிவோடும், ஆனந்த ஆசையோடும், தமது உயிரை மனப்பூர்த்தியாய்க் கொடுத்து, மகிமையான வேதசாட்சியாரென்று சொன்னோமே.

அப்பால், சண்டாளரான பிராமணரும், மற்றக் கொடிய உத்தியோகஸ்தரும், வேதசாட்சி மரணமானவுடனே, தங்கள் இஷ்டப்படி சத்தியவேதத்தை அழித்தாயிற்றென்று களிகூர்ந்து, கெம்பீரமாகப் பேசிக்கொண்டிருக்கையில், ஆண்டவருடைய விசேஷ செய்கையால் சத்தியவேதத்தின் மகிமையும், வேதசாட்சியின் மகத்துவமும், மென்மேலும் அதிகமதிகமாய்த் துலங்கிற்று. அதெப்படியெனில், முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் மரணமான அன்று இரவு முழுதும் அவருடைய திருப்பிரேதம் தொங்கியிருந்த கம்பத்தின்மேல் மோட்சப் பிரதாபத்துக்குரிய ஓர் குளிர்ந்த பிரகாசம் காணப்பட்டிருந்தது. வேதசாட்சியின் திருப்பிரேதம் மூன்றுநாள் அளவும் கம்பத்தின்மேல் தொங்கியிருந்தும், யாதொரு துர்க்கந்தமும் வீசாதிருந்ததுமன்றி, இத்திருப் பிரேதமும், இதின் இரத்தத்தையுண்ட பூமியும், முல்லைப் பூவுக்கு ஒப்பான பரிமள வாசம் வீசிக்கொண்டிருந்தது. அப்போது வசந்தகாலமாயினும், மனது இளகாத கன்னெஞ்சருடைய நிஷ்டூரத்தைக் கண்ட வானம் துக்கத்தால் கண்ணீரைச் சிந்துவதுபோல், ஏராளமாய் மழையைப் பொழிந்தது. வேதசாட்சி சிறையில் அடைபட்டிருக்கும்போது, மகா ஆசையோடு ஆண்டவரைப் பிரார்த்

இத்துக்கொண்டாப்போலவே, கம்பத்தில் கட்டியிருந்த அவருடைய திருச் சரீரத்தின் கட்டுகள் அவிழ்ந்து கீழே விழ, பட்சிகளும் மிருக ஜெந்துக்களும் வந்து அத்திருச் சரீரத்தை இழுத்துப்போய்ப் பட்சித்து, அதின் எலும்புகளை அங்கங்கே போட்டுப் போயின. இத்திருச் சரீரம் கம்பத்தில் தொங்கினபோதே, உபதேசிகளும் கிறீஸ்துவர்களும், இதை எடுத்துக்கொண்டுபோக, வெகு பிரயாசப்பட்டார்களாயினும், சேவகர் செய்த விக்கினத்தால், அவர்கள் பட்ட பிரயாசையெல்லாம் வீணாய்ப்போயிற்று. மிருக ஜெந்துக்கள் இத்திருப் பிரேதத்தைத் தூரமாய் இழுத்துப்போய், பட்சித்து எலும்புகளை அங்குமிங்கும்போட்டுப்போனதாக இவர்கள் அறிந்தவுடனே, மகா ஆவலோடு தேடித் திரிந்து தலைமண்டையையும், சில எலும்புகளையும் எடுத்துக்கொண்டார்கள்.

அல்லாமலும், சேவகருக்கும் வேதசாட்சியின் அஞ்சாத் தலையை வெட்டின கொலைக்காரனை பெருமான் குடும்பனுக்கும் நல்ல வார்த்தை சொல்லி, வெகு பணம் கொடுத்து, திருப்பிரேதத்தை தொங்கவிட்டிருந்த கம்பத்தையும், தலையை வெட்டின கத்தியையும் வாங்கி, இவைகளையெல்லாம் மன்னார் கோவிலில் இருந்த சிரேஷ்டரான சவேரியார் சுவாமியாரிடத்தில் கொண்டுபோய்க் கொடுத்தார்கள். இவர் அத்திருப்பண்டங்களைப் பூச்சியமாய்ப் பத்திரம்பண்ணி, ஐந்து பிரதான உபதேசிமார்கள் வசமாய்ப் புதுச்சேரிக்கு அனுப்பினார். இத்திருப் பண்டங்கள், புதுச்சேரியிலுள்ள குருக்களாலும், பெரிய துரைகளாலும, மற்றக் கிறீஸ்துவர்களாலும், தக்க வணக்கத்துடன் சங்கி

க்கப்பட்டுச் சேசுசபை மடத்தில் பூச்சியமாய் ஸ்தாபிக்கப்பட்டன. அதன்பின் சிலதுகள் கோவைப்பட்டணத்துக்கு அனுப்பப்பட்டு அர்ச். சவேரியாருடைய அழியாத திருப்பிரேதத்தண்டையில் வைக்கப்பட்டன. முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய பத்தியுள்ள தாயானவள் இவர் வேதசாட்சியாக மரணமடைந்தபோது உயிரோடிருந்தாள். போர்த்துக்கல் இராஜாவான இரண்டாம் இராயப்பர் இவளிடத்தில் ஓர் பெரிய பிரதானியை அனுப்பி, அவளுக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தைப்பற்றி அவளை வாழ்த்தி, அவளது குமாரனுடைய மகிமை பாக்கியம் நிறைந்த மரணத்தை ஓர் துக்ககரமாகக் கொண்டாடாமல், முக்கிய திருவிழாவைப்போல் மகிழ்ச்சியுடன் கொண்டாடவேண்டுமென்றும், தமது அண்டைக்கு வரவேண்டுமென்றும் சொல்லி அனுப்பினார். இராஜா ஏவினாப்போலே, தேவ பத்தியுள்ள இந்தப் பெண்பிள்ளை பட்டுப் பட்டாவளிகளைத் தரித்துக்கொண்டும், முத்து இரத்தினங்களை அணிந்து, மகா ஆடம்பரத்துடனும், மகா சந்தோஷத்தோடும், தமது குமாரனுடைய மரணத்தைக் கொண்டாடினாள். இவள் அரண்மனையில் தங்கியிருந்த நாளெல்லாம் இராஜா கற்பித்தபடியே எல்லாரும் இவளை ஓர் இராக்கினிபோல் சங்கித்து மரியாதை செய்தார்கள். வேதசாட்சியின் அஞ்சாத் தலையை வெட்டின கத்தியானது வெகு கிரயத்துக்கு வாங்கப்பட்டு மேற்சொன்ன போர்த்துக்கல் இராஜாவுக்கு அனுப்பப்பட்டு, அது அவரால் ஓர் விலையேறப்பெற்ற மாணிக்கத்தைப்போல ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முத்திப்பேறுபெற்ற அருளானந்தனை வெட்டப்போகிற தருணத்தில்தானே, பணிக்கக் கஸ்தூரி என்பவனும், பறையன் அருளப்பன் என்பவனும், யாதொன்றுக்கும் அஞ்சாமல், வேதசாட்சியின் அண்டையில் ஓடிவந்து, தாங்களும் கிறீஸ்துவர்களாய் இருப்பதாக உரத்த சத்தத்தோடு சொல்லி, தங்களுடைய குருவோடே தங்களையும் வெட்டவேண்டுமென்று கேட்டார்கள். உடனே சேவகர்கள் இவர்களைப் பிடித்துக் கட்டி உடையாத்தேவன் அண்டைக்குக் கூட்டிக்கொண்டுபோனார்கள். உடையாத்தேவன் அவர்களுடைய மூக்கையும் இரண்டு காதுகளையும் அறுக்கக் கட்டளைசெய்து, விட்டு விட்டான். இவர்களோவெனில் தங்களுக்குச் செய்யப்பட்ட கொடுமைக்கும், அவமானத்துக்கும் வெட்கப்படாமல் அகமகிழ்ந்து, சேசுக்கிறீஸ்துநாதருக்காக தங்கள் பிராணனைக் கொடுக்கக் கூடாமல் போயிற்றேயென்று மனதில் வருந்திப் போனார்கள்.

வேதசாட்சியின் தலையை வெட்டின பெருமாளை ஓர் பொல்லாத பேய் பிடித்திருந்தமையால், இவன் வெகுவாய் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தான். ஆனால் அவன் வேதசாட்சியின் சிரசை வெட்டுகையில் இரு இரத்தம் அவன் கையில் தெறித்து விழவே, பசாசு ஓடிப்போய் அவன் சாகுந்தனையும், அவனை ஒரு தொந்தரவும் செய்யவில்லை. இதை அறிந்த பெருமாள் என்பவன் சுவாமியாரின் வேண்டுதலால் தனக்கு இந்தச் சகாயம் கிடைத்ததென்று நிச்சயித்து, புதன்கிழமைதோறும் இந்த பரிசுத்த வேதசாட்சியை வெட்-

டின ஸ்தலத்தைச் சேவிக்கப்போவான். ஆயினும் வெகுகாலம் அஞ்ஞானியாயிருந்தான். சர்வ கிருபையுமுடைத்தான சர்வேசுரனுடைய தயவினாலும் முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய மன்றாட்டினாலும் இவன் கடைசியாக மனந்திரும்பி ஞானஸ்நானம் பெற்று உத்தம கிறீஸ்துவனானான்.

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் ஓரியூரில் தலைவெட்டப்பட்ட நாளில்தானே இராமநாதபுரத்திலே சிறையில் அடைபட்டிருந்த அவருடைய உபதேசிகளும் சிஷ்யர்களும் மற்றக் கிறீஸ்துவர்களும் விடுதலாக்கப்பட்டார்கள். இரங்கநாதத்தேவன் அப்போது சத்தியவேதத்தின்பேரில் வெகு பகையாயிருந்தமையால் இவர்கள் எல்லோரும் முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய வேண்டுதலினாலே தங்களுக்கு நியமிக்கப்பட்ட கொலைக்குத் தப்பினார்களென்று எற்றுக்கொள்ளத்தக்க சத்தியமாமே. அதன்பின் கொடுங்கோலனான இரங்கநாதத்தேவன் தன் இராச்சியத்தில் எங்கும் கொடுமையான கட்டளை அனுப்பிக் கிறீஸ்துவர்களுக்கு வெகு நெருக்கிடை செய்தான். ஆயினும் இவர்கள் நிந்தை வாதனைகளுக்கும் அடிமிதிகளுக்கும் பயப்படாமல் சத்தியநெறியில், வாழ்வாதொழுகினார்கள். மீளவும் முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய திரு இரத்தமானது ஞான வித்தாகி அவர் மரித்த சில தினங்களுக்குப்பின் முன்சொன்ன சிரேஷ்டரான சவேரியார் சுவாமியார் மறவன் தேசத்தில் பிரவேசித்து, நாலைந்து மாதத்துக்குள்ளாக 14,000 அஞ்ஞானிகளுக்கு ஞானஸ்நானங்

கொடுத்தார். முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய விசேஷ வேண்டுதலினாலே அத்தேசத்தில் சத்தியவேதம் நாளுக்குநாள் அதிகமதிகமாய்ப் பரம்ப, கிறீஸ்துவர்கள் பெருக, எங்கும் கோவில்கள் கட்டப்பட, திருநாட்கள் முக்கியமாய்க் கொண்டாடப்பட, மெய்யான கடவுளுக்கும் இரட்சகருக்கும் வேதசாட்சியாக மரித்தவருக்கும் பிரத்தியட்சமான மகிமையுண்டாயிற்று.

சர்வதயாபரரும் அளவில்லாத நீதியுடைத்தானவருமான சர்வேசுரன், தமக்குகந்த தாசரான முத்திப்பேறுபெற்ற அருளானந்தருக்கு இப்பூவுலகமெங்குமுன்ன மனிதரால் புகழ்ச்சியுண்டாகவும், இவரை அநியாயமாய் உபாதித்துக் கொலைசெய்தவர்களைத் தமது நீதிப்பிரகாரந் தண்டிக்கவும் சித்தமானார். அதெப்படியென்றால்: அவர் பிடிபட்ட முனியூரிலும் அவமானப்பட்ட அநுமந்தக்குடிமுதலிய இடங்களிலும், அகோர கொள்ளைநோய் பரம்பி, திரளான பெயர்கள் மடிந்தார்கள். உடையார்த்தேவனோவெனில், வேதசாட்சி மரித்த சில தினங்களுக்குள்ளாக அவனைப்பிடித்திருந்த குஷ்டவியாதி மென்மேலும் அதிகரித்து அவலமாய்ச் செத்தான். முருகப்பபிள்ளைக்குத் தீராத வியாதியுண்டாகி, சரீரமெல்லாம் புழுக்களூறி, குடல்கள் அகோரமாய்க் கொதித்து நாறி சகிக்கப்படாத வேதனை அநுபவித்து, எவராலுங் கைவிடப்பட்டு, வேதசாட்சி மரணமான மறுவருஷம் தை-மாதத்திற்றானே ஆண்டவர் இவனைப் பழிவாங்கினாரென்று எல்லாருமறிய அவலமாய்ச் செத்து, தான் தேவர்களாக வணங்கின பசாசுகள்மகிழ நரகபாதாளத்திலுதைக்கப்

பட்டான். இரங்கநாதத்தேவனேவெனில், இவன் மதுரைநாய்க்கனோடு யுத்தஞ்செய்து அநேகந்தடவைகளில் தோற்கடிக்கப்பட்டு, கடைசியாய் தஞ்சையூர் இராஜாவான எக்கோஜி என்பவனை தனக்கு உதவியாக வரவேணுமென்று கேட்டுக்கொண்டான். அப்படியே தஞ்சையூர் அரசனும் சம்மதித்துத் தன்படைகளோடுபோய் மதுரைநாய்க்கனைத் துரத்தினதுமல்லாமல், இரங்கநாதத்தேவனுடைய இராச்சியத்தில் அநேக நாடுகளையும் வேதசாட்சி வெட்டுண்ட ஓரியூரையுந் தனக்குச் சுதந்தரப்படுத்திக் கொண்டான். கடைசியாய் இரங்கநாதத்தேவன் எவராலும் புறக்கணிக்கப்பட்டு, ஆளுகை குறைந்து, அவமானப்பெயரடைந்து, 1710-ம் ஆண்டில் செத்து நித்தியநரகத்து இராஜாவின் பிரஜையானான்.

சத்தியவேதத்தினுடைய சிறப்பிலட்சணங்கள் உச்சிப்பகலினும் துலாம்பரமாய் விளங்கும்பொருட்டும், வேதசாட்சியான முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய பிரதாபமுள்ள மகிமை எங்குந் துலங்கும்பொருட்டும், கருணாம்பர சர்வேசுரன் அஞ்ஞானிகளுக்கும் கிறீஸ்துவர்களுக்கும் எண்ணிக்கைக்குள்ளடங்காத சகாயங்களை முத். அருளானந்தருடைய மன்றாட்டுக்கிரங்கி கட்டளையிடத் திருவுளமானார். ஆனபடியினாலே புதன்கிழமைதோறும் முத்திப்பேறுபெற்ற அருளானந்தரின் திரு உதிரஞ்சிந்தின ஸ்தலத்துக்குத் திரளான ஜனங்கள் கூட்டங்கூட்டமாய் வேண்டுதல் செலுத்துவதற்காகப் போவார்கள். சிலவருஷங்களுக்குப்பின் இராமநாதபுரத்தையாண்ட வேறோர் இராஜா, ஓரியூரில் நடந்துவந்த அதிசயமான அற்புதங்

களையும், சற்குருவான அருளானந்தருடைய மன்றாட்டினாலே எவ்வர்ணத்தவர்க்கும் அளிக்கப்படுகிற உபகார சகாயங்களையும் நன்றாய் அறிந்து, அவர் தலைவெட்டுண்ட ஸ்தலத்திலேதானே ஓர் கூரைக்கோவில் கட்டுவதற்குப் போதுமான செலவு கொடுத்தான். கொஞ்சகாலத்துக்குப்பின் இவ்விராச்சியமெங்கும் கீர்த்திபெற்ற சின்னச்சவேரியாரென்னும் சுவாமியார் மேற்சொல்லிய கோவிலைப் பிரபலியப்படுத்துவதற்காக தேவமாதா பெயரால் அதை ஓர் காரைக்கட்டடமாகக் கட்டுவித்தார்.

முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் மரணமான முப்பத்திரண்டு வருஷத்துக்குப்பின், மகாபேர்பெற்ற வீரமாமுனிவனென்னும் தைரியநாதசுவாமியார் பதிதருக்கு விரோதமாக "வேதவிளக்கம்" என்னும் சகிர்த புத்தகத்தை எழுதினார். அதில் உரோமான் திருச்சபையின் சத்தியத்தையும் மகிமையையும் ஒப்பிக்கத்தக்கதாக, முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய மன்றாட்டினாலே சர்வேசுரன் செய்துவரும் புதுமைகளை அத்தாட்சியாகவும் தேவமுத்திரைபோலவும் இருப்பதாக எண்பித்து, அவைகளில் சிலவற்றை விவரித்திருக்கிறார். இவைகளையும் வேறே சிலதுகளையும் அடுத்த பிரிவில் சொல்லிக்காட்டுவோம்.

## 10-ம் பிரிவு.

### வேதசாட்சியான முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சுவாமியால் விளங்கின புதுமைகள்.

---

இடங்கூர் பாமணிவயலென்னும் ஊரிலே மறவ இராயப்பன் என்றொருவன் இருந்தான். அவனுக்கு தலைநீங்கலாக உடலெங்கும் ஒருவகை கொப்புளம் புறப்பட்டு, நாவற்பழங்களைப்போல எங்கும் தொங்கி ஆடாநிற்க, மிளகுபோலவும் பாக்குப்போலவும் எலுமிச்சங்காய்போலவும் விளங்காய்போலவும் பற்பல பருமத்தில் தோன்றினதாம். அக்கொப்புளங்களில் சிலவற்றை கீறினவிடத்தில் இரணான இரத்தமும் சாமை அரிசிபோன்ற ஓர்வகை சீயும் புறப்பட்டதாம். இப்படியே அவன் தன்னைப்பார்த்த யாவருக்கும் அச்சந்தரும் உருவத்தோடே ஒருமருந்தாதியுமில்லாமல் யாவரும் அறியாத பிணியால் வருந்தி நாணித்திரிந்த பின்பு கடைசியாய் வேதசாட்சியான அருளானந்த சுவாமி வெட்டுண்ட ஸ்தலத்தில்போய் அவர் வேண்டுதலினால் ஆண்டவர் தனக்கு ஆரோக்கியம் தரவேண்டுமென்று ஆசையோடே மன்றாடி, அத்திருஸ்தலத்தில் கிடந்த மண்ணைக் கரைத்து உடலெங்கும் பூசிக்கொண்டான். பின்னை ஆறாநாளிலே தானே முன்சொன்ன கொப்புளமெல்லாம் ஓர் அடையாளமுமின்றி முழுதும் மறைந்துபோக, அவன் பூரண சவுக்கியமடைந்தான்.

மணக்குடி குதுமடை என்னும் ஊரில் மறவ அருளப்பன் என்று ஒருவன் இருந்தான். இவனுக்கு எப்

போதும் நன்றாயிருந்த இடதுகை 1720-ம் வருஷத்தில் தோள்வரையில் செத்துக்கிடந்தாற்போலச் சீவனற்று துவண்டு சதையில்லாமல் வற்றி அசைவில்லாமல் கிடந்து தோலும் எலும்புமாய்ச் சுருங்கிக் கருகி, நோவதற்கேயொழிய வேறொருதொழிற்காயினும் உதவாமல், அவனை வலதுகைக்கொண்டு எடுக்கவும் திரும்பவும் வைக்கவும் வேண்டியிருந்ததாம். கண்டவர் யாவரும் அவனுக்காக இரங்கினார்களேயொழிய தக்க மருந்தை அறிந்து கொடுக்கக் கூடியவர் ஒருவரும் இல்லை. கடைசியிலே மனிதராலாகாத உதவி வேதசாட்சியான அருளானந்த சுவாமியாரால் ஆகுமென்ற பூரண நம்பிக்கையோடு அவர் பாடுபட்ட இடத்துக்குப்போய் உருக்கமாய் வேண்டிக்கொண்டபின்னர், அங்கேகிடந்த மண்ணைக் கரைத்து நொந்த கையில் பூசினமாத்திரத்தில், உடனே நோவு நீங்கிச் சதைவளர்ந்து இரத்தமோட நரம்புகள் பலத்து நோவில்லாத வலதுகைக்கும் இடதுகைக்கும் யாதொரு வேற்றுமையின்றி அசைக்கவும் நீட்டவும் முடக்கவும் வளைவும் பாரமெடுக்கவும் இவைமுதலிய தொழிலைச்செய்யவும் கூடுமாயிற்றும். அந்நாள்முதல் அவன் சாகும் வரையில் ஒரு வருத்தமுமின்றி அவன் பயிரிடும் தொழிலைச் செய்துகொண்டிருந்தான்.

வெட்டிவயலென்னும் ஊரிலே மறவ இராயப்பனுக்கும் சாந்தாயிக்கும் பிறவியிலேயே ஊமையும் சப்பாணியுமாயிருந்த அருளாயி என்னும் ஒரு மகள் இருந்தாள். இவள் ஏழுவயதுவரையில் ஒரு சொல் உச்சரியாமலும், இடுப்புவரையில் இருகால்கள் வழங்காமலுமிருந்தாள். அவளைத் தூக்கி காலூன்ற நிற்கவைத்தாலும், நிற்க

வாவது அதுகளை அசைக்கவாவது முடியவில்லை. அவளுடைய இருகால்களிலேயுஞ் சதையின்றி, இன்னிறுனும் நோவின்றி உணர்ச்சியின்றிப் பிறந்தநாள்முதல் எழுவயதுமட்டும் படுக்கையாய்க்கிடந்தாள். 1721-ம் ௵த்தில் அருளானந்தசுவாமிவேண்டுதலினால் ஆண்டவர் அனுதினஞ்செய்யும் புதுமைகளைக் கேட்டு, அவள் தகப்பனும் அத்தையும் சிறியதாயார் முதலியோர் கூடிப் பிள்ளையை எடுத்துக்கொண்டு, அவர்பாடுபட்ட நாளாகிய புதன்கிழமையன்று அவர் வேதசாட்சியாய் மரித்தவிடத்துக்குப்போய்,ஒருசந்திபிடித்து 50 பேருக்குப் பிச்சையும் 50 பேருக்கு அசனமுங் கொடுத்து, அப்படியே மூன்றுபுதன்கிழமையுஞ் செய்வதாக பொருத்தனைசெய்துகொண்டபின்னர், சப்பாணிப்பிள்ளையை அவர் தலைவெட்டுண்ட ஸ்தலத்தின்மேலேவைத்து,காலைப்பிடித்து பிரதக்ஷணமாய் சுற்றியிழுத்து,தளராத விசுவாசத்தோடு வேண்டிக்கொண்டவுடனே, அந்நாள்மட்டும் ஒருசொல்லாகிலும் உச்சரியாதபிள்ளை அப்போது மழலைச்சொல்லாக பசிக்குதென்றும், கஞ்சி தரவேண்டுமென்றும் சொல்லி, காலை ஊன்றி நாலடி தூரம் நடந்தது. மேலும், மறுபுதன்கிழமை வருவதற்குள், வற்றின கால்களிலும் தொடைகளிலும் சதை வளர்ந்து உயிரோடி, குறையின்றி நடக்கவுங் குதிக்கவும் விளையாடவும் தொடங்கினாள். அதன்பிறகு காலில் ஒரு நோவும் நலிவுமின்றி பூரண சௌக்கியமடைந்தாள்.

இதினும் அதிசயமான வேறொரு புதுமையை அறிய பிரியமுள்ளவர்கள், கிழக்கில் மறவன்சீமையோடே

சேர்ந்து கடலோரத்திலிருக்கும் திருப்பாக்குடி என்னும் ஊருக்குச் சென்றால், பின் வரும் புதுமையை எவரிடத்திலும் கேட்டறியலாம். அதாவது: அவ்வூரில் பரவராகிய லூயிஸ் அந்தோனியென்பவனும் மரியசலோமையென்பவளுமாகிய ஸ்திரீபுமான் இருவர் இருந்தார்கள். இவர்களுக்கு வற்றித்துவண்டு இருகால் சப்பாணியாய்க்கிடந்த மூன்றுவயதுள்ள ஒருபிள்ளையிருந்தது. இந்தப்பிள்ளையைப் பாட்டியார் வீட்டிலே விட்டிருந்தார்கள். பிறகு தாய்க்கு வேறொருபிள்ளை கர்ப்பமாகி அதனைப்பெறமாட்டாமல் சாகக்கிடந்த சமயத்தில், அருளானந்தசுவாமியுடைய வேண்டுதலினாலே அற்புதமாய்ப் பிள்ளையைப் பெற்றெடுத்தாள்.

இந்தப்பிள்ளையை எடுத்துக்கொண்டு இருவரும் 1722-ம் ஆண்டிலே முத். அருளானந்தர் பாடுபட்ட திருஸ்தலத்துக்குப் போய் அவர் தந்த பிள்ளையை அங்கே வைத்துத் தோத்திரம் செய்துவிட்டு வருகையில், வீட்டிலே விட்டுவந்த சப்பாணிப்பிள்ளையை நினைத்து அவனுக்கும் ஆரோக்கியம் தரவேண்டும் என்று மிகவும் ஆசையோடே வேண்டிக்கொண்டார்கள். மறுநாள் அவர்கள் ஊருக்குச் சென்றவுடனே முந்தினநாள் சப்பாணிப் பிள்ளைக்காகத் தாங்கள் வேண்டிக்கொண்ட அதேநேரத்தில்தானே அவனும் உதவியின்றித் தானேஎழுந்திருந்து காலூன்றி நின்று தன் வயதுள்ள மற்றப் பிள்ளைகளைப்போலே ஓடவும் விளையாடவும் ஆரம்பித்தானென்று மற்றவர்கள் சொல்லக்கேட்டு, தாங்களும் கண்ணாலே கண்டு அகமகிழ்ந்து அதிசயப்பட்டார்கள்.

மீளவும் நடுச்சீமையிலிருக்குஞ் சருக்கணி என்னும் ஊரிலே, குலத்தில் இடையனும் தொழிலில் உபாத்தியுமான ஆதியப்பனுக்கும் அவன் ஸ்திரீ ஆனந்தாயிக்கும் பூவாயி என்ற ஓர் மகளிருந்தாள். 1722-ம் ஆண்டில் இவளுக்கு பதினைந்து வயது நடக்கையில் திடீரென்று மயங்கி கீழேவிழுந்து செத்தவள்போலே கிடந்தபின்பு, எழுந்திருந்து இருவிழி புறப்பட இரு கண்களும் வீங்கிப் பார்வையுங் கெட்டு, தூரத்திலுள்ள பொருளொன்றும் கண்ணுக்குப் புலப்படாமலும், அடுத்த பொருள் புகைபடர்ந்தாற்போல தெளிவறத் தோன்றியும், இரவில் சுடர் விளக்கெரிந்தாலும் கண்ணுக்கு ஒன்றுந்தோன்றாமல் பகலிலும் அருகே ஓராள் வழிகாட்டிக்கொண்டு முன் நடந்தாலொழிய வழி தெரிந்து செவ்வே போகமாட்டாமலும் இருந்தாள். வந்த மயக்கமும் குருடும் தானே நீங்குமோவென்று இரண்டுமாதம் பார்த்தும், களைந்து அது நீங்காமல் நாளுக்குநாள் அதிகரிப்பதைக்கண்டு, அவன் மருந்தொன்றுந்தேடாமல் மிகுந்த நம்பிக்கையோடே அருளானந்த சுவாமி பாடுபட்ட ஸ்தலத்தைச் சேவிக்கப் போனான். அங்கே முழங்காலிலிருந்து ஆண்டவர் பலத்தினாலே தன் குறையைத் தீர்த்து இரட்சிக்கவேண்டுமென்று அவரை உறுதியான விசுவாசத்தோடே வேண்டிக்கொண்டான். வேண்டினவுடனே சூழ்ந்திருந்த எல்லாப்பொருளும் இராவிருளிலும் அதிகமாய் இருண்டுதோன்ற இவள் மயங்கி விழுந்தாள். இப்படி மூர்ச்சையின்றிச் செத்தவள்போலே ஒன்றரை நாழிகையாகக் கிடந்ததைக்கண்டு, அங்கேயிருந்த அவள் சுற்றத்தாரெல்லாரும் அவள் இறந்துவிட்டா

ளென்று நினைத்து அழுதுகொண்டிருக்க, அங்கே நின்ற சில பிராமணர் "கண்ணைத்தேடி வந்தவனைக் கொல்லுவதுதானோ உங்கள்சுவாமிசெய்யும் புதுமை" என்று நகைத்து இகழ்ச்சியாய்ப் பேசினார்கள். அப்போதே பூவாயி என்பவன் தூங்கி விழித்தெழுந்தாற் போலே எழுந்து, சூழ்ந்திருந்தயாவையுங் குறையொன்றின்றித் தெளிவாய்க் கண்டு: "புதுமை புதுமை யென்று களிகூர்ந்து அவன் சொல்ல, முன் நகைத்த பிராமணரும் மற்ற யாவரு மிகவும் அதிசயப்பட்டு, புதுமை யிதுவேயென்றும், இது புதுமையல்லவெனில் புதுமையேதென்றும் ஒப்புக்கொண்டு, ஆண்டவனையும் அருணாசலசுவாமியையுந் தோத்திரம் செய்தார்கள். பூவாயியோவெனில், முன்போல் வழிகாட்டத் துணைதேடாமல் எல்லாருக்குமுன்னே நடந்துபோனான். பின்னையும் அதன்பிறகு அவன் கண்ணுக்கு ஒரு நோயாவதும் பார்வைக்கு ஒரு குறையாவது நேரிடவில்லை.

இதைவிட அதிசயமான ஓர் புதுமை யாதெனில்: ஓரியூருக்குத் தென்புறத்திலிருக்கும் முழத்தகமென்னும் ஊரிலே 1721-ம் ஆண்டில் பள்ளப்பெரியானுக்கு அவன் ஸ்திரீ அன்புடையாளென்பவள் பிறவிக்குருடியான ஒரு பெண்ணைப் பெற்றாள். அந்தச் செய்தியைக் கேட்டு ஊரார் எல்லோருங்கூடிப் பார்க்கப் போனவிடத்தில், நன்றாய்த் திறந்த இரண்டு கண்ணும் வேற்றுமையின்றி தூயவெண்மையாய்த் தோன்றினதுமல்லாமல், கருத்தவிழி சற்றுந்தென்படவில்லை. அப்போது சிலபேர் மனதிரங்கி புதுமைகளால் மிகவும்

விளங்கின அருளானந்தசுவாமியை நினைத்து, "நாங்க ளும் அக்கியானிகளும் இந்த வேதத்தின் சத்தியத்தை யும் உம்முடைய அதிசயமான வல்லபத்தையும் அறி யத் தயைபுரிந்திரங்கி, இந்தப்பிள்ளைக்கு ஒருகண்ணை யும் தரவேண்டும்" என்று உருக்கமாய் வேண்டிக் கொண்டு, வீட்டிலே வைத்திருந்த அவர் பாடுபட்ட ஸ்தலத்து மண்ணைக் கரைத்துக் குழந்தைக்கு சற்று உள்ளே கொடுத்து இருகண்ணிலேயும் பூசினார்கள். பூசினவுடனே அவர்கள் வேண்டினபடிக்கு ஒரு கண் ணுக்குமாத்திரம் வெளிச்சம் உண்டானது. வலது கண் பிறந்தபடி வெள்ளையாய்க் கிடக்க, இடது கண் ணிலே கருவிழிதோன்றி, அந்நாள்முதல் அதற்கு யாதொரு குறையுமில்லாமலிருந்து அந்தக்கண்ணின் உதவியால் தன்வேலைகளை நன்றாய்ச் செய்துவந்தான். இந்தப் புதுமைக்கு ஊரெல்லாஞ் சாட்சியாகின்றதா ல், சர்வேசுரனுடைய வல்லமையும், நமது வேதத்தின் மகிமையும், பகலினும் பிரகாசமாய் விளங்கினதாமே.

மீளவும் இராசியமங்கலக்குருமடையென்னுமூரிலே பள்ள அன்புடையானுக்கும் அன்புடையாளுக்கும் அருளாயி என்ற ஒரு பெண்குழந்தையிருந்தாள். இவ ளுக்கு 1723-ம் வருஷத்தில் பெருவியாதிகண்டு கால் விரலுங் கைவிரலுமெல்லாம் புண்ணாகி, அதிலிருந்து இரத்தமுஞ் சீழும் ஓடித் துர்க்கந்தம் வீசிக்கொண்டி ருந்தது; நகங்கள் விழுந்துபோயின; விரல்கள் குறை ந்துகொண்டிருந்தது. பல வைத்தியர் அறிந்த மருந் தெல்லாம் தந்தும் பலிக்காததால் நம்பிக்கையற்று அவளைக் கைவிட்டார்கள். கான்வட்டத்திலே புண் ணும் அதிகரித்து சகிக்கக்கூடாத நாற்றம் வீசினமை

யால், அவள் கிடந்த வீட்டில் ஒருவரும் அடிவைக்கமுடியாமலிருந்ததுந்தவிர, அவளும் பத்துவயதுப்பிள்ளையாயினுந் தரையிலடிவைத்து நிற்கவும் நடக்கவுங்கூடாதவளாயிருந்தாள். இப்படி அவள் பூலோக வைத்தியருதவியின்றி நெடுநாள் கிடந்தபின்பு, பரலோக வைத்தியராகிய மூத். அருளானந்தசுவாமியின் உதவியைத் தேடும்பொருட்டு சிலபேர் அந்தப்பிள்ளையை எடுத்துக்கொண்டு அவர் வெட்டுண்ட ஸ்தலத்துக்குப் போய் அங்கே அந்தப்பிள்ளைக்காக வேண்டிக் கொண்டார்கள். அன்றுதானே வியாதியின் அகோரந்தணிந்து முன் தரைமேல் காலை யூன்றமாட்டாத பிள்ளை, இப்போது வருத்தமில்லாமல் அனேக தூரம் நடந்தது. நாலாம்நாளோவெனில், ஒரு மருந்துமின்றி எல்லாரும் அதிசயப்படப் புண்ணெல்லாம் முழுதும் ஆறி, காலிலேயும் கையிலேயும், நகமும் சதையும் நரம்பும் தோலும் வளர்ந்து, ஒரு குறையின்றி எவர்க்குமுன்னபடியே, காலுங் கையுமாகி அந்த வியாதியின் அடையாளமுதலாய் இல்லாமல் முற்றிலும் சொஸ்தமானாள்.

இன்னமும், 1723-ம் ஆண்டில் புரட்டாசி மாசம் ஓரியூர் பள்ள இஞ்ஞாசியென்பவன் தோஷக் காய்ச்சலாய் விழுந்து, அடுத்த கிராமமாகிய புல்லூரில் அவன் சகலனுமாய் உபதேசியுமாய் வைத்தியனுமாயிருந்த சூரன் வீட்டிலே கொண்டுபோய் வைத்தார்கள். இந்த சூரனும் வேறே பல வைத்தியரையுங்கூட்டி வேண்டிய மருந்தெல்லாம் கொடுத்தும் நம்பிக்கையற்றுப்போய் இஞ்ஞாசியும் நினைவின்றிச் செத்தாற்போலே கிடந்தான். முன்னிருந்த வியாச்சியத்தினால் அவன் செத்தால் அங்கே அடக்கஞ்செய்யவொட்

டார்களென்பதால், பிழைக்க அங்கே கொண்டுவந்த இஞ்ஞானியை இனிக் கல்லறையிலே வைக்க அவனுக்காகிய ஊரிலுருக்கெடுத்துக்கொண்டுபோகத் துணிந்தார்கள். போகிற வழியில் அருளானந்தசுவாமி பாடுபட்ட ஸ்தலத்துக்கருகேபோகையில், ஆண்டவருடைய கிருபையால் உறுதியான நம்பிக்கை மனதில் நிரம்பக்கண்டு, கூடப்போனவெல்லாரும் அந்த ஸ்தலத்துக்குப்போய், செத்த பிணம்போலிருந்த இஞ்ஞானியைக் கிடத்தி, வெகுநேரம் ஆண்டவரை வேண்டிக்கொண்டார்கள். அந்நேரத்தில் கை கால் சற்றும் அசைவின்றி அவன் கிடந்ததனால் முழுதும் செத்தானோவென்றறிவதற்காக ஷெ சூரன் பெண்சாதி அவன் காலைப்பிடித்துப்பார்த்தாள். உடனே இஞ்ஞானி முகந்திருப்பிப் பார்த்தமையால், எல்லாரும் அதிக நம்பிக்கையுடனும் அதிக சுறுசுறுப்போடும் மன்றாடினார்கள். சற்றுநேரமானபின்பு, இஞ்ஞானி வியாதியற்று, பலவீனம் நீங்கி தெளிந்த முகத்தோடு எல்லாருங் காணவும் அதிசயப்பட்டு மகிழவும், யாதொரு உதவியின்றி எழுந்திருந்து நன்றாயிருக்கிறேனென்றுசொல்ல, அவனும்மற்ற யாவரும் மகிழ்ச்சியாய் அழுதுகொண்டு வேதசாட்சியான அருளானந்தசுவாமி வேண்டுதலினால் அந்த அதிசயமான புதுமையைச் செய்தருளின சர்வேசுரனைத் தோத்திரம் பண்ணினார்கள். பிறகு எல்லாரும் சூழ்ந்துவர, இஞ்ஞானி இளைப்பில்லாமல் நடந்து வீட்டுக்குச்சென்று தன்னிடத்திலே சம்பவித்த புதுமையை எங்கும் சொல்லிக்கொண்டு திரிந்தானும். இந்த வர்த்தமானங்களையெல்லாம் வீரமாமுனிவர் எழுதிவைத்தார்.





அன்றியும் முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் மரணமடைந்த கொஞ்சகாலத்துக்குப்பின், பெரியதாழை என்னும் ஊரில் கொஸ்தாவென்னும் அருளானந்த சுவாமியாரின் பங்கு விசாரணைகாலத்தில், ஓர் வீட்டில் தீப்பற்றி காற்று அகோரத்தால், மற்ற வீடுகளும் கோவிலும் எரிந்து நிர்மூலமாய்ப்போகிற தருணத்திலிருந்தன. அத்தருணத்தில் மனுஷரால் ஒன்றும் ஆகாதென்று கண்ட சுவாமியார், திரளான ஜனங்களுக்குமுன்பாக முழந்தாளிட்டுக் கைவிரித்து அண்ணாந்து, வானத்தை நோக்கி: "ஆண்டவரே! தேவரீருக்கு உகந்த ஊழியனாகிய அருளானந்தருடைய மன்றாட்டால் எங்களுக்கு இரங்கி, இந்த ஆபத்தினின்று எங்களை இரட்சித்தருளும் சுவாமி!" என்று பிரார்த்தித்துக்கொண்டார். உடனே காற்று அமர்ந்து ஆகாயமெங்கும் மேகம் பரம்பி மழை பொழிய, பற்றின தீயால் மற்ற வீடுகளுக்கு மோசமின்றி, நெருப்பு அவிந்துபோயிற்று. இதைக் கண்ட எல்லோரும் பிரமித்து, இது பெரிய அற்புதமென்று கூறி, வேதசாட்சியான அருளானந்தரை மகா அர்ச்சியசிஷ்டவராகக் கொண்டாடினார்கள்.

இதுவுமன்றி, தொட்டியம் என்கிற ஊரில் பேய் ஆராதனை செய்வதில் பேர்பெற்ற ஓர் அஞ்ஞானி கடின வியாதியாய் விழுந்து மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டிருந்தான். சிறந்த வைத்தியரை வரவழைத்து, மிகுந்த செலவுசெய்து அவுழ்தம் சாப்பிட்டும், அதினால் ஓர் அற்ப ஆறுதலும் அடையாமல், வியாதி அதிகரித்துக்கொண்டிருந்தது. அவ்வூரில் ஜெகநாதன் என்னும் ஓர் நல்ல கிறீஸ்துவன் இருந்தான்.

இவன் தன்பேரில் ஒருவரும் குறைவு சொல்லாதபடிக்கு வைத்திய சாஸ்திரம் நன்றாய்க் கற்று, அஞ்ஞானிகளுக்குட் பிரவேசித்து, வைத்தியனென்று பேர்பெற்று, வியாதியஸ்தருக்கு அவுழ்தம் கொடுத்துக் கூடுமான சமயத்தில் அஞ்ஞானிகளுக்குப் புத்தி சொல்லி அநேகரை மனந்திருப்பிக்கொண்டிருந்தான். மேற்சொல்லிய வியாதியஸ்தனை அஞ்ஞானி சத்தியவேதத்தின்பேரில்மிகவும் அருவருப்புள்ளவனாயிருந்தாலும், வியாதியின் அகோரத்தால்வேடி ஜெகனிநாதனை தனக்குதவியாக வரவழைத்தான். அப்படியே ஜெகனிநாதனும் போய் அவனுக்கு நல்ல வார்த்தைசொல்லி, வெகு பட்சத்தைக் காட்டிச் சில மருந்துகளைக் கொடுத்துச் சொன்னதாவது: "என் சிநேகிதரே! உமக்குள்ள வியாதி அவுழ்தத்தால் பரிகரிக்கப்படத்தக்கதல்ல. ஆனால் ஏக கடவுளான மெய்யான சர்வேசுரனை வணங்குவீராகில், உம்முடைய ஆத்துமம் கரையேறுவதுமல்லாமல், ஒருவேளை சரீரத்துக்கும் ஆரோக்கியமுண்டாகும்" என்றான். இதற்கு அஞ்ஞானி "உங்களுடைய வேதம் நல்லதாகில், இரங்கநாதத்தேவன் உங்களுடைய குருவை அவமானமாய்க் கொன்று, அந்த வேதத்தையும் அழிக்கப் பிரயாசப்பட்டிருப்பானோ" என்றான். ஜெகனிநாதன் இதற்கு மறுமொழியாக, "எங்களுடைய வேதம் நல்லதல்ல என்பீராகில், இது மெய்யென்று ஒப்பிக்கத் தம்பிராணனைக் கொடுத்துச் சாட்சி சொல்லுவாருண்டோ? நீர் சொன்ன சுவாமியார் எங்கும் காரணக்குருவாய்த் திரிந்து, அநேக தர்மக்கிருத்தியங்களை நடத்தி, கடைசியாய்ச் சத்திய வேதத்துக்குச் சாட்சியாகத் தமது உயிரைக் கொடு





த்து, வானலோகத்தில் நித்திய காட்சியை அடைந்து தம்மை மன்றாடுகிறவர்களுக்கு வேண்டிய சகாயங்களைக் கட்டளையிட்டு வருகிறாரே" என்றான். இதற்கு அஞ்ஞானி: "அப்படியானால், நான் அவரைப் பிரார்த்தித்துக்கொள்ளுவேன், இதுமுதல் 30 நாழிகைக்குள்ளாக என் வியாதி நீங்கி, முழு ஆரோக்கியம் அடைவேனாகில் சத்தியவேதத்தை ஏற்றுக்கொண்டு, கிறீஸ்துவனாவேன்" என்றான். சர்வேசுரனுடைய அளவில்லாத வல்லபத்தையும், கிருபையையும் நன்றாய் அறிந்திருந்த ஜெகனிநாதன், "உண்மையான விசுவாசத்தோடு வேண்டிக்கொள்ளுவீராகில், அப்படியே ஆகுமென்றுசொல்லித் தன் வீட்டுக்குப்போனான். இப்பிரகாரமே அஞ்ஞானியானவன் முத்திப்பேறு பெற்ற அருளானந்தரை வேண்டிக்கொண்டதின்பேரில் அவனுக்கு உண்டாயிருந்த வியாதி நீங்கி, பூரண ஆரோக்கியமடைந்தான். உடனே தான் வார்த்தைப்பாடு கொடுத்ததுபோலே, ஜெகனிநாதனிடத்தில் மந்திர உபதேசங்கற்று, அத்தியந்த சந்தோஷத்துடனே ஞானஸ்நானம் பெற்று, உத்தம கிறீஸ்துவனாகி நன்னெறியில் வழுவாதொழுகினான்.

மீளவும் இராமநாதபுரத்து அரண்மனையில் இரங்கநாதத்தேவனுடைய மருமகளுக்கும், அவளுடைய மகனுக்கும் பேய்பிடித்ததினால், அவர்கள் அகோரவாதை அநுபவித்துக்கொண்டிருந்தார்கள். அவ்வரண்மனையில் வாசம்பண்ணிக்கொண்டிருந்த பத்தியுள்ள ஒரு கிறீஸ்துவ ஸ்திரீ இதைக்கண்டு இராஜாவின் மருமகளுக்குச் சொன்னதாவது: "அம்மா, ஓரியூரில் தலை

வெட்டுண்ட குருவினுடைய நாமதேயத்துக்குத் துஷ்டப்பசாசுகள் பயப்படுகிறதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். அவருடைய ஆதரவைத் தேடுவீராகில், உமக்கும் உம்முடைய குமாரனுக்கும் ஆரோக்கியமுண்டாகுமென்று நினைக்கிறேன்" என்றான். இராஜாவின் மருமகன் இதற்குச் சம்மதித்து, தானும், தன் மகனும் முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய அனுக்கிரகத்தை மன்றாடினார்கள். உடனே பசாசு ஓடிப்போகவே இருவரும் நல்ல சௌக்கியமடைந்தார்கள். இவ்வதிசயத்தைக்கண்டு, இவர்கள் இருவரும் நன்றியறிந்தவர்களாய், முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய நாமத்தை வாழ்த்தி, ஞானஸ்நானம் பெற்று மரணபரியந்தம் விசுவாசத்தில் உறுதியாயிருந்தார்கள்.

மேற்கூறிய புதுமைகளைத் தவிர, இந்நாட்களிலும் முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய வல்லபமுள்ள வேண்டுதலால் அனேகர் தாங்கள் படுகிற இக்கட்டுகளில் தேற்றரவையும், கடின வியாதிகளில் ஆரோக்கியத்தையும் தாங்கள் நினைத்த காரியங்களில் அநுகூலத்தையும் அற்புதமாய் அடைந்திருக்கிறதாகத் தெரியவருகிறது. ஆகையால், தக்க விசுவாச நம்பிக்கையோடு முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய ஆதரவைத் தேடுகிறவர்கள் எல்லோரும் தங்கள் மன்றாட்டை அடைவார்களென்பதற்குச் சந்தேகமில்லை.

---



## 11-ம் பிரிவு.

### வேதசாட்சியான் அருளானந்தர் முத்திப்பேறுபெற்ற பட்டமடைந்த வர்த்தமானமாவது:

இச்சிறு புத்தகத்தில் சொல்லிக்காட்டின பிரகாரமே, வேதசாட்சியான அருளானந்தருடைய எவ்வித சகிர்த புண்ணியங்களும், இந்துதேசத்தில் அவர் நடத்தின அதிசயமான கிருத்தியங்களும், அவருடைய வேண்டுதலால் செய்யப்பட்ட பற்பல அற்புதங்களும் இப்பூவுலகின் நாற்றிசையிலும் மென்மேலும் அதிகமாய்த் துலங்கிற்று. ஆகையால், இத்தேசத்திலுள்ள குருக்களும் சகல கிறீஸ்துவர்களும், திருச்சபையில் வேதசாட்சிகளுக்கும் அப்போஸ்தலர்களுக்கும் வழங்கிவரும் ஸ்துதி வணக்கம் வேண்டுதல் ஆராதனை இவருக்கும் உண்டாகவேணுமென்று மிகவும் ஆசையாயிருந்தார்கள். மீளவும் பொர்த்துக்கால் இராஜாவும் அநேக மேற்றிராணிமார்களும், வேதசாட்சியான அருளானந்தரைப் புகழ்ந்து, இவருடைய மேலான நடபடிக்கைகளைச் சுருக்கமாய் விவரித்து, அவர் சத்தியவேதத்துக்காக வலியமனதோடு அடைந்த மரணத்தைப் பாராட்டி இவருக்கு அர்ச். பட்டங் கட்டவிடவேண்டுமென்று அர்ச். பாப்பானவருக்குத் தாழ்மையான விண்ணப்பமெழுதி மன்றாடினார்கள். ஆகையால் அர்ச். பாப்பானவர் மைலாப்பூர், கிரங்கனூர் மேற்றிராணிமார்களைத் தம்முடைய ஸ்தானாபதிகளாக நியமித்து, இத்தேசங்களில்தானே கண்டறிந்த சாட்சி

கள் மூலமாய் அருளானந்தர் ஒழுகின ஒழுக்கங்களையும், நடத்தின செய்கைகளையும், தேவ ஊழியத்தில் பட்ட பிரயாசத்தையும், அடைந்த மரணத்தின் காரணத்தையும், சொல்லப்படுகிற புதுமைகளின் வரலாற்றையும் பரிசோதிக்கவேண்டுமென்று கற்பித்தார். அப்படியே இவ்விரு மேற்றிராணிமார்களும், இவர்களால் நியமிக்கப்பட்ட வீரமாமுனிவர் என்னும் தைரியநாத சுவாமியாரும், வேறே சில குருக்களும், திருச்சபையின் முறைமையின்படியே சத்தியப்பிரமாணங் கேட்டு, வேண்டிய சாட்சிகளை நுணுக்கமாய் விசாரித்து அவர்களுடைய வாக்குமூலங்களைப் பற்றும்பற்றாய் எழுதி, இந்தப் பத்திரங்களுக்கெல்லாம் முத்திரையிட்டு, அர்ச். பாப்பானவருக்கு அனுப்பினார்கள். இவைகளை அர்ச். பாப்பானவரும் கர்தினால்மார்களும், மகா கவனத்தோடு பரிசோதித்து, ஆராய்ந்துபார்த்து கேட்கவேண்டிய ஆக்ஷேபனைகளையும் கேட்டுத் தீர்ந்தபின்பு, வசனித்த தீர்மானமாவது: "மெய்யாகவே சேசுசபைக்குருவான அருளானந்தர் சகல புண்ணியங்களையும் சாங்கோபாங்கமாய் அநுசரித்து, அப்போஸ்தலருக்கொப்பாய்ச் சத்தியவேதத்தைப் பிரசங்கித்து வேதசாட்சியாகத் தமது பிராணனைக் கொடுத்தாரென்பதாலும், இவர் வேண்டுதலால் அநேக அற்புதங்கள் நடந்தேறினவென்பதாலும், இவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் செல்லும்" என்று கூறினார்கள். ஆகையால், அக்காலத்தில் திருச்சபையை ஆளாநின்ற 9-ம் பத்திநாதர் என்னும் அர்ச். பாப்பானவர் வேதசாட்சியான அருளானந்தரைப் புகழ்ந்து, இவருக்கு முத்திப்பேறுபெற்ற பட்டம் அளித்து, இவரைப் பிரசித்த



மாய் வணங்கவும், வருஷாந்திரம் வருகிற பெப்ரவரி மாதம் 11-ம் உ யாகிய மாசி-மீ [illegible]-உ இவரைக்குறித்துத் திருவிழா கொண்டாடவும் வேண்டுமென்று, 1852-ம் ௵ மே-மீ 18-உ யுள்ள ஒரு நிருபமூலமாய் ஆக்கியாபித்தருளினார்.

மீளவும் அர்ச். பாப்பானவர் முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய முதல் திருவிழாவை இப்பூமண்டலத்தில் பிரதான ஆலயமாகிற உரோமை நகரத்து அர்ச். இராயப்பருடைய கோவிலில் கொண்டாட விரும்பி, அதற்காக, 1853-ம் ௵ ஆகஸ்ட்-மீ 21-ம் உ வைக் குறித்தார். இத்திருவிழாவின் சிறப்பையும் பிரதாபத்தையும், அத்திருவிழாவைக் காண பூமியின் நாற்றிசையினின்றும் பத்தி ஆசையோடு கூடின ஜனங்களின் திரட்சியையும், அவர்கள் மனதைப் பூரிப்பித்த மகிழ்ச்சியையும், நமது புன்சொல்லால் சொல்லிக்காட்டுந் தன்மையல்ல. முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய மாட்சிமைபொருந்திய மரணத்தையும் அவர் வேண்டுதலால் நடந்த சில புதுமைகளையும் காட்டிய நவமணிபதித்த படங்களும், அழகிய பட்டுக் கொடிகளும், வகைவகையாய் வைத்திருந்த அலங்காரம் இத்தன்மையென்று கூறுவதரிதே. அவ்வாலயத்தின் பிரமாண்ட தூண்களில் தொங்கிய செம்பட்டுகளும், இத்தூண்களின் போதிகைகளிலும் பாதங்களிலும் பரப்பின ஒளிவீசும் பொன் தகடுகளும், சுவர்களில் போர்த்த பல சிறப்பட்டுகளும், அந்தந்த மண்டபத்தின் மாடங்கடோறும் தொங்கிய சரிகைக் குஞ்சங்களும், பளபளவென மின்னும் வெள்ளிக்

சோடினைகளும், எங்கும் ஒளிவிடும் பளிங்குத் தீபங்களும், தங்கத்தாற்பூசிய தண்டுகளில் எரியும் எண்ணிக்கையில்லாத மெழுகுதிரிகளும், சுகந்த வாசனைவீசும் பூமாலைகளுமாகிய இவையெல்லாம் மோக்ஷ சிறப்புக்கொப்பாயிருந்தன. அன்றியும் பல சுதிர்மணிகளால் நிறைந்த இவ்வாலயத்துப் பெரிய பீடத்தினுச்சியில், முத்திப்பேறுபெற்ற அருளானந்தர் சோதிமண்டலத்தில் வீற்றிருக்கும் பரம கர்த்தாவின் திவ்விய தரிசனத்தையடையச் சம்மனசுகளால் தூக்கப்படும்பாவனையாக ஓர் பொற்சித்திரப்படம் ஸ்தாபிக்கப்பட்டு, பட்டுத்திரைச்சீலையால் மறைக்கப்பட்டிருந்தது. இவ்வலங்கார ஆலயத்தில் மேற்சொல்லிய ஆகஸ்டு மீ 23ம்-உ சூரியோதயமாகி 10 நாழிகைக்குள் அப்பட்டணத்திலுள்ள பெரியோரும், மந்திரிகளும், பிரபுக்களும், பிரதானிகளும், படைத்தலைவரும், இராஜாக்களின் ஸ்தானாபதிகளும் துரைகளும் பலசபைக் குருக்களும் எண்ணிக்கையில்லாத ஜனங்களும் கூடியிருக்க, பொன் வெள்ளி நவமணிகளால் அலங்கரித்த ஆடைகளைப்பூண்ட கர்தினால்களும் மேற்றிராணிமார்களும் தங்களுக்கு நியமித்திருந்த சிம்மாசனத்திலேறியுட்கார்ந்தார்கள். அப்போது கூடினவர்களெல்லாரும் அதிசயித்துக் கேட்கும்படியாக, பிரதான கர்தினாலுடைய உத்தாரப்படி ஓர் குருவானவர் அர்ச். பாப்பானவருடைய நிருபத்தை வாசித்தார். இந்த வாசகம் முடிந்தவுடனே மேற்சொன்ன படத்தை மறைத்திருந்த திரைச்சீலைவிழ, மேற்றிராணியாரொருவர் பீடத்தண்டையில் தோத்திரப்பாட்டைத் துவக்க, மணிகளெல்லாம் அடிபட, கோட்டை பீரங்கிகள் அதிர, எக்



காளங்களும் மேளதாளங்களுமுழங்க, கீதவாத்தியங்களும் சரமண்டலங்களுமொலிக்க, சகலரும் ஆனந்த சந்தோஷவெள்ளத்தில் அமிழ்ந்தினவராய், முழந்தாளிட்டுத் தலைகுனிந்து மகா பத்தியோடு முத்திப்பேறுபெற்ற அருளானந்தரை வணங்கா நின்றார்கள். மீளவும் தோத்திரப்பாட்டைத் துவக்கின மேற்றிராணியார் மேற்சொல்லிய படத்துக்கு மூன்றுதரம் தூபங்கொடுத்து, முத்திப்பேறுபெற்ற அருளானந்தரைக் குறித்துப் பாட்டுப்பூசை துவக்கினார். பூசை முடிந்தபின் அனைவரும் மோக்ஷபேரின்பத்தை அனுபவித்தாற்போல மனமகிழ்ந்து பத்தியாலுருகி, இப்பூவுலகில் இம்மாத்திரமான சிறப்பும் ஆனந்தமுமிருக்கக்கூடுமானால், வானுலக மாட்சிமையும் பேரின்பமும் எத்தன்மைத்தாயிருக்குமென்று யூகித்து சத்திய நெறியில் தேறி, மகா அக்களிப்போடு தங்கள் தங்கள் வீடுகளுக்கேகினார்கள்.

இப்படியே ஏகதிரித்துவ சர்வேசுரனுக்குத் தோத்திரமும், மாட்சிமைபொருந்திய வேதசாட்சியான முத்திப்பேறுபெற்ற அருளானந்தருக்குத் துதியுமுண்டாக மாசில்லாக் கன்னிகையின் உதவியால் இச்சரித்திரமுற்றுப்பெற்றது.

### வேதசாட்சியான
### முத். அருளானந்தர் மூலமாகக் கேட்கிற
### பத்து மன்றாட்டு.

1-வது. இவ்வுலக மகிமையையும் திரவிய சுகத்தையும் துறந்து சர்வ நன்மையுடைத்தான சர்வேசுரனை மாத்திரமே நாடி அபேட்சித்து நேசித்த முத்திப்பேறு பெற்ற அருளானந்தரே! உமது ஞானப்பிள்ளைகளாகிய நாங்களெல்லோரும் இப்பூவுலகின் மாய வாழ்வைத் தேடாமல் மோட்ச பிரதாப செல்வத்தை விரும்பி அடையவும் தேவ சிம்மாசனத்தண்டையில் மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

2-வது. எங்கள் முன்னோர்களைச் சத்தியநெறியில் திருப்பத் தக்கதாகத் தந்தை தாயையும் ஆஸ்தி பாஸ்தியையும் விட்டுச் சிந்துதேசத்துக்கு எழுந்தருளிவந்து தமிழ் இராச்சியங்களின் அப்போஸ்தலராய் விளங்கின முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! உமது பிள்ளைகளான நாங்களெல்லோரும் சத்தியவேதத்தில் நிலைபெறவும், அதின் முறைமைகளைச் சுமுத்திரையாய் அநுசரிக்கவும் கருணாம்பர சர்வேசுரனை மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

3-வது. அஞ்ஞான அந்தகாரத்தில் கிடந்த எங்கள் மூத்தோரை மோட்ச பாதையில் நடத்த அடிமிதி



களையும் நிந்தை வாதைகளையும் பட்டு மனோவாக்குக் கெட்டாத வருத்தங்களை அநுபவித்த மாட்சிமை பொருந்திய ஸ்துதியரான முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! இந்நாட்களிலுள்ள அஞ்ஞானிகள் கொடியபசாசுகளுக்குச்செய்யும் ஆராதனையைவிட்டு ஏக திரித்துவ சர்வேசுரனையறிந்து சத்திய திருச்சபையில் சேரும்பொருட்டுச் சர்வ தயாபர சர்வேசுரனை மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

4-வது. கிறீஸ்தவர்களை விசாரிக்கவும் அஞ்ஞானிகளை மனந்திருப்பவும் சொல்லிலடங்காத வருத்தப் பிரயாசத்தோடு நெடுநாள் இந்நாடுகளிலெங்கும் காரணக் குருவாய்த் திரிந்த முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! உமது ஞானப்புத்திரராகிய நாங்கள் நன்னெறியில் வழுவாதொழுகவும், இன்னும் அஞ்ஞான இருளில் அமிழ்ந்திக் கிடக்கும் நிர்ப்பாக்கியரை நற்போதனையில் மனந்திருப்புகிறதற்காகச் சற்குருக்களை அனுப்பவும் பரம கர்த்தரை மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

5-வது. நல்ல ஆயனாகிய சேசுக்கிறீஸ்துவின் மந்தையான திருச்சபையில் எங்களை ஞான ஆட்டுக்குட்டிகளாகச்சேர்த்த கவனமுள்ள மேய்ப்பனாகிய முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! கொடிய ஓநாய்களான பதிதர் இந்த மந்தையில் நுழைந்து, அநேக கபட தந்திரங்களால் ஏழைகளைக் கெடுத்துத் திருச்சபையை விரோதிக்கிறார்களே; இவர்களுடைய கொடுமை அக

லவும் துர்மார்க்கம் அழியவும் சர்வ வல்லவரான சர்வேசுரனை மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

6-வது. பசாசுகளால் அசைக்கப்படாத செங்கோன்மையைக் கொண்டிருக்கிற அர்ச். பாப்புவினால் அனுப்பப்பட்டு இந்நாடுகளில் சத்திய திருச்சபையை ஸ்தாபித்தவராகிய முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! பிரிவினையானது இந்தத் திருச்சபையாரை மயக்கி இவர்களை இரண்டாக்கி அர்ச். பாப்புவின் கட்டளைகளை மீறப்பண்ணி அனேக ஆத்துமாக்களை கெடுத்தழிக்கிறதைக் கண்டு, அர்ச். பாப்பானவர் தம்முடைய செங்கோன்மையை விக்கினமின்றிச் செலுத்தவும், சேசுக்கிறீஸ்துவுக்குக் கற்புடையாளாகிய திருச்சபையை ஆளவும் பிரிவினையென்னும் பொல்லாப்பு ஒழியவும் வல்ல கடவுளை மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

7-வது. உமது இனிய இருதயத்தில் பற்றியெரிந்த தேவசிநேக அக்கினியை எங்கும் பற்றுவிக்க விரும்பி மகா வருத்தத்தோடு பெரியோருக்கும் சிறியோருக்கும் பாவசங்கீர்த்தனம் தேவநற்கருணை முதலிய தேவத்திரவிய அநுமானங்களை அளித்துக்கொண்டுவந்த உத்தம ஆசிரியராகிய முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! எங்கள் இருதயத்தில் தேவசிநேகம் மென்மேலும் அதிகமதிகமாய் வர்த்திக்கவும், நாங்கள் அடிக்கடி தகுந்த ஆயத்தத்தோடும் அத்தியந்த பத்தியோடும் பாவசங்கீர்த்தனஞ்செய்து தேவநற்கருணையுட்



கொண்டு தேவ முறைமைகளை நுணுக்கமாய் அநுசரிக்கவும் சர்வ நன்மைக்குங் காரணராகிய சர்வேசுரனை மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

8-வது. பசாசுகளை ஓட்டிக் கள்ள ஞானிகளைத் தோற்கடித்து மந்திரவாதிகளை ஜெயித்துச் சேசுக்கிறீஸ்துநாதருடைய ஞான யுத்தங்களைப் பொருதின வெல்லக்கூடாத சத்தியவேத வீரராகிய முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! போர்க்களமாகிய இப்பூவுலகில் உலகம் பசாசு சரீரம் என்னும் இம்மூன்று சத்துருக்களுடன் ஓயாத சண்டைசெய்கிற நாங்கள் தோர்வைப்படாமல் சேசுக்கிறீஸ்துவின் வெற்றிக் கொடியான திவ்விய சிலுவையைக் கையில் ஏந்தி ஜெயங்கொண்டு எங்களுக்கு நியமித்திருக்கிற மோட்ச பேரின்ப இராச்சியத்தில் சேரும்படிக்கு ஏகாதிபதியான கர்த்தரை மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

9-வது. மறவன் தேச ஓரியூரில் சத்தியவேதத்துக்காக மகிழ்ந்த முகத்தோடும் ஆனந்த ஆசையோடும் உமது உயிரைத் தர மனம்பொருந்தி சம்மதித்து, கொடியவர்களுக்கு உமது அஞ்சாத் தலையை நீட்டித் தந்து எண்ணிக்கையில்லாத ஜனங்களுக்கு முன்பாக வெட்டுண்ட பிரதாபமுள்ள வேதசாட்சியான முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! உமது மக்களாகிய நாங்களெல்லோரும் உம்மைப் பின்பற்றி எந்தத் துயரங்களுக்கும் அஞ்சாமலும், எவ்வகை வருத்தங்களுக்குப் பின்னிடாமலும், எங்களுடைய சுகிர்த நடக்

கையினால் கிறீஸ்துவென்கிற பெயரை மகிமைப்படுத்திச் சாகுந்தனையும் திடமனதோடு நன்னெறியிலொழுகி நல்ல மரணமடையும்படிக்கு, கோடாகோடி வானோர்களால் துதிக்கப்பட்ட சர்வேசுரனை மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

10-வது. பூமண்டலத்தில் மாட்சிமையான நாமதேயத்தையும், பரமண்டலத்தில் வேதசாட்சிகளுடைய முடியையும் அடைந்து, சர்வலோக நாயகனண்டையில் வீற்றிருக்கும் எங்கள் தகப்பனாரும் பாதுகாவலருமாயிருக்கிற முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! உம்மை ஆராதித்து வாழ்த்துகிற நாங்களெல்லோரும் உமது வேண்டுதலால் பரமகர்த்தரின் பேரின்ப தரிசனையை அடைந்து உம்மோடுகூட அநவரதகாலமும் வாழ்ந்திருக்கத்தக்கதாக, மோக்ஷவாசிகளுக்கு ஆனந்தமும் சம்பாவனையுமாயிருக்கிற சர்வ வியாபக சர்வேசுரனை மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். பர. பிரி. திரி.

முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! நாங்கள் பண்ணின இந்தச் செபங்களெல்லாம் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருப்பாதத்திலே காணிக்கையாக வைத்து நாங்கள் கேட்கிற இந்த மன்றாட்டுகளை அவர் எங்களுக்குத் தந்தருளத்தக்கதாக நீரே அடியோர்களுக்காக மனுப்பேசி மன்றாடவேணுமென்று உம்மைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

ஸ்துதிக்கப்படுகிறதற்கு மிகவும் பாத்திரமானவருமாய் அதிசயமான அற்புதங்களைப் பண்ணுகிறவருமா

யிருக்கிற முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! இத்தேசத்தாரை மனந்திருப்பவுஞ் சத்தியவேதத்தை ஸ்திரப்படுத்தவும் மனோவாக்குக்கெட்டாத பிரயாசவருத்தங்களைப் பட்டு உம்முடைய இரத்தத்தையுஞ் சிந்தினீரே, இந்த உம்முடைய விலையேறப்பெற்ற திரு இரத்தமானது ஞானவித்தாகி இப்பூமியைச் செழிக்கப்பண்ணி, அஞ்ஞானிகள் சர்வேசுரனை அறியவும், பதிதர் பிரிவினைக்காரர் முதலிய சகலரும் நன்னெறியில் சேரவும், பாவிகள் மனந்திரும்பவும், நல்லவர்கள் தருமவழியிலே சாங்கோபாங்கமாக நடக்கவும், உத்தரிப்புஸ்தலத்திலிருக்கிற ஆத்துமாக்களுடைய வேதனை குறைந்தொழியவும், சத்திய இராஜாக்களுக்குள் சமாதானம் உண்டாகவும், சத்தியவேதம் உலகமெங்கும் விளங்கவும் வேண்டிய அநுக்கிரகத்தைப் பரம கர்த்தர் செய்தருளும்படிக்கு அவர் சந்நிதியில் வேண்டிக்கொள்ளும். ஆமென்சேசு.

---

## வேதசாட்சியான முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய திருநாளுக்குமுன் செய்யும் நவநாட்செபம்.

---

1-வது. மிகவும் பரிசுத்தமுள்ள முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! தேவரீர் பரிசுத்ததனத்தைக் காப்பாற்றுவதற்காக அரண்மனையையுஞ் சுகசெல்வத்தையும் வெறுத்துச் சந்நியாசத்தில் உட்பட்டுக் கடினதவங்களால் இச்சைகளைக் கீழ்ப்படுத்திப் புண்ணியசாங்கோபாங்கத்தை அடைந்தீரே; அப்படியே நாங்களும் எங்கள் ஆசாபாசத்தை அடக்கி லௌகீக கவலைகளைவிட்

டொழித்து எங்களைத் தமது இரட்சணியத்துக்குவேண்டிய பரிசுத்த தனத்தை நாங்களடைய பிராத்திக்கருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

பர. பிரி. திரி.

2-வது. தேவசிநேகத்தினால் நிறையப்பெற்ற முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! உமது மனதிலே எரிந்த தேவபத்தியின் சுவாலையைத் தூரதேசத்திலுங் கொண்டுபோய், அச்சுவாலையால் யாவருடைய இருதயத்தையும் பற்றியெரிக்கப் பிரயாசப்பட்டுத் தேவபத்தியின் பெருக்கத்தால் எந்தத் துன்பதுரித ஆக்கினைக்கும் அஞ்சாமல் தேவசிநேகத்தினாலேயும் உமது பிராணனைச் செலவழித்தீரே; அப்படியே உலக ஆசையில் அமிழ்ந்தியிருக்கிற எங்கள் மனது தேவசிநேக அக்கினியினால் சுவாலிக்கவும், நாங்கள் பாவத்தினால் சர்வேசுரனுக்குத் துரோகஞ்செய்யாமல் எந்தக் கஸ்தி வாதைகளையும் அனுபவித்துத் தேவசிநேகத்தோடே மரிக்கவும் பிராத்தித்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

பர. பிரி. திரி.

3-வது. எங்கள் ஞானபிதாவான முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! தேவரீரிடத்திலே விளங்கின ஆச்சரியமான பிறர்சிநேகத்தினிமித்தம், ஆண்டவர் சாயலாய் உண்டாக்கப்பட்ட புறஜாதியார் ஆத்துமத்தையும், விசேஷமாய் மதுரை தேசத்தாராகிய எங்களாத்துமங்களையும் இரட்சிக்கிறதிலே சொல்லிலடங்காத கஸ்திப்பட்டு, பத்தொன்பது வருஷத்துக்குள்ளே எண்ணிக்கைக்குள்ளடங்காத ஜனங்களுக்கு சத்தியவேதத்தைப் போதித்து, அநேகமாயிரம் அஞ்

ஞானிகளுக்கு ஞானதீட்சை தந்து, வியாதிக்காரருக்கு உதவிசெய்கிறதிலேயும் பிறர்சிநேகத்துக்கடுத்த மற்றப் புண்ணியங்களை அநுசரிக்கிறதிலேயும் மிகவும் பிரயாசப்பட்டீரோ, அப்படியே நாங்கள் வாக்கினாலேயும் கிரிகையினாலேயும் பிறர்சிநேகமென்கிற புண்ணியத்தை அநுசரிக்கவும் புறத்தியார் ஈடேற்றத்தின்பேரில் எங்களுக்கு ஆவலுண்டாகவும் பிரார்த்தித்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

பர. பிரி. திரி.

4-வது. அத்தியந்த தாழ்ச்சியுள்ள முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! தேவரீர் பொர்த்துகால் இராயராலும் அவருடைய மந்திரி பிரதானி முதலான குடிகளாலுங் குருப்பிரசாதிகளாலுஞ் சங்கிக்கப்பட்டு மகிமையடைந்தபோது மகாதாழ்ச்சியோடே நடந்து கிறீஸ்துநாதரைப்பற்றி எல்லாருக்கும் ஊழியஞ் செய்கிறதாகக் காண்பித்து, நிந்தையவமானப்படுகையில் பூரிப்பையடைந்தீரோ; அப்படியே நாங்கள் புகையைப்போலே மறைந்துபோகிற இந்தப் பூலோக வெகுமானத்தை நிந்தித்துத் தாழ்ச்சியின்பேரில் நாங்கள் மெய்யான பற்றுதல் வைக்கத்தக்கதாக எங்களுக்காக வேண்டிக்கொள்ள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

பர. பிரி. திரி.

5-வது. வெல்லக்கூடாத பொறுமையுள்ள முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! பயணத்தினாலேயும், அஞ்ஞானிகளுடைய நெருக்கிடை உபத்திரவங்களினாலேயும், சிறைவிலங்கு அடிகளினாலேயும், ஆற்றுப்பெருக்கு பசிதாகம் இளைப்பு தவிப்பு வருத்தங்களினாலேயும் தேவரீருக்குவந்த எண்ணப்படாத

கஸ்திகளைத் தேவசித்தத்தின்படியே முறைப்படாமல் சகித்து அதிசயமான பொறுமையைக் காண்பித்தீரே, அப்படியே பாவமாகிற வியாதியால் வருந்தும் எங்களுக்குப் பாவிகளின் பரிமளதைலத்தால் ஞான ஆரோக்கியம் உண்டாவதற்காகத் தேவசித்தத்தின்படியே இம்மையில் நேரிடுகிற துன்ப துரிதங்களை முறைப்படாமல் பொறுமையோடே சகிக்கவும், மறுமையில் உம்மோடு மோக்ஷமுடிபெறவும் பிரார்த்தித்தருள வேணுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

பர. பிரி. திரி.

6-வது. உத்தம சிரவணமுள்ள முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! தேவரீர் சிரவணத்தின் தருமத்தைக் குறையற நிறைவேற்ற எப்போதுஞ் சிரேஷ்டர் கற்பனைப்பிரகாரம் நடந்ததுமல்லாமல், அவர் சர்வேசுரனுடைய ஸ்தானத்திலிருக்கிறவரென்றறிந்து உமது சுயமனதை வெறுத்துச் சிரேஷ்டர் மனதுக்கு ஒத்தபிரகாரம் நடந்து தேவசித்தத்தைப் பழுதற நிறைவேற்றினீரே, அப்படியே நாங்கள் சர்வேசுரனுடைய சித்தத்துக்கும் அவர் சித்தத்தை அறிவிக்கிற குருக்களுக்குங் கீழ்ப்படிந்து, தேவசித்தத்தையும், எங்கள் அந்தஸ்தின் கடமைகளையும் நிறைவேற்றி உத்தம சிரவணத்தின் தருமத்தை அநுசரிக்கப் பிரார்த்தித்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

பர. பிரி. திரி.

7-வது. வாக்குக்கெட்டாத தைரியமுள்ள முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! தேவரீர் வேதம்போதிக்க குருவாய்ப் பட்டிக்காட்டுப் பங்குகளில் சுற்றித்திரிந்தபோது தண்ணீர் காடுமலை கள்ளர் துஷ்டமிரு

கும் இவைகளால் நேரிடக்கூடிய ஆபத்துக்குஞ் சேது பதி இராயனுடையவும் அவன் சேவகருடையவும் நிஷ்டூர ஆக்கினைக்கும் அஞ்சாமல் சேசுக்கிறீஸ்துநாதரைப் பற்றி உயிர்தரத் துணிந்த தாற்பரியத்தால் அதிசயமான தைரியத்தோடு பிராணனைச்செலவழித்து வேதசாட்சிமுடியடைந்தீரோ, அப்படியே நாங்கள் மனிதருடைய முகத்தாக்ஷணியத்தையும் அவர்களுடைய துர்மாதிரிகையையுங் கண்டுபாவியாமல் சத்தியவேதத்தில் நிலைகொண்டு நெறிதவறாமல் நடக்கப் பிரார்த்தித்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

பர. பிரி. திரி.

8-வது. வேதம் போதிக்கிறதிலே அர்ச். சவேரியாரைப் பின்பற்றினவரான முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே! தேவரீர் அர்ச். சவேரியாரைப்போலே ஆத்தும இரட்சணியத்தின்பேரில் வேகமான சுறுசுறுப்பையடைந்து மறவா இராச்சியத்தில் வாக்குக்கெட்டாத பிரயாசத்தோடு எண்ணப்படாத ஜனங்களுக்கு சத்தியவேதத்தைப் போதித்தீரோ, அப்படியே உம்மால் உபதேசிக்கப்பட்ட மறவாயிராச்சியத்தாராகிய நாங்கள் தேவரீர் அர்ச். சவேரியாரைக் கண்டுபாவித்தாற்போலே, அவரையும் உம்மையும் நாங்கள் கண்டுபாவித்து எங்கள் ஆத்துமங்களையும் புறத்தியார் ஆத்துமங்களையும் இரக்ஷிக்க எங்களுக்கு வேகமான சுறுசுறுப்புண்டாகத் தக்கதாகப் பிரார்த்தித்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம். பர. பிரி. திரி.

9-வது. ஜீவியத்திலும் மரணத்தின் பின்பும் புதுமைகளால் பிரபலியமான முத்திப்பேறுபெற்ற அரு

ளானந்தரே! மனிதர்மேல் ஆவேசமேறின பசாசுகளைத் தேவரீர் ஓட்டி நோய்பிணிகளைத் தீர்த்து எண்ணிக்கையில்லாத மற்ற அற்புதங்களைப் பண்ணினீரே, அப்படியே மதுரையிராச்சியத்தில் இன்னும் வழங்கி வருகிற பசாசின் ஆராதனை நீங்கவும், பதிதர் மதம் பிரிவினை ஒழியவும், சத்தியவேதம் எங்கும் தடையில்லாமல் செழித்தோங்கவும் மேன்மேலும் இத்தேசத்துக்கு உம்மைப்போன்ற சத்தியமறைக்குருக்கள் வரவும் பிரார்த்தித்தருளவேணுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

பர. பிதா. திரி.

முத.— ஆண்டவரே! மகிமையினாலுங் கீர்த்திப் பிரதாபத்தினாலும் அவரை முடிசூட்டினீர்.

துணை.—உமது கைப்படைப்புகளுக்கு மேலாக அவரை ஸ்தாபித்தருளினீர்.

## பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ வல்லவரான சர்வேசுரா, உமது திரு வேத சாட்சியான முத்திப்பேறுபெற்ற அருளானந்தருடைய வேண்டுதலினாலே நாங்கள் சரீரத்தின் சகல துன்பங்களினின்று மீட்டிரட்சிக்கப்பட்டு, ஆத்துமத்தின் சகல துர்விசாரங்களினின்று சுத்தமாகவும் அநுக்கிரகம் பண்ணியருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும், ஆமென் சேசு.

## அர்ச். சவேரியார் அஞ்ஞானிகள் மனந்திரும்புவதற்காக உண்டாக்கின மந்திரம்.

அநாதியுமாய்ச் சர்வத்தையும் படைத்தவருமாயிருக்
கிற சர்வேசுரா! அஞ்ஞானிகளுடைய ஆத்துமங்
கள் உம்மால் சிருஷ்டிக்கப்பட்டு தேவரீருடைய திரு
சாயலாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறதை நினைத்தருளும்
சுவாமி. இதோ! தேவரீருடைய தோத்திரத்துக்கு
விரோதமாய் நரகம் நிறைய அவர்கள் அதின் பயங்
கரமான பாதாளத்திலே இரையாய் விழுந்து சேதமா
ய்ப் போகிறார்களே. ஆ! சுவாமீ, உமக்கு ஏக குமா
ரனாகிய சேசுநாதர் அவர்களை இரட்சிக்கத்தக்கதாகத்
தம்முடைய விலைமதியாத திரு இரத்தத்தைச் சிந்தி
எண்ணப்படாத கஸ்தி நோவுகளை அநுபவித்து மகா
கடினமான மரணத்தையடைந்ததை நினைத்தருளும்.
ஆண்டவரே! அவர்கள் தங்கள் அக்கிரமங்களிலே
மூர்க்கராய் நிலைக்கொண்டு, சகலருடைய திவ்விய இர
ட்சகராகிய உம்முடைய திருக்குமாரனை நிந்திக்க
வொட்டாமல், சகல அர்ச்சியசிஷ்டவர்களின் மன்று
ட்டுக்களினாலும், உம்முடைய திருக்குமாரனுடைய
பிரிய பத்தினியாகிய பரிசுத்தத் திருச்சபையின்
வேண்டுதலினாலும், தேவரீர் சித்தமிரங்கி அவர்களு
டைய பாவ அக்கிரமங்களையும் கீழ்ப்படியாமையை
யும் பாராமல், அவர்கள்மேல் கிருபைவைத்து அவர்
கள் இப்போதாகிலும் முழுமனதுடனே மனந்திரும்பி
தேவரீரால் அனுப்பப்பட்டவரும், எங்கள் ஆண்டவரு
மாகிய சேசுக்கிறீஸ்துநாதரை வணங்கச் செய்தரு
ளும். எங்களை மீட்டிரட்சித்த அந்தத் திவ்விய கர்த்

தருக்கும் தேவரீருக்கும் அநவரத காலமும் முடிவில்லாத தோத்திரமுண்டாகக்கடவது. ஆமென்சேசு.

சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத் தத்தங்களை நாங்கள் பேறுபெற்று அநுபவிக்கத் தக்கதாக அர்ச். சவேரியாரே! எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமீ! முத்திப்பேறுபெற்ற சவேரியாருடைய ஞானப்போதகத்தினாலேயும் அவர் பண்ணின அற்புதங்களினாலேயும் சிந்துதேசத்திலுள்ள ஜனங்களைத் தேவரீருடைய திருச்சபையிலே அழைத்து உட்படுத்தச் சித்தமானீரே; அவருடைய பூச்சியமான புண்ணிய பலன்களைத் துதித்து வணங்குகிற நாங்கள் அவருடைய சுகிர்த மாதிரிகைகளை அநுசரிக்க அநுக்கிரகம் செய்தருளும். இந்த மன்றாட்டுக்களையெல்லாம் சேசுநாதருடைய திருமுகத்தைப்பார்த்துத் தந்தருளும். ஆமென்சேசு.

# வேதசாட்சியான முத். அருளானந்தர் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

கிறீஸ்துவே எங்கள் பிரார்த்தனையை நன்றாக் கேட்டருளும்.

பரமண்டலங்களிலேயிருக்கிற பிதாவாகிய சர்வேசுரா, எங்களுக்குத் தயைபண்ணி இரட்சியுஞ்சுவாமி.

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா, எங்களுக்குத்

இஸ்பிரீத்து சாந்துவாகிய சர்வேசுரா, எங்களுக்.

அர்ச்சியசிஷ்ட தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா, எங்களுக்குத்

வேதசாட்சிகளுக்கு இராக்கினியான அர்ச். மரியாயே,

வேதசாட்சியான முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே,

லிஸ்போன் நகரில் உயர்ந்த தந்தைதாயிடத்தில் பிறந்தவரே,

இராஜாவின் அரண்மனையில் வளர்க்கப்பட்டுத் தூய்மையான நடக்கையாலும் குறையாத பொறுமையாலும் அரண்மனையின் சம்மனசென்றும் வேதசாட்சியென்றும் பெயர்பெற்றவரே.

எங்களு. வேண்டிக்கொள்ளும்.

அர்ச். சவேரியாருடைய மன்றாட்டினுல் ஆரோக்கியமடைந்து இளமையிற்றுனே சந்நியாசிகளுடைய உடுபாவிலையைத் தரித்தவரோ,

பதினறு வயதில் இவ்வுலக செல்வபாக்கியத்தையும் சுற்றத்தார் சினேகிதரையும் விட்டுச் சேசுசபையில் பிரவேசித்தவரோ,

மனத்தாழ்ச்சியினுலும் சரீர ஒறுத்தலினுலும் சிரேஷ்டருக்குக் கீழ்ப்படிதலினுலும் சாங்கோபாங்கம் அடைந்தவரோ,

சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய வேதத்தைப் பரம்பச்செய்யவேணுமென்கிற தாற்பரியத்தால் இந்துதேசத்துக்கு எழுந்தருளிவந்தவரோ,

கோவை பட்டணத்தில் உச்சித கிருத்தியங்களை நடப்பித்ததால் இரண்டாம் சவேரியாரென்னப்பட்டவரோ,

மதுரை, தஞ்சையூர், செஞ்சி, வேலூர், கோலகொண்டாபுரம் என்னும் இவ்வைந்து இராச்சியங்களில் சத்தியவேதத்தைப் பிரசங்கித்தவரோ,

தமிழ்த் தேசங்களுக்கு மாட்சிமை நிறைந்த அப்போஸ்தலரோ,

இந்நாடுகளில் அஞ்ஞான இருளை நீக்கிச் செஞ்சுடரான வேதப்பிரகாசம் உதிக்கச் செய்தவரோ,

திரளான அஞ்ஞானிகளை மனந்திருப்பி ஞானதீட்சை தந்தவரோ,

அனேக அற்புதங்களால் சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய விசுவாசத்தை விளங்கப்பண்ணினவரோ,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

கிறீஸ்துவர்களை விசாரிக்கவும் அஞ்ஞானிகளை மனந்திருப்பவும் சொல்லிலடங்காத வருத்தப் பிரயாசத்தோடு இத்தேசங்களில் எங்கும் நெடுநாட் காரணக் குருவாய்த் திரிந்தவரே,

ஆழ்ந்த பத்தியும் அவியாத விசுவாசமும் சலியாத தயையும் மெலியாத தவமும் மற்றுண்டாகிய சுகிர்த புண்ணியங்களை சமுத்திரமாய் அநுசரித்தவரே,

எவ்வித துன்ப துரிதங்களையும் விக்கின இக்கட்டுகளையும் அஞ்சாத தைரியத்தோடும் [illegible] யாத பொறுமையோடும் சகித்தவரே,

பிராமணர்களையும் கள்ள ஞானிகளையும் தர்க்கத்தில் தோற்கடித்துச் சத்தியவேதத்தின் மகிமை இலக்ஷணங்களைத் தெளிவித்தவரே,

உம்மைக் கொல்லத் தேடுகிறவர்களுக்குத் தேவசெய்கையால் அநேகம்விசை தப்பினவரே,

வேதசாட்சிகளுடைய கிரீடத்தை அடைய வேணுமென்கிற ஆசையால் மறவன் தேசத்தில் பிரவேசிக்க விரும்பினவரே,

சண்டாளர் கையில் பிடிபட்டு மங்கலங் காளையார்கோவில் பாகனி முதலிய இடங்களில் சகல நிந்தை வாதைகளையும் அடி மிதியையும் மகா இடாகிக்கத்தோடு அநுபவித்தவரே,

சத்திய வேதத்துக்காக உம்முடன் வாதிக்கப்பட்ட உபதேசியின் தெறித்துவிழுந்த கண்ணை அற்புதமாய்ச் சொஸ்தப்படுத்தினவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சேசுநாதனைப்பற்றிக் கொடிய சாவுக்குத் தீர்வையிடப்பட்டவரே,

இராஜ சமுகத்தில் சத்தியவேதத்தின் இலக்ஷணங்களையும் கற்பனைகளையும் மகா திடனோடு வெளிப்படுத்தினவரே,

இராஜாவுக்குப் பிரியப்பட்டு அற்புதமாய் விடுதலையாக்கப்பட்டவரே,

காரணக் குருக்களைக் கூட்டிக்கொண்டு ஐரோப்பா கண்டத்துக்கு அனுப்பப்பட்டு, இராஜா பிரதானிகள் முதலிய சகலராலும் முக்கியமாய்ச் சங்கிக்கப்பட்டவரே,

இராஜ குமாரனுக்கு உபாத்தியாயராகவும் ஆசிரியராகவும் தெரிந்துகொள்ளப்பட்டாலும், திரும்ப இவ்விந்துதேசத்துக்குவரப் பிரியப்பட்டவரே,

உம்முடைய திரும்புதலுக்கு எவ்வாறாயும் செய்யப்பட்ட விக்கினங்களையகற்றி மகா மகிழ்ச்சியுடன் பயணப்பட்டுச் சிந்துதேசத்துக்கு சேர்ந்தவரே,

மதுரை, தஞ்சையூர், செஞ்சி, வேலூர், கோலகொண்டாபுரமென்னும் இராட்சியங்களைத் திரும்ப மகா பிரயாசத்தோடு சுற்றி விசாரித்தவரே,

வேதசாட்சிகளுடைய முடியை அடையவேணுமென்கிற விருப்பத்தால் மறவன் தேசத்துக்குத் திரும்பப் போனவரே,

கொஞ்ச மாதத்திலே மறவன் தேசத்தில் திரளான அஞ்ஞானிகளை மனந்திருப்பினவரே,

பெயர்பெற்ற தடியத்தேவனையும் அனேக பிரபுக்களையும் உத்தியோகஸ்தரையும் சத்திய திருச்சபையில் சேர்த்தவரே,

மறவன் தேசத்தின் விசேஷ அப்போஸ்தலரே,

சேசுக்கிறீஸ்துநாதர் பாவனையாக உம்மைப் பிடிக்கவந்தவர்களுக்கு எதிராய்ப்போனவரே,

வெகு நிஷ்டூரமாய்க் கட்டுண்டு தூரபயணத்துக்கு மானபங்கமாய் இழுக்கப்பட்டு இருண்ட சிறையில் அடைப்பட்டு மிகவும் வாதிக்கப்பட்டவரே,

மாந்திரியக்காரருடைய வித்தை சகுனங்களைத் திவ்விய விசுவாசத்தால் ஜெயித்தவரே.

இராஜ சமுகத்தில் எல்லாராலும் அதிசயிக்க அஞ்சாத துணிவோடும் உயர்ந்த மகத்தவத்தோடும் நின்று சத்தியவேதப் பிரதாபத்தைத் தெளிவித்தவரே,

அஞ்ஞான தெய்வங்களையும் கள்ளமார்க்கங்களையும் அழித்துச் சத்தியவேதத்தை எங்கும் பிரபலியப்படுத்தினதற்காக கொலைக்குத் தீர்மானிக்கப்பட்டவரே,

எந்த நிர்ப்பந்தத்துக்கும் நிந்தை வாதைக்கும் அஞ்சாத வேதசாட்சியே,

ஓரியூரில் புதன்கிழமை மத்தியானவேளையில் கணக்கில்லாத ஜனங்களுக்கு முன்பாக வேதசாட்சியாகக் கொல்லப்பட்டவரே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சேசுக்கிறீஸ்துவின் வேதத்தை மெய்ப்பிக்க இரத்தத்தை சிந்தின வேதசாட்சியே,

சத்தியவேதத்துக்காக மனம்பொருந்தி மகிழ்ந்த மனதோடும் ஆனந்த ஆசையோடும் உயிரைத்தரச் சம்மதித்த வேதசாட்சியே,

கொடியவர்களுக்கு உமது அஞ்சாத தலையை நீட்டித்தந்த பிரதாபமுள்ள வேதசாட்சியே,

மோக்ஷ இராச்சியத்தில் அத்தியந்த சோதி மகிமையுள்ள வேதசாட்சிகளுடைய முடி சூட்டப்பட்டவரே,

பூவுலகமெங்கும் பிரதாபமுள்ள நாமதேயத்தைப் பெற்றவரே,

மரித்தவுடனே உமது மன்றாட்டினால் எண்ணிறந்த புதுமைகளைச் செய்வித்தவரே,

மகா சிறப்புக் கொண்டாட்டத்துடன் முத்திப்பேறுபெற்ற பட்டமடைந்து எங்கும் வணங்கப்பட்ட வேதசாட்சியே,

உம்மை மன்றாடுகிறவர்களுக்குச் சகிர்த நன்மை சகாயங்களைப் பெறுவிக்கிறவரே,

பிணிநோய்களையும் கஸ்தி நிற்பந்தங்களையும் நிவர்த்தியாக்குகிற நல்ல வைத்தியரே,

மறவன் தேசத்துக்கு விலையேறப்பெற்ற மாணிக்கமே,

இந்துதேசத்தாருக்கு இரண்டாம் சவேரியாராகத் துலங்குகிறவரே,

எங்கள் தகப்பனும் பாதுகாவலுமாகிய வேதசாட்சியே,

எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனு
டைய செம்மறிப்புருவையாகிய சேசுவே, எங்கள்
பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமீ.
உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனு
டைய செம்மறிப்புருவையாகிய சேசுவே, எங்கள்
பிரார்த்தனையை நன்றாகக்கேட்டருளுஞ் சுவாமீ.
உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனு
டைய செம்மறிப்புருவையாகிய சேசுவே, எங்களை
தயை பண்ணி இரட்சியுஞ்சுவாமி.
முதலோதி.—சேசுக்கிறீஸ்துவின் திருவாக்குத்தத்
தங்களுக்கு நாங்கள் பேறுபெற்றவர்களாகத்தக்க
தாக,
துணைவர்.—முத்திப்பேறுபெற்ற அருளானந்தரே!
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## பிரார்த்திக்கக் கடவோம்.

சர்வேசுரா சுவாமீ! சிந்துதேசத்திற் சத்தியவேதம்
பரம்பச்செய்வதற்காக வேதசாட்சியாக முத்திப்
பேறுபெற்ற அருளானந்தருக்கு வெல்லப்படாத மன
த்துணிவைத் தந்தருளினீரே, இவருடைய சிறந்த
வெற்றியைக் கொண்டாடுகிற நாங்களெல்லோரும்
அவருடைய விசுவாசத்தின் சுகிர்த மாதிரிகைகளை
அநுசரிக்கும்படி அவருடைய வேண்டுதலையும் பேறு
பலன்களையும்பார்த்து அநுக்கிரகஞ் செய்தருளும்.
இந்த மன்றாட்டுக்களையெல்லாம் எங்கள் ஆண்டவரா
ன சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைக்குறித்
து எங்களுக்குத் தந்தருளுஞ்சுவாமீ. ஆமென்சேசு.

# பொருள் அட்டவணை.


| பிரிவு. | பொருள். | பக்கம். |
|---|---|---|
| | சிந்துதேசத்துக்கு அப்போஸ்தலரான அர்ச். சவேரியாருக்கு பாதகாணிக்கையாக இப்புத்தகத்தை ஒப்புக்கொடுக்கும் செபம். | 5 |
| | **முதல் அதிகாரம்.** | |
| | மூத். அருளானந்தர் பிறந்து வளர்ந்து சேசுசபையில் பிரவேசித்துச் சிந்துதேசத்துக்குப் போகிற வர்த்தமானங்களாவன ... | 7 |
| 1 | மூத். அருளானந்தர் பிறந்து வளர்ந்த வர்த்தமானமாவது ... ... | 7 |
| 2 | மூத். அருளானந்தர் கடின வியாதியின்று அர்ச். சவேரியாரின் வேண்டுதலால் சொஸ்தமான வர்த்தமானமாவது ... | 10 |
| 3 | மூத். அருளானந்தர் சேசுசபையில் பிரவேசித்த வர்த்தமானமாவது... ... | 12 |
| 4 | மூத். அருளானந்தர் சேசுசபையில் பிரவேசித்து நடத்திய சுகிர்த புண்ணியக்கிரியைகளாவன ... ... ... | 15 |
| 5 | மூத். அருளானந்தர் மேலான சாஸ்திரங்களைப் படித்த வர்த்தமானமாவது ... | 17 |
| 6 | மூத். அருளானந்தர் சிந்து தேசத்துக்குப் போக நியமிக்கப்பட்ட வர்த்தமானம். | 20 |

| பிரிவு. | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 7 | முத். அருளானந்தர் குருப்பட்டம் பெற்றுச் சிந்துதேசத்துக்கு யாத்திரையாய்ப் புறப்படுகிற வர்த்தமானமாவது ... | 23 |
| 8 | முத். அருளானந்தர் சிந்துதேசத்துக்குப் போகிற யாத்திரையில் அனுசரித்த சுகிர்த முயற்சிகளாவன ... ... | 27 |
| 9 | முத். அருளானந்தர் அர்ச். சவேரியாருடைய கல்லறையைச் சந்தித்த வர்த்தமானமாவது... ... ... ... | 31 |
| 10 | முத். அருளானந்தர் கோவைப்பட்டணத்தில் அநுசரித்த நற்கிரியைகளாவன ... | 34 |
| | **இரண்டாம் அதிகாரம்.** | |
| | முத். அருளானந்தர் மதுரை இராச்சியம், தஞ்சையூர் இராச்சியம், மறவன் தேச முதலான இடங்களில் நடப்பித்த சுகிர்த நடபடிக்கைகளாவன ... ... | 39 |
| 1 | மதுரை இராச்சியத்தில் சத்தியவேதம் விளங்கத் துடங்கின வர்த்தமானமாவது... | 39 |
| 2 | அக்காலத்தில் தென் சிந்துதேசத்தின் ஸ்திதியுந் தன்மையுங் காண்பிக்கப்படுவது. | 43 |
| 3 | முத். அருளானந்தர் செஞ்சி இராச்சியத்தில் பிரவேசம் பண்ணுகிற வர்த்தமானமாவது ... ... | 46 |

| பிரிவு. | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 4 | முத். அருளானந்தர் தத்துவஞ்சேரிப் பங்கில் நடப்பித்த சகிர்த வர்த்தமானங்களாவன ... | 58 |
| 5 | முத். அருளானந்தர் கொள்ளிடம் ஆற்றின் பெரும் வெள்ளத்தினின்று தப்பித்த வர்த்தமானமாவது ... ... | 58 |
| 6 | முத். அருளானந்தர் தத்துவஞ்சேரியிலும் சிறுகரம்பூரிலும் அனேகம் அஞ்ஞானிகளுக்கு ஞானஸ்நானம் கொடுத்த வர்த்தமானமாவது ... ... ... | 62 |
| 7 | முத். அருளானந்தர் 1679, 1680, 1681 ஆண்டுகளில் நடப்பித்த சகிர்த வர்த்தமானங்களாவன ... ... ... | 66 |
| 8 | சத்தியவேதத்துக்கு இடைஞ்சல் பண்ணின சிலர் தேவநீதியால் தெண்டிக்கப்பட்ட வர்த்தமானமாவது ... ... | 71 |
| 9 | முத். அருளானந்தர் சர்வேசுரனுடைய விசேஷகிருபையினால் இரண்டு சமயத்தில் சாவினின்று காப்பாற்றப்படுகிறார் ... | 77 |
| 10 | முத். அருளானந்தர் இத்தேசங்களிலுள்ள சேசுசபை சந்நியாசிகளுக்குச் சிரேஷ்டராக நியமிக்கப்பட்டு அதிக பிரயாசப்படுகிற வர்த்தமானமாவது ... | 81 |
| 11 | முத். அருளானந்தரது விசாரணையில் ஆச்சரியத்துக்குரிய அற்புதங்கள் நடந்த | |

| பிரிவு. | பொருள். | பக்கம். |
|---|---|---|


தும், அவர் பிடிபட்டுச் சிறையில் அடைபட்டதுமான வர்த்தமானமாவது ... 89

12 அக்காலத்தில் சத்தியமங்கல இராச்சியத்தில் சத்தியவேதத்துக்குச் செய்யப்படும் இடைஞ்சல் நீங்கின ஆச்சரியத்துக்குரிய வர்த்தமானமாவது ... ... 94

13 தஞ்சையூர் இராச்சியத்திலுள்ள கிறீஸ்துவர்களுக்கு அகோர இடைஞ்சல் செய்யப்படுகிற வர்த்தமானமாவது ... ... 99

14 முன்சொன்ன இடைஞ்சல் நீங்கின அதிசயமான வர்த்தமானமாவது ... 104

15 மூத். அருளானந்தர் மறவன் தேசத்தில் சத்தியவேதத்துக்காக அகோரமாய் உபாதிக்கப்படுகிற வர்த்தமானமாவது ... 112

16 மூத். அருளானந்தர் தமக்கு நேரிட்ட சாவுக்குத் தேவ கிருபையால் தப்பிக்கிற வர்த்தமானமாவது ... ... 123

17. மூத். அருளானந்தர் ஐரோப்பா கண்டத்துக்கு அனுப்பப்படுகிற வர்த்தமானமாவது ... ... ... ... 131


## மூன்றாம் அதிகாரம்.


மூத். அருளானந்தர் வேதசாட்சியாக மரணமடைந்த வர்த்தமானம். ... 135

120



| பிரிவு. | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 1 | முத். அருளானந்தர் போர்த்துக்கால் இராச்சியத்தில் தாம் வந்த காரியங்களைத் தீர்மானித்த வர்த்தமானமாவது ... | 135 |
| 2 | முத். அருளானந்தர் தமது பிரயாணத்துக்குச் செய்யப்பட்ட விக்கினங்களை ஜெயித்துச் சிந்துதேசத்துக்குத் திரும்பிவருகிற வர்த்தமானமாவது ... ... | 140 |
| 3 | முத். அருளானந்தர் மதுரை இராச்சியத்தில் சேர்ந்த வர்த்தமானமாவது ... | 146 |
| 4 | முத். அருளானந்தர் மறவன் தேசத்தில் நடத்தின அவிர்த கிருத்தியங்களாவன ... | 150 |
| 5 | பிரபு துரையான சடையத்தேவன் அற்புதமாய் மனந்திரும்பின வர்த்தமானமாவது | 155 |
| 6 | முத். அருளானந்தர் பிடிபட்ட வர்த்தமானமாவ்து ... ... ... | 160 |
| 7 | முத். அருளானந்தர் பிராமணருடைய மாந்திரியங்களை அடக்கினதும், இராஜ சமுகத்தில் நிறுத்தப்பட்டதுமான வர்த்தமானமாவது ... ... ... | 170 |
| 8 | முத். அருளானந்தர் வேதசாட்சியாகக் கொல்லப்படுகிற வர்த்தமானமாவது ... | 179 |
| 9 | முத். அருளானந்தருடைய பிரதாபமுள்ள மரணத்துக்குப்பின் சம்பவித்த வர்த்தமானங்களாவன ... ... ... | 187 |

| பிரிவு. | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 10 | வேதசாட்சியான முத். அருளானந்த சுவாமியால் விளங்கின புதுமைகள் ... | 196 |
| 11 | வேதசாட்சியான அருளானந்தர் முத் இப்பேறுபெற்ற பட்டம் அடைந்த வர்த்தமானமாவது ... ... ... | 209 |
| | வேதசாட்சியான முத். அருளானந்தர் மூலமாகக் கேட்கிற பத்து மன்றாட்டு ... | 214 |
| | வேதசாட்சியான முத். அருளானந்தருடைய திருநாளுக்குமுன் செய்யும் நவநாட் ஜெபம் ... ... ... | 219 |
| | அர்ச். சவேரியார் அஞ்ஞானிகள் மனந் திரும்புவதற்காக உண்டாக்கின மந்திரம்... | 225 |
| | வேதசாட்சியான முத். அருளானந்தர் பிரார்த்தனை ... ... ... | 227 |